உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# பட்டினத்துப்பிள்ளையார்

## பாடல், புலம்பல் மூலமும்,

# பத்திரகிரியார்

## புலம்பல் மூலமும்,

சித்தாந்தசரபம்-அஷ்டாவதானம்

பூவை கலியாணசுந்தர முதலியார்

இயற்றிய

ஞானார்த்ததீபவுரையும்.

K. P. சிங்காரவேலு முதலியாரால்
சென்னை ஜீவகாருண்யவிலாச அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டன.

1908.

இதன் விலை ரூபா 1-4-0

Registered & Copy Right.

K. M. SAWMY & CO. PRINTERS MADRAS

OFFICE OF THE REGISTRAR OF B...
REGISTERED
4 - JUL 1908
MADRAS

TJRC No
1691

16/19

Δ25xD60,1
N08

119815

# ரிஜிஸ்தர் அறிவிப்பு.

தியாகராஜலிங்கமாகிய பட்டினத்துச்சுவாமிகள் திருப்பாடற்றிரட்டு, புலம்பல் முதலியவற்றிற்கும், திருவருட்பெருஞ் செல்வராகிய பத்திரகிரியார் புலம்பலுக்கும் அவ்வாசிரியர்களின் இருதயத்துணையும் அவர்கள் திருவடித்தியானத்தால் திருவருளை முன்னிட்டுணர்ந்து, சுத்தாத்துவித சித்தாந்தவைதிக சைவவுண்மையினைத் தெரிவிக்க வந்த சிவஞானபோதமாதி மெய்கண்டசாஸ்திரக் கருத்திற்கிணங்க, மதுரைத்தமிழ்ச்சங்கத்து மகாவித்துவான் சித்தாந்தசரபம் அஷ்டாவதானம்பூவை கலியாணசுந்தர முதலியாரவர்களால் ஞானார்த்த தீபவுரையென வொன்றெழுதி, சென்னை கேளம்பாக்கம் பெ. சிங்காரவேலு முதலியாரவர்கட்குச் சுதந்தரமாகக்கொடுக்கப்பட்டது. [illegible]டி கே. பெ. சிங்காரவேலுமுதலியார் பொருளுதவி செய்து அச்சிட்டு 1867-வது வருஷத்திய 25-வது ஆக்டின் 20-வது பிரிவின் 6-வது விதியின் பிரகாரம் இந்நூலை இங்கிலீஷ் இலாகாவில் கவர்ன்மெண்டு சட்டப்படிக்கு ரிஜிஸ்டர் செய்திருக்கின்றனர். ஆகையால் இந்நூலுக்கு உடையவராகிய அவரது உத்தரவின்றி இதை ஒருவரும் அச்சிடலாகாது. அப்படி அச்சிட்டால் அதினாலுண்டாகும் நஷ்டத்தை வசூல் செய்யப்படும்.

இங்ஙனம்,

கே. பெ. சிங்காரவேலு முதலியார்.

கெ-9. வடமலைமேஸ்திரி வீதி. சௌகார்பேட்

போஸ்ட்டு.—மதராஸ்.

பட்டினத்துப்பிள்ளையார்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

## பட்டினத்துப்பிள்ளையார்

# மான்மிய சங்கிரகம்.

கல்யாணசுந்தரகுண சம்பன்னரான சிவபெருமான் ஒருகாலத்தில் அளகேசனாகிய தமது தோழன் வேண்டுகோளுக்கிரங்கி, அநேகமலபெத்தர்களாகிய ஆன்மகோடிகள் உய்யுமாறு திருவுளங்கொண்டு தென்றிசைநோக்கி, நித்தியமங்களசொரூபியாகிய பார்வதியாருடன் தருமவிடைமேலெழுந்தருளி; பற்பலதேவர்கள் சூழ்ந்துவரத் திருக்கைலாயத்தினைவிட்டுநீங்கி, க சிறுதலிய தமது திவ்யநேத்திரங்களைக் கடைக்கணித்துக்கொண்டு திருக்காவிரிப்பூம்பட்டினத்திற்குச் சமீபித்தருளினர்.

அப்பட்டினத்தில் கஞ்சமர்நீல கண்டனுக்குகந்த சைவாசார நல்லர்கள் நிறைப்பெற்றச் செம்மையும்விசித்துகொண்டிருத்தலைக் கண்டகுபேரன் அப்பட்டினத்தினை விட்டுநீங்க மனமெழாது திகைக்கையில் அஃதுணர்ந்த கருணாநிதியாகிய கண்ணுதற்பெருமான் குபேரனைநோக்கி, "நீ இப்பட்டினத்தில் விருப்புற்றனையாகலின் நீ யிவ்விடத்திற் பிறக்கக்கடவாயென்றனர்."

# மான்மியசங்கிரகம்.

அக்கட்டளையைச் சிரமேற்கொண்டு நீக்கிவிட்டு மனைக்கலங்கிச் சிவபெருமானை வணங்கி ஐயா! அடியேன் தேவரீராஞ்ஞையின்படி இப்பட்டினத்திற் பிறந்து வளர்கையில் மேலும்மேலும் பிறவிக் கடலில் ஆழாதவண்ணம் தடுத்தாட்கொண்டருளவேண்டும்" என்று கேட்டுக்கொள்ள பெருமான் அங்ஙனமே யாகுகவெனத் திருவாய் மலர்ந்தருளி வெள்ளியங்கிரிக்கு எழுந்தருளினார்.

பின்னர் குபேரன் அப்பட்டினத்துச் சிவநேசச்செல்வராகிய சிவநேசசெட்டிக்கும் ஞானகலை என்பவருக்கும் சற்புத்திரராக அவதாரஞ்செய்து திருவெண்காடர் என்னும் பிள்ளைத்திருநாமம் பெற்று வளர்ந்துவருகையில், தனது ஐந்தாம்வயதில் தந்தையார் சிவசாம்பிராச்சியமடையத் தாயாருடனிருந்துகொண்டு இளம்பிராயத்திற்றானே கல்வித்திறம்பெறாதச் சிவசாஸ்திரவுணர்ச்சியுற்றுப் பிறவிக்கஞ்சிப் பெரிதும் பெருமானைச் சிந்தித்துக்கொண்டிருக்கையில் ஒருநாள் கண்ணுதற்பெருமான் ஒருவேதியர்வடிவங்கொண்டு அவர்கனவிற்றோன்றி "குழந்தாய்! நாளையதினம் திருவோணநட்சத்திரமும் பிரதோஷமுங்கூடிய சோமவாரச் சுபதினமாகவிருத்தலின் திருவெண்காட்டினையடைந்து சிவதீட்சை பெற்றுக்கொள்ளக்கடவாய்" என்று ணர். கனவினின்று நீங்கியெழுந்து தனது கனவினைத் தாயாருக்குத் தெரிவித்து அவ்வம்மையார் சம்மதத்துடன் அவ்வெண்காட்டினையடைந்து ஆலயத்திற் பிரவேசித்தமாத்திரத்தில் கனவிற்கண்ட வேதியரே எதிர்வந்து ஆசீர்வதித்துச் சிவதீட்சைசெய்து, விநாயகமூர்த்தியும், ஸ்படிகலிங்கமும் அமைந்த வொருதங்கப்பெட்டகத்தினை யீந்தருள வேற்று அவ்வாசிரியர்கட்டளையின்படி அம்மூர்த்திகளைப் பூசித்து ஆன்மார்த்த மூர்த்திகளாக்கொண்டு, எண்ணிறந்த சிவனடியார்கட்கு மாகேச்சுரபூசைசெய்வித்து அவ்வடியார்கட்கு வேண்

டிய திரவியம் அபாரமாகக்கொடுத்துவைத்த பின்னர் பொருளின்மையால் அக்குறிப்பைத் தனது தாயாருக்குத் தெரிவித்து வருகையில், அன்றிரவு அவர்கனவில் சிவபெருமான் எழுந்தருளி "அன்ப நும்மில்லத்தில் வேண்டியதிரவியம் வைக்கப்பட்டிருக்கிறது அழைப்பித்து நின்குறையை முடிப்பீக" என்றமாத்திரத்தில் கனவினின்றும் நீங்கிக் களிப்புற்று அங்ஙனமே பொருளையடைப்பித்து வேண்டியவளவு சிவநேசச்செல்வர்கட்கு அளித்துக் காவிரிப்பூம்பட்டினந் திரும்பிவந்து வாழ்ந்துவருகையில், தனது பதினாறாவது வயதில் அப்பட்டினத்திலேயே தனது மாமனுக்கொத்த சிவசிதம்பர செட்டியாருக்கும் சிவகாமியம்மைக்கும் பிறந்த சிவகலை என்னும் பெண்மணியை விவாகம்செய்துகொண்டு இல்லறதருமத்திலிருந்து தனது குலத்தொழிலை விருத்திசெய்து பட்டினத்துச்செட்டியாரென யாருமழைக்கத்தகுந்த சிறப்புப்பெயருடன் வாழ்ந்துவருங்கையில் முப்பது வயதுவரையில் புத்திரசம்பத்தின்றியிருப்பதையுணர்ந்து திருவிடைமருதூர்ப் பெருமானைவணங்கிப் பலவிரதமியற்றிவருவாராயினர்.

இங்ஙனம் செய்முறையில், திருவிடைமருதூர் நன்முலைநாயகி சமேதராகிய மருதப்பராணவர் தம்மைப் பூசிக்கும் சிவசருமசிவாச்சாரியர் தரித்திரத்தினை நீக்கியருளும்பொருட்டு அவ்வேதியர்பால் பலவற்புதங்களைக்காட்டிக் கடைசியில் அவ்வேதியர் கனவிலும், அவர்மனைவி சுசீலை கனவிலுந்தோன்றி, "அன்புடையீர்! நாம் இத்தலத்தின் காருண்யாமிர்த தீர்த்தக்கரையில் மேலண்டை வில்வவிருட்சத்தின் குழந்தையுருகொண்டு இருப்போம் அக்குழந்தையை நீவிரெடுத்துக்கொண்டுபோய்க் காவிரிப்பூம்பட்டினத்தில் புத்திரவின்றிப் பலதவஞ்செய்துகொண்டிருக்கிற திருவெண்காடரிடங்கொடுத்து அக்குழந்தை நிறையளவு பொன்பெற்று உங்கள் தரித்திரத்தி

னை நீக்கிக்கொள்வீர்களாக" எனத் திருவாய்மலர்ந்தருளினர். அங்ஙனமே மறுநாள் சிவசருமர் அக்குழந்தையினைக்கண்டு எடுத்துக்கொண்டுவந்து தனது மனைவிபால்கொடுக்க அவ்வம்மையார் ஏற்று அக்குழந்தையின் வடிவத்தினைக்கண்டு அக்குழந்தையைவிட்டுச் சிறிதும் பிரிதற்கு மனம்வராது; வருந்தி ஆயினும் சிவபெருமான்கட்டளைக்கஞ்சி அக்குழந்தையுடன் தானும் தனதுநாயகனுமாகக் காவிரிப்பூம்பட்டினத்தை நோக்கிநடந்து அவ்வூரினுக்குச் சமீபத்திலுள்ள ஒருசோலையில் தங்கியிருந்தனர்

சிவபெருமான் திருவெண்காடர் சிவகலை இவர்களிருவர் கனவிலுமெழுந்தருளி "சோலையிலேவந்திருக்கும் பிராமணரிடத்துள்ள குழந்தையினைப் பெற்றுக்கொண்டு அக்குழந்தைநிறையளவு திரவியம்கொடுக்கச்சொல்லி" மறைந்தனர். கண்விழித்தெழுந்த திருவெண்காடர் தன்மனைவியுடன் சோலையிற்சென்று அவ்விருவரையும் தமதுவீட்டிற்கழைத்துக்கொண்டுவந்து பலவுபசாரம்செய்து குழந்தையைப்பெற்றுக்கொண்டு அக்குழந்தைக்குச் சரிநிறையாகத் திரவியங்கொடுத்தனுப்பிவைத்தனர்.

இங்ஙனம் கிடைக்கப்பெற்ற புத்திரனுக்குத் தாய்தந்தையர்கள் மருதப்பிரான் எனத் திருநாமமிட்டுப் புத்திரோற்சவம்கொண்டாடி வளர்த்துவருவாராயினர். மருதப்பிரான் தமது இளவயதிற்றானே சகலகலாவல்லவராகிக் கண்டோர் ஆச்சரியமுறப் பலவற்புதத் திருவிளையாடல்களைச் செய்துவருவாராயினர். பதினாறுவயது பூர்த்தியானவுடன் தமது தந்தையிடம்சென்று "ஐய! நான் தீபாந்தரங்களிற்சென்று வர்த்தகம்செய்து பொருள்சேகரிக்க விரும்புகிறேன் உத்தரவுகொடுத்திடவேண்டும்" எனக்கேட்கத் தந்தையார் தனது

புத்திரனைப்பிரிய மனமில்லையாயினும் தனது குலத்திற்குத்தக்கபடி பொருளீட்டுதல் தருமமெனவெண்ணி விடைகொடுக்கப் பெற்று, தோழர்பலருடன் கப்பலேறித் தீவாந்தரம்சென்று தாம்கொண்டு போன சரக்குகளையெல்லாம் விற்றுத் திரவியஞ்சேகரித்து அவற்றையெல்லாம் சிவகைங்கரியமாகச் செலவழித்துவிட்டு, எருமுட்டைகளையும், தவிட்டுமூட்டைகளையும் கப்பல்நிறையவேற்றிக்கொண்டு தமதுதோழருடன் திரும்பிவருங்கையில், பலவற்புதங்களைக் கடலினடுவிற்காட்டிக் கரைவந்துசேர்ந்தவுடன், திருவெண்காடர் எதிர்கொண்டுபோய் தனதுபுத்திரர் கப்பலில் எருமுட்டைகளும், தவிட்டுமூட்டைகளுமிருக்கக்கண்டு தனதுபுத்திரனுக்கு ஏதோ சித்தப்பிரமை கண்டிருப்பதாகத் தீர்மானித்து, அப்புத்திரனை ஒருகாப்பில்வைத்துவிட்டு, எருமுட்டைகளையும் தவிட்டினையும் சோதித்துப்பார்க்க முறையே மாணிக்கங்களும், பொற்றூளும் இருக்கக்கண்டு ஆச்சரியமுற்று ஓடோடியுஞ்சென்று தன்புத்திரனைப்பார்க்கையில் அவனைக் காணாது மனம்வருந்தினின்றனர். காவிலிருந்த மருதவாணர் திருவிடைமருதூரில் சிவசருமர்முன்தோன்றி அவரைக் குடும்பத்துடன் ஐக்கியஞ்செய்துகொண்டு மகாலிங்கத்திலெழுந்தருளினர்.

திருவெண்காடர் புத்திரசோகத்தால் மிகவருத்தமடைந்துகொண்டிருக்கையில், தனது மனைவியார் ஒரு சிறுபெட்டிகொண்டுவந்து முன்னர்வைத்து "இதனைத் தாங்கள்வந்தவுடன் தங்களிடம் கொடுக்கும்படி நமது புத்திரன் கொடுத்துவிட்டுப்போயினன்" என்றனர். திருவெண்காடர் அதனைத் திறந்துபார்க்க அதில் ஒருகாதற்ற ஊசியும், "காதற்றவூசியும் வாராதுகாணுங் கடைவழிக்கே" என்றெழுதியுள்ளவொருசீட்டும்இருக்கக்கண்டு, அக்கணமேதுறவடைந்து, பெற்றதாயாருக்கும் மனைவிக்கும் பலஆறுதலைச்சொல்லிவிட்டு, தன

து திரவியபொக்கிஷத்தினைச் சிவனடியார்கட்குச் சூறைவிடும்படி தனது கணக்கப்பிள்ளையாகிய சேந்தனாருக்குக் கட்டளையிட்டு வெளியேறி அவ்வூர் புறத்திலுள்ள பொதுமண்டபத்திலிருந்து கைப்பிச்சையேற்று உண்டு சிவஞானநிஷ்டைகூடி யிருந்தனர். சிலநாளைக்குப்பின் தனது தாயார் தேகவியோகமடையச் சுற்றத்தினர் அவ்வம்மையாரைச் சுடுகாட்டிற்குக்கொண்டுபோகையில் திருவெண்காடர்கண்டு அச்சுற்றத்தினரைவிரட்டிவிட்டுத் தனது தாயாரை பச்சைவாழைமட்டையிற் கிடத்திச் சிலவெண்பாக்களைப்பாடித் தகனக்கிரியைமுடித்துப் பின்னர் திருவிடைமருதூர் முதலிய பலதலங்கட்குச்சென்று பலபாக்களைபாடித் திருவாரூரடைந்து தன்னிடத்தன்பு பூண்டிருந்து சத்தியால் உயிரிழந்தவொருவனை மீண்டுயிர்பெற்றெழச்செய்து, கொங்குநாட்டினையடைந்து வாய்பேசாத மவுனவிரதத்தோடிருக்கையில் ஒருநாள் அர்த்தராத்திரியில் ஒருமூர்க்கன் வீட்டுத் தலைவாயலிலிருந்து கைதட்ட, அவன் இவரையறியாமல் கள்வனென்றெண்ணித் தடியெடுத்தடிக்கச் சிவசிவ எனத்திரும்பி இனி இருக்குமிடந்தேடிவந்தாலன்றி அன்னம்புசிப்பதில்லையெனத் தீர்மானித்துக்கொண்டு, வடதேசமாடி உஞ்சேனைமாகாளமடைந்து அவ்வூர்ப்புறத்திலுள்ள கணபதியாலயமடைந்து சிவஞானநிஷ்டை கூடியிருக்கையில், அவ்வூர் இராஜனான பத்திரகிரியார்வீட்டில் களவுசெய்துகொண்டுபோகும் திருடர் தாங்கள்செய்த பிரார்த்தனையின்படி ஒரு ஆரத்தினை அக்கணபதிக்குச் சாத்தவெண்ணி யிருட்டில் அக்கணபதிக்குச்சமீபத்தில் நிஷ்டைகூடியிருந்த திருவெண்காடர் கழுத்திலிட்டுச்சென்றனர். மறுநாள் காவலாளர் அரசன்வீட்டு ஆபரணம் திருவெண்காடர் கழுத்திலிருக்கக்கண்டு இவர் திருடருள் ஒருவரெனத் தீர்மானித்து அரசரிடம் ஒப்புவித்துப் பலதீங்குசெய்யவும் அவர் சிக்ஷிக்க வெண்ணிய இவரைக்கழுமரத்திலேற்றும்படி அரசன்

ஆஞ்ஞாபித்தனன். இவர் கழுமலத்தினுக்குச்சமீபித்தவுடன் அதுபத் தியெறிய வாசனன்கண்டு சுவாமிகள் திருவடியிற்பணிந்து துறவடைந் தனன். பின்னர் சுவாமிகள்கட்டளையின்படி பத்திரகிரியார் திரு விடைமருதூரடைந்து தான் ஒரு நாயினைவளர்த்தூர். அந்நாயிறந்த பின் அது காசிராஜன்புத்திரியாகப்பிறக்க அதுகண்டு தானும் அப் பெண்ணுமாகச் சுவாமிகளைக்கண்டு வணங்கி அப்போது அவ்விடத் துண்டாகிய வொருசோதியிற்கலந்தருளினர். திருவெண்காடர் மறு படியும் திருவெண்காடடைந்து, அவ்வூரரசனாற் சிறையிற்கிடந்த சேந்தனாரை அவ்வூர் விநாயகனைக்கொண்டு சிறைவிடுவித்து அவ்வூ ரைவிட்டுப் பலதேயயாத்திரை செந்தமிழ்ப்பாக்கள் பலபாடிக்கொ ண்டேபுலவிச் சோழநாடடைந்து, தொண்டைமண்டலத்திற் பிரவே சித்துப் பலதலங்களைத்தரிசித்தபின்னர், திருவருட்பெருஞ்செல்வர்க ளாகிய மூவர் பாடல்பெற்றதும், சுந்தரமூர்த்திசுவாமிகளுக்கும், சங் கிலிநாச்சியாருக்கும் திருமணம்நடந்தேறியதும், விண்டு, இலட் சுமி, பிரமன், சரஸ்வதி, சந்திரன், ஆதிசேடன், அகத்தியர், வான் மீகி, பாணினி, உரோமசர், வாசுகி, இலவன், தொண்டைமான் முத லியோர் பூசித்ததும், மோட்சபூமியுமாகிய திருவொற்றியூர் என்னும் திவ்விய தலத்தினையடைந்து சமுத்திரதீரமடைந்து அவ்விடத்தில் விளையாடிக்கொண்டிருந்த சிறுபிள்ளைகளுடன்கூடிச் சிலவினோதங் களைக்காட்டிக் குழியில் மறைகிறதும் மணற்குன்றின்மேல் வருகிற துமான திருவிளையாட்டினைச் செய்துகொண்டேயிருந்து ஒருதரம் குழித் தன்மீது ஒருசாலைக்கவிழ்க்கச்செய்தனர். சிறிதுநேரத்திற் குப்பின் அச்சிறுபிள்ளைகள் அச்சாலையெடுத்துப்பார்க்கத் திருவெண் காடர் சிவலிங்கத் திருவுருக்கொண் டெழுந்தருளினர். அப்போது அச்சிறுவர்கள்கண்டு வியந்து இவ்வதிசயத்தினை ஊரில்உள்ளவர்கட் செல்லாமறிவிக்க அவர்களெல்லாரும் திரண்டுவந்து தரிசித்து ஆன

ச்சித்தார்கள். இதற்குமுன்பே இவர்பத்தினியாராகிய சிவகலையம்மையார் இவர் திருவடியையே சிந்தித்துக்கொண்டிருந்து சிவபதமடைந்தனர். காவிரிப்பூம்பட்டினத்தில் உள்ளயாவரும் திருவெண்காடரது சிலக்கிய லீலையைக்கேட்டு அங்குநின்றும் புறப்பட்டு வந்து திருவொற்றியூரினையடைந்து தரிசித்துப் பல திருத்தொண்டு செய்து திருவருட்பாக்குக் குரியவரானார்கள். சுபம்.

"ஆடியுத்தி ராட மவிர்பூம் புகார்த் திருவெண்
காட ரொற்றித் த்யாகர் கவின்பதியில்—நீடுமேனை
விற்கோ லியகுகையி லேய்ந்து சிவலிங்கச்
சிற்கோல மான தினம்."

திருவெண்காடர் மான்மியசங்கிரகம்

முற்றிற்று.

---

உ

கணபதி துணை.

# பட்டினத்துப்பிள்ளையார்

அருளிச்செய்த

# திருப்பாடற்றிரட்டும்

# ஞானார்த்ததீபவுரையும்.

முதலாவது

## கோயிற்றிருவகவல்.

நிலைமண்டிலவாசிரியப்பா.

நினைமின் மனனே நினைமின் மனனே
சிவபெருமானைச் செம்பொனம் பலவனை
நினைமின் மனனே நினைமின் மனனே.

(பொழிப்புரை.) மனமே! சிந்தனை செய்வாய், மனமே! சிந்தனை செய்வாய், மங்கள சொரூபமாயுள்ள முதல்வனை, செம்மையுமாகிய பொன்மயமாயுள்ள சபையிலுள்ளவனைச் சிந்தனை செய்வாய் மனமே! சிந்தனை செய்வாய் மனமே!

(குறிப்புரை.) நினைமின் மனனே என்பது இழிவிற் சிறப்பா வந்த ஒருமையிற் பன்மை மயக்கம். ஈண்டுச் சிவபெருமானென்

றது நிஷ்கள சொரூபமாயுள்ள முதல்வனை. அம்பலவனையென்றது சகள சொரூபமாயுள்ள தில்லை நடராஜ பிரபுவை.

அலகைத்தேரி னலமருகாலின்
உலகப்பொய் வாழ்க்கையை யுடலையோம் பற்க

(பொ-ரை.) பேய்த்தேரினையும், சுழலுங் காற்றினையுமுறையே யொத்த பொய்யாகிய உலக வாழ்வினையும் உடம்பினையும் பாதுகாவா திருப்பாயாக.

(கு-ரை.) உலகம் என்றும் காரியப்பாட்டினையுடைத்தாயிருத்தலினாலும், உடல் அநித்திய தன்மையைப்பெற்றிருத்தலினாலும் இவ்விரண்டினிடத்து மழுந்தற்கவென்பார் ஓம்பற்கவென்றார். அருஞ்சுரத்தின் முதுவேனிலின் கண்பகற்பொழுது பற்றித்தோற்றிச் சூரியனின் கிரணம் மேகப்படலத்தின் மறைந்து வழித்தாலும் மறைந்து போவதாகிய பேய்த்தேர் ஒரு காரணங்காட்டி உலக காரிய மறைந்து போதற்கு உவமையாயது. உலகநித்தமென்பது கருத்தல்ல. பொய்யென்றது காண்காரியப்படுகிற திரிபினைநோக்கி யாம். உடலைக்கொண்டு சுற்றிச்சுற்றி புலைகந்திலலைவதால் காற்றுக்குவமையாக்கினர். உயிரை விசாரியாது உடம்பு காத்தலிலேயேகாலங் கழித்தல் கூடாதென்பார் ஓம்பற்கவென்றார். இதனால் உடலைவெறுத்து விடவேண்டுமென்பதன்று. அங்ஙனம் கூறின் "உடம்பினை யானிருந் தோம்புகின்றேனே" என்ற திருமந்திரத்தோடு முரணும்.

பிறந்தன விறக்கு மிறந்தன பிறக்கும்
தோன்றின மறையு மறைந்தன தோன்றும்
பெருத்தன சிறுக்குஞ் சிறுத்தன பெருக்கும்
உணர்ந்தன மறக்கு மறந்தன வுணரும்
புணர்ந்தன பிரியும் பிரிந்தன புணரும்

அருந்தின மலமாம் புனைந்தன வழுக்காம்
உவப்பன வெறுப்பாம் வெறுப்பன வுவப்பாம்
என்றிவை யனைத்து முணர்ந்தனை யன்றியும்

(பொ - ரை.) (யோனிவாய்ப்பட்டுப்) பிறந்தனயாவும் இறந்துவிடும், இறந்தனயாவும் (மற்றொருகாலத்தில் யோனிவாய்ப்பட்டு) பிறக்கும், உற்பத்தியாவன வெல்லாம் மறைந்துவிடும், மறைந்தன வெல்லாம்மறுபடியும் உற்பத்தியாகும், தூலவடிவினையுடையவெல்லாம் சூட்சுமரூபத்தினை யடைந்துவிடும், சூட்சுமரூபத்தினை யுடையன திரும்பத் தூலவடிவினையடையும், தெரிந்தனயாவும் மறந்துவிடும், மறந்தனயாவும் பின்புஞாபகத்தில்வரும், சேர்ந்திருந்தவைத் தூரவிலகும், தூரமாயிருந்தன பின்வந்துசேரும், உண்டு உணவனைத்தும் மலமாகின்றன, தரித்த ஆடைகளனைத்தும் அழுக்காய்விடும், விரும்பப்படுவன வெறுக்கப்படுகின்றன, வெறுக்கப்படுவன வெல்லாம் விரும்பப்படும் என்று சொல்லப்படுகின்ற இவையனைத்தும் (மனமே பிரத்தியட்சமாகத்) தெரிந்துகொண்டனை அல்லாமலும்.

(கு - ரை.) இதனால் பிரபஞ்சம் எக்காலத்தும் காரியகாரணப் பட்டுக் கொண்டேயிருக்குமேயன்றி யொருகாலத்து மழிந்து சூனியப் பொருளாவதில்லை யென்பார் மாறிமாறியாவும் வருமென்றும் பிரத்தியட்சமான அனுபவங்களை யெடுத்துக் காட்டினார், இதனால் சித்தாந்தத்தாற் பிரதிபாதிக்கப்படும் சற்காரியவாதவுண்மை தெரிவித்தவாறாயிற்று.

பிறந்தன பிறந்தன பிறவிக டோறும்
கொன்றனை யனைத்து மனைத்துநினைக் கொன்றன
தின்றனை யனைத்து மனைத்துநினைத் தின்றன
பெற்றனை யனைத்து மனைத்துநினைப் பெற்றன

ஓம்பினை யனைத்து மனைத்துநினை யோம்பின
செல்வத்துக் களித்தனை தரித்திரத் தழுங்கினை
சுவர்க்கத் திருந்தனை நரகிற் கிடந்தனை
இன்பமுந் துன்பமு மிருவகைத் தருந்தினை
ஒன்றொன் றொழியா துற்றனை யன்றியும்

(பொ-ரை.) (இதுகாறும்) அடிக்கடி உலகின்கண்ணே நீ, பிறந்த நின் பிறவிகளனைத்திலும் அனேகமான உயிர்களை நீ கொன்றாய், அவைகளும் உன்னைக்கொன்றன, அவைகளையெல்லாம் நீ தின்றாய், அவைகளும் உன்னைத் தின்றன, யாவற்றையும் நீ பெற்றாய், அவைகளு முன்னைப்பெற்றன, எல்லாவற்றையும் நீ காத்தாய், அவைகளு முன்னைக்காத்தன, செல்வமடைந்த காலத்து ஆனந்தமுற்றாய், தரித்திரமடைந்தகாலத்துத் துக்கமுற்றாய், (புண்ணியஞ்செய்து) தெய்வலோக மடைந்தாய், (பாவஞ்செய்து) நிரயத்திற் கிடந்தாய், சுகதுக்கங்களை இப்பெரிய புவியிலனுபவித்தாய், (கூறியவற்றுள்) ஒவ்வொன்றினின்றும் நீங்காது அனுபவித்தாய். அல்லாமலும்.

(கு-ரை.) அநாதிதொட்டு ஆன்மகோடிகள் அவரவர்கள் கன்மத்திற்குத்தக்கபடி பிரபஞ்சத்தில் போகங்களை யனுபவிக்குங்காலும் அப்போகங்கள் மாறிமாறிவந்து கொண்டிருத்த லியல்பென்றாயிற்று, இருவினையொப்பு மலபரிபாகம் விளையாதவரையில் ஆன்மாக்களுக்கு இச்சுழற்சி நீங்காதென்பதும் குறிப்பால் விளக்கியவாறாயிற்று.

புற்புதக் குரம்பை துச்சி லொதுக்கிடம்
என்னநின் றியங்கு மிருவினைக் கூட்டைக்
கல்லினும் வலிதாக் கருதினை யிதனுள்
பீளையும் நீரும் புறப்படு மொருபொறி

மீளுங் குறும்பி வெளிப்படு மொருபொறி
சளியு நீருந் தவழு மொருபொறி
உமிழ்நீர் கோழை யொழுகு மொருபொறி
வளியு மலமும் வழங்கு மொருவழி
சலமுஞ் சீயுஞ் சரியு மொருவழி
உள்ளுறத் தொடங்கி வெளிப்படு நாறும்
சட்டக முடிவிற் சுட்டெலும் பாகும்
உடலுறு வாழ்க்கையை யுள்ளுறத் தேர்ந்து

(பொ - ரை.) நீர்க்குமிழினை யொத்த சிறுகுடிலை, (யாருமருவருத்தத் தச்சிலெனவொதுக்கத்தகுந்த இடமென்னத் தங்கியிருக்கும் நல்வினை தீவினைக் கிருப்பிடமாகிய உடலைக்கருங்கல்வினைக்கரட்டிலும் வலிமையினையுடைய்தாக நினைந்தனை.) இவ்வுடலுள் (கண்ணென்னும்) ஒருபொறியில் பீளையும் நீரும்வெளிப்படும், மறுபடியும் (காதென்னும்) ஒருபொறியில் குறும்பியுதப்படும், (மூக்கென்னும்) ஒருபொறியில் சளியும் நீரும் ஒழுகும், (வாயென்னும்) ஒருபொறியில் உமிழ்நீரும் கோழையும் ஒழுகும், (பாயுருவென்னும்) ஒருவழியில் காற்றும் மலமும் உண்டாகும், (உபத்தமென்னும்) ஒருவழியில் சலமும் சீயும்வழியும் (இவ்வியையன்றி) அவ்வுடலில் உள்ளிருந்து வெளிவரைக்கும் நாற்றமெடுக்கும், கடைசியாக உடல் சுட்டெலும்பாகிவிடும் (இத்தகைய) உடலுற்ற வாழ்வினை நன்கு விசாரித்துத்தெரிந்து, (இவ்வுடற்பற்று நீங்கி).

(கு-ரை.) யாவரும் அருவருக்கத்தகுந்த இத்தகைய வஸ்துக்களுடன் கூடிய உடலிருந்த அசுத்தமானதெனக்குறிப்பித்தனர். திருக்கடைக்காப்பு. " என்பிறைற்கழிவிரைத்திறைச்சிமணசுவ ரெறிந்தி தசமில்லம், புன்புலானறு தோல்போர்த்துப்பொல்லாமையான்

முகங்கொண்டு, முன்பெலா மொன்பதுவாய்த்தோற் பையின் மூழ்கிடுவேன்' என்றுரைக்கின்றனர்.

கடிமலர் கொன்றைச் சடைமுடிக் கடவுளை
ஒழிவருஞ் சிவபெரும் போகவின் பத்தை
நிழலெனக் கடவா நீர்மையொடு பொருந்தி
எனதற நினைவற இருவினை மலமற
வரவொடு செலவற மருளற இருளற
இரவொடு பகலற இகபர மறவொரு
முதல்வனைத் தில்லையுண் முளைத்தெழுஞ் சோதியை
அம்பலத் தரசனை யானந்தக் கூத்தனை
நெருப்பினி லரக்கென நெக்குநெக் குருகித்
திருச்சிற் றம்பலத் தொளிருஞ் சிவனை
நினைமின் மனனே நினைமின் மனனே
சிவபெரு மானைச் செம்பொனம் பலவனை
நினைமின் மனனே நினைமின் மனனே

(பொ – ரை.) பரிமளமிகுந்த (பிரணவாகாரமாகிய) கொன்றை மலரினைத்தரித்த சடையினையணிந்த முடியோடுகூடிய சிவபெருமானை, நீங்காத மங்களகரமான பெரிய சிவானந்த வின்பத்தினை, (மரத்தைவிட்டு நீங்காத) நிழலைப்போல அதனை நீங்காத தன்மையுடன் தங்கி, எனதென்னுமமகாரமும் நீங்க, தற்போதவெண்ணநீங்கி, நல்வினை தீவினை மும்மல நீங்க, பிறப்பு இறப்புநீங்க, மாயாமயக்க நீங்க, ஆணவவிருளை இரவுபகலென்னுந் தோற்ற நீங்க, இம்மைமறுமைப் (பயன்களிலும் ஆசை) நீங்க ஒப்பற்ற முதல்வனை, சிதம்பரத்தில்கிளைத்தெழுந்த (அருட்பெருஞ்) சோதியை, பொன்னம்பலத்

தின் சபாபதியை, ஆனந்தத்தாண்டவ மூர்த்தியை, அக்கினியைக் கண்ட அரக்கினைப்போல நெகிழ்ந்து நெகிழ்ந்துருகி, சிதாகாயமாகிய திருச்சிற்றம்பலத்திலே, விளங்குகின்ற சிவபெருமானை, மனமே சிந்தனை செய்வாய், மனமே! சிந்தனை செய்வாய், மங்கள சொரூபமாயுள்ள முதல்வனை செம்மையாகிய பொன்மயமாயுள்ள சபையிலுள்ளவனை மனமே! சிந்தனை செய்வாய், மனமே! சிந்தனைசெய்வாய்.

(கு - ரை.) அபரஞான முன்னிட்டுச் சுட்டுப்பொருள்களினொட்ட முறும்வரையில் வாசகஞான மேயன்றி வாச்சியஞான நிகழாதாகலின் வேற்றுமையுற்ற வினைத்தினு முள்ளநற்போத நீங்கப் பரஞானத்தே நின்று அந்தஞானத்திணுய் விளங்கும் சிவத்தினையேதரிசித்துக்கொண்டிருக்க வேண்டுமென்பார், எனதற * * * * * சினையின்மனனே என்றனர். சிவஞான சித்தியார்.

"பரஞானத்தாற் பரத்தைத்தரிசித்தோர்பரமே
பார்த்திருப்பார் பதார்த்தங்கள் பாரார் பார்க்க,
வருஞானம் பலஞான மஞ்ஞான விகற்பம்
வாச்சியவாசக ஞானமைந்தவத்தின் கலக்கம்,
தருஞானம் போகஞா திருஞான ஞேயந்
தங்கியஞானஞ் சங்கற்பனைஞான மாகும்,
திருஞான மிவையெல்லாங் கடந்த சிவஞான
மாதலாற் சிவன் முத்தர்சிவமே கண்டிருப்பார்."

என்றதனாற்காண்க.

## இரண்டாவது

# கோயிற்றிருவகவல்.

காதள வோடிய கலகப் பாதகக்
கண்ணியர் மருங்கிற் புண்ணுடை யழுக்கில்
காதலுங் கருத்துமல் லானின் னிருதாட்
பங்கயஞ் சூடப்பாக்கியஞ் செய்யாச்
சங்கடங் கூர்ந்த தமியேன் பாக்கிருக்
தங்கொ டிங்கோ டமருங் கள்வர்
ஐவர் கலகமிட் டலைக்குங் கானகம்
சலமலப் பேழை யிருவினைப் பெட்டகம்
வாதபித்தங் கோழை குடிபுகுஞ் சீறூர்
ஊத்தைப் புன்றோ லுதிரக் கட்டளை
நாற்றப் பாண்டநான் முழத் தொன்பது
பீற்றற் றுண்டம் பேய்ச்சுரைத் தோட்டம்
அடலைப் பெரிய சுடலைத் திடருள்
ஆசைக் கயிற்றி லாடும் பம்பரம்
ஓயா நோய்க்கிட மோவா மரக்கலம்
மாயா விகார மரணப் பஞ்சரம்
சோற்றுத் துருத்தி தூற்றும் பத்தம்
காற்றிற் பறக்குங் காணப் பட்டம்
விதிவழித் தருமன் வெட்டிக் கட்டை

இவ்ச்சுமதா சசியும் சிவபிரானுகைய குழந்தையைக் காணுதல்.

சதுர்முகப் பாணன் றைக்குஞ்சட்டை
ஈமக் கனலி லிடுசில விருந்து
காமக் கனலிற் கருகுஞ் சருகு
கிருமி கிண்டுங் கிழங்கஞ் சருமம்
பவக்கொழுந் தேறுங் கவைக்கொழு கொம்பு
மணமாய் நடக்கும் வடிவின் முடிவிற்
பிணமாய்க் கிடக்கும் பிண்டம்பிணமேல்
ஊரிற் கிடக்க வொட்டா வுபாதி
காலெதிர் குவித்த பூளை காலைக்
கதிரெதிர்ப் பட்ட கடும்பனிக் கூட்டம்
அந்தரத் தியங்கு மிந்திர சாபம்
அதிரு மேகத் துருவி னருநிழல்
நீரிற் குமிழி நீர்மே லெழுத்து
கண்டுயிற் கனவிற் கண்ட கண்காட்சி
அதனினும் பொல்லா மாயக் களங்கம்
அமையு மமையும் பிரானே யமையும்
இமய வல்லி வாழியென் றேத்த
ஆனந்தத் தாண்டவங் காட்டி
ஆண்டுகொண் டருள்கை நின் னருளினுக் கழகே.

(பொ - ரை.) (உடலானது) அங்குமிங்குமாகச்சுழலுகின்ற (பஞ்சேந்திரிய மென்னும்) ஐந்துகள்வர்கள் கலகம் விளைத்து வருத்துகின்றகாடு, மூத்திரமும் மலமுந்தங்கியதொட்டி; நல்வினை தீவினை நிறைந்த பொய்யிடம், வாதம் பித்தம் சிலேட்டுமம் என்கிறமுப்பிணிகளும் வாசஞ்செய்கின்ற சிறியவூர், அழுக்காகிய அற்பத்தோலில் இ-

த்த நிறைந்தவச்சு, துர்நாற்றத்தை யுடையயாக்கை, நாலுமுழங்களும் ஒன்பது துவாரங்களுமுள்ளவெழிந்த துண்டுத்துணி, (உண்பதற்குதவாத) பேய்ச்சுரைக் கொடியயிராகுந் தோட்டம், (உயிர்களைக்கொன்று தின்கின்றமையால்) சாம்பல் மிருந்த விசாலமான சுடுகாட்டுமேடு, அனைக் கயிற்றால் ஆடுகின்ற பம்பரம், நீங்காத பலநோய்களுக்கு இடம், ஓடுகின்ற கப்பல், மாயாக் காரியங்களையுடைய அழியும் கூண்டு, சோற்றினையூற்றும் தூருத்தி, அற்றுவிழுகின்ற பதர், காற்றினில் பறக்கின்ற காற்றாடி, கன்மத்திற்குத் தக்கபடி எமன் வெட்டுகின்ற கட்டை, நான்கு முகங்களுடன் கூடிய ஐயற்றனாரால் தைக்கப்படும் அங்கி, சுடுகாட்டு நெருப்புக் கிடுகின்ற சிலகரி, காமத்தீயில் கருகிப்போகின்ற உலர்ந்த இலை, புழுக்கள் குடையும் கிழங்குத்தோல், பாவமாகிய தளிர்படருந்தரகான கொழுகொம்பு, விவாகக் கோலத்துடன் சஞ்சரிக்கும் வடிவினைவாய்ந்து அந்தியத்தில் பிணமாய்ப்படுக்கும் சவவுருவம், (பிணமாயினவின்) ஊரில் தங்கவொட்டாதபடி (பலராதும் செய்யத் தருந்த) உபத்திரவம், காற்றுக்கு முன் குவித்தவைத்த பூளைமலர், காலையிற் றோன்றுஞ் சூரியனுக்கு முன்றோன்றிய மிகுதியாகிய நிறைந்தபனி, (மழைக்காலத்தில்) ஆகாயத்திற்றோன்றுகின்ற இந்திரவில், இடிக்கின்ற மேகத் திருளினது தட்பமாகிய நிழல், நீரிற்றோன்றும் குமிழி, நீரின்மேலெழுதும் எழுத்து, கனவுகாலத்தில் அனுபவிக்கும் காட்சி, அக்காட்சியினும் நிலையில்லாதமாய்கையுண்டாய களங்கம் (இத்தகையவுடல்) வரும் (எனக்கும்) வரும்! எனது பெருமானே! வரும், (இத்தேகம் வாராதபடி) காதுவரையில் நீண்டு கலகத்தைச்செய்யும் பாதகத்தன்மை வாய்ந்தகண்களையுடைய மாதர்கள் சமீபத்தில் தங்கித்திடனுகும் ஆசையும் என்னாளுமல்லால் தேவரீருடைய இரண்டு திருவடித் தாமரைகளைத் தரிக்கப் புண்ணியஞ்செய்யாத சங்கடம் மிகுந்த அடியேன் பக்கத்திலிருந்து பார்வதியார் வாழ்த்திச்சொல்லித் தோத்தரிக்க சிவானந்தத் தாண்டவத்தி

னைச்செய்து (அடியேனை) தடுத்தாண்டு கொண்டருளுதல் தேவரீர் திருவருளினுக்கு அழகாகும்.

(கு - ரை.) பிரானே! பாங்கிருந்து ஆண்டுகொண்டருள்கை நின்னருளினுக்கழகே என்று அன்வயஞ்செய்து முடித்துக்கொள்க. கிளியிடத்துக்கூறுதலும் கருத்தறிவிப்பது மிருக்கச்சடமென்பார்; காதலையோடிய, * * * கூர்த்ததமியேன் என்றனர். திருமந்திரம் "கோழை யொழுக்கங் குளமூடு பாசியை, வாழகவோரனப் புறவார்களைத், தமிழ்த் தடக்கித் தடுக்கவில் வாயிடித், பூழைநுழைந்தவர் போகின்றவாறே" என்றதிற்காண்க. தேகமான துயல்வகைப்பட்ட ஆபாசங்கட்கு இடமாயதென்பார், அங்கோடிங்கோ * * மாயக்கனங்க மென்றனர், திருவாசகம் "பொத்தைநூன் சுவர்புழுப் பொதிந்தூறுந்த சுப்பொழுகிய பொய்க்கூரை, யித்தைமெய்யெனக்கருதி நின்றிடர்க்கடற் சுழித்தலைப் படுவேனை" என்றதனாற்காண்க. இங்ஙனம் பெண்ணினிடத்தும் உடலினிடத்து முண்டான பற்றொழித்து ஆனந்தத்தாண்டவத்தினையே ஆதாரமாகக் கொள்ளவேண்டுமென்பார், இமையவல்லி * * * அழகே என்றனர், திருமந்திரம் "ஒளியாம்பரமு முளதாம்பரமு, மளியார் சிவகாமியாகுஞ்சதைக், களியார் பரமுங்கருத்துறையந்தத், தெளிவாஞ் சிவானந்த நட்டத்தின் சித்தியே" என்றதனுங் காண்க.

## மூன்றாவது
# கோயிற்றிருவகவல்.

பாற்கடல் கடையப் படுங்கடு வெவ்விடத்தைத்
திருமிடற் றடக்கிய சிவனே யடைக்கலம்

(பொ-ரை) திருப்பாற்கடலை (முதல்வன் ஆணையின்றித் தேவர்களும் அசுரர்களும்) கடைய (அக்காலத்திலதில்) உண்டாகிய விடமாகிய வெவ்விடத்தை அழகிய கண்டத்தின் கண்ணே வைத்த சிவபெருமானே அடைக்கலம்.

1 (ஸ்ரீ உரை.) அங்ஙனம் திருப்பாற் கடலிற்றோன்றிய விஷத் தாற் சர்வான்மாக்களுந் துன்புறுவதைக்கண்டு தேவர்முனிவர் வேண்டு கோளுக்கிரங்கி இப்பானஞ்செய்து அவர்கட்கு அடைக்கலந் தந்தமை யின், தானுமடைக்கலமென்றார். பாகவதம் "யேவமா மந்த்ரிய பக வாக்பவாநீம் விச்வபாவந, தத்விஷம்ஜக் துக பேப்ப பாவஜ்ஞோநு கம்போ தத்ரூ தந்தாகரதலீக்ருத்ய வ்யாபிஹாலாஹலம்விஷம், அபக்ஷ யன்மகாதேவாக் ருபயாபூதபாவநா, நிசம்யகர்மபிச்சம் போர்தேவ தேவஸ்யமீடுஷா, ப்ராஜாதாக்ஷாயணீப்ரஹ்மா வைகுண்டஸ்சஸமோநி தே" என்றதனுங் காண்க.

அடங்கலு மடக்கிடுங் கடுங்கொலைக் காலனைக்
காலெடுத் தடக்கிய கடவுளின் னடைக்கலம்

(பொ-ரை.) யாவற்றினையும் (தனது சாமர்த்தியத்தால்) அடக்கும் (வல்லமைவாய்ந்த) கொடியகொலைவினைச் செய்யும் இய மனைத் திருவடியைத் தூக்கியெறிந்து (உதைத்து) அடக்கியகடவு ளது அடைக்கலம்.



[illegible] கொடுத்துப் பொன்பெறுதல்.

(கு - ரை.) இயமனைவிடுத்து காலாலுதைத்துத் தள்ளித் தன்னைப் பூசித்துவந்த மார்க்கண்டேய முனிவரரைச் சிரஞ்சீவியாக்கி யடைக்கலங் காத்தமையின் தாளுமடைக்கல மென்றனர். அாதத்தர், "காலகர்வாபஹாரத்வாத்தைதே யோவாஸ" எனவும், சங்கரசமுகிழை "மதத்தான் பக்கரஞ் சமர்த்திவன்றமெய் நனுயிர்வவ்வப், பதைத்தானை யொருவன்னி வெகுண்டான் பதமொன்றாற்; சிதைத்தான் வாமச்சேவடி தன்றைச் சிறிதுந்தி, யுதைத்தானைச் சீற்றான் விற்முடுகில் போன்மெய்ம் முறை வீழ்ந்தான்" எனவும் வருவனவற்றாற்காண்க.

உலகடங் கலும்படைத் துடையவன் றலைபறித்
திடக்கையி லடக்கிய விறைவ நின் னடைக்கலம்

(பொ - ரை.) உலகமனைத்தையு முண்டாக்கினவராகிய (பிரமனது) தலையிலொன்றைக்கிள்ளி இடது திருக்கரத்தில் வைத்திருக்கிற இறைவனே நினது அடைக்கலம்.

(கு - ரை.) நானே பிரமமெனத் தருக்குற்ற பிரமனது ஐந்தாவது தலையினை நகநுதியாலரிந்துபின்வேண்ட அடைக்கலந்தந்தமையின் தாளுமடைக்கல மென்றனர். பிரமாண்ட புராணம் "ஸர்வஜ்ஞ்யாத்மாரிஞ் சிரச்சேதம் லோகதாரகம், ஸ்வயம்ஸாக்ஷாச்சாதேவா க்ஷுரத்வை காலபூர்வ, சகர்தகபாலம்தோனப்ராஹ்மணோ பஞ்சமம்ஸிரா" என்றதனாற் காண்க.

செய்யபொன் னம்பலச்செல்வ நின் னடைக்கலம்

(பொ - ரை.) செம்மையாகிய பொன்னம்பலத்திலே யெழுந்தருளி யிருக்கும் செல்வனே நினது அடைக்கலம்.

(கு - ரை.) சிவபெருமானொருவனே செல்வனென்பது அதர்வசிரசு "ஸர்வைச்வரிய ஸம்பன்னஸ்ஸம்பு" எனவும், சுவேதாசுவதரம்

“தமீஸ்வராணும்பரமம்மஹேஸ்வரம்” எனவும் “ஸக்வஸ்யப்ரபு மீஸகம்” எனவும் வருவனவாற் றுற்காண்க.

ஐய நின் னடைக்கல மடியநின் னடைக்கலம்

(பொ - ரை.) அழகனே உன்னுடைய அடைக்கலம் அடியே னினது அடைக்கலம்.

(கு - ரை.) அழகென்னும் பொருளைப் பயக்கும் ஐ என்றமொழியினடியாக ஐயன் என்றசொல் பிறந்தமையின் அழகனெனப்பொருள் கொண்டாம். ஆரியன் என்னும்பதம் ஐயனெனத் திரிந்ததெனப் பொருள் கொள்வர் சிலர் அவர்தமிழ் நயமறியாதவராவர்.

மனைவழி யலைத்திடுங் கனவெனும் வாழ்க்கையும்
விழுப்பொரு ளறியா வழுக்குறு மனனும்
ஆணவ மலத்துதித் தளைந்ததி லளைந்திடு
கிளைஞைப் புழுவென நெளிந்திடு சிந்தையும்
படிறும் பாவமும் பதிப்புறு கிளைப்பும்
தவறு மழுக்கா றவாவும் பொச்சாப்பும்
கவடும் பொய்யுங் கவடும் பெருஞ்சின
விகலுங் கொலையு மிழிப்புறு புன்மையும்
பகையு மச்சமுந் துணிவும் பணிப்பும்
முக்குண மடமையு மைம்பொறி மயக்கமும்
இடும்பையும் பிணியு மிடுக்கிய யாக்கையை
உயிரெனுங் குருகுவிட் டோடுங் குரம்பையை
எலும்பொடு நரம்புகொள் ளிடையிற் பிணித்துக்
கொழுந்தசை வேய்ந்து மொழுக்குவிழுங் குடிலைச்
செழும்பெழு வுதிரச் சிறுபுழுக் குரம்பையை

மலவுடற் குடத்தைப் புலவுடற்பட்டிகைத்
தொலைவிலாச் சோற்றுத் துன்பக் குழியைக்
கொலைப்படைக் கலம்பல கிடக்குங் கொட்டிலைச்
சலிப்புறு வினைப்பல சரக்குக் குப்பையைக்
கோட்சரக் கொழுக்கும் பீறற் கோணியைக்
கோபத்தீ மூட்டுங் கொல்லன் துருத்தியை
ஐம்புலப் புள்ளை யடையும்பஞ் சரத்தைப்
புலராக் கவலைவிளைமரப் பொதும்பை
ஆசைக் கயிற்றி லாடும்பம் பரத்தை
காசிற் பணத்திற் சுழலுங் காற்றாடியை
மக்கள் வினையின் மயங்குந் திகிரியைக்
கடுவெளி யுருட்டிய சகடக்காலைப்
பாவச் சரக்கொடு பவக்கடல் புக்கு
ஞாயக் காற்றெறித் தலைப்பக்
கெடுவழிக்கரை சேர நெடுமரக்கலத்தை
இருவினை விலங்கொடு மியங்குபுற்கலனை
நடுவன் வந்தழைத்திட நடுங்கிடு மியாக்கையைப்
பிணமெனப்படுத்தியான் புறப்படும் பொழுது நின்
னடி மலர்க்கமலத்துக் கபயநின் னடைக்கலம்
வெளியிடை யுருமிடி யிடித்தன வெறித்தெழுங்
கடுநடை வெள்விடைக் கடவுணின் னடைக்கலம்
இமையா நாட்டத் திறையோ யடைக்கலம்
அடியார்க் கெளியா யடைக்கல மடைக்கலம்
மறப்பவர் தில்லை மன்றுணின் றாடிக்

கருணைமொண்டலிலியற்றி கடவுளேயடைக்கலம்
தேவருமுனிவருஞ் சென்றுநின்றேத்தப்
பாசிலைக்கொடியொடு பரித்தருள்புரியும்
எம்பெருமானின் வினைபடிக்கபயம்
அம்பலத்தரசே யடைக்கலமுனக்கே.

(பொ - ரை.) மனம்போன வழியிலேயே சென்று (என்னை) அலைக்கழிக்கும் கனவினுக்கு நிகரான இப்பிரபஞ்சவாழ்வும், (இருவகுமென்னும்) மேன்மையான பொருளினையறியாத குற்றமுடைய மனமும், ஆணவமலத்திற் பிறந்து அதிற்கலந்து உபத்திரவப்பட்டுக் கொழுப்பிற்புழு வென்ன அசையும் சிந்தையும், வஞ்சகமும் பாவமும் வாய்ந்த (யாவரும்) பழிக்கத் தகுந்த நினைப்பும், குற்றமும், பொறாமையும், ஆசையும், மறதியும், கபடமும், பொய்யும், தந்திரமும், அதிக்கக்கோபத்தால் விளையும் போரும், கொலையும், இழிவாகிய சிறுமையும், விரோதமும், பயமும், இடரும், நடுக்கமும் மூக்குணத்தால் விளைந்த அறியாமையும், பஞ்சேந்திரியங்களின் செயலும், இல்லாமையும், நோயும் தங்கிய தேகத்தினை; உயிரென்றழைக்கப்படும் பட்சி நீங்கிப்போகும் கூட்டினை, எலும்புடனே நாம்பினைக்கொண்டு (ஆக்கைக்கு ஒன்றிக்கொண்டு பொருந்திய) இடங்களிற்கட்டி, கொழுப்புடன் கூடிய தோலினால் மூடியொழுக்குண்டாகும் அழுகலினை, செழிப்பிலிருந்த உதிரத்துடன் கூடிய சிறு புழுக்கள் தங்கிய கூண்டினை, மலப்பொருள் நிறைந்த பாண்டத்தினை, ஊசிநுழைந்த கூடையினை, நீர்கசந்த சோற்றினை (பசியடக்கும்) துன்பமயமானபள்ளத்தினை, கொலைசெய்யத்தகுந்த ஆடுகள் எண்ணிலவிருக்கும் அவனியினை, தொடுக்கத்தகுந்த பலவினைகளென்னும் பண்டங்களாகிய குப்பையினை, பழிமொழிகளாகிய சாக்குகள் சிந்தும் கந்தற்கோணியை, கோபாக்கினியையுண்டாக்கும் கொல்லனுடைய துருத்தியினை, பஞ்சேந்திரியப்

பட்சிகள் அடைத்திருக்கும் கூண்டினை, நீக்காத இலேசங்கள்வளரும் மரப்பொந்தினை, ஆசைக்கயிற்றாற்சுழலும் பம்பரத்தினை, பாச (சம்பாதிப்பதிலும்) பணம் (சம்பாதிப்பதிலும்) சுழன்று திரிகின்ற காற்றாடியினை, ஆன்மாக்கள் செய்யும் கன்மத்திற்குத் தக்கபடி மயங்கி (எக்காலத்தும்) சுற்றிவரும் சக்கரத்தினை, (பிரபஞ்சமாகிய) வெட்டவெளியிலுருட்டிவிட்ட தேர்ச்சக்கரத்தினை, பாவமாகிய பண்டங்களையேற்றிக்கொண்டு பிறப்பாகிய கடலிற்புகுந்து, காமமென்னுங் காற்றுமோதியலைக்க, தீயவழியென்னும் கரையிற்போய்ச் சேர்ந்து கெடுகின்ற கப்பலை, இருவினைகளாகிய விலங்குடன் சஞ்சரிக்கும் உடலினை, இயமன் வந்து அழைத்திட நடுக்கங்கொள்ளும் தேகத்தினை சவமாகக் கிடத்திவிட்டு (ஆன்மாவாகிய) யான் வெளிப்படுகையில், தேவரீரது திருவடித்தாமரையினிடத்து அபயமாக அடைக்கலம் (புகுந்தேன்). ஆகாயத்தில், அச்சத்துடன் இடியிடித்தாலென்ன ஆவேசத்துடன் எழுகின்ற வேகமான நடையினையுயர்ந்த, வெள்ளை இடபத்தின்மேல் எழுந்தருளும் கடவுளே தேவரீருக்கு அடைக்கலம். இமைகொட்டாத திருநேத்திரங்களையுடைய இறைவனே அடைக்கலம். அன்பர்கட்கு எளியவனே யடைக்கலம் அடைக்கலம். தீட்சித பிராமணர்கள் வாழுகின்ற தில்லையம்பதியில் கனகவம்பலத்திலெழுந்தருளி ஆனந்தநிர்த்தனஞ்செய்து, திருவருளினை முகந்து வீசுகின்ற கடவுளே யடைக்கலம், தேவர்களும் முனிவர்களும் நின்றுகொண்டிருந்து தோத்தரிக்க, பசுமையாகிய ஆபரணங்களைத் தரித்த கொடிபோன்ற சிவகாமியுடன் விரைந்து அருள்புரியும் காமதுபெருச்சபாபதியே தேவரீரது இரண்டு திருவடிகட்கையும், பொன்னம்பலத்து தேவரீருக்கே யடைக்கலம்.

(கு - ரை) உடலெடுத்து எவ்வகையினும் பிரயோசனப் படாததாகத் தோன்றுகின்ற காலத்து இன்மையின் இவ்வுடற்பற்றைவிட்டு அம்பலத்தரசனையே யடைக்கலப்பே

ங்கேவதேதகுதியெனக்குறிப்பித்தனர். திருக்கடைக்காப்பு. "நிலைங் குடர்தோனரம்பென்பு சேர்க்கைதானிலாயதன்றுற், குணங்களாக் கல்லது குற்றநீங்காதெனக்குலக்கிருப்ப,வணங்குவார் வானவர் தானவர் வைகலு மணங்கொண்டேத்த, மனைக்குளார் தொழுதுய வலாமையல் கொண்டஞ்சினெஞ்சே." என்றதுமாற் காண்க.

---

## நான்காவது
# கோயிற்றிருவகவல்.

திருமால்பயந்த திசைமுகனமைத்த
வருமேழ்பிறவியு மானிடத்துதித்து
மலைமகள் கோமான் மலரடியிறைஞ்சிக்
குலவியசிவபதங் குறுகாதவமே
மாதரைமகிழ்ந்து காதல்கொண்டாடும்
மானுடர்க்கெல்லாம் யானெடுத்துரைப்பேன்
விளிவெளியாக்க வெளியுறக்கேண்மின்.

(பொ-ரை.) நாராயண மூர்த்தியானவர் பெற்ற சதுர்முகப் பிரமன்படைத்தருளும் எழுபிறவிகளிலும் மனிதசென்மமாகப்பிறந் தபார்வதியாருடைய தலைவனாகிய சிவபெருமானது தாமரை மல ரைப்போன்ற திருவடியினை வணங்கி விளங்குகின்ற சிவபதவியினை அடையாமல் வீணே மாதர்களை (எண்ணிச்) சந்தோஷித்து ஆசை பூண்டு கொண்டாடுகின்ற மாந்தர்களுக்கெல்லாம் நான் (சில உண் மைகளை) எடுத்துச்சொல்வேன்! சாதலுக்குரிய எளிமையினவாய்க் கசாதர்கள் தெளிவடையக்கேளுங்கள் (அவையெல்லாவோர் செ வி.)

(கு - ரை.) பூர்வஜென்மத்தில் மரம் முதலியவைகளாயிருந்து புண்ணியமிகுதியால் அரிதாகஜன்மமனிதப் பிறவி யெடுத்தவர்கட்கு அதுமுதல் இரண்டொருஜென்மம்வரையில் மலத்தடிப்பு அதிகமானகையால் அவர்களறிவிற்கு சிவபெருமானுண்மைவிளங்காது என்பது கருத்தும். ஏழுசகம் மனிதர்களாகப்பிறந்தவர்கட்கு அம்மலத்தடிப்பிராதாகலின் இறந்தகையினரும் சிவபெருமானுண்மைதெரியாதிருக்க அவர்பாலன்றி, மற்றிறலிடும் * * * குதகாது என்றனர், கடலைகள் மூன்றில் மண், பொன் இரண்டினையும் விட்டு மாதரை மகிழ்ந்து என்ற பொருளின்மாத்திரம் குறித்தமெதன்னெயோவெனில்? பொன்னை விரும்புவதும் மண்ணை விரும்புவதும் காதல்கொண்டுள்ளபெண்ணினைப்பற்றியேயாகலானென்க. இங்ஙனம் முதல்வனை மறந்து மாதர்மயலில் மயங்குவார் மிருகத்திலை பொதுவென்பார் மக்களென்றுரை பாக்கவென்றுரை.

முன்றுங்கல்லு மூபன்றுநடக்கும்
உள்ளமடர்ப்பப் பஞ்செவுவைத்தும்
வெள்ளெனுப்பாயிலே மேவியகனைக்கல்
தன்னுமவராவெனச் சொல்லித்துதிந்தும்
தசையுமெலும்புந் தக்கடன்குறங்கொடு
இசையுங்கழித்த கண்டொளிபம்பியும்
நெடுமுடமூக்கி நின்றிடுமிடையைத்
அடிபிடியென்று சொல்லித்துதித்தும்
மலமுகுதலமும் வழும்புத்திரையும்
அலைபுமவழிற்றை பாவிலையென்றும்
இலந்திபொலக் கிளைத்துமுன்னெழுந்து
திரண்டுவிம்மிச் செப்பாய்த்தேதி

உதிரத் திறவலர் கள்ளூறுகின்ற
ஒருவர்க்கிடமாய் நான்றுவற்றும்
முலையைப் பார்த்து முளரிமொட்டென்றும்
குலையுங்காமக் குருடர்க்குரைப்பேன்.

(பொ - ரை) முள்ளிலும் கல்லிலும் முயற்சித்து நடக்கும் உள்ளங்காலினைச் செம்பஞ்சென்னச் சொல்லியும், வெள்ளையான எலும்புகளினாலே பொருத்தப்பட்டிருக்கின்ற கணைக்காலினைத் தின்றுகின்றவரால் மீனென்னப் புகழ்ந்தும், மாமிசமும் எலும்புமுடை குத்தமாகவுள்ள அற்பத்தொடையினை யிக்கவாகிய வாழைத்தண்டென உரைத்தும், கீழ்ட டைவினைச் சுமந்துகொண்டிருக்கும் இடையினை உடுக்கைபோன்றதென்றும், பிடியானதென்றும் குறிப்புக்கழுத்தும், மலமும் நீரும் கொழுப்பும்மடிப்பும் அடைத்துகொண்டிருக்கின்ற, வயிற்றினை ஆலிலையென்றும், சிலந்திப்புற்றினைப் போலக் கிளம்பி முன்வளர்ந்து உருண்டு புடைத்துச்சீவடிக்கு கிகந்தால்கின்ன உலர்ந்து உள்ளாறுகிச் (சிலகாலத்திற்குப்பின்) கண்டவர் சிரிப்பதற்கேற்றதாய் தொங்கலற்றிப்போகும் தனத்தினைநோக்கித் தாமரைமொக்கென்றும (காய்போன்று) குலைக்கும்மோகாந்தகாரத்தில் முழுகிக்கிடக்கும் அந்தகர்கட்குச் சொல்லுவேன்.

(கு - ரை) காலினது பசையற்றஎலும்பினைச்சுமந்துகொண்டிருந்து ஒரு நாய் குலைத்துக்கொண்டிருப்பதுபோல மாதர் பிரயோசனமற்ற மார்புகளையுள்ளவிதக்கொண்டு காமுகனைத்தும் புகழ்ந்துகொண்டே யிருப்பவரென்பார் குலையும் என்றனர். குருடர் என்றதனால் அறிவாகிய கண்ணைக்கொண்டு சிவத்தினைப்பிரயாசையின்றி மோகாந்தகாரத்தில் மூழ்கி பதிவுறுபவனைக் கெடப்பாரை. அன்றியும், மயிரினாலும், உணவினாலும், கழுவுவதினாலும், ஆபரணங்கள் அணிதலினாலும், துண்ணுடை உடுத்தலினாலும், மாதர்கள் அவயவங்கள் மேனோக்கின்

கண்களுக்கு ரம்மியமாகத் தோன்றிக் காமுகர்க்கிலேசுவாசஞ் செய்யி னும், அறிஞர்கள் உற்று நோக்கின் அவையனைத்தும் மிகஅருவருக் கத்தக்கனவையளாய்த் தோன்றுகின்றமையும், மாற்றமடைந்திருந்தவைசோக் தக்கனவு மாயிருப்பனவுமாதல் உவமானமாயிலாத ஊயாப் புகழ் ந்து வலங்கழித்த பெண்ணும் பிரமோபாசன மென்பார்; 'காமக்குருடர்' என்றனர்.

கீட்டவுமுடைத்தவு நெடும்பொருள்லாக்கவும்
னைட்டவும்பிசையவு முதவிப்பிக்கியற்றும்
அங்கையைப்பார்த்துக் காந்தளென்றுரைத்தும்
வெள்ளையுமழுக்கு மேவியகழுத்தைப்
பாசிவிளியிய கமுகெனப்பகர்தும்
வெப்புமூத்தையு மேவியவாயைத்
துப்புமுருக்கின் அரும்பலரென்றும்
அன்னமுந்தத்திய பசைவிட்டிறக்கும்
முன்னியபல்லை முத்தெனமொழிந்தும்
கீருழைவீப நின்றுகின்றொழுகும்
கூரியமூக்கைக் குமிழ்மலர்க் கூறியும்
தண்ணீர்பீளை தவிராதொழுகும்
கண்ணைப்பார்த்துக் கழுநீரென்றும்
உள்ளுங்குறும்பி யொழுகுங்காதை
வள்ளைத்தண்டின் வளமெனவாழ்த்தியும்
வெப்புமெள்ளெனுங் கலவீர்தோழியில்
வெப்பவதரும் பேறும்பினியைத்
தக்கத்தலைபோட்டின்முனைத்தெழுந்த

சிக்கின்மயிரைத் திரண்முகிலென் றும்
சொற்பலபேசித் துதித்துநீங்கள்
நச்சிச்செல்லு நரகுவாசல்.

(பொ - ரை.) (ஒருபொருளையெடுக்க) நீட்டுதற்கும், (எடுத்த பின்) முடக்குதற்கும், மிகுந்த திரவியத்தினைவாங்குதற்கும், (உண வருதலியவற்றை) ஊட்டுதற்கும், (யாதாமொன்றை) பிசைவதற்கும், உபகாரங்களை யிவ்விடத்துச்செய்யாநின்ற உள்ளங்கையினை நோக் கிக்காந்தள் புட்பமென்று கூறியும், வியர்வினையும் அழுக்கினையும் பொருந்திய கழுத்தினை உலகினிலினிமையான பாக்குமரமெனச் சொல்லியும், வெப்புநாற்றத்தினையும் ஊத்தையினையும் பொருந்திய வாயினைச்சிவந்த முருக்கமரத்தின் சுத்தமான புட்பமென்றும் சாதத்தினையும் பதார்த்தத்தினையும் மென்று மென்று (வயிற்றில்) இறக்குகின்ற முன்னேயுள்ள பல்லினை முத்தெனவியம்பியும், ஜலமும் சளியும் தங்கியிருந்து ஒழுகும் குவிந்த மூக்கினைக் குமிழம்பூவென வியம்பியும், தண்ணீரும் பீளையும் நீங்காது ஒடிவரும் கண்ணினை நோக்கிச் செங்கழுநீர் புட்பமென்றும், உள்ளே குறும்பி தங்கி வழிகின்ற காதினை வள்ளைத்தண்டினை இலையொத்ததெனப் புகழ்ந்தும், கையினால் எண்ணெயைக்கொண்டு தடவாதிருக்கின் கொடியபழுதியும் பேனுமுண்டாகுந் திரண்டமேகமென்றும், பலமொழிகளைப் பேசிப்புகழ்ந்து (மாந்தர்களாகிய) நீங்கள் விரும்பிப் போகின்றநரகவாசல் (எந்தகையதென்னில் இயம்புதும்.) (3)

(கு - ரை.) "வையமிசை மாரிபெய் கொண்டலோவசையுசிறுசைவலமோகருங்குழல், நுதல்வளரிளம் பிறையோமதனன் கைச்சிலையோ, மதர்த்துமானுமருள் மிகுந்து மையணிந்தையரி படர்ந்தகண் கடிகாவிமலர்த்தடத்தில் வளரிளஞ்சேலோவடவர்மனக்குறைகொள்ளும் வேலோ, செய்யபவளக்கடிகை போலிதழிலங்கு நகைசெப்பு

வெண்டாளவட்டமோ, நிற்சொல்மாக் குயிலோசையோவின்னமோ ரீயா தெவிட்டாத தேன்ளமுதமோ, திகழ்வதன மோராயிரத் திங களொளியினைச்சேர்த்தேயமைத்திட்டதோ, செப்பொனுஞ்சிறைய னங்குலவுநேர் வாவியிற் செழித்தகம்போதிகழ்களம், துய்யமணி மார்பிடங்கொண்டு பூரித்துச்சுணைந்து பூக்தொளிமிருக்காத், அரி குஞ்சுமத்நாசாத்தனித்திலக்குதினேமுல்லைவன்றுணரிருக்கைமோ குந்தாகடற்குமிழியோ கடவினங்களோ கொல்வரியவிமயமிரியோ சொர்ணுஞ்சின்னைக்க ஒரசும் பமோ சித்திரைதாய மலர்வாளி யென்மேல் எய்யுமதனே, விண்ணிடைத் தோன்றுமின்னலோவித ழ்வில் பூங்கொடி போமதன், இல்லெனச்சொல்லு நல்லல்குலவோ தொழுடைவிழ மிளவாழைபோபொன், இணையிலாப்பக்கம் போ தோமற்றேர்தாவிம்ப புதற்கயனாந்தன், இவர்கட்கு மாதென்னில வனமே பின்னழகையாவருரை செய்வர்மாதோ" எனப்புலவர்விய ந்து பாடுந்துவழக்க மாகலின் "சொற்பலவேமித்துதித்து" என் றனர்.

தோலுமிறைச்சியுந் துதைந்துசீப்பாயும்
[illegible]ழி கருவினை கழனி
நாமக்கடைவழி தொகுத்தியாசல்
எனசா றுடம்பு மீதுயுந் பெருவழி
மண்புர தீ கபும் கழிக்கு மறைவிடம்
கசிக்காமுக் குய்த்தானென்றும்
இச்சித்திருக்கு மிடைகழிவாயில்
திக்கடசடையோன் திருவருளில்லார்
தங்கித்திரிபுஞ்சவலைப்பெருவழி
புண்ணிதமென்றும்புடைவையமைாட

உண்ணீர்பாயு மோளைச்செழும்புண்
மார்க்கொண்டதிய மாந்தர்புகும்வழி
நோய்கொண்டொழிய நன்னீர்போம்வழி
தருக்கியகாமுகர் சாரும்படுகுழி
செருக்கியகாமுகர் சேருஞ்சிறுகுழி
பெண்ணுமாணும் பிறக்கும்பெருவழி
மலஞ்சொரிந்திழியும் வாசற்கருகே
சலஞ்சொரிந்திழியுந் தண்ணீர்வாசல்

(பொ - ரை.) தோலும், மாமிசமும் நெருங்கிச்சிவக்கின்றகாமக்குளமாம் கருவோற்பத்தியாகும் கழனியாம், குருதம் வழிகின்றதுவாரத்தினையுடைய வாயலாம், எட்டுச்சாணுடனிருக்கும் உடல்வெளிவரும் பெரியவழியாம், உலகத்தில் (ஆண்மக்களின்) இந்திரியத்தினையொழித்தற்கேற்ற மறைந்த இடமாம், அத்தகைய இடத்தினைவிரும்பிக்காமாந்தகாரரும் நாளெக்காலத்தும் ஆசைகொண்டிருக்கும் உடலின் மத்தியிலுள்ள பெரியவாசலாம், சந்திரனைச்சடாபாரத்திலுடைய பெருமான் திருவருளினையடையாதவர் இருந்து திரிகின்ற மெலிவான பெரியவழியாம், இது புண்ணுக்குச் சமானமென்று புடவையைக் கொண்டுமூடியும், உள்ளேயிருந்து சீரினையூற்றும் ஓசையுடன் கூடிய சிவந்தபுண்ணும், காமவாசைகொண்டு (சிவபெருமான் திருவருளினை) யறியாத மாந்தர்கள் நுழைகின்ற வழியாகும், காமகோப்பெற்று அதிகக்காத் வதிபர்கள் போகும் வழியாகும், கருவம்கொண்டகாமிகள் நெருங்கும் படுகுழியாம், செருக்கினையுடையகாமிகள் சேருகின்ற சிறியகுழியாம், பெண்ணும் ஆணும் பிறப்பதற்கேதுவாகிய பெரியவழியாம், மலமானது வழிந்து இறங்குந்தண்ணீர் வாசலாம்.

இச்சைநீங்க வினிநினைவேண்டா
பச்சிலையிடினும் பத்தர்க்கிரங்கி
மெச்சிச்சிவபத வீடருள்பவனை
முத்திநாதனை மூவாமுதல்வனை
அண்டரண்டமு மனைத்துளபுவனமுங்
கண்டவண்ணலைக் கச்சியிற்கடவுளை
ஏகநாதனை யிணையடியிறைஞ்சுமின்
போகமாதரைப் போற்றுதலொழிந்தே.

(பொ - ரை) . இச்சையை (சிற்றின்பத்தினை) நீங்கள் சுகமான தென்று விரும்பாமல், பொதுமகளிரைப் புகழ்தலினின்று நீங்கி (வெறும்) பச்சிலையிடினும் அடியார்களுக்கு (மனமிரங்கி) இரங்கி வியந்து பாராட்டித் (தமது) சிவபதவியாகிய மோட்சவீட்டினைப் பாலிக்கின்ற பெருமானை மோட்சத்திற்குத் தலைவனை, நித்தியமாயுள்ள முதல்வனை அண்டபிண்டங்களையும் பதினான்கு புவனங்களையும் காரியப்படுத்திய தலைவனை, காஞ்சிமாநகரத்தில் எழுந்தருளியிருக்கும் ஏகாம்பரநாதனை, தன்னொத்தனியனை, (அவனது) இரண்டு திருவடிகளையும் நெஞ்சே வணங்குங்கள்.

(கு - ரை.) இதனாற்பெண்ணாசைத் தூண்டப்படுதற்குக் காரணர்களாலே வரு வருத்தத்தைத் தருகிற அச்சத்திலிருக்கப்படாதிருக்கவேண்டுமென்பார் 'இனிநெக்கவேண்டா' என்றனர். வெறும்பச்சிலையினைப்பறித் தருச்சனையையருச்சிக்கினும்பத்தருக்கு இரங்கியருள், செய்வானென்பார், 'பச்சிலையிடினும்பத்தர்க்கிரங்கி' என்றனர். தாயுமானவர், "கல்லாலே நின்கன் கையிலிரங்கித்தம் கனிமதுரச், சொல்லாற்றுதித்து - நற் பச்சிலைதூவுந்தொண்டரினை, மெல்லாற்பிறைநுதலாள் பற்றதாகினி னிவ்வது செய்வேன், கொல்லாவிரதியர் நேர்நின்றமுக்கட்குருமணி

டே." என்றதனாற்காண்க. போகமாதரென்றது விலைமகளிரை. இவர்கள் பெயரைக்குறித்துச்சொல்லவே, இல்லறத்திலிருந்து கற்புடையமனைவியுடன்வாழ்ந்து இல்லறநெறிதவறாது, சிவசிந்தனையுடனிருக்கின்றவரில்லையெனவேற்பட்டது. பின்னும் திருவெண்காட்டடிகள் மாதரையடித்தடி வைவது பொருட்பெண்டிரை நோக்கியேயாம்.

---

# திருவேகம்பமாலை.

அறந்தா னியற்று மவனிலுங் கோடி யதிகமில்லந்
துறந்தா னவனிற் சதகோடி யுள்ளத் துறவுடையோன்
மறந்தா னறக்கற் றறிவோ டிருந்திரு வாதனையற்
றிறந்தான் பெருமையையென்சொல்லுவேன்கச்சியேகம்பனே.

(பொ - ரை.) காஞ்சிபுரத்திலெழுந்தருளியிருக்கும் ஏகாம்பரநாதனே! தருமஞ்செய்பவனைப்பார்க்கிலும் வீட்டைநீங்கிய துறவியானவன் கோடிபங்கு உயர்ந்தவன், இத்துறவி[illegible]திலும் மனத்துறவு அடைந்தவன் நூறு கோடிபங்கு உயர்ந்தவன், கோபமுழுவதினையு நீங்கி அறிவுமயமாயிருந்து சகலகேவல மற்றுத்தற்போதமொழிந்தவன் பெருமையினை நான் என்னவென்றுசொல்லி (மதிப்பேன்.)

(கு - ரை.) அறமியற்றுபவன் இல்லறத்தான், இல்லந்துறந்தான் வானப்பிரஸ்தன், உள்ளத்துறவுடையோன் சந்நியாசி, இருவாதனையற்றிறந்தான் ஞானி. பிரபஞ்சமுகமாகச் செல்லும் வாசனையை யொழித்துக்கொண்டு சிவமயமாயிருக்கி பிறவிக்கேதுவாகி

நகைத்தலைச்சிலையைக்கண்ட வேதாரணியர் துறவியாய்ப் போதல்

யத[illegible]போத மொழிந்தவனேபெரியோ னென்பார்' என்சொல்லு வே[illegible] என்றனர். பதிபசுபாசவிளக்கம். "அறிவிலறிவாய கண்டித மாய[illegible]த்தாநந்த மயமாகிச் செறியும்பரம சிவந்தன்னைத்தன்னுட்கண்டு இ[illegible]ணித்துக், கறவையருக்கப்பால் சுரக்குங்காலமேனுங்கடைப் [illegible]ப்போர்; பிறவிக்கடலைக் கடந்தோர்களவரேயுலகிற்பெரியோரே' என்றதனுங் காண்க.

கட்டியணைத்திடும் பெண்டிரு மக்களுங் காலத்தச்சன்
வெட்டி முறிக்கு மரம்போற்சரீரத்தை வீழ்த்திவிட்டாற்
கொட்டிமுழக்கி யழுவார் மயானங் குறுகியப்பா
லெட்டியடி வைப்பரோ விறைவா கச்சி யேகம்பனே.

(பொ - ரை.) இறைவனே! காஞ்சிபுரத்திலெழுந்தருளியிருக்கும் ஏகாம்பரநாதனே! (ஆசைமிகுதியினாலே இருகரங்களால்) சேர்த்து, (மார்புடனே) யணைக்கத்தகுந்த மனைவியரும் புத்திரரும், தச்சனாகிய இயமன் (மரம்போன்ற) சரீரத்தினை வெட்டிமுறித்துக்கீழே மரம்போலத்தள்ளிவிட்டால் அவர்கள் சப்பறையடிப்பித்து வாத்தியமுழக்கு[illegible]த்துப்புலம்புவார் சுடுகாடுவரையில் வந்து (திரும்பிவந்துவிடுவார்) அப்புறத்தில் ஓரடியாயினு வைப்பாரோ (வையார்-)

(கு - ரை.) பெண்டிரைக் கட்டியணைத்தல் காமமிகுதியால், மக்களைக்கட்டியணைத்தல் அன்புமிகுதியால், ஆன்மாக்களின் காலமு[illegible]றையுணர்ந்துவருபவனாகலின் இயமன் காலனெனப்பட்டான்; தச்சன் மரங்களை வெட்டிக்கீழே தள்ளுதல்போல இயமனும் உடலைக்கீழே தள்ளுபவனாகையால் தச்சனென்றார், மனைவியரும்புத்திரரும் மயானத்திற்கு அப்புறம் வாராரெனவே, செய்தன்ன புண்ணியபாவங்கள் ஆக்குமவுடல் செல்லு முலகத்திற்கும் வருமென்பதாயிற்று.

கைப்பிடிநாயகன் றூங்கையிலேயவன் கையையெடுத்
தப்புறந்தன்னி லசையாமன் முன்வைத் தயல்வளவி
லொப்புடன்சென்று துயினீத்துப்பின்வந்துறங்குவளை
யெப்படிநானம்புவே னிறைவா கச்சி யேகம்பனே.

(பொ - ரை.) இறைவனே! காஞ்சீபுரத்திலெழுந்தருளியிருக்கும் ஏகாம்பரநாதனே! (விவாககாலத்தில் பலரறிய) கைப்பிடித்தகணவன்றூங்கையிலே (மெள்ளத்தூக்கி அப்புறத்தில் சிறிது மசையாதபடி முன்னேவைத்துவிட்டு வேறு வீட்டிற்குத் தன்சம்மதத்துடன் சென்று தூக்கமின்றி (அன்னிய நாயகனொருவனுடன் சுகித்திருந்து) திரும்பிவந்து (தனது சொந்த நாயகன் பக்கத்தில் பழையபடி) நித்திரை செய்பவளை (இவ்வுலகத்தில்) எவ்வாறு நம்புவேன்.

(கு - ரை.) 'கைப்பிடிநாயகன்' என்றது விவாகமகளிரேயன்றி குலமகளிரும் இன்ன நடவடிக்கை யுடையாரெனக் குறித்தற்கு. எப்படி நம்புவேன் என்றதனால் மாதர்கள் உள்ளத்தினை யறிவது கஷ்டமென்பதாயிற்று. "அத்திமலருமருங்காக்கை வெண்ணிறமுங் கத்துபுனல்மீன்பாதங் கண்டாலும் - பித்தரே, காணூறிவுடையோர்க்கடவுளர்க்காண்பரோ, மானார் விழியார் மனம்" என்றதனைக் காண்க.

நன்னாரிற்பூட்டிய சூத்திரப்பாவை நன்னார்தப்பினாற்
றன்னாலுமாடிச் சலித்திடுமோ வந்தத் தன்மையைப்போ
லுன்னாலியானுந் திரிவதல்லான் மற்றுனைப்பிரிந்தா
லென்னாலிங் காவதுண்டோ விறைவா கச்சி யேகம்பனே.

(பொ - ரை.) இறைவனே! காஞ்சீபுரத்தி லெழுந்தருளியிருக்கும் ஏகாம்பரநாதனே; நல்ல நாரினாற்கட்டப்பட்டிருக்கின்ற சூத்திர

ப்பதுமை (ஆடிக்கொண்டிருக்கிற சமயத்தில்) அந்த நூலானது அறுந்துவிட்டால் பதுமையேயாடிப்பசையுமோ (அசையாது) அங்ஙனத்தன்மையைப்போல் தேவரீரால் யானும் (இந்தவுலகத்தில்) சஞ்சரிப்பதல்லால், தேவரீரைப்பிரிந்தால் அடியேனால் இவ்வுலகில் அருங்காரியம் (ஏதாவது) உண்டோ, (ஒருசிறிதுமில்லை.)

(கு - ரை.) ஆன்மா சுதந்தர வினையாய்த்தனக்கென வொரு செயலின்றிருக்கவும் முதல்வன் செய்விக்க செய்யுமாறுகலின் 'என்னாலிங்காவதுண்டோ' என்றனர். சிவஞான சித்தியார், "உலகினிலென்செயலெல்லா முன்விதியே நீயே புண்ணியமுஞ் செய்வித்துஞ் செய்கின்றாயென்று, நிலவுவதோர் செயலெனக்கில்லேனுஞ் செயலென்றுநினைவார்க்கு வினைகளெல்லாம் நீங்குந்தானே" என்றதனாற் காண்க. பதுமையினை யொருவன் ஆட்டுவிக்க ஆடுவதுபோல ஆன்மாவும் முதல்வன் ஆட்டுவிக்கவாடுமென்பார், 'தன்னாலுமாடிக்கவித்திடுமோ'வென்றனர். தேவாரம் "ஆட்டுவித்தாலா ரொருவராடாதாரே" என்றதனாற்காண்க.

நல்லாரிணக்கமு நின்பூசைநேசமு ஞானமுமே
யல்லாதுவேறு நிலையுளதோவக மும்பொருளு
மில்லாளுஞ்சுற்ற முமைந்தரும் வாழ்வு
மெல்லாம்வெளிமயக்கே யிறைவா கச்சி யேகம்பனே.

(பொ - ரை) இறைவனே! காஞ்சீபுரத்திலெழுந்தருளியிருக்குமேகாம்பரநாதனே! நல்லவர்களுடைய இணக்கமும், தேவரீர்சிவபூசையில் விருப்பமும், ஞானமும் அல்லாமல்வேறொன்று (ஆன்மாவிற்கு) உறுதியைக்கொடுக்கு நிலையுள்ளதான பொருள் உண்டோ (இல்லை) வீடும், திரவியமும், மனைவியும், உறவினரும், புத்திரரும், உலகவாழ்

க்கையும், அழகிய உடலும் இவையெல்லாம் புறம்பே யிருந்து யக்குந்தக்கவைகளேயாம்.

(கு - ரை.) நல்லாரிணக்கமென்றது சங்கமவழிபாடு, நின்பூசைநேசம் என்றது இலிங்கவழிபாடு, ஞானமுமே என்றது ஆசாரியனையடைதற்கேது வாகியகுருவழிபாடு. இம்மூன்றுமே யொருவனுக்கு இன்றியமையாத உறுதிப்பயனைக் கொடுத்தற்கேதுவென்பார் 'வேறு நிலையுளதோ' என்றனர். அகமுதல் உடம்பு ஈறாகக்கூறப்பட்டனவெல்லாம் நம்மையெமாற்றத் தக்கனவேயன்றி அவற்றாற்பிரயோசனமில்லையென்பார், 'எல்லாம்வெளிமயக்கே' என்றனர். உபதேசகாண்டம்; "மக்களொக்கலைப் பேதைமகளிரை மருங்கு சூழ்ந்த, வொக்கலை நோக்கி யெமாக்குதுணைகிரோ நீவிராய், மிக்கவிழி நரகத்தாழ்வா மென்கிற பற்றைகண்டீரோ, நக்கவெந்த கழலுக்கனடைக் கொண்கின்னவெலாநன்றே' எனநன்கறிக.

பொல்லாதவனெறி நில்லாதவனைம் புலன்கடமை
வெல்லாதவன்கல்வி கல்லாதவன்மெய் யடியவர்பாற்
செல்லாதவனுண்மை சொல்லாதவனின் திருவடிக்கன்
பில்லாதவன்மண்ணி லேன்பிறந்தேன் கச்சி யேகம்பனே.

(பொ - ரை.) காஞ்சிபுரத்திலெழுந்தருளி யிருக்கும்ஏகாம்பரநாதனே! (அடியேன்) கொடியன், நல்லவழி யினடவாதவன், பஞ்சேந்திரியங்களை யடக்காதவன் (கற்கவேண்டிய கல்வியினைக்கற்காதவன், உண்மையடியாரிடம் சேர்ந்திலாதவன்! மெய்யென்பது நவிலாதவன், தேவரீர் திருவடியினிடத்து அன்பில்லாதவன் (இத்தகையன்) பூமிக்குப் (பாரமாக) ஏன்பிறந்தேன்.

(கு - ரை.) யாவருக்கும் நல்லவனாயும், தருமவழியின் நடப்பவனாயும், இந்திரியங்களின் வழியே மனத்தினைவிடாதவனாயும், கண்ட நூல்களைக் கற்றவனாயும், சிவனடியார் கட்டுறவினையுடையவனாயும், சத்தியவிரதனாயும், சிவநேசமுடையவனாயு மிருப்பவனே உலகத்திற்பிறந்ததனாலடைய வேண்டிய பெரும் பிரயோசனத் தனையடைவனென்பதாம்.

பிறக்கும்பொழுது கொடுவந்த தில்லைப் பிறந்து மண்மேல்
இறக்கும் பொழுது கொடுபோவதில்லை யிடைநடுவிற்
குறிக்குமிச்செல்வஞ் சிவன்றந்ததென்று கொடுக்கறியா
திறக்குங்குலாமருக் கென்சொல்லுவேன் கச்சியேகம்பனே.

(பொ - ரை.) காஞ்சிபுரத்திலெழுந்தருளியிருக்கும் ஏகாம்பரநாதனே! (ஒருவன் உலகத்தில்) பிறக்கின்றகாலத்து (யாதொன்றையும் தன்னுடன்) கொண்டுவந்ததில்லை. பிறந்து (வாழ்ந்து) உலகில் இறக்குங்காலத்து (தானிதுகாறுஞ்சம்பாதித்தபொருள்களிலொன்றினையும்) கொண்டுபோவதில்லை, (பிறப்பிற்கும் இறப்பிற்கும்) மத்தியகாலத்தில் (அதாவது உலகில்வாழுங் காலத்தில் கிடைக்குஞ் செல்வம்சிவபெருமானமக்குக்கொடுத்ததென்று எண்ணி (இரப்பவர்க்குக்) கொடுக்காமல் இறந்துபோகும் பிரபஞ்ச அடிமைகட்கு நான் என்னவென்றெடுத்துரைப்பேன்.

(கு - ரை.) பூர்வசென்மத்திற் பண்ணியபலனுக்குத் தக்கபடி இச்சென்மத்தில் சிவபெருமான்வேண்டிய செல்வங்கொடுத்திருக்க இச்செல்வத்தினைக்கொண்டு இப்போது தானதருமங்களைச்செய்து அடுத்தசென்மத்திலு மிவ்வண்ணமே செல்வனாய் வாழவேண்டுமென்று கருதாது நித்தம் செலவழியாமலிருக்கும் உலோபர்கட்கு எடுத்துச்சொல்லியும் கேளாரென்பார், 'என்சொல்வேன்' என்றனர்.

அன்னவிசார மதுவேவிசார மதுவொழிந்தாற்
சொன்னவிசாரந் தொலையாவிசாரம் தோகையரைப்
பன்னவிசாரம் பலகால்விசாரமிப்பாவிநெஞ்சுக்
கென்னவிசாரம் வைத்தாயிறைவா கச்சியேகம்பனே.

(பொ - ரை) இறைவனே! காஞ்சீபுரத்தில் எழுந்தருளியிருக்கும் ஏகாம்பர நாதனே! (அடியேனுக்கு முதலுண்டாவது) உணவு சம்பந்தமாக உண்டாகும் துக்கம் அதுவே யெப்போது நீடித்த துக்கம். அதனீங்கியகாலத்தில் இவ்வியங்கிடப்பணிவென்னும் துக்கம் நீங்காதுக்கம். (அதனீங்கியகாலத்தில்) மாதர்களை நெருங்கிவாழ்வேனே யென்னுந் துக்கம் (இங்ஙனம்) எக்காலத்தும் துக்கமே, இத்தீயமனத்திற்கு என்ன துக்கம் வைத்தனை (இத்துக்கங்களினின்று நீங்கும் காலம் எக்காலமோ அறியேன்).

(கு - ரை) சிவபெருமான் திருவருளினை யடைதற்கேதுவாகிய சாதனங்களிற் சித்தும் புத்தியைச் செலுத்தாது, உடலைக்காத்தலினும் போகங்களை யனுபவித்தலினும், சிற்றின்பம் நுகர்தலினும் சாதனமாயுள்ளவற்றிலேயே காலங்கழிக்கின் உடலதெற்கெனமென்பார் 'என்னவிசாரம் வைத்தாய்' என்றனர்.

கல்லாப்பிழையுங்கருதாப்பிழையுங் கசிந்துருகி
நில்லாப்பிழையு நினையாப்பிழையு நின்னஞ்செழுத்தைச்
சொல்லாப்பிழையுந் துதியாப்பிழையுந்தொழாப்பிழையு
மெல்லாப்பிழையும் பொறுத்தருள்வாய் கச்சியேகம்பனே.

(பொ - ரை.) காஞ்சிபுரத்தில் எழுந்தருளியிருக்கும் ஏகாம்பர நாதனே! (கற்கவேண்டிய நூல்களை) கற்காத குற்றத்தினையும் அ

கங்களை விரும்பாத குற்றத்திளையும், மனங்கசிந்து உருகியெவ்வழி நிலைவாத குற்றத்திளையும் தேவரீரது பஞ்சாக்கரத்தைச் செபியாக் குற்றத்திளையும், தோத்தரியாத குற்றத்திளையும் (மற்று மெனை யறியாது செய்யும்) எல்லாக்குற்றங்களையும் மன்னித்துத் திருவருள் புரிந்தருளவேண்டும்.

(கு - ரை.) கற்றல், கேட்டல், சிந்தித்தல், தெளிதல் உபாய நிஷ்டை இவற்றி லொன்றேனும் செய்யவில்லை யென்பார் முறையே 'கல்லாப்பிழையும் * * * சொல்லாப்பிழையும் என்றனர். இந் நான்கினுமேற்பட்ட பரமஞானிகளாய் விளங்குபவரும் சிவபெருமானைத் தோத்தரித்து வணங்கவேண்டுவது அவசியமென்பார், 'துதியாப்பிழையும் தொழாப்பிழையுமென்றனர்.' தன்னையறியாமலும் சில பிழைபாடு முண்டாமென்பார் 'எல்லாப்பிழையும்பொறுத்தருள்வாயென்றனர்.

மாயக்கட் போரையு மாயாமலமெனு மாதரையும்
வீயவிட் டோட்டி வெளியே புறப்பட்டு மெய்யருளாந்
தாயுடன் சென்றுபின் றாதையைக் கூடிப்பின் றாயைமறந்
தேயுமதே நிட்டை யென்றா னெழிற் கச்சியேகம்பனே.

(பொ - ரை.) அழகினைவாய்ந்த காஞ்சிபுரத்திலெழுந்தருளி யிருக்கும் ஏகாம்பரநாதனே! (அடியேனைத் தடுத்தாட்கொண்டகுருநாதன்) மாயையென்னும் சேனைகளையும், ஆணவமலமென்னும் மாதர்களையும், தன்னிடத்திருந்தும் அப்புறப்படுத்திச் சந்நியாசமடைந்து உண்மையான திருவருளாகும் தாயாருடன் தொடர்ந்து தந்தையாகிய சிவபெருமானை யடைந்து பின்னர் தாயினைமறந்து பொருந்தி யிருப்பதே நிஷ்டையெனத் திருவாய் மலர்ந்தருளினன்.

(கு - ரை.) கன்மத்தினை எவ்வளவாயினும் அநுபவித்தேதீர வேண்டுமாதலினால் மாயாகாரியங்களிடத்துப் பற்றும் ஆணவமலமறைப்பும் நீங்கவே இதுகாறுமலத்துடன் விரவியிருந்த திரோதானசத்தி அருட்சத்தியாக விளங்க அவ்வருட்சத்தி மூலமாக முதல்வனுடனிரண்டறத்தியானிக்கும் சமயத்தில் திருவருட்தோற்றம் முன்னதாத் தோன்றுதாகலின் அந்நிலையே நிர்விகற்ப சிவராஜயோக சமாதியென்றனர்.

வரிக்கோலவேல்விழி யாரநுராக மயக்கிற்சென்று
சரிக்கோதுவேனெழுத் தஞ்சுஞ்சொலேன்றமியேனுடலை
நரிக்கோகழுகு பருந்தினுக்கோவெய்ய நாய்தனக்கோ
வெரிக்கோவிரை யெதுக்கோ விறைவா கச்சி யேகம்பனே.

(பொ - ரை.) இறைவனே காஞ்சிபுரத்திலெழுந்தருளியிருக்கின்ற ஏகாம்பரநாதனே! செவ்வண்டினையொத்த அழகியவேலாயுதம் போன்றமாதர்களுடைய ஆசையென்னும் மயக்கிற்சிக்கி (அவர்கள்) அழகினைவர்ணித்துக்கொண்டிருப்பேன். பஞ்சாக்கரமகாமந்திரத்தினைச்செபியேன் (இத்தகையேனுடைய) உடல்நரியினுக்கோ, கழுகினுக்கோ, பருந்தினுக்கோ, கொடியநாயினுக்கோ, அக்கினிக்கோ, மற்றெவற்றிற்கோ இரையாய்விடும்.

(கு - ரை.) வேதவிருத்தமாய் மந்திரத்தின்மாட்டு விளங்கும் பஞ்சாட்சரதியானத்தினைக்கைவிட்டுமாதர்மயக்கிற் கட்டுப்பட்டிருப்பவர்கள் உருவசித்தி, அருவசித்தி, அருவுருவசித்தி மூன்றிலொன்றுமடையாது தங்கள் தேகத்தினை நரிமுதலியவற்றிற்கு இரையாகும்படிச் செய்வார்கள்.

காதென்றுமூக்கென்றுகண்ணென்று காட்டியென் கண்ணெ
மாதென்றுசொல்லி வருமாயைதன்னை மறலிவிட்ட [திரே
தூதென்றெண்ணாமற் சுகமென்று நாடுமித் துர்ப்புத்தியை
யேதென்றெடுத்துரைப்பே னிறைவாகச்சி யேகம்பனே.

(பொ-ரை.) இறைவனே! காஞ்சீபுரத்திலெழுந்தருளி யிருக்கும் ஏகாம்பரநாதனே! காதுகளையும், மூக்கினையும், கண்களையும் கன்னங்களையுமே காட்டி (இவ்வகையின நகையுமுடைய) பெண்ணென்று சொல்லி வருகின்ற மாயையாகிய வடிவினை எமன் என்முன்னனுப்பிய தூதென்று நினையாமல் இன்பம் பாலிக்கத்தகுந்த உருவமென்று விரும்புமனைத்தனிடமாய் விருக்கும் கெடுதலையான புத்தியின்றன்மையை யென்னவென் றெடுத்துரைப்பேன்.

(கு-ரை.) பேரின்பத்தினையடை வதற்கேதுவாயுள்ளவைகளில் மனத்தினைச் செலுத்தாமல், சிற்றின்பத்தினையடைவதற்கேதுவாயுள்ள மாதரிடத்துப் புத்தியினைச் செலுத்துவதிலழுந்தி கிடக்கின் இயமன் அனுப்பும் தூதுவந்து இலேசாக அழைத்துக் கொண்டுபோய்விடுவ னென்பதாம்.

ஊருஞ்சதமல்ல வுற்றார் சதமல்ல வுற்றுப்பெற்ற
பேருஞ்சதமல்ல பெண்டீர்சதமல்ல பிள்ளைகளுஞ்
சீருஞ்சதமல்ல செல்வஞ்சதமல்ல தேசத்திலே
யாருஞ்ச தமல்ல நின்றாள் சதங்கச்சி யேகம்பனே.

(பொ-ரை.) காஞ்சிபுரத்திலெழுந்தருளி யிருக்கும் ஏகாம்பரநாதனே! ஊரும் நித்தியமன்று, சுற்றத்தாருந்நித்தியமன்று, விரும்பிப்பெற்றெடுத்ததாய் தந்தையரும்நித்தியமன்று; மனைவியருநித்திய

மன்று, புத்திரர்களும் உலகத்திலனுபவிக்கும் சிறப்புகளும் நித்திய மன்று, திரவியமும் நித்தியமன்று இவ்வுலகிலே எத்தனையும் நித்தியமன்று (எல்லாம் அநித்தியமே) தேவரீர் திருவடியே நித்தியமானது.

(கு - ரை.) ஈன்றெடுத்தவர்களும் மனைவி மக்களியாரும் இறப்பிலும் பிறப்பிலும் கட்டுப்பட்டுக்கிடத்தலினாலும், பதார்த்தங்கள்யாவும் மாயாகாரியங்களாயிருத்தலினாலும் இவையெல்லாம் சதமல்லவென்றார். இறப்பினும் பிறப்பினுங்கட்டுப்படாது என்றும் நித்தியனாயுள்ளவன் சிவபெருமானொருவனே யாகலின் அவன் திருவடியே சதமென்றனர்.

சீறும்வினையது பெண்ணுருவாகித் திரண்டுருண்டு
கூறுமுலையு மிறைச்சியுமாகிக் கொடுமையினால்
பீறுமலமு முதிரமுஞ்சாயும் பெருங்குழிவிட்
டேறுங்கரைகண்டிலே னிறைவாகச்சி யேகம்பனே.

(பொ - ரை.) இறைவனே! காஞ்சிபுரத்திலெழுந்தருளியிருக்கும் ஏகாம்பர நாதனே! கொடுமையினை விளைவிக்கும் வினையானது ஒரு பெண்ணின்வடிவினையெடுத்து (அப்பெண்ணினிடம்) திரண்டு உருண்டிருக்கும் தனமும் மாமிசத்திரட்சியினாலும் (மறைந்து நின்ற) கொடுமையினையும், மலம்வரும் (குதத்தினுக்குச் சமீபத்தில்) உதிரம்வழியும் (அல்குலாகிய) பெரியகுழியினையும்விட்டு நீங்கியடையும் கரையொன்றினையும் கண்டேனில்லை.

(கு - ரை.) பிரத்தியட்சமாக மனத்தினைச் செலுத்தியுள்ள எத்தகையினரையும், மாதர்கள் அங்கங்களுக்குள் சிறந்துவிளங்கித் தோயமாக விழுத்தித் தங்களிடத்து மயங்கச்செய்வனதனமும் அல்

ருளுமேயா யிருத்தலினல் அவையிரண்டினையு மாத்திரங்குறித்தனர்.

பொருளுடை யோரைச் செயலினும் வீரரைப் போர்க்களத்துந்
தெருளுடையோரை முகத்திலுந்தேர்ந்து தெளிவதுபோ
லருளுடையோரைத் தவத்திற்குணத்தி லருளிலன்பி
லிருளறுசொல்லினுங் காணலாங்கச்சி யேகம்பனே.

(பொ - ரை.) காஞ்சிபுரத்திலெழுந்தருளியிருக்கும் ஏகாம்பரநாதனே! செல்வமுடையவர்களை அவர்களுடைய (தருமச்) செய்கைகளாலும், வீரமுடையவர்களை அவர்களுடைய (தீர)யுத்தத்தினாலும் அறிவுடையோர்களை அவர்களுடைய (நல்ல) முகக்குறியினாலுந்தேர்ந்து தெளிந்து கொள்வது போல, திருவருளுடைய பெரியோர்களை அவர்கள் தவத்தினாலும், குணத்தினாலும், அருளினாலும், அன்பினாலும், குற்றமற்ற சொற்களாலும் தெரிந்து கொள்ளலாம்.

(கு - ரை.) உலகில் ஒவ்வொருவரும் தாங்கள் தாங்கள் செய்யுங் காரியங்களைக் கண்டு அக்காரியங் கட்குக்காரணமாயுள்ள கருத்தாக்களின் உண்மைத் தன்மையை கண்டு தெரிந்துகொள்ளலாமென்றனர்.

பருத்திப் பொதியினைப் போலேவயிறுபருக்கத்தங்க
ளிருத்திக்கறுக்கை போகின்றார் துறந்தோர்தமக்கு
வருத்தியமுதிடமாட்டா ரவரையிம்மாநிலத்தி
லிருத்திக்கொண்டே னிருந்தாயிறைவா கச்சி யேகம்பனே.

(பொ - ரை.) இறைவனே! காஞ்சிபுரத்திலெழுந்தருளியிருக்கும் ஏகாம்பரநாதனே! பஞ்சின் மூட்டையினைப்போலுள்ளவயிறுகா

ளுக்கு நாள்தொப்பை விட்டு அதிகப்பட (ஒவ்வொருவரும்) தங்கள் தொந்தைக்கு அறுசுவையுடன் கூடிய பண்டங்களை யிடுகின்றனர் (இங்ஙன மின்றி,) துறவிகட்கு (அன்புடன் வலிய) வரவழைத்து அன்னம் படைக்கமாட்டார் அத்தகைய உலோபர்களை இப்பெரிய பூமியில் என் வைத்துக் கொண்டிருக்கின்றனை.

(கு - ரை.) "இல்வாழ்வானென்பானியல்புடைய மூவர்க்கு நல்லாற்றினின்ற துணை" என்ற திருக்குறளுக்கு விரோதமாக நடக்கின்றவன் உலகிலிருந்தால் அவன் பழிக்கத்தக்கதாய் உலகுங் கெடுவதாகலின் அந்நிலையினையுணர்ச்சியில் இவ்வுலகத்தினின்றும் அப்புறப்படுத்தவேண்டுமென்றனர்.

பொல்லா விருளகற் றுங்கதிர் கூகையின் புட்கண் ணுக்குக்
கல்லா யிருந்திடு மாறொக்கு மேயறி வோருள் ளத்தில
வல்லா ரறிவா ரறியார் தமக்கு மயக்கங்கண் டா
யெல்லாம் விழிமயக் கேயிறை வாகச்சி யேகம்பனே.

(பொ - ரை.) இறைவனே! காஞ்சிபுரத்தி லெழுந்தருளி யிருக்கும் ஏகாம்பரநாதனே! அதிகமான இருளையகற்றும் சூரியன் கிரணம் கூகையென்று சொல்லப்படுகின்ற பட்சியின் கண்ணுக்கு இருளாகவே யிருத்தலின் தன்மையினை யொக்கும். அறிவாளிகள் தமது உள்ளத்தில் கவிழ்ந்துகொண்டு பார்க்கவல்லவராகலின் அவர்கள் தம் கண்ணால் (ஞானசூரியனை) அறிவதும் அறியாதவர் கட்கு (அறியாமையாகிய) மயக்கக்காரணமாயிருப்பதும் (ஆலோசிக்குமிடத்து) இவையனைத்தும் கண் மயக்கேயாம்.

(கு - ரை.) பூதசூரியன் எல்லார்கண் களுக்கும் உபயோகமாகவிருக்கினும் கூகையின் கண்களுக்கு உபயோகப்படுமாறில்லை போல ஞானசூரியன் எல்லார் உள்ளங்களினும் பிரகாசிக்கினும் அறியாமைய

ய்ந்தார் உள்ளத்தில் பிரகாசியா னென்பதாம்.

வாதுக்குச்சண்டைக்குப் போவார்வருவர் வழக்குரைப்பர்
தீதுக்குதவியுஞ் செய்திடுவார் தினந்தேடியொன்று
மாதுக்களித்து மயங்கிடுவார் விதிமாளுமட்டு
மேதுக்கிவர்பிறந்தா ரிறைவா கச்சி யேகம்பனே.

(பொ - ரை.) இறைவனே! காஞ்சீபுரத்திலெழுந்தருளி யிருக்குமேகாம்பரநாதனே! (இவ்வுலகினோர்) தங்கள் ஆயுள்நாள்பரியந்தம் வீண் தருக்கம் புரியவும், போர்புரியவும் போவது வருவதுமா யிருப்பார்கள் (வீண்) வழக்குத் தொடுப்பார் தீமையானகாரியங் கட்குவேண்டிய உதவி புரிவார்கள்' பிரதிதினமு மலைந்து (திரவியஞ் சேகரித்து) ஒரு பெண்ணுக்குக் கொடுத்து மயக்கமுற்றிருப்பர், எதன் பொருட்டு இவ்வுலகிலிவர் பிறந்தார்.

(கு - ரை.) சாகிறவரைக்கும் பகிர்முகமாயுள்ள விஷயங்களிற் பிரவேசித்து வீணாய்க்கழித்து ஒரு பயனையுமடையாது போகின்றனரேயன்றி அந்தர்முகமாக விருந்து மறுமைக்கடைய வேண்டிய புண்ணிய சாதனங்களி லொன்றையும் சேகரித்துக் கொண்டாரில்லையென்றனர்.

ஓயாமற்பொய்ச்சொல்வர் நல்லோரை நிந்திப்ப ருற்றுப்பெற்ற
தாயாரைவைவர் சதியாயிரஞ்செய்வர் சாத்திரங்க
ளாயார்பிறர்க்குப காரஞ்செயார் தம்மையண்டினர்க்கொன்
றீயாரிருந்தென்ன போயென்னகாண் கச்சியேகம்பனே.

(பொ - ரை.) காஞ்சிபுரத்திலெழுந்தருளி யிருக்குமேகாம்பரநாதனே! (உலகத்திற் பெரும்பாலோர்) எப்போதும் பொய்பேசி

கொண்டேயிருப்பர், நல்லவர்களை தூஷிப்பர், (அனேகபாவங்களைச்) செய்து பெற்றெடுத்ததாயினை நிந்தை செய்வர், அனேகமானவஞ்சகங்களைச் செய்வர், உண்மைச் சாத்திரங்களை ஆராயார், அந்நியர்கட்கு உபகாரம் செய்யார், தம்மையடுத்து யாசித்தவர்கட்கு ஒருசிறிது மீயார், (இத்தகையினர்) உலகத்தில் வாழ்ந்தென்ன (இறந்தென்ன (இரண்டு மொன்றே.)

(கு-ரை.) தாங்கள் தீமையினைச் செய்து கொண்டிருப்பதன்றி, தங்கட்குயாதொருசம்பந்த மில்லாரையுவத்தலும், பலபிரகாரத்தாலும் தமக்குநன்மை செய்தாரைநிந்தித்தலும், நாமடையவேண்டியவற்றை யடையாமலும் இப்பிரகாரமாக எவ்விதத்திலு நன்மை செய்யாது தீமையினையே செய்து கொண்டிருப்பவர் உலகிலிருந்து வாழ்தலினும் இறத்தலே நன்றென்றார்.

அப்பென்றும் வெண்மையதா யினுமாங்கர் நிலத்தியல்பால்
தப்பின்றிப் பேதமை வேற்றுமைதான் பல சார்தலினூற்
செப்பிலபக்குவம் பக்குவமாயுள்ள சீவனிலு
மிப்படியே நிற்ப னெந்தைபிரானென் கச்சியேகம்பனே

(பொ-ரை.) எமது தந்தையாகிய பெருமானும்! காஞ்சிபுரத்திலெழுந்தருளி யிருக்கும் ஏகாம்பரநாதனுமானவனே நீரானது (எக்காலத்தும்) வெண்மை நிறத்தினையுடைய தாயினும் உலகில் பூமியின்சம்பந்தத்தால் தன்னிடத்திலே குற்றமின்றி (அந்தந்நிலத்தின்சார்பால்) பலநிறத்தினைப் பெறுதலைப்போல, ஆராயுங்கால் பக்குவம் அபக்குவமான வேற்றுமையுள்ள சீவன்களிடத்தும் அவ்வாறே யிருப்பன்.

(கு-ரை.) சிவபெருமான் சர்வவியாபகனும் ஆன்மாக்களோடாம் இரண்டறக்கலந்து எக்காலத்து மிருக்குந் தன்மையுடையனுமி

னும், அவன் திருவருள் ப[illegible]க்குவரிடத்து வெளிப்பட்டும், அபக்குவரிடத்து மறைந்தும் சிவத்[illegible]ன்மைகளுக்குத் தக்கவாறு விளங்குவனென்றனர்.

நா[illegible]யப்பிறந்திடி ன[illegible]வேட்டையாடி நயம்புரியுந்
தாயார்வயிற் றினரா[illegible]ட்பிறந்தாயின் சம்பன்னராய்க்
காயாமரமும் வறளாங்குளமுங் கல்லாவுமென்ன
வீயாமனிதரை யேன்படைத்தாய் கச்சியேகம்பனே.

(பொ - ரை.) காஞ்சிபுரத்திலெழுந்தருளி யிருக்கும் ஏகாம்பரநாதனே! நாய்ச்சென்மமாகப் பிறந்திட்டால் தக்கவேட்டையினைச் செய்து (தன் எசமானனுக்கு) நன்மையினைச்செய்யும், தாயினதுவயிற்றில் மனிதர்களாகப் பிறந்து பிறகு செல்வர்களாய் (வாழ்ந்து) காய்க்காதமரத்தினைப் போலவும், சலம்வற்றிய குளத்தினைப்போலவும், கல்லினாற் செய்தபசுவினைப்போலவும், (தன்னையடுத்தவர்க்கு ஒன்று) கொடாதாரை யேனுண்டாக்கினை.

(கு - ரை.) காயாமரமும், வறண்டகுளமும், கல்லாவும் யாருக்கு முபயோகமில்லாதவாறுபோலுலோபிகளாலியாதும் பிரயோசனமில்லையென்பதாம். திருமந்திரம். "எட்டிபழுத்த விருக்கனிவீழ்ந்தனவொட்டிய நல்லறம் செய்யாதவர் செல்வம், வட்டி கொண்டாட்டியே மண்ணின் முகத்திட்டும், பட்டப் பதகர் பயனறியாரே" என்றதுங் காண்க. உலோபிகள் ஏழைகள் வந்தால் நாய்போலக் குலைப்பரென்பார் நாயினைக்குறிப்பாற் கூறினர்.

ஆற்றிற்கரைந்த புளியாக்கிடாமலென் னன்பையெல்லாம்
போற்றித்திருவுளம் பற்றுமையா புரமூன்றெரித்துக்
கூற்றைப்பணிகொளுந் தாளுடையாய்குன்ற வில்லுடையா
யேற்றுக்கொடியுடையா யிறைவா கச்சியேகம்பனே.

(பொ - ரை.) இறைவனே! காஞ்சிபுரத்திலெழுந்தருளியிருக்கும் ஏகாம்பரநாதனே! திரிபுரங்களையும் தகித்தும், இயமனையுடைமை கொளும் திருவடிகளை யுடையானே! [illegible] விலைவில்லாகவுடையானே! இடப்பக்கொடியை யுடையவனே! (தேவரீர் இடத்தில் அடியேன் வைத்திருக்கும்) அன்பினைத் தையும் [illegible] ஆற்றிலே [illegible] டபுளியினைப்போலச்செய்திட்டமல்லாது (அடிமையாக்கிக்கொள்ள) சித்தம்வைக்க வேண்டும் ஐயனே.

(கு - ரை.) ஆற்றிலேகரைத்த புளியினால் சிறுக்குமாதொரு பிரயோசனமில்லாதவாறு போல, தேவரீர் திருவருளாகிய சமுத்திரக் கலந்தும் அடியேனன்புபிரயோசனம் அற்றுப் போகாதபடி அன்பிற்குத்தக்கஅருள் செய்யும்படி கருணைவைத்தல் வேண்டுமென்பதாம்.

பெண்ணாகிவந்தொரு மாயப்பிசாசம் பிடித்திட்டென்னைக்
கண்ணால் வெருட்டி முலையால்மயக்கிக் கடிதடத்துப்
புண்ணாங்குழியிடைத் தள்ளியென்போதப் பொருள்பறிக்க
எண்ணாதுனைமறந்தே னிறைவாகச்சி யேகம்பனே.

(பொ - ரை.) இறைவனே! காஞ்சிபுரத்திலெழுந்தருளியிருக்கும் ஏகாம்பரநாதனே! மாயையென்று சொல்லப்படுகின்ற பிசாசானது பெண்ணுருவெடுத்துவந்து என்னைப் பிடித்துக் கொண்டு அதன் கண்களினாலே மருளச் செய்து, தனங்களால் மயக்கஞ் செய்து, மிகவிகாரமான புண்ணென்று சொல்லும்படியான (அல்குல்) என்னும் பள்ளத்தில் தள்ளி என்னுடைய அறிவினைக் கவர்ந்து கொள்ளத்தேவரீரை நினையாது மறந்துவிட்டேன்.

(கு - ரை.) மாதர்கள் மையலாகிய மருளிலே மயக்குண்டார் சிந்தைதெளிவதில்லையாதலின் 'உன்னைமறந்தேன்' என்றனர். திருமந்திரம் "பொருள் கொண்ட கண்டனும் போதவையரும், மிருள்கொண்டமின் ஒளிகொண்டின் ஏருகு, மருள்கொண்டமாதர்மயலுறுவார்கள், மருள்கொண்ட சிந்தையை மாற்றகில்லாரே." என்றதனுற்காண்க.

நாவாரவேண்டியவிதஞ்சொல்லுவாருனைநான்பிரிந்தாற்
சாவேனென்றேயிருந் தொக்கவுண்பார்கள் கைதான்வறண்
டேபோய்விடுமென்று கடுத்தலைக்கெருட்டும் பூவையருக் [டீர்த்
தேவார்தலைவிதியோ விறைவாகச்சி யேகம்பனே.

(பொ - ரை.) இறைவனே! காஞ்சீபுரத்திலெழுந்தருளியிருக்கும் ஏகாம்பரநாதனே! (ஒருவனிடத்தில் செல்வமிருக்கும்பொழுது விலைமாதர்கள்) நாவினால் நல்லவார்த்தைகளைத்தையுஞ்சொல்லுவார்கள் உன்னை விட்டுப் பிரிந்து விடின் உடனே இறந்து விடுவேனென்று உடனிருந்து கலந்துண்பார்கள், செல்வங்குறைந்துவிட இவ்விடம்விட்டுப்போய் விடுமென்று எதிர்த்துரட்டிவிடும் மாதர்கட்குத் (திரவியம்) கொடுப்பது அவர்கட்குத் தலைவிதியோ? (அறியேன்.)

(கு - ரை.) விலைமாதர்கள் சொல்வதனைத்தும் பொருளற்ற வார்த்தை யென்பார் 'துரட்டும் பூவையர்' என்றனர். "வெம்புவாள் விழுவாள் பொய்யே மேல்விழுந்தழுவாள் பொய்யே, தம்பலந் தின்பாள் பொய்யே சாகிறேனென்பாள் பொய்யே, அம்பிலுங் கொடியகண்ணா ரிரண்டெண்மையாரை, நம்பினபேர்களெல்லா நரகிலுங் கிடப்பாரே." என்றதனுங் காண்க.

கல்லார்சிவகதை நல்லோர் தமக்குக் கனவிலுமெய்
சொல்லார்பசித்தவர்க் கன்னங்கொடார் குருசொன்னபடி
நில்லா ரறத்தை நினையார் நின்னை நினைவிற்சற்று
மில்லாரிருக்கென் னிறக்கென் புகல்கச்சி யேகம்பனே.

(பொ - ரை.) காஞ்சிபுரத்திலெழுந்தருளி யிருக்கும் ஏகாம்பர நாதனே ! சிவபெருமான் சரித்திரங்களைப்படியார், நல்லவர்தமக்குக் கனவினிடத்தும் உண்மையினைப் பேசார், பட்டினி கிடப்பார்க்கு அன்னங்கொடார், ஆசாரியர் சொன்னபடி நில்லார், தருமஞ்செய்ய நினையார், தேவரீருடைய திருநாமத்தினை நெஞ்சினினையார் (இத்தகையினர் உலகில்) இருந்தென்ன இறந்தென்ன.

(கு - ரை.) சிவபுராணங்களைப் படித்தலும், சிவனடியாரிடத்துண்மை பேசுதலும், சிவனடியார்க்கன்ன மிடுதலும், சிவதருமங்களைச் செய்தலும், சிவநாமங்களையுச்சரித்தலும், ஆசாரியர்கட்டளையிற் கட்டுப்படுதலும் மனிதசென்ம மெடுத்ததினுண்டாம்பிரயோசனமென்றனர்.

வானமுதத்தின் சுவையறியாதவர் வண்கனியின்
றேனமுதத்தின் சுவையென்னல்போலத் தனித்தனியே
தேனமுதத்தின் றெளிவாய ஞானஞ் சிறிதுமில்லார்க்
கீனமுதச்சுவை நன்றல்லவோ கச்சியேகம்பனே.

(பொ.- ரை.) காஞ்சிபுரத்திலெழுந்தருளி யிருக்கும் ஏகாம்பர நாதனே! தேவாமிர்தத்தின் சுவையினைத் தெரியாதவர்கள் வண்மை பொருந்திய பழத்தினுடைய சுவையினை நாடுதல்போல், தனித்தனியாகத் தேன் சுவையிலும் பாலின் சுவையிலும் மிகுந்துள்ள (சிவ) ஞானச் சுவையினைச் சிறிது மறியாதவர்க்கு (கடல்) ஈந்த அமுதச்சுவை நன்றாகத் தோன்றுமல்லவா?

(கு - ரை.) நரைதிரையினைப் போக்கடிக்கத்தருந்தேவாமிர்தத்தினைநாடாதசிலர்பழங்களை நாடித்திருப்தியடைதல் போல, முதல்வனுடன் இரண்டறக்கலந்து அனுபவிக்கும் சிவானந்தத்தினை நாடாதவர் தேவாமிர்தத்தினை நாடவென்னுவர். எனவே கனியினைநோக்க அமுதஞ்சிறந்ததாயினும், ஞானத்தினை நோக்க அமுதம் தாழ்ந்ததேயாம்.

ஊற்றைச்சரீரத்தை யாபாசக்கொட்டிலை யூன்பொதிந்த
பீற்றற்றுருத்தியைச் சோறிடுந்தோற்பையைப் பேசரிய
காற்றிற்பொதிந்த நிலையற்றபாண்டத்தைக் காதல்செய்தே
யேற்றுத்திரிந்துவிட்டே னிறைவாகச்சி யேகம்பனே.

(பொ - ரை.) இறைவனே! காஞ்சிபுரத்திலெழுந்தருளியிருக்கும் ஏகாம்பரநாதனே! நாறுகின்ற உடலினை, பொய்நிறைந்தஒக்கிடத்தினை, மாமிசந்தங்கிய கிழிந்துள்ள துருத்தியினை, சாதத்தினையடைக்கும் தோற்பையினை, சொல்லற்கரியகாற்றுநிறைந்துள்ளநிலையில்லாப்பாண்டத்தினை விருப்பங்கொண்டேதாங்கியுலவினேன்.

(கு - ரை.) எவ்விதத்தும் சிறிதுங்கௌரவமில்லாத உடலினைத்தாங்கி வாழுதலிலென்ன பிரயோசன மென்றனர். "ஒன்றுமலச் [illegible]செடிலொன்பது பீறலவ்வொன்பதிலு, மின்றுமலச் செடில் வீசுமெ ன்[illegible] மூ[illegible]ர்வட்டன்றைக் கன்றநடைப்பிறும் போகாது பார்த்தவருவருப்பை, பெண்டிநடைப்பறுவ கோகமிதிலு நன்றே" என்றதனுங் காண்க.

"சொல்லால்வருங்குற்றஞ் சிந்தனையால்வருந்தோடஞ்செய்த
பொல்லாததீவினை பார்வையிற்பாவங்கள் புண்ணியநா

அல்லாதகேள்வியைக் கேட்டிருந்தேன்கள்ளாயவும்ற
நெல்லாப்பிழையும் பொறுத்தருள்வாய்கச்சி யேகம்பனே.

(பொ - ரை.) காஞ்சிபுரத்திலெழுந்தருளியிருக்கும் ஏகாம்பநாதனே! நாவ்வார்த்தை சொல்லும்போது சொற்களால் நேரிடுங் குற்றங்களையும், எண்ணும்போது மனத்தால் நேரிடுங் குற்றங்களையும், உடலாற்காரியங்களைச்செய்யும்போது விளைந்த குற்றங்களையும், கண்ணால்விளைந்த குற்றங்களையும், பாபநூல்களைப் படித்தலினால் வருங்குற்றங்களையும் முதலியவற்றோடும், மற்றும்பற்பல வகையால் நேரிடுங்குற்றங்களையும் பொறுத்தருள வேண்டும்.

(கு - ரை.) சொல், சிந்தனை, தீவினை என்றதனால் மனம் வாக்குக்காயங்களால்நேரிடுங்குற்றங்கள். புண்ணியநூலென்றது பதிநூலினை. அல்லாதகேள்வியென்றது பசுபாசநூல்களை, குற்றங்கள் அறிந்தும் அறியாமலும் செய்வது ஆன்ம சுபாவமாதலின் பொறுத்தருள வேண்டுமென்றனர்.

முட்டற்றமஞ்சளை யெண்ணெயிற்கூட்டி முகமினுக்கி
மெட்டிட்டுப்பொட்டிட்டுப் பித்தளையோலை விளக்கியிட்டுப்
பட்டப்பகலில் வெளிமயக்கேசெயும் பாவையர்மே
லிட்டத்தைத்தவிர்ப்பா யிறைவாகச்சி யேகம்பனே.

(பொ - ரை.) இறைவனே! காஞ்சிபுரத்திலெழுந்தருளியிருக்கும் ஏகாம்பநாதனே! நல்லமஞ்சலினை நல்லெண்ணெயுடன் கலந்து முகத்திற் பூசிக்கொண்டு மினுக்கி (கால் களிலென்றும்) மோதிரந்தரித்து, (முகத்தில்) திலதமிட்டு, (காதில்) பித்தளைச்சுருளைத்தலைக்கிப்பூண்டு, பகற்காலத்திலேயேவெளிமயக்கத்தையுண்டா

க்கும் மாதர்கள்மேல்வைத்திருக்கும்ஆசையினைத் தேவரீர்தவிர்த்தரு ளவேண்டும்.

(கு - வை.) பெண்ணொருத்தி தாயபிமான வீறுந்தியிடனும் தன் னையலங்கரித்துக் கொண்டு அவ்வேடத்தால் பலர்காணத் தெருவேவீ டர்களை மயக்குவதன்மையில் அவர்பால் நேசம்வைத்தல்தகா தென்பார், 'இட்டத்தை நீத்திட்ப்பா' யென்றனர்.

பிறந்துமண்மீதிற் பிணியேகுடிகொண்டு பேரின்பத்தை
மறந்துசிற்றின்பத்தின் மேன்மையவாகிப்புன் மாதருக்குட்
பறந்துழன்றேதடு மாறிப்பொன்தேடியப் பாவையர்க்கீந்
திறந்திடவோ பணித்தாயிறைவா கச்சி யேகம்பனே.

(பொ - வை.) இறைவனே! காஞ்சிபுரத்திலெழுந்தருளி யிரு க்கும் ஏகாம்பரநாதனே! இவ்வுலகில் பிறந்து பலநோய்களையுமனு பவித்துப் பேரானந்தத்தை மறந்து, சிற்றின்பத்தில்மயக்குண்டு அற் பமாதர் கூட்டத்திற் சென்றுதிரிந்துதடுமாறி அவர்பொருட்டுத் திர வியம் சம்பாதித்து அம்மாதர் கட்குக்கொடுத்து (வீணாக) இறந்துவி டத்தானோ கட்டளை யிட்டனை.

(கு - வை.) பிறந்தநாள் முதலாக இறக்குநாள்வரையில் அநு பவமாக அநுபவித்தபாவப்பிறிது பிரயோசனமுண்டுபண்ணாகாமலும், இவற்றைக் கொண்டு அடையப்படுவது மொன்றுமில்லாதிருத்தலினா லும் இத்தகைப்பவற்றில்காலத்தைவீணாக்கழித்தேனென்பார், 'இற ந்திடவோபணித்தாய்' என்றனர்.

பூதங்களற்றுப் பொறியற்றுச்சாரீரம் புலன்களற்றுப் [ே
பதங்குணமற்றுப் பேராசைதானற்றுப் பின்முனற்று.

காதங்கரணங் களுமற்றவானந்தக் காட்சியிலே
யேதங்களைந்திருப்பே னிறைவா கச்சி யேகம்பனே."

(பொ-ரை.) இறைவனே! காஞ்சீபுரத்திலெழுந்தருளி யிருக்கும் ஏகாம்பரநாதனே! ஐம்பொறிநீங்கி, பொருந்திய ஐம்புலன்கள் நீங்கி, மாறுபட்ட குணங்கள்நீங்கி, பேரவா நீங்கி, கேவலசகலம் நீங்கி, மயக்கும் அந்தக்கரணங்கள் நீங்கி முடிவில் தோன்றும் சிவானந்ததரிசனத்தில் குற்றமின்றி வாழ்வேன்.

(கு-ரை.) பூதமுதலியவற்றுள் என்றதனால் அவ்வத்தத்துவங்கள்பிரபஞ்சமுகமாகச் செலுத்தும் காரியங்களினின்றும் நீங்கியென்பதாம், பின் முன்னென்றது மறைப்புநிலைப்பாகிய சகலகேவலத்தினை, ஏதங்களென்றது மலகாரியங்களை, தத்துவச்சேஷ்டைகளொடுங்கிய அவசரத்து அகமுகத்திலே விளைவது சிவானந்தமாகலின் ஆனந்தக் காட்சியென்றனர்.

நல்லாயெனக்கு மனுவொன்றுதந்தருள் ஞானமிலாப்
பொல்லாவெனைக்கொன்றுபோடும்பொழுதியல்பூசைசெபஞ்
சொல்லார்நற்கோயி னியமம்பலவகைத் தோத்திரமு
மெல்லாமுடிந்தபின் கொல்லுகண்டாய்கச்சி யேகம்பனே.

(பொ-ரை.) காஞ்சீபுரத்திலெழுந்தருளியிருக்கும் ஏகாம்பரநாதனே! நல்லதாய்போன்றவரே! எனக்குவிண்ணப்பமொன்றுளது அது கொடுத்தருளவேண்டும் (அதாவது) ஞானமின்மையால்பொல்லாதவனாயிருக்கின்றஅடியேனைக் (கன்மத்திற்குத்தகுந்தபடி)கொல்லும்போது அழகிய சிவபூசை, பஞ்சாட்சரசெபம், புகழ்வாய்ந்தநல்ல சிவாலயத்தில் தெய்வவழிபாடு, பலவகையான தோத்திரங்கள்யாவு முடிவாயின பின்னர் கொல்லுதல் வேண்டும்.

(கு - ரை.) பலவகைத் தோத்திரமாயின பன்னிரு திருமுறைகளிலுள்ளவை. பூசையாதி தொழில்கள் வியவகாரத்திற் கன்றிப் பாரமார்த்திகத்தில் வேண்டுவதில்லை யென்பாரை மறுத்து, எக்காலத்தும் வேண்டுமென்பார் சர்வசங்க பரித்தியாக முற்ற பரமஞானியாகிய திருவெண்காடரே 'கல்லாமுடிந்தபின்' சொல்லுகவெண்டாய் என்றதனால் சாம்பிரதாய சிவசாதனங்களை விடப்படாதென்பதாயிற்று.

சட்கடத்துக்கிரை தேடிப்பலவுயிர் தன்னைக்கொன்று
விடக்கடித்துக் கொண்டிறுமாந்திருந்து மிகமெலிந்து
படக்கடித்தின் றுழல் வார்கடமைக்கரம் பற்றியமன்
விடக்கடிக்கும்பொழு தேதுசெய்வார் கச்சி யேகம்பனே.

(பொ - ரை.) காஞ்சிபுரத்திலெழுந்தருளியிருக்கும் ஏகாம்பரநாதனே! உடலாகிய பாண்டத்திற்கு ஆகாரம் தேடிப்பல உயிர்களைக்கொன்று (அவற்றின் மாமிசங்களை அன்னத்துடன்) பதார்த்தமாகக் கொண்டு கருவித்து வாயில்வைத்த மாமிசம் மிருதுவாகும்படி (பற்களினால்) கடித்துத் (தின்று) இக்காலத்தில் அலைகின்றவர்களின் கைகளைப் பிடித்துக்கொண்டு இயமன் முட்டித்தண்டமாக அடிக்கும்போது என்னசெய்வர். (பாவம்.)

(கு - ரை.) உயிரைக்கொன்று தின்னும் பாவிகளை அவசியம் இயமன் கட்டாயமாக வந்து பிடித்துத் தண்டிப்பானென்பார் 'காம்பற்றியமனிடக்கடிக்கும்' என்றனர். இத்தகைய பாவஞ்செய்வாரைக் காட்டினும், புலாலுண்பாரைமாத்திரம் அதிகமாகத் துன்பஞ்செய்வானென்பார் 'இடக்கடிக்கும்' என்றனர். சிவஞானதீபம். "எவ்வுயிரு நம்முயிராமென்றுநோக்கி இரக்கமது கொன்றாருக்கு மில்லையே.

ளை, வல்லியம்மாளும் தண்டஞ்செய்து வல்விருந்தையுருக்கி யவர்வாயி ல்லிர்த்தக், செவ்விய நீயெழுமாகில் வீழ்த்தி மாறுவேதனைகள் செய்வசென வேதமோதும்" என்றதனுற்காண்க.

காதுமுடலை வரிப்பொதிச்சோற்றினை நாள்தினமுஞ்
சோறுங்கறியு நிரப்பியபாண்டத்தைத் தோகையர்தங்
கூறுமலமு மிரத்தமுஞ்சேருங் குழியில்விழா
தேறும்படியருள்வா யிறைவா கச்சி யேகம்பனே.

(பொ - ரை.) இறைவனே! காஞ்சிபுரத்திலெழுந்தருளியிரு க்கும் ஏகாம்பரநாதனே! நாற்றமெடுக்கின்ற தேகத்தை, நரிபுனை த்தகுந்த விருந்தியான சோறடைக்கத் தகுந்ததனை! நான் தினந்தோ றும் சோற்றினையும் பதார்த்தத்தினையும் போட்டு அடைத்தபாண டத்தினை, மாதர்களுடைய மலமும் இரத்தமும் சேர்தற்கேதுவான பள்ளத்தில் விழுந்திடாதமல் (முத்தியங்கரை) ஏறும்படி கிருபை செய்வாய்.

(கு - ரை.) "தோழியென்பாய்ச்சிக் குழியையன்று சிறுநீர முழியென்பவருக் கென்னேருசியே" என்றதற்கேற்பமாதர் இடப்பு த்தினைக்குழியென்றனர்.

சொக்கிட்டரமனைப்புக்குட்டிருடிய திட்டர்வந்து
இக்குற்றமன்னவரைக் கேட்பதுபோற்சிவ நிந்தைசெய்து
மிக்குக்குருலிங்க சங்கமகிர்ந்திந்து விடுஞ்சிக்கு
மெக்குப்பெருத்தவர்க்கென் சொல்லுவேன் கச்சியேகம்பனே.

(பொ - ரை.) காஞ்சிபுரத்திலெழுந்தருளியிருக்கும் ஏகாம்பர நாதனே! அரசன் அரண்மனைப்புகுந்து மயக்கமிட்டுத் திருடியதாக்

டர்கள் (மறுபடியும்) பட்டுத்திக்கும் கீர்த்திபெற்ற ஆசனைப்பாசக க்கேட்டதுபோல, சிவபெருமானை சிந்தித்து! அறிவிற்சிறந்த குரு லிங்க சங்கமர்களை வைது பின்னர்மோட்சவீட்டிற்கும் இச்சிக்கும் விருப்பெருத்தவர்க்கு என்னீயென்று சொல்லுவேன்.

(கு - வா.) சிவபெருமானே ஆன்மாவாகிய தானேயென்றும் குருலிங்க சங்கமங்கள் விவகாரத்தில் மாத்திரம் வழிபடத்தக்கவர் களென்று கூறித்திரிந்து மறுபடியும்சிவாலயத்திற் சென்றுமோட்ச மடையும் விருப்புவிரவையுங்கதி நரகமாகலின் 'அவர்க்கென்சொல் லேன்' என்றனர்.

விருந்தாகவந்தவர் தங்களுக்கன்ன மிகக்கொடுக்கப் [சித்த
பொருந்தார்வளம்பெற வாழ்வார் கின்ஞமத்தைப் போற்றி
மருந்தாமுன்பெங்க ளேன்னுரைப்பாக ரப்புவியி
விருந்தாவதேதுகண்டா யிறைவாகச்சி யேகம்பனே.

(பத - வை.) இறைவனே! காஞ்சிபுரத்தில் எழுந்தருளியிருக்கும் ஏகாம்பரநாதனே! வீடுதேடி அதிதியாகவந்தவர்களுக்கு அன்னம் வேண்டிய அளவுகொடுக்க மனங்கொள்ளார், (தாங்கள்மாத்திரம்) செல்வமிகவுண்டாக வாழ்ந்துவருவர், தேவரீர் திருப்பெயரினைச்சொல்லி உனதுஞ்ஞவப்பாகத்திலெழுந்தருளியிருக்கும் அன்னைமேயனே என்னோர் அத்தகைய பாவிகள் உலகத்தில் வாழ்ந்துவருதலினுலென்ன பிரயோசனம்.

(கு - வா.) திருக்குறள். "விருந்துபுறத்ததாத் தானுண்டல்சாவா மருந்தெனினும்வேண்டற்பாற் றன்று" திருமந்திரம். "செல்வமெல்லாம் வினையாளர்" என்றவற்றிற்குமாறுப்பட்டவிசன் விருந்தினையோம்பார் செல்வமாருச் சரியார் இத்தகையினர் ததனுளும் பிரயோசன

மடையாத உலகிற்கு முபயோக மல்லாதிருப்பராகலின், 'அம்புவியி லிருந்தாலே தேதுகண்டாய்,' என்றனர்.

எல்லாமறிந்து படித்தேயிருந்துந் தமக்குள்ளபடி
வல்லானறிந்துள னென்றுணராது மதிமயங்கிச்
சொல்லான் மலைந்தறு சூழ்விதியின்படி துக்கித்துப்பி
னெல்லாஞ்சிவன்செயலே யென்பர்காண்கச்சி யேகம்பனே

(பொ - ரை.) காஞ்சிபுரத்திலெழுந்தருளியிருக்கும் ஏகாம்பரநாதனே! எல்லா நூல்களையும் தெரிந்து படித்தேயிருந்தும் தமக்குக்கெதி பட்டிருக்கின்ற அளவினை எல்லாம் வல்ல சிவபெருமான் தெரிந்து கொண்டிருக்கிறானென்பதனை யறியாது புத்திகெட்டு, இவ்வுலகச் சொற்களால் மருண்டு, உற்றவிதியின்படி துக்கமடைந்து பின்னர் எல்லாம் சிவன் செயலென்று தேர்வர் (இஃதென்ன அறியாமை.)

(கு - ரை.) எவ்வளவு கற்றவர்களாயிருக்கினும் அவரவர்கள் கன்மத்திற்குத் தகுந்தபடியச் சிவபெருமான் கூட்டிவைப்பதல்லது தமது முயற்சியாலியாது நடப்பதன்றெனத்தெரியாது செல்வச் செருக்கா லமர்ந்துவாழ்ந்து, தரித்திரமுற்றபின்யாவும் சிவன் செயலாலே வருமெனவறிவர்.

பொன்னை நினைந்து வெகுவாகத்தேடுவர் பூவையன்ன
டன்னை நினைந்து வெகுவாயுருகுவர் தாரணியி
லுன்னை நினைந்திங் குனைப்பூசியாத வுலுத்தரெல்லா
மென்னையிருந்துகண்டா யிறைவா கச்சி யேகம்பனே.

(பொ - ரை.) இறைவனே! காஞ்சிபுரத்திலெழுந்தருளியிருக்கும் ஏகாம்பரநாதனே! திரவியத்தின்மேலாசையை வைத்து அதைச்

சேகரிக்கப் பெருமுயற்சிசெய்து சம்பாதிப்பர், இவருக்மிக்குச்சமானவாழ்க்கைவாய்ந்த பெண்ணினை யெண்ணி அதிகமாக மனமுருகுவர் பூமியின்கண்ணே தேவரீரைத் தியானித்துத் தேவரீரைப் பூசியாத இலோபிகளாகிய இவரெல்லாம் உலகிலிருந்து என்னபிரயோசனம்.

(கு-ரை.) உலகத்தில் பகிர்முகமாக அனுபவிக்கவேண்டிய இன்பங்கட்கேதுவாயுள்ள அநித்திய சாதனங்களில் நாட்டங்கொண்டிருக்கின்றவர்களேயன்றி அந்தர்முகமாக அனுபவிக்கவேண்டியபேரின்பத்திற்குக் கேதுவாகவுள்ள நித்தியசாதனங்களில் நாட்டங்கொண்டிலரென்பதாம்.

கடுஞ்சொலின் வம்பரை யீனரைக் குண்டரைக் காமுகரைக்
கொடும்பவமேசெயு நீர்மூடர் தம்மைக் குவலயத்து
நெடும்பனைபோல வளர்ந்துநல்லோர் நெறியறியா
விடும்பரை யேன்வகுத்தா யிறைவா கச்சி யேகம்பனே.

(பொ-ரை.) இறைவனே! காஞ்சிபுரத்திலெழுந்தருளியிருக்கும் ஏகாம்பரநாதனே! (எந்நேரமும்) கடிந்துபேசுகின்ற வம்புவார்த்தையுடையவரை சீலம் சிறிது மில்லாரை, கோட்சொல்பவரை, காமாந்தகாரரை, கொடியபாவச் செயல்களையே செய்யும் புத்தியில்லாதவரை (இத்தகையரை)) இவ்வுலகில் நீண்ட பனைமரம்போல் வளர்ந்த நல்லவர்களுடைய நன்னெறியினைச் சிறிது மறியாத செருக்கினையென் மனிதவகுப்பி லுண்டாக்கினை.

(கு-ரை.) மனிதசென்மமெடுத்தும் நீதிநூல்களிற் கூறியவைத் தன்னெறியிற் சிறிதும் தவறாது ஒழுங்குமாறாக நடந்து நன்னெறித்த அனேகருக்குத் தீங்குகளையே விளைவிப்பவர் உலகத்தில் யாதொரு பிரயோசனமுமில்லை யென்பார், இத்தகையரை யேன் வகுத்தாய் என்றனர்.

கொன்றேனனேகமுயிரையெல்லாம்பின்புகொன்றுகொன்று
தின்றேனதன்றியுந் தீங்குசெய்தேனது தீர்கவென்றே
நின்றேனின் சன்னிதிக் கேயதனாற்குற்றம் நீபொறுப்பா
யென்றேயுனைநம்பினே னிறைவாகச்சி யேகம்பனே.

(பொ - ரை) இறைவனே! காஞ்சிபுரத்திலெழுந்தருளியிருக்கும் ஏகாம்பரநாதனே! எண்ணிலாவுயிர்களை (ஆகாரத்தின்பொருட்டுக்) கொன்றேன், அவற்றையெல்லாம் இம்சைசெய்து இம்சைசெய்து புசித்தேன், அல்லாமலும் (அனேகவுயிர்கட்கு) தீங்குசெய்தேன்; இப்பாவமனைத்தையும் போக்கடித்துக் கொள்ளவேண்டித் தேவரீர் சன்னிதானத்திலிருக்கிறேன் ஆகலின் தேவரீர் என்னது குற்றங்களைப் பொறுத்தருள்வாயென்றெண்ணித் தேவரீரை நம்பினேன்.

(கு - ரை.) கொல்லுதலினாலேயும் அவற்றைத்தின்னுதலினாலேயும் பெரும்பாவம் விளையுமென அறியாக்காலத்திலெல்லாம் இங்ஙனம் செய்துவந்தேன் ஆனால் எப்பொழுது நல்லோர் சார்பால் அப்பாவமெனவறிந்தபின் தேவரீர் கோயிலையடைந்தேன், பாவத்தினைப் போக்கியருளுகவென்பதாம்.

ஊரிருந்தென்ன நல்லோரிருந்தென்ன உபாயமுள்ள
பேரிருந்தென்னபெற்றதாயிருந்தென்னமடப் பெண்கொடியாள்
சீரிருந்தென்னநற் சிறப்பிருந்தென்ன வித்தையத்திடுவி
லேரிருந்தென்னவல்லவா விறைவாகச்சியேகம்பனே.

(பொ - ரை.) இறைவனே! காஞ்சிபுரத்திலெழுந்தருளியிருக்கும் ஏகாம்பரநாதனே! இவ்வுலகில் ஒரு ஊர் சொந்தமாகவிருந்தென்ன, நல்லவர்களிருந்தென்ன உபசரிக்கும் பேரிருந்தென்ன, நன்

தாயிருந்தென்ன, அழகிலேவாய்ந்த கொடிபோன்ற பெண்ணும் அவர் கொண்டுவந்த சீதனமிருந்தென்ன, நல்லபுகழ்ச்சி யிருந்தென்ன, அழகுமிருந்தென்ன; எல்லாம்வல்லவனே (தேவரீர் அருள்சித்திததில்லையே.)

(கு - ரை, உலகின்கண்ணே யனுபவிக்கவேண்டிய போகங்கட்குரித்தான சகமனைத்துமே ஏராளமாயிருந்திலும் சிவபெருமான் திருவருளில்லாதபோது ஒன்றும் பிரயோசனமில்லையென்பதாம்.

வில்லாலடிக்கச் செருப்பா லுதைக்க வெகுண்டொருவன்
கல்லாலெறியப் பிரம்பாலடிக்கக் கனிவண்டுகூர்ந்
தல்லார்பொழிற்றில்லை யம்பலவாணர்க்கோ ரன்னைபிதா
வில்லாததாலல்லவோ விறைவா கச்சி யேகம்பனே.

(பொ - ரை.) இறைவனே! காஞ்சீபுரத்திலெழுந்தருளியிருக்கும் ஏகாம்பரநாதனே! ஒருவன் வில்லினால் அடிக்கவும், ஒருவன் செருப்பினாலுதைக்கவும், ஒருவன் கோபித்துக் கல்லாலெறியவும், ஒருவன்பிரம்பினாலடிக்கவும் (நேர்ந்ததெல்லாம்) மதுவையுண்ணும் வண்டுகள் தங்கி, மேகங்கள் தவழப்பெற்ற சோலைசூழ்ந்த திருத்தில்லையம்பதியிலே கனகசபையிலே நிர்த்தனம் பண்ணும் பெருமானுக்குத் தாய்தந்தை மாரிருந்து கேளாததினாலல்லவா.

(கு - ரை.) வில்லாலடித்தவன் அருச்சுனன், செருப்பாலுதைத்தவன் கண்ணப்பநாயனார், கல்லாலெறிந்தவன், சாக்கியநாயனார், பிரம்பாலடித்தவன் அரிமர்த்தனபாண்டியன், சிவபெருமான் தாயதந்தையரில்லாத நித்தியரையுள்ள வென்கலின் இங்ஙனம் அடியார்க்கெளியனாயிருந்து இங்ஙனம் பாடுபட்டு அடியார்களையாட் கொண்டதை

மத் சர்வஞ்ஞத்துவத்தை சிறந்தினர். தாய்தந்தையரை வாய்ந்தமத் தையதேவர்களிலனைம் செய்யாரென்பதாம்.

எண்சீர்விருத்தம்.

அன்னையெத்தனை யெத்தனை யன்னையோ
அப்பனெத்தனை யெத்தனை யப்பனோ
பின்னையெத்தனை யெத்தனை பெண்டிரோ
பிள்ளையெத்தனை யெத்தனை பிள்ளையோ
முன்னையெத்தனை யெத்தனை சென்மமோ
மூடனாயடியேனு மறிந்திலேன்
இன்னமெத்தனை யெத்தனை சென்மமோ
என்செய்வேன் கச்சி யேகம்பநாதனே.

(பொ - ரை.) காஞ்சிபுரத்திலெழுந்தருளி யிருக்கும் ஏகாம்பநாதனே! (இதுகாறுமெடுத்த கோடானகோடி சென்மங்களிலுவாய்ந்த) தாய்மார்கள் எத்தனைபெயர்களோ, தந்தையர்கள் எத்தனை பெயர்களோ, மனைவிமார்கள் எத்தனை பெயர்களோ, புத்திராகள்புத்திரிகள் எத்தனை பெயரோ, இதற்கு முன்போந்த சென்மங்களெத்தனையோ, மூடனாகிய சிறியேனுந்தெரிந்தேனில்லை, இனிமேல்வரும் சென்மங்கள் எத்தனையோ. இவற்றை யொழித்தற் கென்னவுபாயஞ் செய்வேன்.

(கு - ரை.) இதுகாறு மெடுத்துள்ள எண்ணில்லாத சென்மங்களிலும்; இனியெடுக்கும் அளவில்லா சென்மங்களிலும் மேற்படுஞ் சுற்றத்தினர்கட்கு இவ்வளவெனத்தொகை தெரிந்து சொல்லக்கூடாதாகலின் எத்தனை எத்தனை யென்றனர். இனியேனுமொருதாய் வயிற்றிற் பிறவாதபடி செய்தருள வேண்டுமென்பது குறிப்பு.

# திருத்தில்லை.

காம்பிணைக்கும்பனைத் தோளார்க்கும்
பொன்னுக்குங் காசினிக்குந்
தாம்பிணைக்கும்பல வாசையும்விட்டுத்
தனித்துச் செத்துப்
பேய்ம்பிணை தன்னைத் திரளாகக்கூடிப்
புரண்டினிமேற்
சாம்பிணைக் கத்துதையோ
வென்செய்வேன் றில்லைச்சங்கரனே.

(பொ-ரை.) திருத்தில்லையில் எழுந்தருளியிருக்கும் சங்கரனே! மூங்கிலினை யொத்த பெருத்த தோளையுடைய மாதர்கட்கும், பூமிக்கும் பொன்னுக்கும் பற்பல அவாவினையும் நீக்ித்தனியாக இறந்து போகின்ற பிணந்தன்னைச் (சூழ்ந்து) கூட்டமாகச்சேர்ந்து மேல்விழுந்து புரண்டு இனிமேல்சாகப்போகிற பிணங்கள்புலம்புகின்றன அந்தோ இந்த (மடமைக்) கென்செய்வேன்,

(கு-ரை.) மரணம் நிச்சயமாகவிருந்தும், இறந்துபட்டவர்கள் போலவே யாவரும் சிற்சிலநாளில் இறக்கவேண்டியது திண்ணமாகவிருந்தும், ஆண்டாண்டுதோறு மழுதுபுரண்டாலு மாண்டார்வருவா ரல்லவாகவாதலும் அறியாமையால் வீணே கூக்குரலிடுகின்றனவென்னப்பன் என்று இரங்கிக்கூறுவார் 'என்செய்வேன்' என்றனர்.

சோறிடுநாடு துணிதருங்குப்பை தொண்டன்பரைக்கண்
டேறிடுங்கைக ளிறக்கவுந்தீவினை யெப்பொழுது

நீற்றுமேனியர் சிற்றம்பலவர் நிருத்தங்கண்டா
லூற்றிடுங்கண்க ளுருகிடுநெஞ்சமென் றுள்ளமுமே.

(பொ-ரை) எக்காலத்தும் திருநீறணிந்த திருமேனியராய்ச் சிற்றம்பலத்திலே செய்தருளும் ஆனந்த நிர்த்தனத்தினைத் தரிசித்தால், உலகத்தினர் அன்னமளிப்பர், குப்பைபவன் நிரம் செறிவதும், சிவத்தொண்டு செய்யும் அடியாரைக்கண்டு இரங்கி காக்கக்கூடும், தீவினைகளொழியும், கண்களினின்றும் (ஆனந்தக்) கண்ணீர் ஊற்றெடுக்கும், என்னெஞ்சமும் உள்ளமும் கைக்கூடும்.

(கு-வை.) தில்லைச் சிற்றம்பலத்திலே ஆனந்த நிர்த்தனம்புரியும் நடராஜப்பிரபுவினைத் தரிசித்த மாத்திரத்தில் உலகிலிருக்க வேண்டியன பிறர்தாட்சண்ணியமின்றிக் கிடைப்பதுடன் சிவத்திலினை வதற்கேது வாகிய சாதனங்களும் கிட்டுமென்பதாம்.

அழலுக்குள்வெண்ணெ யெனவேயுருகிப் பொன்னம்பலத்
திழலுக்குணின்று தவமுந்தருமமுஞ்செய்திலேன்மின்னார் [கார்
குழலுக்கிசைந்த வகைமாலைகொண்டு குற்றேவல்செய்து
விழலுக்குமுத்தலை யிட்டிறைத்தேனென் விதிவசமே.

(பொ-ரை.) பொன்னம்பலத்திலே தாண்டவம் செய்தருளும் பெருமானாது திருவருணிழல் பாலம்மிகு நம்பசாலயத்திலே இருந்து அக்கினியிற்பட்ட வெண்ணெயெனமனமுருகித் (திருத்தொண்டாகிய) தவத்தினைச்செய்யாமல், கொடுமைவார்த்தைகளைப்பேசும்பெண்களின் கூந்தலுக்குப் பொருந்திய விதமான புட்பமாலைதந்து அவர்கட்கு வேண்டிய சிறிய வேலைகளைச்செய்து, விழற்புல்லினைவதற்கு மூன்றுதுலா வைத்துச் சலமிறைத்தவனே சேர்த்தேன் என்றவிதியே.

(கு-ரை.) மோட்ச வீட்டிற்கு வேண்டியபேரின்பத்தையனுப விக்கத்தேதவகாவுள்ள சிவாலயத்தொண்டினைச் செய்து காலத் தைவீணாய்க்கழித்தே னென்பார் 'விழலுக்குமுத்தாலே, யிட்டிறைத் தேன்' என்றனர்.

ஓடாமற் பாழுக் குழையாமலோர முரைப்பவர்பாற்
கூடாமனல்லவர் கூட்டம்விடாமல் வெங்கோபநெஞ்சி
னாடாமனன்மை வழுவாமலின்றைக்கு நாளைக்கென்று
தேடாமற்செல்வந் தருவாய்சிதம்பர தேசிகனே.

(பொ-ரை.) சிதம்பரத்தி லெழுந்தருளியிருக்கின்ற (ஆசா ரியமூர்த்தியாகிய) பெருமானே! (வயிற்றினிமித்தம் அங்குமிங்கும்) ஓடாமல், பிரயோசனமற்ற காரியங்கட்கு உழைக்காமல், வஞ்சக வார்த்தைப் பேசுபவர்பால் சேரியாமல், அடியார்க்கூட்டம் பிரியா மல், கொடிய கோபத்தினைமனத்தில் வையாமல், நன்மைகளைச்செ ய்யாமல், [illegible]றைக் கென்செய்வதுகாலைக் கென்செய்வதென்று (துக் [illegible]த்துத்) திரவியத்தேடாமல் (நினது திருவருட்) செல்வந்தந்தருளு [illegible]வாய்.

([illegible]-ரை.) உலகத்தின்கண்ணே உடலைக்காத்தலின் பொரு ட்டெவ்வெந்தனை யோவிதமாக முயற்சிசெய்யவேண்டி யிருக்கின்றது, செய்யாம லிருத்தற்கும் கூடவில்லை. தேவரீர் திருவருட் செல்வம் படைத்துவிடும்பட்சத்தில் இம்முயற்சி யனைத்தும் தாமேயொழிவி டுமென்பதாம்.

பரமலேற்பவர்க் கில்லையென்னுமப் பழுதுசொல்லி
வாயேபட்டாவங்கள் வர்தனுகாமல் மனமயர்ந்து

பேராமற்சேவை பிரியாமலன்பு பெருகவனைச்
சேராமற்செல்வந் தருவாய்சிதம்பர தேசிகனே.

(பொ - ரை.) சிதம்பரத்திலெழுந்தருளி யிருக்கும் (ஆசாரிய மூர்த்தியாகிய) பெருமானே! உயர்வு தாழ்வு பாராமல், பிச்சையென்று வந்தவர்கட்கு இல்லையென்று சொல்லாமல், பிறருக்குக் குற்றஞ்சொல்லித்திரியாமல், பாவத்துக்கேதுவான செயல்கள் செய்யாமல், மனமானது (நல்வழியாகிய முயற்சியில்) சோர்வடைந்து பிறழாமல், சிவதரிசனம் விடாமல், வேதநெறியிடத்து அன்பில்லாதவரைச் சேராமல் இருக்கும்படியான திருவருட் செல்வத்தினைத் தந்தருளுவாய்.

(கு - ரை.) பிரபஞ்சத்தில் திரவியஞ் சேகரித்துச் செலவு செய்யாதிருக்கவேண்டிய முயற்சியில் மனமெவ்வெவ்வழியிற்போமோ அவைகளையெல்லாந்தவிர்த்து, திருவடிச்செல்வம் அடைய வேண்டிய முயற்சியிலேயே யிருக்கவேண்டு மென்பதாம்.

கொல்லாமற் கொன்றதைத் தின்னாமற் குத்திரங்கோள்களவு
கல்லாமற் கைதவரோடிணங்காமற் கனவிலும்பொய்
சொல்லாமற்சொற்களைக் கேளாமற்றோகையர் மாயையிலே
செல்லாமற்செல்வந் தருவாய்சிதம்பர தேசிகனே.

(பொ - ரை.) சிதம்பரத்தி லெழுந்தருளியிருக்கும் (ஆசாரிய மூர்த்தியாகிய) பெருமானே! (ஒருயிரையும்) கொல்லாமல் (அங்ஙனம்) கொன்றதனைப் புசியாமல், வஞ்சனை, புறங்கூறல், திருட்டுக் கற்றுக் கொள்ளாமல், வஞ்சகருடன் கூடாமல், கனவிலேனும்பொய் சொல்லாமல் (பிறர்பொய்ச் சொற்களைக்) கேளாமல், மயில்போன்ற சாயலுடைய மாதர்கள் மயக்கத்திலே சிக்காமல் (தேவரீர் திருவருட்) செல்வந்தந்தருள வேண்டும்.

(கு - ரை.) இவ்வுலகில் நிலையான காரியங்கள் எவ்வளவோ அவ்வளவு மென்னைவிட்டு விலகவேண்டுமாயின் தேவரீரது திருவருட்செல்வம் கிடைத்தாலல்லது வேறுவழியில்லையாகலின் திருவருள் புரிய வேண்டுமென்றனர்.

முடிசார்ந்தமன்னரும் மற்றுமுள்ளோரும் முடிவிலொரு
பிடிசாம்பராய்வெந்து மண்ணாவதுங்கண்டு பின்னுமிந்தப்
படிசார்ந்தவாழ்வை நினைப்பதல்லாற்பொன்னி னம்பலவர்
அடிசார்ந்துநாமுய்ய வேண்டுமென்றேயறி வாரில்லையே.

(பொ - ரை.) முடிதரித்த அரசர்களும், மற்று முள்ளோரும் உயர்ந்தபதவியிலுள்ள அவர்களும் (இறந்து சுடுகாட்டிலே எரிகிற போது) ஒருபிடி சாம்பலாகி வெந்து பின்னர் மண்ணும் (பிரத்தியட்சமாகப்) பார்த்திருந்தும் மேலும் இவ்வுலகத்தின் வாழ்வினை பொருளென நினைப்பதல்லாமல் பொன்மயமாகிய அம்பலத்திலெழுந்தருளியிருக்கும் பெருமானது திருவடியினையடைந்து நாமெல்லோரும் பிழைக்கவேண்டுமென்று தெரிந்து கொள்வாரில்லை.

(கு - ரை.) இவ்வுலகில் எத்தகையினரும் முடிவில் சாம்பலாகி விடுவதினைப் பிரத்தியட்சமாகத் தெரிந்திருந்தும் அங்ஙனமே பற்றற்று வாழ்வுள்ள பிரபஞ்சவாழ்வினை நாடுவதன்றனே யுணர்ந்து சாம்பலாகாத வாழ்வின் திருவடியை நாடுகின்றார்களில்லையே யென்பதாம்.

காயவுபாதி மனஞ்சலமாமன்றிக் கட்டிச்செயித்த
சகலவுபாதி பசிதாகமாமுதற் சங்கிதமா
மாயவுபாதி துயில்காமமாதிநிலை மாற்றிவிட்டே
யுகமுகந்தரு எப்படிவாழ்வென்னை யாண்டருளே.

(பொ - ரை.) ஆலகாலவிஷத்தினை விரும்பியுண்டருளிய பொன்னம்பலநாதனே! (ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருநாளும்) காலையிலுண்டாகின்ற உபத்திரவம் மலஜலப்பிரவர்த்தியாம்; அவ்வாறல்லாமல் நடுப்பகலில் இருந்த உபத்திரவம் பசியெடுத்தலும் தாகமும் உண்டாவதுமாம்; மாலைக்காலத்தின் உபத்திரவம் பூர்வவினைக்குத் தக்கபடி துக்கமும் பெண்போகமுமாம்; இவற்றை நீக்கியாண்டருள வேண்டும்.

(கு - ரை.) எழுந்தருளல் தங்கும் கோயில் பதியென இயல்பாததன் பக்கரித் கட்டப்பட்டிருந்தலினால் ஆகம்பிரசில் மகேசுவர நிருவிகற்பசமாதியிலிருந்து நித்தியானந்த சுகமனுபவிக்கும் தன்மையை யளித்தருளவேண்டு மென்பதாம்.

ஆயுப்புகழ்த்தில்லை யம்பலவாணனை யருகிற்செல்லின்
பாயுமிடபங் கடிக்குமரவம்பின் பற்றிச்சென்றால்
பேயுங்கணமும் பெருந்தலைப்பூதமும் பின்றொடர
போவென்செய்வாய்மனமே பிணக்காடவர் போமிடமே.

(பொ - ரை) மனமே! (எவராலும் ஆராயப்படுகின்ற புகழினை வாய்ந்த திருத்தில்லையம்பலவாணர் சமீபத்திலடைந்தால் மாடோன்று முட்டவரும், பாம்புகடிக்கவரும், பின்பாகத்திற் சென்றாலோ பேயும் வேதாளமும், பெரியதலைபிளையுடைய பூதமுஞ்சின்று பின்னே தொடர்ந்து (மருட்டும்) அவர்போகும் இடமெல்லாம் பிணங்கள் நிறைந்தகாடாக விருக்கும் (அத்தகையரிடத்து) நீபோவென்ன செய்குவை.

(கு - ரை.) இத்திருச்செய்யுள் நிந்தாஸ்துதி மாத்திரமன்றோ எனவும், பரம்பொருளை சொரூபமெனவும், பேய்முதலிய தேவ

சொரூபத்தினனெனவும், பினைக்கடு சர்வசங்காரகாலத்திலுலக மிருக்குந்தன்மையெனவும் உணரப்பெறாத அறிவிலிகட்குச் சாமான்யமாடு போலவும் பாம்புபோலவும், பேய்முதலியபோலவும் இடுகாடுபோலவும் தோன்றுமாதலின் இந்நிலையினர்கோயிலிற்றுச் சென்றுளன்னாபிரயோசன மென்பார், 'பேயென்செய்வாய்' என்றனர்.

ஓடெடுத்துத் தோலாடையுஞ்சாத்தி யுலாவிமென்ன
வீடுகடோறும் பலிவாங்கியே யிரந் தற்றவர்போ
லாடுமருட்கொண்டிங் கம்பலத்தேநின்று மாண்டி,யென்னைத்
தேடுங்கணக்கென்ன காண்சிவகாம சவுந்தரியே.

(பொ-ரை.) (சிதம்பரத்திலெழுந்தருளி யிருக்கும்) சிவகாம சவுந்தரியே! (பிச்சையெடுக்கும்பொருட்டு) ஓடெந்தாங்கி, (மேற்போர்வைக்கு) தோலாடையும் பூண்டு, இங்குமங்குந்திரிந்து மெதுவாக வீதிகள்தோறும் பிச்சைவாங்கி, இக்கற்றவர்போல மருட்சிவாய்ந்து வெட்டவெளியினிற்கும் ஆண்டியினைக்காதலித்த தென்னமோ (அறி யேன்.)

(கு-ரை.) சிவபெருமான் ஓடு எடுத்தது பிரமன்சிரச் சேதனத்தையும், தோலாடைகொண்டது, கஜயுத்தத்தையும், பிச்சைவாங்கியது, தாருவனக்கிரீடா விலாசத்தையும், அம்பலத்தே நிற்பது சதாசிருத்தத்தினையுமாகலின் இவ்வுண்மை சிவகாமசௌந்தரியே யறிவாளாகலின், 'தேடுங்கணக்கென்னகாண்' என்றனர்.

ஊட்டி விப்பானு முறக்குவிப் பானுமிங் கொன்றோடொன்
மூட்டி விப்பானு முயங்குவிப் பானு முயன்றவினை [றை
காட்டி விப்பானு மருவினைப்பாசக் கயிற்றின்வழி
யாட்டு விப்பானு மொருவனுண்டே தில்லையம்பலத்தே.

(பொ - ரை.) (ஆன்மகோடிகளை) உணப்பிக்கின்றவனும், ஆக்குவிக்கின்றவனும், ஒருபொருளுடன்மற்றொரு பொருளைச் சேர்ப்பிக்கின்றவனும், தொழில்செய்விப்பவனும், அதன்பிரயோசனத்தைத் தகொட்டுவிப்பவனும், பாசக்கயிற்றின் ஆட்டுவிப்பவனும் தில்லைச்சிற்றம்பலத்தே சிவபெருமானொருவனுமே.

(கு - ரை.) ஆன்மாக்கள் சுதந்தர [illegible] ராகலின்தாங்களேயா சத்தைப்பற்றாராகலினாலும், பாசம்சடமாகலின்தானே ஆன்மாக்களைச் சேராவாகலினாலும், ஆனால் கன்மத்திற்குத்தக்கபடி ஆன்மாக்களைப்பாசத்தினையனுபவிக்கவேண்டியது அவசியமாகலினாலும் பசுபாசங்களைக்கடந்த வொருபதியாகிய சுதந்திரன் சகிதானந்திலேயே யாவும் [illegible] மாகலின், 'ஒருவனுண்டே' என்றார். தில்லையம்பலமென்றது குறித்தனால் அவ்வம்பலத்தில்நடராஜப்பிரபு ஆடப்பிரபஞ்சமனைத்தும் போகத்தில் ஆடும் என்பதாயிற்று, திருமந்திரம், "தத்துவமாடச் சதாசிவந்தாடச்; சித்தமுமாடச்சிவசத்திதாட, வைத்தசராசரமாட மறையாட, அத்தனுமாடினனானந்தக்கூத்தே" என் [illegible] காண்க.

அடியார்க்கெளியவ ரம்பலவாண ரடிபணிந்தால்
மடியாமற்செல்வ வாழ்வுபெறலாம்வைய மேழளந்த
நெடியோனும் வேதனுங் காணாதகித்த நீயலரோட்
குடிகாணுநாங்க ளவர்காணுமெங்கள் குலதெய்வமே.

(பொ - ரை.) (சிவபெருமான்) சிவனடியார்கட்கு எளியதன்மை வாய்ந்தவர், பொன்னம்பலத்திலே நடனஞ் செய்பவர், அவர்திருவடியைப் பணிந்தால் அழியாமல் திருவருட்செல்வமனுபவிக்கும் பாக்கியவாழ்வினைப் பெறலாம், ஏழுலகத்தினையும் திருவடியா

லைக்க செம்மொழுப் பிரமனும் கண்டறியாத நித்தியனாகிய நின்மல னுடைய திருவருளைப் பாலிக்கும் நாம் அவர்க்கு அடிமையாகிய குடிகள் அவர் எங்கட்கு ஆண்டானாகிய குலதெய்வமாம்.

(கு—ரை.) தம்பட்டெனைக்கொரு சுதந்தரமில்லாத உடல் பொருள் ஆவி மூன்றினையும் ஆசாரியனிடம் ஒப்புவித்த சிவனடியார் கள் வேண்டியவற்றைச் சிவபெருமான் வலியக்கொடுத்து ஆட் கொள்வனென்பார் 'அடியார்க்கெளியவர்.' என்றனர். "அடியா ர்க்கெளியவன் சிற்றம்பலவன்" என்றதனாற் காண்க. திருவடியால் வரம்பெறுதலையென்பது "திருவடிஞானமே சிவமாக்கிடுமே" எனுந் திருமந்திரத்தாலும், ஆண்டானடிமையென்பது "எல்லாமுன் னடிமையே எல்லாமுன் னுடைமையே எல்லாமுன தருளே" எனும் தாயுமானவர் திருவாக்காலுமறிக.

தெய்வச்சிதம்பர தேவாவுன் சித்தந் திரும்பிவிட்டாற்
பொய்வைத்தசொப்பன மாமன்னர்வாழ்வும் புவியுமெங்கே
மெய்வைத்த செல்வமெங்கே மண்டலீகர் தம்மேடையெங்கே
கைவைத்தநாடக சாலையெங்கேயிது கண்மயக்கே.

(பொ - ரை) தெய்வத்தன்மைவாய்ந்த சிதம்பரத்திலெழுந்த ருளியிருக்கும் தேவனே! தேவரீர்மனமானது ஆன்மாக்களிடத்தி ராது சிறிதுதிரும்பிவிடில் நிலையில்லாததும் கனவுபோன்றதுமான அரசர்கள் வாழ்வும் அவர்ஆளும்புவியும் என்னவாகும், உண்மையெ ன்று நம்பியுள்ள செல்வமென்னவாகும், சக்கிரவர்த்திகளின் உப்பரி கைமேடைகளென்னவாகும், அலங்கரித்துள்ள நடனசாலைகளென்னவாகும் இவையனைத்தும் கண்களுக்குண்டாகும் காட்சியேயாகும்.

(கு - வை.) தெய்வமேசன் பிரபஞ்சமுகமாகச் சிருஷ்டி, திதி, திரோபவம், அனுக்கிரகமென்னும் நான்கு கிருத்தியங்களை நடாத்து கின்ற காலத்தில் மாத்திரம் பிரபஞ்சவாழ்வினையும் உண்டு போலத் தோன்றும்மெய்ப் பிரசங்கார முகமாகத் திருப்புமிர காலத்தில் வாழ்வினைத்தும் கண்மயக்காத [illegible] இல்லையென்பதாம்.

உடுப்பாரும்பாலனை முன்பாறுமாய்வித் தொருவர் தம்மைக்
கெடுப்பாருமேதென்று கேள்விசெய்வாரும் தெரியடக்கக்
கொடுப்பாருக்கீதிலையென் றேற்பாருமொரு கோட்டமனின்
றடுப்பாருமேயல்லையோ தில்லையானந்தத் தாண்டவனே. [ம

(பொ - ரை.) தில்லைச்சிற்றம்பலத்தின்கண்ணே ஆனந்தத்தாண்டவம்புரிந்தருளுபவனே! ஆடை யுடுப்பவனும் பாலுடன் அன்னத்தைப்பாந்து உண்பவனும், பிழைப்பித்தொருவரைக் கெடுப்பவனும் என்னவென்று வினவுபவனும், திருப்தியாய்க்கொடுப்பவனும் இல்லையெனயாசிப்பவனும், யாசிக்கக்கொடுக்க வொட்டாமல் தடுப்பவனும் நீயேயல்லவோ?

(கு - வை.) ஆன்மாக்களின் உள்ளும் புறம்புமாகக் கலந்து அத்துவிதமாகவிருந்து அவரவர்கள் கன்மத்திற்குத்தக்கபடி பிரேரிப்பவன் சிவபெருமானேயாகலின் 'நீயல்லவோ' வென்றனர். காரைக்காலம்மையார் "அறிவானுந் தானே யறிவிப்பான் றானே, யறிவா யறிகின்றான் றானே—யறிகின்ற, மெய்ப்பொருளுந் தானே விரிசுடர்பாராகாச, மப்பொருளுந் தானே யவன்" என்றதுங்காண்க.

வித்தாரம்பேசினுஞ் சோங்கே பிணக்கம்ப மீதிருந்து
தத்தாவென்றோதிப் பரிகொண்டாடினுந் தம்முன்றம்பி,

யொத்தாரைப்பேசினு மாவதுண்டோ இல்லை புண்ணியறைந்த
கர்த்தாவின்சொற்படி யல்லாதுவேறில்லை கன்மங்களே.

(பொ - ரை.) மகாவித்வன்னமாகப் பேசினும், மரக்கலமே றினும், மூங்கிலின்மீதிருந்து அநாசெனக்கூறிக்கூத்தாடினும், தம் முடையதன்மையை விற்றனையாகப்பேசினும், ஏதாவதுண்டாகு மோ, தெய்வாநுமதி யெழுந்தருளியிருக்கிற நடராஜப்பிரபு செய்விக் குஞ் செயற்படியல்லாது செயல்களொன்றுமில்லை.

(கு - ரை.) ஆன்மாக்கள் தங்கள் சுதந்தரங்கொண்டு எவ்வளவு முயற்சிசெய்யினும் அதுகூடிவருவது சிவபெருமான் திருவருளிருந் தாலல்லது காலத்திரயத்தும் கூடிவாராதென்பார், 'சொற்படியல்லா து வேறில்லை' என்றனர். "ஆட்டுவித்தாற்றுள்ளபடி ஈசனருளாலே யமையைக்கொண்டியற்ற மாற்று - வலவரை, கல்லார் பொல்லா ரென்றுபாராதே நெஞ்சமே, எல்லாஞ்சிவன் செயலென்றெண்" என்றதனுக்காள்க தாதாவென்றது ஏழுமைநோக்கித்தாவெ ன்றுயது.

பிறவாதிருக்க வரந்தரல் வேண்டும் பிறந்துவிட்டா
லிறவாதிருக்க மருந்துண்டுகாணிது வெப்படியோ
வறவார்புகழ்த்தில்லை யம்பலவாண ரடிக்கமல
மறவாதிருமனமே யதுகாணன் மருந்துனக்கே.

(பொ - ரை.) மனமே! உலகத்திலே பிறவாதிருக்கும்படி சிவபெருமான் வரமளித்தல் வேண்டும் அங்ஙனம்பெறாது உலகில் பிறந்துவிடில் மறுபடிபிறவாதபடி யிருக்கமருந்தொன்றுண்டு அது எப்படியோவெனில் தருமம்வளராநின்ற புலியூரெனக்கூடியதில்லை

மம்பலத்திலே வாழ்கின்ற நடராஜப்பெருமானின் திருவடிக்கமலத்தி
னை மறவாமலிரு அதுவே நல்லமருந்து உன்றனக்காம்.

(கு-ரை) சிவபெருமான் திருவடியே மருந்தாகி ஆன்மாக்க
ளுக்குண்டாகும் பிறவிப்பிணியைத் தீர்க்கும் மருந்தாதலின் 'அது
காணன்மருந்துனக்கே' என்றனர். தேவாரம் "மருந்தாய்ப்பிணி
தீர்க்கவல்லவடி" என்றதனுக்காண்க.

தனியா திருநெஞ்சமே தில்லைமேவிய சங்கரனைப்
புவியார்த்திருக்கின்ற ஞானகரனைப்புராந்தகனை
பனியாவிளக்கைப்பொன் னம்பலத்தாடியை யைந்தெழுத்
செபியாமனிசெபித்தாற் பிறவாமுத்தி சித்திக்குமே.

(பொ-ரை.) மனமே! அஞ்சாமலிரு, சிதம்பரத்திலெழுந்த
ருளியிருக்கின்ற சிவபெருமானை, உலகமுழுவதும் வியாபித்திருக்கி
ன்ற ஞானசொரூபனை, திரிபுரமெரித்தவனை, என்றுங்கெடாத தீப
மேபோன்றவனை, பொன்னம்பலத்திலே நிர்த்தனம்பண்ணுபவனை
பஞ்சாட்சரமந்திரத்தினால் வாயால் செபியாதபடி மனத்தாலேயே
செபித்துவந்தால் பிறவாத முத்தியானது உண்டாகும்.

(கு-ரை) ஒவ்வொருவரின் பிறப்பினை யொழித்தற்கேது
வாகவிருப்பது பஞ்சாக்கரமகாமந்திரமாதலால் "பிறவாமுத்திசித்தி
க்குமே" என்றனர். திருச்சாடைக்காப்பு "வீடுபேறப்பயனருத்தி மெ
ச்சினர், பீடைகெடுப்பன பின்னைநாடொறும், மாடுகொடுப்பன மன்
னுமாநடம், மாடுபுகப்பனவஞ்செழுத்துமே," என்றதனுக்காண்க.
செபியாமற் செபிக்கலாவது தற்போதமுன்னிட்டுச் செபிக்காமல்
அருட்போதமுன்னிட்டுச் செபிக்கவேண்டுமென்பது மொன்று.

மருதப்பிரான்வசாசிப்பழுதிசேலை கப்பலிற் செல்லல்.

நாலின் மறைப்பொரு ளம்பலவாணனை நம்பியவர்
பாலிலொருதரஞ் சேவிக்கொணாதிருப் பார்க்கருங்கல்
மேலெடுத்தவர் கைவிலங்கைத்தைப்பர் மீண்டுமொரு
காலினிறுத்தவர் கிட்டியுந்தாம்வந்து கட்டுவரே.

(பொ - ரை.) நான்குவேதங்களிலும் உட்பொருளாய் விளங்கும்பொன்னம் பலத்திலே எழுந்தருளியிருக்கும் நடராஜபிரபுவை [அவரே தெய்வமென] நம்பி அவர் சந்நிதானத்தில் ஒருதரமாகிலும் வணங்காதிருப்பவர்கட்கு (என்னகதியெனில்) கருங்கல்லினை யவர்மேல்வைத்து இருகரங்கட்கும் விலங்கிடுவர், மறுபடியும் ஒற்றைக்காலினிற்கும்படி செய்வர், மறுபடியும் நெருங்கியவர் மற்றை யடைப்புக்களையும் கட்டுவார்.

(கு - ரை.) சிவபெருமானைத்தமது ஆயுட்குள்ளொருதரமாகிலும் வணங்காது இறந்தவர்களை எமலோகத்தில் பலவகையாகப் பல துன்பங்களினைச்செய்வர் எனவேதினமொருகாலமாவது ஒருதரம்சொல்லினும் ஒருதரஞ்சேவிக்கினும் புண்ணியமுண்டென்பதாம்.

ஆற்றிருந் தும்பை யணிந்தாடுமம்பல வாணர்தம்மைப்
போற்றாதவர்க்குடை யாளமுண்டேயிந்தப் பூதலத்திற்
சோற்றுணியற்றுச் சுகமற்றுச்சுற்றத் துணையுமற்றே
யேற்றாலும்பிச்சை கிடையாமலேக்கற் றிருப்பர்களே.

(பொ - ரை.) கங்காநதியுடனே தும்பைமலரினைத் தரித்து நிர்த்தனஞ்செய்யும் பொன்னம்பலவாணனைத்தோத்திரஞ்செய்யாதவர்கட்கு அடையாளங்களுண்டு அவையென்னவென்றால் இவ்வுலகிலே சோறுவஸ்திரமுங்கிடையாமல், நன்மைகளையிழந்து, உடுக்கவ்

ஸ்திரமின்றி, வீடுதோறும் போய் கைவசத்துறும் பிச்சையிலேயாசின்றித்தாழ்ந்திருப்பார்கள்.

(கு - ரை) ஆன்மாக்களுக்கு வேண்டிய போகங்களனைத்தையும் கூட்டிவைப்பவன் சிவபெருமானேயென்று நன்றியினோடிலேர்து அவனைவணங்கி வாழ்பவர்க்கே சோறுமுதலிய எல்லாவற்றுக்குறைவின்றி இம்மையிலும் அனுபவிக்கப்பெறுமென்பதாம். திருப்பாட்டு "இம்மையேதரும் சோறும் கூறையுமேத்தலாம் இடர்கெடலுமாம்" என்றதுணர்க.

அத்தனைமுப்பத்து முக்கோடிதேவர்க் கதிபதியை
நித்தனையம்மை சிவகாமசுந்தரி நேசனையெங்
கத்தனைப்பொன்னம் பலத்தாடுமையனைக் காணக்கண்க
ளெத்தனைகோடி யுகமோதவஞ்செய் திருக்கின்றவே.

(பொ - ரை) எமது தந்தையை, முப்பத்து முக்கோடிதேவர்கட்குத்தலைவனானவனை, நித்தியமாயுள்ளவனை, நமது தாயாகிய சிவகாம சுந்தரியினிடத்தில் நேசமுடையவனை, எம்முடைய கருத்தனை, பொன்னம்பலத்தில் நிர்த்தனம் செய்பவனைத்தரிசிக்க (எம்முடைய) நேத்திரங்கள் எவ்வளவு காலம் தவஞ்செய்திருக்கின்றன.

(கு - ரை) அநேக ஜென்மாந்தரங்களில் செய்த புண்ணியத்தாலன்றி நடராஜதரிசனம் கிடையாதாகலினாலும், கண்களாற் காண்டற்குரியபலன் அவன்திருவடிதரிசனமே யாகலினாலும், "காணக்கண்களெத்தனையோ கோடியுகமோ தவஞ்செய்திருக்கின்றனவே" என்றனர். தேவாரம் "பொருவிடையொன்றுடைப் புண்ணியமூர்த்தி புலியதள், உருவுடையம்மலை மங்கைமணாளனுலகுக்

செல்வாக்; திருவுடையபத்தனர் வாழ்கின்ற தில்லைச் சிற்றம்பலவன், திருவடியைக்கண்டு கண்கொண்டு மற்றினிக் காண்பதென்னே?' என்றதனைத் தேர்க.

## திருச்செங்காடு.

நெருப்பானமேனியர் செங்காட்டங்குடியிலாத்தி நிழலருகே
யிருப்பார்திருவுள மெப்படியோ வின்ன மென்னையன்னைக்
கருப்பாசயக்குழிக் கேதள்ளுமோ கண்ணிலான் கணையிய
திருப்பாற்றீமைதருமோ தெரியாது சிவன்செயலே.

(பொ - ரை.) அக்கினிப் பிழம்புபோன்ற திருமேனியினையுடையவர், திருச்செங்காட்டங்குடியென்னுந் தலத்தில் ஆத்திமரத்தினீழலில் எழுந்தருளியிருப்பவர் (இவர்) திருவுளப்பாங்கு எத்தன்மைத்தோ? இனிமேலும் அடியேனை யொருதாயின் வயிற்றினிடத்துள்ளருவரோ (அல்லது) நாரணன் காண்டற்கரிய, திருவடியினையே தந்து விடுமோ அறியேன் (எல்லாம்) சிவன்செயலேயாம்.

(கு - ரை.) பிறப்பதும் மெய்யடைவதும் ஆன்மாக்களின் இச்சைவழியல்லவாகையாலும், அவையவர்கள் கன்மத்தின்வழி வருமாகையாலும், அக்கன்மத்தை யூட்டுவிப்பவன் கடவுளேயாகையாலும் 'சிவன்செயலே' என்றனர். தாயுமானவரும் "சிவன்செயலாலே யாதும் வருமெனத்தேறேன் நாளும்" என்றனர்.

## திருவொற்றியூர்.

ஐயுந்தொடர்ந்து விழியுஞ்செருகி யறிவழிந்து [யான்
மெய்யும்பொய்யாகி விடுகின்றபோதொன்று வேண்டுவன்

செய்புந் திருவொற்றி யூருடையீர் திரு நீறுமிட்டுக்
கையுந் தொழப்பண்ணி யைந்தெழுத் தோதவுங் கற்பியுமே.

(பொ - உர.) கல்லாருஞ்செய்யவல்ல திருவொற்றியூரி லெழுந்தருளியிருக்கும் பெருமானே! சிலேட்டுமமேலிட்டு, கண், விழிகள் உள்ளடங்கி, அறிவுகெட்டு, மெய்யாகியதேகம் பொய்யென்று சொல்லும்படியான நிலைமையடைந்தபோது யான் ஒரு காரியத்தை விரும்புகிறேன் (அஃதென்னவெனில்) (என்னுடைய நெற்றியின் கண்ணே) விபூதிதரித்து, இரண்டு கைகளும் அஞ்சலியாக விருக்கப் பண்ணி, பஞ்சாட்சரத்தைச் செபிக்கவும் செய்வித்தருளவேண்டும்.

(கு - உர.) தேகத்தைவிடுகிற காலத்தில் சிவசாதனங்களும் சிவத்தியானமும் கொண்டிருக்கவேண்டுமென்பதாம். பற்றற்ற பரம ஞானியராகிய பட்டினத்தடிகள் தாம் சிவலிங்கவடிவாக விளங்கும் திருவருளைப் பூரணமாகவடைந்திருந்தும் உலகத்தினைவிட்டு மறையுமளவும் திருநீறு முதலிய சாதனங்களுடனிருக்க வேண்டுமென விரும்புவாராயின், தற்காலத்துச் சிலர் தாங்கள் ஞானிகளாய் விட்டோம் விபூதி முதலிய வேண்டியதில்லையெனப்பேசி யனுஷ்டியாதிருப்பவர்களடையுங்கதி யென்னவோ அறியகில்லோம்.

சுடப்படுவாரறியார் புரமூன்றையுஞ் சுட்டபிரான்
இடப்படுமாமதிற் றென்னொற்றியூரன் றெருப்பரப்பி
நடப்பவர்பொற்பத நந்தலைமேற்பட நன்குருண்டு
கிடப்பதுகாண்மனமே விதிப்பட்டைக் கிழிப்பதுவே.

(பொ - உர.) மனமே! திரிபுரங்களையும் எரித்தபெருமானுடைய வளம் பொருந்திய பெரியமதில்களாற் சூழப்பட்ட அழகிய

பத்திரகிரியார் சேவகர் பட்டினத்தாரைத் திருடனெனக்கட்டிப்போதல்

திருவொற்றியூரனுடைய விசாலமான வீதியில் நடப்பவர்களது அழகியதிருவடி நம்முடைய தலையின்மேற்படும்படி நல்லபடியருளடு டைப்பதுவே, பிரமனால் எழுதப்பட்டு (நமக்கெனவேற்பட் டுள்ள) வட்டிலைக்கழிக்கத்தக்கதாம். (எரிக்கப்பட்டுப்போகும் சாமா ன்னியர்களிவ்வுண்மை யறியார்.)

(கு - ரை.) திருவொற்றியூர் மோட்சபூமியாதலின் அத்தலத் தினை நாடிவந்து அவ்வீதியிலுலவும் உத்தமச்சிவனடியார்கள் திரு வடிப்பரிசத்தால் மோட்சமுண்டாமென்றார். திருவொற்றியூர் வீதி சிறந்ததென்பது "ஆதிமாலயன்முதல் மண்ணையறிவரும் தெய்வதா ளாத், தீநிலாவொற்றியூரிற் றீண்டதற்கரிய பெம்மான், நதிசேரி ழைபாத் ராதங்குலகுய்ய நடந்தாலத்து, வீதியின் பெருமைதன்னை யாவர் தாம் விளம்பவல்லார்" என்றதனாற் காண்க.

## திருவிடை மருதூர்.

காடேதிரிந்தென்ன காற்றைப்புசித்தென்ன கந்தைசுற்றி
யோடேயெடுத்தென்ன வுள்ளன்பிலாதவரோங்குவிண்ணோ
நாடேயிடைமருதீசர்க்குமெய்யன்பர் நாரியர்பால் ர்.
வீடேயிருப்பினு மெய்ஞ்ஞானவீட்டின்ப மேவுவரே.

(பொ - ரை.) (சிவபெருமானிடத்து உள்ளபடி) அன்பில்லாத வர்கள் காட்டினிடத்தே சஞ்சாரம் செய்தென்ன, காற்றினையுண வாக்கொண்டென்ன, கந்தற்றுணிகளைத்தரித்து ஓடுகொண்டு பிச் சையெடுத்தென்ன, ஒரு பிரயோசனமுமில்லை. ஓங்கிய தேவர்கள் நாட்டினையொத்த திருவிடைமருதூர் பெருமானுக்கு மெய்யன்பை யுடையோர் மாதர்களுடன் வீட்டிலேயேயிருந்து கொண்டிருந்தா லும் உண்மை ஞானத்தால் விளையும் மோட்சானந்தம் அடைகுவர்.

(கு - ரை.) இல்லறத்திருக்கினும், துறவறமடையினும் தன் புகாரணமாகத் திருவருளுண்டாயன்றி வேறு ஆசிரமங்களால் பிரயோசனமில்லையென்பார், 'அன்பர் சேவைபே' என்றனர். தாயுமானவர், "மத்தமதகரிமுகில் குலமென்ன நின்றிலகுவாயிலுடன் மதியகடுதோய், மாடகூடச்சிகரமொய்த்த சந்திரகாந்த மணிமேடையுச்சி மீது, முத்தமிழ் முழக்கமுடன் முத்தநகையார்களொடு முத்து முத்தாடக்குலாவி, போகத்திருந்து மெய்ப்போதத்திலே நின்று மூக்கைப்பிடித்தடைத்துக், கைத்தலகம்படை விரித்ததுவே சிவ மொழிகாட்டு நாதை அவழிகொண்டு, காணமலையுச்சியிற் குகைபுகுந்து மெய்க்காநலாமலகமென்னக், கத்தமநடுபோன நிலைபெற்றவர்களுப்பவர்காண் சன்மார்க்கநிதானிகளாய் நின்றோர், சர்வபரிபூரண வகண்டசச்சிதானந்தசிவமே." என்றதனுங் காண்க.

தாயும்பகைகொண்ட பெண்டீர்பெரும்பகை தன்னுடைய
சேயும்பகையுற வோரும்பகையிச் செகமும்பகை
யாயும்பொழுதி லருஞ்செல்வநீங்கிலிக் காதலினாற்
றோயுநெஞ்சேமரு நீசர்பொற்பாதஞ் சுதந்தரமே.

(பொ - ரை.) பிரபஞ்சத்திலுழைக்கின்றவர்க்கும் மனமே! ஆராயுங்காலத்தில் அருமையான செல்வம் நம்மைவிட்டு நீங்கிவிடில், அருமையாகப் பெற்றெடுத்த அன்னையும் பகையாவள், விவாகஞ் செய்து கொண்ட மனைவியும் பெரிய பகையாவள், தவத்தாற் பிள்ளைகளும் பகையாவர், சுற்றத்தினரும் பகையாவர், இவ்வுலகத்தினரும் பகையாவர் ஆகையால் இவ்விடத்தில் திருவிடைமருதூர் பரமசிவன் அழகிய திருவடியே நமக்குச் சுதந்தரமாகும்.

(கு - ரை.) செல்வமுற்றகாலத்தில் கூடவிருந்து சகல நன்மைகளையும் அநுபவித்து வாழ்ந்தார் எத்தகையினரும் அச்செல்

| பட்டணத்தார் கழுமரம் பற்றச்செய்தல் அரசனை புனிதனாக்குதல்

வம் ஏய்க்கிய காலத்தில் நெருங்கி, வருத்தலின்றிப் பகைவிளையும் கொள்வார் என்பார் யாரும் பகை யென்றார், ஔவையார். "கல்லானேயாயினுங் கைப்பொருளொன்றுண்டாயின் எல்லாருஞ் சென்றங் கெதிர்கொள்வர் - இல்லானை, இல்லாளும் வேண்டாளீன்றெடுத்ததாய் வேண்டாள், செல்லாதவன் வாயிற்சொல்." என்றதனுங் காண்க.

## திருக்கழுக்குன்றம்.

காடோ செடியோ கடற்புறமோ கனமேயிருந்த
நாடோ நகரோ நகர்நடுவோ நலமேயிருந்த
வீடோ புறந்திண்ணையோ தமியேனுடல் விழுமிடம்
நீடோய்கழுக்குன்றி லீசா வுயிர்த்துணை நின்பதமே.

(பொ - ரை.) உயர்ந்திருக்கின்ற திருக்கழுக்குன்றத்திலெழுந்தருளியிருக்கும் வேதாசலனே! அடியேனுடைய தேகம் விழுமிடம் வனத்திலோ, மரத்தடியிலோ, சமுத்திரதீரத்திலோ, மேகந்தவழும் நாட்டினிலோ, பட்டணத்திலோ, அப்பட்டணத்தின் மத்தியிலோ நன்மையிருந்த வீட்டிலோ, வெளித்திண்ணையிலோ (அடியேன்) தேவரீர் திருப்பதமே (அக்காலத்தில்) எனதுயிர்க்குத் துணையாக விருத்தல் வேண்டும்.

(கு - ரை.) மரணமடைவது நிச்சயம் அது இன்னகாலத்தில் இன்னவிடத்திலென அறியவாராதாகலின், அக்காலத்தில் அறிவு நிலை இங்ஙனமிருக்குமென அறிதலில்லை, ஆகையினால் அவ்வமயம் என்மனத்தின் கண்ணே தேவரீர் திருவடிச்சிறப்பினைக் கொடுத்தருள வேண்டுமென்பதாம்.

## திருக்காளத்தி.

பத்தும்புகுந்து பிறந்துவளர்ந்து பட்டாடைசுற்றி
முத்தும்பவளமும் பூண்டோடியாடி முடிந்தபின்பு
செத்துக்கிடக்கும் பிணத்தருகேயினிச் சாம்பிணங்கள்
கத்துங்கணக்கென்ன காண்கயிலாபுரிக் காளத்தியே.

(பொ - ரை.) கயிலையென்று சொல்லும்படியான காளத்தியி லெழுந்தருளியிருக்கும் சிவபெருமானே! (தாய்வயிற்றில்) பத்து மாதம் வரையிலிருந்து, உலகில் வெளிவந்து, வயதடைந்து, பட்டு முதலியவஸ்திரங்கள் உடுத்து, முத்தாபரணங்களும் பவளமாலைகளும் தரித்து அங்குமிங்கு மோடி விளையாடி (உலக அநுபவமுழுதும்) அநுபவித்தபின்பு இறந்து பூமியில் கிடக்கும் சவத்தின் சமீபத் திலே இனி இறக்கும் பிணங்கள் சூழ்ந்துகொண்டு அழும் காரண மென்னையோ.

(கு - ரை.) தம்முளொருவனை விருந்தான்மாண்டு பிரத்தி யட்சமாகக் கிடப்பதைக்கண்டு தாமுமிவ்வாறு மாளவேண்டியது நிச சயமாகலின் இனியடையவேண்டியவற்றை யடைவதற்குப்பிரயத்த னம் செய்வேமென என்னாது வாளாசூழ்ந்து அழுதலின்பிரயோ சனமென்னவென்பார் 'கத்துங்கணக்கென்னகாண்' என்றனர். ஔவையார் "ஆண்டாண்டுதோறு மழுதுபுரண்டாலு, மாண்டார் வருவரோ மானிலத்தில்—வேண்டாம், நமக்குமதுவழியே நாம் போமளவும், எமக்கென்றிட்டுண்டிரு" என்றதனுற்காண்க.

பொன்னுற்பிரயோஜனம் பொன்படைத்தார்க்குண்டு
பொன்படைத்தோன்

தன்றைப்பிரயோசனம் பொன்னாக்ககன்கைதாண்டத்
தன்மையைப்போ
ஒன்றைப்பிரயோசனம் வேண்டேன்றுமுன்
டுனைப்பணிய
மென்றைப்பிரயோசனமே தான்கொளத்தி
பிச்சரனே.

(பத - வுரை.) காளத்தியிலெழுந் தருளியிருக்கும் சிவபெரு மானே! பொன்னினாலுடைய வேண்டியபிரயோசனம் பொன்னி னையுடையாருக்குண்டு, பொன்றன்மையினைப்போல, தேவரீரால் பிரயோசனம் அடியேனுக்கு அநேகமாகவுண்டு, தேவரீர்க்கவன றும் அடியேனால் பிரயோசனம் தேவரீருக்கென்னவுண்டு (ஒன் றுமில்லை.)

(கு - வை.) பொன்னினை யொருவன்போற்றி வருவோ னேயாயினும் அப்பொன்னினால் அவனுக்கு இன்மையிலனுபவிக்க வேண்டியபிரயோசனத்திற்கும் ஏதுவாகவிருந்து வெகுபுகழினையு ம் உண்டாக்கும் அப்பொன்னுக்கு அவனாலனுபவிக்க வேண்டிய தொன்றுமில்லையதுபோல திருவருளினை யொருவன்போற்றி வரு வானேயாயினும் அத்திருவருளினால் அவனுக்கு மறுமையிலனுபவிக்க வேண்டிய சிவபோக மனைத்திற்கும் ஏதுவாகமோட்சத்தினைய ப்பிக்கும் அத்திருவருளுக்கு அவனாற்செய்யவேண்டிய தொ ன்றுமில்லை என்பதாம்.

வாளாளன்மகவரித் தாட்டலச்சிலைக்கலன் யாதுசொன்ன
சூளாவினமை தறக்கலச்சிலைக்கலன் றொண்டுசெய்து,

நாளாறிற் கண்ணிடந் தப்பவல்லேனல்ல னினிச்சென்
றாளாவதெப்படியோ திருக்காளத்தி யப்பருக்கே.

(பொ - ரை.) வாளைக்கொண்டு (தாயுந்தந்தையும் சம்மதித் ததனால்) பிள்ளையினையறுத்துப் படைத்ததுபோல செய்வேனல் லேன், மனைவிசொன்ன ஆணைக்குட்பட்டு யௌவனபருவத் தைத்தழித்ததுபோல செய்வேனல்லேன், சிவப்பணிஆறுநாள் வரை யிற்செய்து கண்ணையகழ்ந்து அப்பியதுபோலச் செய்வேனல்லேன் இந்நிலைமையான் திருக்காளத்திப் பெருமானுக்கு அடிமையாகும் விதம் எப்படி.

(கு - ரை.) வாளால் மகவரிந்தவர் சிறுத்தொண்டநாயனார், இளமை துறந்தவர் திருநீலகண்டநாயனார், கண்ணிடந்தப்பியவர் கண் ணப்பநாயனார். செயற்கரிய செயல்களைச்செய்து முத்திபெற்ற நாயன்மார்களினொருவரை யொத்துழாத நான் கடைத்தேறுவ தெப்படி யென்பார் ஆளாவதெப்படியோ என்றனர்.

முப்போது மன்னம்புசிக்கவுந் தூங்கவு மோகத்தினாற்
செப்போதிளமுலை யாருடன்சேரவுஞ் சீவன்விடு
மப்போது கண்கலக் கப்படவும்வைத் தனையைப்பனே
யெப்போது காணவல்லேன் திருக்காளத்தி யீசனையே.

(பொ - ரை.) திருக்காளத்தியி லெழுந்தருளியிருக்கும் சிவ பெருமானே! ஒரு காலைக்கு மூன்றுவேளை சாப்பிடவும், பின்பு தூங்கவும், பின் காமவிச்சையால் செப்புக்கிண்ணத்தினை யொத்த சிறுதனத்தியருடன் அதிவாசமும் (காலங்கழித்து) உயிர்விடுந்தருணத் தில் கண்கலக்கமும் செய்தனை (இத்தகையயான்) ஐயனே! எக் காலத்தினுன்னைத் தரிசிக்க வல்லனாவேன்.

(கு - ரை) பிரபஞ்ச போகமே நித்தியமெனவெண்ணி உண்ணுவதிலேயும், உறங்குவதிலேயும், கூடலிலேயும் மரணத்தருவாயிலில் அந்தோ வாணாளை வீணுக்கழித்து விட்டோமேயென விசனித்தலிலேயுமாகவிருக்கும்படி எனக்குக் கன்மத்தினை ஆட்டிவைப் பாயேல்; தேவரீரைத் தரிசித்து உய்யும்வண்ணம் எங்ஙனம் என்பார் 'எப்போது காணவல்லேன்' என்றனர்.

இரைக்கேயிரவும் பகலுந்திரிந்திங் கிளைத்துமின்னா
ரைக்கேயவலக் குழியருகேயசும்பார்க்கிடாமுழுகும்
புரைக்கேயுழலாத் தமியேனையாண்டருள் பொன்முகலிக்
கரைக்கேகல்லாநிழற்கீழமர்ந்தருள் காளத்தியே.

(பொ - ரை) பொன்முகலி நதிதீரத்திலும், கல்லாலவிருட்சத்தின் நிழலிலும் எழுந்தருளியிருக்கும் திருக்காளத்தி நாதனே! ஆகாரத்தின் பொருட்டே இராக்காலத்திலேயும் பகற்காலத்திலேயும் அலைந்தலைந்து மின்னற்கொடிபோன்ற மாதர் அரையினிடத்து அப்பிரயோசனமான பள்ளத்தின் சமீபத்தில் வழுக்கு நிலம்போன்ற இடத்திலிருந்து (நீர் முதலிய) வடியும் குழிப்புண்ணுக்கே (நாடித்) திரியும் அடியேனைத் தடுத்தாண்டருளவேண்டும்.

(கு—ரை.) பகற்காலமாத்திரமேயன்றி இராக்காலத்திலேயும் வயிற்றினிமித்தம் திரிந்துழன்று அதனுல் தேகமிளைத்தும், மாதர்கள் நிதம்பத்திலேயே நாட்டத்தையுடையவனுமிப் பிரபஞ்சமுமாக விருக்கின்றவென்னை, குருமூர்த்தியாக எழுந்தருளி அனேகரை முத்தியகாலத்திலாண்டு கொண்டதுபோல அடியேனையும் தடுத்தாண்டு கொண்டருளவேண்டுமென்பார்; 'ஆண்டருள் கல்லாநிழற்கீழமர்ந்தருள் காளத்தியே' என்றனர்.

காதுங்குருதிச் சலதாரை தோட்புரை கட்டொடாநீ
பூதமலக்குழி காமத்துவார மொளித்திடும்புண்
பேறுர்த்தசைப்பினைப் பந்தரங்கத்தன சிற்றின்பம்விட்
டேற்பதந்தருவாய் திருக்காளத்தி யீச்சரனே.

(பொ—ரை.) திருக்காளத்தியி லெழுந்தருளியிருக்கும் நாத னே! நாற்றத்தினை வாய்ந்த இரத்தம் ஒழுக்கொண்டிருக்கிற நீர்க் கால், தோலால் அமைந்த புண்குழி, பிறத்தியேரும் சிந்தும்புண் மல மிறைத்த பள்ளம், ஆசைவழி (புடவையில்) மறைத்திருக்கும் இரணம், மடர்ந்த தசையுடன், கூடியபிளப்பு, இவைகளேயாக அனுபவிக்க வேண்டிய அற்பஇன்பம் இத்தன்மையதனை நீக்கிமுத்தியடைதற்கேது வுள்ள திருவடியினைத் தந்தருளுவாய்.

(கு—ரை.) விரும்புதற்கேதுவான ஒரு சிறிது நன்மையுமின்றி முழுதும் அருவருக்கத் தகுந்த நிலையுடன்கூடிய அல்குல் ஆகிய கட லின் நீடோதமடியேன் முத்தியென்னுங் கரையினையடைய தேவரீர் திருவடியாகிய புணையைத் தந்தருள வேண்டுமென்பார்

## கைலாயம்.

கான்சாயும் வெள்ளிமலைக்கரசே சிவின்கழனம்பியே
ஊன்சாயுஞ் சென்மமொழித்திவெயங் காரூரதுக்காய்
மான்சாயச் சொல்கைமருவலஞ்சாய வழிந்துகொன்றைத்
தேன்சாயநல்ல திருமேனிசாய்த்த இவர்கொழுந்தே.

(பொ—ரை.) கெடுமணம் வீசும் வெள்ளிமலையிலெழுந்தருளி யிருக்கும் தலைவனே! மாமிசம் பொருந்திய (அடியேன்) பிறவியினை

சிக்கினோம். திருக்காரூர்ச் சிவசருமரின் பொருட்டு அழகிய இட்ட சிரத்திலுள்ள மான்சாயவும், வலதுகரத்திலுள்ள மழுசாயவும்பிர ணவம்போதும் விளக்கொன்றையிலுள்ள தேன்சொட்டவும் அழகியதிருமேனிசாய்ந்த சிவக்கொழுந்தே.

(கு—ரை.) காரூர் என்பது திருவிரிஞ்சிபுரம் அத்தலத்தில் திருமஞ்சனம் செய்கையில் திருமுடிஎட்டாததுபற்றிக் குந்திக் குதிவருந்திய சிவசருமரென்னும் ஆதிசைவச் சிறுவர்க்காகச் சிவபெருமான் திருமுடியை வளைத்தருளினார். இவ்வருமைச்சரித்திரம் சேடவிரிஞ்சைத்தலபுராணத்தில் பாலனுக்குத் திருமுடிவளைத்த சருக்கத்தாலுணர்க. (அ)

இல்லறந்துறந்து பசிவந்தபோதங் கிரந்துதின்று
பல்லுங் கறையற்று வெள்வாயு மாயொன்றிற்பற்றுமின்றிச்
சொல்லும் பொருளு மிழந்து சுகானந்தத்தூக்கத்திலே
யல்லும் பகலுமிருப்பதென்றோ கயிலாயத்தனே.

(பொ—ரை.) திருக்கையிலையிலெழுந்தருளியிருக்கும் சிவபெருமானே! இல்லறத்திலிருந்து நீங்கி, பசியெடுத்தகாலத்தில் பிச்சையெடுத்துப் புசித்துப்பல்லுகளில் (தாம்பூலந்தரித்தலாலுண்டாகிய) கறையின்றி வெண்மையானவாயாகி ஒருபதார்த்தத்திலும் பற்றுமில்லாமல், சொல்லிலும் அச்சொல்லின் பொருளிலும் விசாரமில்லாமல் சுத்தநிலையே சொரூபமான சிதானந்த நித்திரையிலே எக்காலமும் தங்கியிருக்குங்காலமெப்போ (அறியேனே.)

(கு—ரை.) தேகமுள்ளளவும் பசிப்பிணியுண்டாகுமாகலின் அப்பிணியை நிவிர்த்திசெய்வதற்கு மாத்திரம் வேண்டியவொரு சிறிய முயற்சிசெய்து கொண்டுமற்றைய வெத்தகைய விகாரங்களிலும்

செல்லாது சுகத்தினையனுபவித்துக் கொண்டிருக்க வேண்டுமென்ப தாம். (௨)

சினந்தனை யற்றுப் பிரியமுந் தானற்றுச் செய்கையற்று
நினைந்தது மற்றுநினையா மையுமற்று நிர்ச்சிந்தனாய்த்
தனந்தனியேயிருந்தானந்த நித்திரை தங்குகின்ற
வனந்தலி லென்றிருப் பேனத்த னேகயிலாயத்தனே.

(பொ—ரை.) தந்தையே! திருக்கைலையி லெழுந்தருளியிருப் பவனே! கோபநீங்கி, ஆசைநீங்கி, செயல்நீங்கி, நினைவுநீங்கி, மறதி நீங்கி, யாதொருஎண்ணமு மில்லாமல், தனித்தவிடத்திலே தங்கி சிவானந்தநித்திரை யென்கிற உறக்கத்திலே வாழ்ந்து கொண்டிருப் பேன்.

(கு—ரை.) அனைத்துப்பற்றிற்கு மேதுவாகவுள்ள எந்த விஷயங்க ளிலும் மனத்தினைச்செலுத்தாமல் ஏகாந்தமைதானத்திலிருந்து கொண்டு சிவானுபவமாக விருந்து கொண்டிருப்பனென்பதாம். (௩)

கையாரவேற் றுநின் றப்பினைத் தின்று கரித்துணியைத்
தையாது டுத்துநின் சந்நிதிக் கேவந்து சந்ததமு
மெய்யார நிற்பணிந் துன்னே புகழமட்டு நின்றிரப்ப
ஐயாவென் றோலமிடுவதென் றோகயிலாயத்தனே.

(பொ—ரை.) திருக்கைலையி லெழுந்தருளியிருப்பவனே! கை யினையேந்திப் பிச்சையெடுத்து அப்படியேபுசித்துக் (குப்பையிற் கி டக்கும்) கரித்துணியிலுள்ள (கிழிந்ததைத்) தையாது தரித்துச் சொ ரூபமடைந்து எப்போதும், தோத்திரப்படிப் படிப்பணிந்து

மனத்தான்னே (விளையுமனக்கத்திலுமே) பயிர்க்குச்செறிய ஐய னே! என்றெயழுத கூப்பிடுவதெக்காலமோ.

(கு—ரை.) அன்னத்திற்கும் ஆடைக்கும் பிரியாசைபெடா து ஐயமேற்றும் ஆரம்பிச்சியாத, யாடையுடுத்தும் வாழுகிலையினை யடைந்திடினும் சிவாலயம் செல்லுதலிலும் சாஷ்டாங்கமாகப்பணி தலிலும், ஆனந்தமுறுதலிலும், தோத்திரம் செய்தலிலும் நீங்கக்கூ டாதென்றனர். (௭)

நீறார்ந்தமேனி புரோமஞ் சிலிர்த்துள நெக்குநெக்குச்
சேறாய்க் கசிந்து கசிந்தே புருகிநின் சீரடிக்கே
மாறாத்தியான முற்றானந்தமேற்கொண்டு மார்பிற்கண்ணீர்
ஆறாய்ப்பெருகக் கிடப்பதென்றோ கயிலாயத்தனே.

(பொ—ரை.) திருக்கைலாயத் தெழுந்தருளியிருப்பவனே! விபூதிசண்ணிக்கப்பட்ட தேகமானது மயிர்க்கூச்செறியவும், மனம் நெகிழ்ந்து சேற்றினைப்போல கரைந்துருகி நின் தேவரீர் திருவடி யிலேமாறுபடாத தியானமுற்று ஆனந்தமேற்கொண்டு மார் பினிடத்தே கண்களினின்றும் ஆற்றினைப்போல வெள்ளம்பெருகக் கிடப்பது எக்காலமோ.

(கு—ரை.) விபூதிபூசிக்கண்ணீருக் கப்பியுமாகநின்று சிவ த்தியானமுடன் வாழும் பத்திநிலையே சிறந்ததென்பார் 'கிடப்ப தென்றோ' என்றனர். (௮)

செல்வரைப்பின்சென்று சங்கடம்பேசித் தினந்தினமும்
பல்லினைக்காட்டிப் பரிதவியாமற் பரானந்தத்தே
யெல்லையிற் புக்கிட வேகாந்தமாயெனைக் காட்டித்தே
யல்லலற்றென்றிருப்பே னத்தனே கயிலாயத்தனே.

(பொ—ரை.) தந்தையே! திருக்கைலாயி லெழுந்தருளி யிருப்பவனே! பிரியமுடையார் பின்றானே போய்த் தனக்குண்டாயிருக்கும் கஷ்டங்களை யெடுத்துச்சொல்லிப் பிரதிதினமும் பல் தெரியும்படிக் கெஞ்சித் தீவியாதபடிச் சிவானந்த மனுபவிக்கும்படி புகுந்து தன்னந்தனியனாய் எனக்குரிய இடத்திலே கவலையற்றவனா யிருப்பேன்.

(கு—ரை.) வயிற்றினிமித்தம் பிறர் பாற்சென்று அவதிப்படாமல் அந்தர்முகமாகவிருந்தானந்தங் கொண்டிருப்பதெக்காலமென்றனர். (௮)

மந்திக் குருளையொத் தேனில்லை யேயுன் வழக்கறிந்து
சிந்திக்குஞ் சிந்தையை யானென்செய் வேனெனைத் தீத்தெற்றிப்
புந்திப் பரிவிற் குருளை யொத்திய பூசையைப்போ
லெந்தைக் குரியவன் காணத் திருக்கயி லாயத்தனே.

(பொ—ரை.) தந்தையே! திருக்கைலாயிலெழுந்தருளியிருப்பவனே! யான், தாயாகிய குரங்கினது வலிய அதன் மடியைத் தாவிப் பிடித்துக்கொள்ளும் அதன் குட்டியினை யொத்திருப்பேனல்லேன், நாயினேன் அப்பியாசத்தினைத் தெரிந்திருந்தும் (வாதியமான) விஷயங்களையே யெண்ணிக்கொண்டிருக்கும் மனத்தினைத் (தடுக்க) யான் என்னசெய்வேன். அடியேனைத் தீமையினின்று நீக்கி எனது புத்தியானது ஆசைப்படும் தனது குட்டியினை வைத்திருக்கின்ற பூனையினைப்போல காப்பாற்ற என் தந்தையாகிய நினக்கு உரியவனாக விருக்கின்றேன்.

(கு—ரை.) மர்க்கட நியாயத்தின்படி நானோ தேவரீரை வந்து பற்றிக்கொள்வதற்குச் சக்தனல்லனாகவிருந்தேனே, மார்ச்சால நியா

யப்படி தேவரீரே வலியவந்து என்னைத் தடுத்தாட்கொள்ளவேண்டும் என்றனர். (எ)

வருந்தேன்பிறந்து மிறந்துமயக்கும் புலன்வழிபோய்ப்
பொருந்தேனரகிற் புகுந்தின்றிலேன் புகழ்வாரிடத்தி
லிருந்தேனினியவர் கூட்டம்விடேனிய லஞ்செழுத்தா
மருந்தேனருந்துவ னின்னருளாற்கயி லாயத்தனே.

(பொ—ரை.) திருக்கைலைமலையிலெழுந்தருளியிருப்பவனே! தேவரீர் திருவருளினாலே இனிஇறப்பினிலும் பிறப்பினிலும்வருந்தமாட்டேன், மயக்குகின்ற பஞ்சேந்திரியங்களின் வழியாகத்தங்கேன், நரகினிற்சேரேன், தேவரீரையே தோத்திரிப்பாரிடத்தில் சேர்ந்தேன், அத்தகையார் கூட்டத்தினின்றும் விலகேன், அழகுபொருந்திய பஞ்சாட்சரமாகிய அரியதேனினையுண்பேன்.

(கு—ரை.) திருவருளினை வாய்க்கப்பெற்றார்க்குச் சனனமரணமும், பஞ்சேந்திரிய சேட்டையும், நிரயத்துன்பமும் நீங்கப்பெற்றுச்சிவனடியார்க் கூட்டுறவும் பஞ்சாட்சரத்தியானமும் உண்டாமென்பதாம். (அ)

## மதுரை.

விடப்படுமோவிப் பிரபஞ்சவாழ்க்கையை விட்டுமனந்
திடப்படுமோநின் னருளின்றியேதின் மையலையக்
கடப்படுமோவற்பர் வாயிலிற்சென்று கண்ணீர்ததும்பிப்
படப்படுமோசொக்க நாதாசவுந்தர பாண்டியனே.

(பொ—ரை.) சொக்கலிங்கப்பெருமானே! சோமசுந்தரபாண்டியனே தேவரீருடைய திருவருளினை யடைதலில்லாமலே, இவ்

வல்களேழ்நிலையானது என்றால் நிற்கமுடியுமோ, அன்னமிடுவாரும் மனத்தாலுருகிப் படுவோர் இல்லை. ஆதலின்சர்வ) எல்லாரும் அங் குயிர்க்குமாலைதலையின்றி நிற்குமவரோ, அதிவிஸ்வாசம்போய் நம்பவியிலே சென்று கண்ணீர்வடியத்துன்ப மனுபவிக்க முடியுமோ (முடியாது ஆட்கொள்ளுவாயாக.)

(கு—ரை.) சிவபெருமானுடைய திருவருள் கொடுத்தாலல் லாமல் பிரபஞ்சவாசனை நீங்காது, மனமொருவழிப்படாது, அதனி டையாதலினாலே வயிற்றினிமித்தம் கண்ணீர்த்ததும்ப அற்பர்கள் வீட்டிற்றாதும் சென்று கெஞ்சிப்பிழைக்க வேண்டுமென்பதாயிற்று.)

## பொது.

உடைகோவணமுண் டுறங்கப்புறந்திண்ணை யுண்டுணவிங்
கடைகாயிலையுண் டருந்தத்தண்ணீருண் டருந்துணைக்கே
விடையேறுமீசர் திருநாமமுண்டிந்தமேதினியில் [றைக்கே.
வடகோடுயர்ந்தென்ன தென்கோடு சாய்ந்தென்ன வான்பி

(பொ—ரை.) இவ்வுலகிலே, உடுத்தற்குக்கௌபீனமுளது, நித் திரைசெய்ய வெளித்திண்ணைகளுளது உண்ணுதற்கு இலைகாய் கிடைப்பதற்கும் காய் இலையுள குடிக்கத்தண்ணீருளது அரியமோ ட்சவழிக்குச்சாதனமாக இடபவாகனத்தின் மேலேறுவோரும் சிவ பெருமான் திருப்பெயருளது (ஆதலின்) ஆகாயத்திலுள்ள சந்திர னுக்கு வடக்குமுனை உயர்ந்தென்ன தென்முனைசாய்ந்தென்ன (இரண்டுமொன்றே.)

(கு—ரை.) உலகத்தின்கண்ணே இன்றியமையாது ஒருவன் அனுபவிக்கவேண்டியன மானத்தைக்காத்தலும், நித்திரைசெய்த

லம், ஆகாசமென்றுங்கூறுமாகலின் இவற்றின்பொருட்டு விலையுயர்ந்த பீதாம்பரமுதலிய வாடைகளையும், பஞ்சணைபட்டமெத்தையும் இருதலையணையுமான்னமும் நாடாமல் ஒருகோவணத்துண்டும், தெருத்திண்ணையும், சருகுமுதலியவும் போதுமென்றனர் "சிவசிவவென்னைச்சிவகதிதரவே" எனத்திருமந்திரங்கூறுதலின் துணைக்கே திருநாமமுண்டு என்றனர். சந்திரனுதிகள்திசையுபரின் உலகத்தினுக்குமேலமரும், தென்றிசைதரழின் உலகத்தினுக்குக்கீழமுமாம். உலகத்தினிக்கருதாதார்க்கு அங்குதிலென்னபிரயோசனமென்றனர். மணிவாசகர். "எங்கெழிலென்ஞாயிறெமக்கேலோரெம்பாவாய்" என்றதுமிக்கருத்துக் கொண்டேயாம். (ஆ)

வீடுநமக்குத் திருவாலங்காடு விமலர்தந்த
வோடுநமக்குண்டு வற்றாதபாத்திர மோங்குசெல்வ
நாடுநமக்குண்டு கேட்டதெல்லாந்தர நன்னெஞ்சமே
யீடுநமக்குச் சொலவேயொருவரு மிங்கில்லையே.

(பொ—ரை.) நல்லமனமே! நமக்குமோட்சவீடு திருவாலங்காட்டுத்தலம், என்றுங்குறைதலடாத பாத்திரஞ்சிவபெருமான் தந்தஓடு, விரும்பினவற்றையெல்லாம் கொடுக்கச்செல்வமிகுந்தபட்டினமுண்டு, நமக்குச்சமத்துவமானவரைச்சொல்ல இவ்வுலகிலொருவரில்லை.

(கு—ரை.) ஒருவன் அத்தியாவசியமாக அனுபவிக்கவேண்டியபலன்கள் மறுமைக்குச்சிவபோகமும், இம்மைக்குச்சீவபோகமுமாம். சிவபோகத்திற்குக்காடும், சீவபோகத்திற்கு ஓடும் நாடும் விரத்தியடிசமாகவும் இலேசாகவும் இருத்தலின் அவற்றையே நாடியிருப்பவர் தன்னைவிட வேறொருவரில்லையாகலின் 'ஒருவரும் மில்லை' யென்றனர். மோட்சவீடாகத் திருவாலங்காட்டினைக்குறித்த

தென்னையோவெனின்? இவ்வுலகில் இருந்தாகியாரும் மோட்ச மடைந்து சிவபோகமநுபவித்துக் கொண்டிருந்தல் அவ்வுலகிலே யே. அது அப்பிரத்தியட்சம். நம்சரீரக்காலமுள்ளபோது சிவபோக மநுபவிப்பதாவது இவ்வுலகில் திருவாலிக்காட்டிலேயே இது பிரத்திய ட்சம் ஆகையின் இத்தலத்தினைக் குறித்தாரென்க. (உ)

நாடிக்கொண் டீசரை நாட்டமுற் றேயிலை நாதரடி
தேடிக்கொண் டாடித் தெளிந்தாயிலை செகமாயைவந் தும்
மூடிக்கொண் டோமென் றும் ஐம்பூதங்கள் பீடித்ததென்
றுபிடிப்பையோ நெஞ்சமே யுன்னைப் போலில்லைப் பித்தர்களே.

(பொ—ரை.) மனமே! பிரபஞ்சமாயையானது நம்மிடம் வந்து நம்மைமூடிக்கொண்டது என்றும், மண்பூதங்கள் நம்மைப் பீடிக்கின்றன என்றும் இரங்கிப் பேசுகின்றனை; இவை யுண்டாகாதபடி சிவபெருமானைத் தேடிவிசாரித்து அவர்பால் எண் ணம்வைத்தாயில்லை; அப்பெருமானுடைய திருவடியினை நாடிச்சந் தோஷித்துத் தெளிவினையடைந்தாயில்லை. அந்தோ! உன்னைப்போ லப்பித்தம்பிடித்தவர்கள் (உலகில்) இல்லை.

(கு—ரை) பிரபஞ்ச மாயாகாரியங்களை நுண்டாகிற பந் தம் மாதர்மயக்கமே வரும் இச்சையுமாகிய பாசம் சிவபெருமானை யடையவொண்ணாதபடியினை விசாரித்துத் தேர்ந்தார்க்குத்தாக்காதெ ன்பதனையறிந்தாயில்லை யென்பார் 'நெஞ்சமேயுன்னைப் போலில்லைப்பி த்தர்களே' என்றனர் திருமந்திரம் "பிரிக்கின்றபோகம் பிணிக்கின்றபா ற்பாசம், தெரிக்கின்ற திவ்வினைக்குதி செல்லும் வினையை, யரிக்கின்ற வியினை பாயிலமையவுளன், புரிக்கின்ற புரத்தினை மூர்த்தியின் தேவே" என் றதுங்காண்க.

(௩)

கையொன்றுசெய்யவிழி யொன்றுநாடக்கருத்தொன்றெண்ண
பொய்யொன்று வஞ்சகநாவொன்று பேசப்புலாற்கமழு]ண
மெய்யொன்றுசாரச்செவியொன்றுகேட்க விரும்புமியான்
செய்கின்றபூசையெவ் வாறுகொள்வாய்வினை தீர்த்தவனே.

(பொ—ரை.) (அடியார்களுடைய) தீவினையையொழித்த சிவ பெருமானே! கைகளானவை (புஷ்பங்களைக் கொண்டு சிவபெருமானையருச்சிக்கின்ற காலத்தில்) நேத்திரமானவை (அப்பெருமானைப்பாராது) வேறுபதார்த்தங்களைப் பார்க்கவும், மனமானது (அப்பெருமானைச்சிந்தியாது) யாதாமொரு விஷயத்தினை யெண்ணிக் கொண்டிருக்கவும், திரிகோணகூடிய வஞ்சகமாகிய நாவானது (அப்பெருமான் திருநாமங்களைச் சொல்லிக்கொண்டிராமல்) வேறுவீண் வார்த்தைகளைப் பேசவும், புலால்நாற்றத்தினையுடைய தேகமானது (தனித்திருக்காமல் சாமான்யருடன்) பரிசித்துக் கொண்டிருக்கவும், காதுகளானவை (நாம் சொல்லும் ஸ்தோத்திரங்களைக் கேளாமல் அந்நியர்வார்த்தைகளைக் கேட்கவும் விரும்பிச்செய்கின்ற சிவபூசையினைத்தேவரீர் எங்ஙனமேற்றுக்கொள்ளுவீர்.

(கு—ரை.) சிவபூசை செய்கின்ற காலத்தில் அகக்கரணங்களும் புறக்கரணங்களும் ஒத்திருந்தாலன்றிப் பூசையால் வினையும் புண்ணியம் கைகூடாதென்பதாம். பெரியபுராணம் "ஐந்துபேரறிவுங் கண்களே கொள்ளவளப்பருங் கரணங்களுநான்குஞ், சிந்தையேயாகக் குணமொரு மூன்றுந் திருந்துசாத்துவிகமேயாக, இந்துவாழ் சடையானாடுமானந்த வெல்லையிறனிப்பெருங் கூத்தின், வந்தபேரின்ப வெள்ளத்துட்டிளைத்து மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்" (சு) என்றதனுட்காண்க.

கண்ணுண்டுகாணக் கருத்துண்டுநோக்கக் கசிந்துருகப்
பண்ணுண்டுபாடச் செவியுண்டுகேட்கப் பல்பச்சிலையா
லெண்ணுண்டுசாத்த வெதிர்நிற்கவீச னிருக்கையிலே
மண்ணுண்டுபோகுதையோ கெடுவீரிந்த மானிடமே.

(பொ-ரை.) (கெடுவீரே! கோயிலுக்கெழுந்தருளியிருக்கும் சிவலிங்கப்பெருமானை) தரிசனஞ்செய்திடக் கண்களுண்டு, தியானிக்கமனமுண்டு, (தேவார திருவாசகங்களை) மனமுருகிப்பாடப்பண்களுண்டு, அவற்றைக்கேட்கச் செவிகளுண்டு, அப்பெருமான் திருவடியிலருச்சிக்கப் பச்சிலைகளுமுண்டு, (இவ்வளவும் செய்யச்சந்தோஷித்தும்) பிரத்தியட்சமாகச் சிவபெருமானிருந்து கொண்டிருக்கையில் (இவற்றிலொரு காரியமும் செய்யாமல்) இந்தத்தேகம் (பழுத்து) மண்ணுக்குப்போகின்றதே ஐயோ! கெட்டுப் போவீர்கள்.

(கு-ரை.) மானிடப்பிறப்பு வாய்த்தார்க்கு இந்திரியங்களெல்லாம் சுவாதீனமாகவிருக்கவும், பூசைக்கு ஏற்ற சாதனங்கள் இலேசாகக் கிடைக்கத்தக்கனவாகவிருக்கவும் இவற்றைக்கொண்டு சிவபூசைசெய்யப் பிரத்தியட்சமாகப்பெருமானைத் தரிசியாது வீணாக மடித்து போகின்றார்களென்பார் 'மண்ணுண்டு போகுதையோ' என்றனர். தேவாரம் "புண்ணியஞ்செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு அண்ணலா ரதுகண்டருள் செய்யாநிற்கும் எண்ணிலிபாவிகளெம்மிறையீசனை நண்ணறியாது நழுவுகின்றாரே" என்றதுங்காண்க.)

சொல்லினுஞ்சொல்லின் முடிவினும்வேதச் சுருதியினு
மல்லினுமாசற்ற வாகாயந்தன்னினு மாய்ந்துவிட்டோ
ரில்லினுமன்ப ரிடத்தினுமீச னிருக்குமிடங்
கல்லினுஞ்செம்பினுமோ விருப்பானெங்கள் கண்ணுதலே.

(பொ—ரை.) எம்முடைய நிடிலநேத்திர தாரியாகிய சிவபெருமான் சிலையினும், விக்கிரகத்திலுமாத்திரத்தானே எழுந்தருளியிருப்பான் (அங்ஙனமன்று அவற்றில் மாத்திரமேயல்லாமல்) மந்திரமொழியினும், அம்மந்திரமொழியின் சித்தியிலும், வேதங்களிலும், (ஆணவமலத்தினைக் காரியப்படுத்தலின்) அவ்வாணவமாகிய இருளிலேயும், (சுத்தமாயையினைக் காரியப்படுத்தலின்) மாயாகாரியமாகிய வாகாயவெளியிலும், (மெய்கண்டசாத்திரங்களை) ஆராய்ந்து (பிரபஞ்சப்பற்றினை) நீங்கினோர் வீட்டிலும், அடியாரிருதயத்திலும் சிவபெருமானிருக்கும் இடங்களாகும்.

(கு—ரை.) ஓகாரஇடைச்சொற்குரிய எட்டுவகைப்பொருள்களில் ஈண்டு விழைவுப்பொருளைத் தந்தது. முதல்வர் உருவமேயெனச்சாதிப்பாரையும் அருவமேயெனச் சாதிப்பாரையும் மறுத்து அருவமாயும் உருவமாயுமிருப்பனென்னும் உண்மையினை இத்திருச்செய்யுள் விளக்கியது. சிலர் இத்திருச்செய்யுளைக்கொண்டு விக்கிரகவாராதனையை மறுக்குமருவர் அந்தோ! அவர்கள் செந்நிறமேனிவெண்ணீறுடைய திருவுருவத்தினைத்தெரிவிக்கும் கண்ணுதல் என்னும் திரிபெரிய பிரயோகத்தினை யறியாததோயாளர். இத்தகையர் பொருட்டேயன்றே ஆசிரியர் அத்தகைப் பிரயோகம் செய்தனைத்தனர். அன்றியும், அவர்கள்முன்னுள்ளனவும் பின்னுள்ளனவுமாகிய செய்யுள் சம்பந்தங்களை யாராயாது விட்டுவிட நியாயமாகப் பேசிச்சிறுவ வியாபகலட்சணந் தேராதவராவர். (௯)

வினைப்போகமேயொரு தேகங்கண்டாய்வினை தானொழிந்தா
றினைப்போதளவுநில் லாதுகண்டாய்சிவன் பாதநினை ௰
நினைப்போரைமேவு நினையாரைநீங்கி நெறியினின்றா
லுனைப்போலொருவருண்டோ மனமேயெனக்குற்றவரே.

(பொ—ரை.) மனமே! இத்தேகமானது (கன்ம) வினையின் காரியத்தாலாகியது அக்கன்மத்தினையநுபவித்து ஒழிந்தால் பின்னர் அத்தேகம் ஒருசிறிது நேரமுமிராது (இங்ஙனமானதால்) சிவபெருமானினுடைய திருவடியினைத் தியானஞ்செய், அன்னதானஞ்செய்வாருடன் கூடியிரு, அங்ஙனஞ்செய்யாரை விட்டு விலகு, (இச்சன்மார்க்க) வழியில் நடப்பையேல் எனக்குரியத்துணையாவாய் உன்னைப்போலொருவரெனக்குக் கிடைப்பரோ? (கிடையார்.)

(கு—ரை.) பிராரத்துவவினையினை யநுபவிப்பதற்கே இத்தேகமொருருவாகி வந்திருக்கின்றது அவ்வினை யநுபவித்து முடியின் தேகம் நழுவிவிடும் அங்ஙனநழுவுதற்கு முந்தியே அடுத்தசெனனத்திற்குப் பிராரத்துவமாகவரும் ஆகாமியமேறாதபடி சிவத்தியானமும் சிவனடியார் கூட்டுறவுங் கிடைக்கப் பெறின் மறுசெனனமுண்டாகாதென்பதாம். (எ)

பட்டைக்கிழித்துப் பருவூசிதன்னைப் பரிந்தெடுத்து
முட்டச்சுருட்டியென் மொய்குழலாள் கையில்முன்கொடுத்து
கட்டியிருந்த கனமாயக்காரிதன் காமமெல்லாம்
விட்டுப்பிரியவென்றோ விங்ஙனேசிவன் மீண்டதுவே.

(பொ—ரை.) பட்டுவஸ்திரத்தினைக் கிழித்து (அதிலொருதுண்டெடுத்துக்கொண்டு) ஒருபெரிய ஊசியினையாவலுடனெடுத்து (அத்துண்டினில்) பொருத்தச்சுருட்டி என்னுடைய பொருந்திய கூந்தலினையுடைய (மனைவியின்) கரத்திலேதந்து, சம்பந்தித்திருந்த பெருமாயாசத்தியின் இச்சையனைத்தும் என்னைவிட்டு நீங்கவேண்டுமென்றோ இப்பிரகாரம் சிவபெருமான் எழுந்தருளியது.

(கு—ரை.) மருதவாணர் திருவெண்காட்டடிகட்குப் புத்திரராகவிருந்து வளர்ந்துவருகையில் அவருடைய பரிபக்குவம் கண்டு

அவர் துறவடையும்படிக் குறிப்பாகத்தெரிவிக்கும் பொருட்டுக் காத
த்றவூசியினைப்பட்டிற் கருட்டிக்கொடுத்து மறைந்தபோது திருவா
ய்மலர்ந்தருளிய திருச்செய்யுளிது. (அ)

குறைற்றகொள்கையு மாதர்கலைபுங் குழ்பொருளும்
போதற்றநிசலுக் கெல்செபலாருஞ்செய்த புண்ணியத்தாற்
தீதற்றமன்னவர் சிந்தையினின்று தெளிவதற்கோ
காதற்றவூசியுந் தந்துவிட்டானென்றன் கைதனிலே.

(பெ—ரை.) சொக்கட்டேரின் காமைமயிலைபொத்த தனனுக்கு, பெண்களுடைய ஆலிங்கனமும், குழந்தைகள் (பிரபஞ்ச) பதார்த்தங்களும் எப்போதும் செய்துகொண்டிருக்கிற துன்பத்திற்கு என்ன செய்வது? (பூர்வஜென்மத்தில்செய்த புண்ணியவசத்தினால் மாசற்ற மருதவாணன் (எனது) மனதினின்றும் (உண்மை) தெரிந்துகொள்ளும் பொருட்டே காதொடிந்த ஊசியினையெனது கரத்தினில் கொடுத்து விட்டனன்.

(கு—ரை.) சொல்செட்டான் என்னும் பதங்கள் கொச்சட்டானெனத்திரிந்து வழங்குகிறது. காதற்றவூசியானது நூலினைக்கொண்டு ஆடையைத் தைப்பதற்கு உபயோகப்படாததுபோல மாயாகாரியமாகிய பிரபஞ்சப்பொருளும் அப்பொருளாலாகும் போகமும் ஒருநன்மையினையு மடையப்பிரயோசனப் படாதென்பதாயிற்று. ()

வாதுற்ற திண்புய ரண்ணுமலைவர் மலர்ப்பதத்தைப்
போதற்றெப்போதும் புகழுமின்றுஞ்சேர்த்துப் பூதலத்திற்
தீதற்றசெல்வமென் றேடிப்புதைத்த திரவியமென்
காதற்றவூசியும் வாராதுகாணுங் கடைவழிக்கே.

(பொ—ரை.) புத்தம்செம்பொற்குடத்தைக் கிண்ணத்தைப்போலும் பயத்தினைவாய்ந்த திருக்கண்ணாடியைக் கடைக்கண் தாமரைப்போன்ற திருவடியினைப் புட்பங்களைக் கொண்டு அருச்சித்து எக்காலமும் தோத்திரிக்கும் மனமே! இவ்வுலகினில் சுற்றமுதாகத்தேதுவாகிய செல்வத்தினாலென்ன பிரயோசனம்? அச்செல்வத்தினைச் சம்பாதித்துப் புதைத்துவைத்தும் பிரயோசனமென்னை? காதிறந்தவூசியிலே காதுடைந்த ஒருவூசியும் உடன்வாராது.

(கு—ரை.) தனக்கென எவ்வளவோ கட்டப்பட்டுத் தேடும் திரவியமும் அப்படித் தேடிய திரவியத்தைப் பத்திரப்படுத்துவென்றெ மெனும் பாதுகாப்பும் ஆகியமுயற்சியெல்லாந் தாம் அப்பிரயோசனமாகி இறந்துபோகும் காலத்தில் ஒருசிறிதுங் கொண்டுபோவதற்கு அச்செல்வத்தின் துப்பயோகப்படா தென்பதாம். (௫௰)

சிவதத்திரட்டொருவன் மண்ணுரையங்கையை விட்டுவிடப்
போதித்தவன்மொழி கேட்டிலையோசெய்த புண்ணியத்தா
லாதித்தன்சந்திரன் போலேவெளிச்சம தாம்பொழுது
காதற்றவூசியும் வாராதுகாணுங் கடைவழிக்கே.

(பொ—ரை.) பூமியின்மைத்த விருப்பமும், பெண்களின்மீது வைத்தவிருப்பமும் ஒழித்துவிடென வேதத்தினுட்கருத்தென்ன உபதேசஞ்செய்த ஆச்சாரியமூர்த்தியின் வார்த்தையினைக் கேட்டிலலையோ? பூர்வத்திற்செய்த புண்ணியவிசேடத்தால் சூரியப்பிரகாசத்தினையும் ஒத்து உயிர்விடுகிற மரணகாலத்தில் காதறுந்த ஊசியும் உடன்வாராது.

(கு—ரை.) பூமிபெண்ணாகிய பற்றினுள்ள மோகத்தினையொழித்தால் புண்ணியப்பேற்றினை யொப்புகொள்ளே உபதேசித்த ஆசாரியமூ

ச்சிதியின் வாழ்க்கையிரீச்சப்படுமென் தேகம்நீக்கியகாலத்தில் ஆத்மா வீரகவிருப்பது அருமையோயாற் றிம் பிரபஞ்சபந்தார்த்தத்திலேனுஞ்சிறிது மிலயையெனப்படும். இருளினும் ஒளியினும் கட்டுப்பட்டுக்கிடக்க ஆன்மாத்தேசந்தனிலிருந்து நீங்குமிடத்தில் மாறுதலில்லாமல் பிரகாச வெளிச்சமாகத் தோன்றுவது சுபாவசித்தமாகலின் ஆதித்தன் சந்நிதிபோலே வெளிக்கும் என்றனர். புண்ணியத்தாலென்றதனால் இத்தகையவெளிச்சம் புண்ணியஞ்செய்து வாழ்ந்திருந்தோர்க்கேயல்லது பாவம்புரிந்து வாழ்ந்தோர்க்குந் தோன்றாதென்பதுமாம். (௬௧)

மனைவியாரும்மக்களும் வாழ்வுந்தனமுந்தன் வாசலுமட்டே
வினையாளர்சுற்றம் மயானமட்டே வழிக்கே துணை
தினையாமளவேனும் எள்ளளவாகிலுமுன்பு செய்ததவந்
தனைவாளவென்றும் பரலோகஞ்சேர்த்திக்குஞ் சத்தியமே.

(பொ—ரை.) (இறந்தபின் தேகத்தையும் பிறர் தாங்கிச் செல்லுங் காலத்தில்) மனைவியும், புத்திரர்களும், போகமும், செல்வமும் தன்னுடைய வீட்டிலேயேயிருந்துவிடும், இனமாகிய சுற்றத்தினர்கள் மயானம் வரையில் வருவர், உயிர்போம் வழிக்கு என்னதுணையுண்டு (ஒன்றுமில்லை) தினையளவாகிலும் ஒரு எள்ளளவாகிலும் பூர்வஞ்செய்த தவத்தினையனுபவிக்க அது சிவலோகத்தினை யடையக் கைவல்லியமாம் இது சாதனமாம்.

(கு—ரை.) மனைவியும், புத்திரரும், போகமும், செல்வமும் உடலுக்கு ஆனந்தத்தினை விளைவிப்பதுவென்று அதற்குபகாரமாக இருந்தனவேயன்றி ஆன்மாவிற்கல்ல ஆன்மாவினுக்கு உற்றதுணையாகவிருந்து புண்ணியத்தினை கூட்டுவித்துப் பெருக்கிப் பிரயோசனத்தை விளைவிப்பது தவமொன்றேயாகும். (௬௨)

அத்தமும்வாழ்வு மகத்துமட்டேவிழி யம்பொழுக
மெத்தியமாதரும் வீதிமட்டேவிம்மி விம்மியிரு
கைத்தலைமேல்வைத் தழுமைந்தருஞ்சுடு காடுமட்டே
பற்றித்தொடரு மிருவினைப்புண்ணிய பாவமுமே.

(பொ—ரை.) திரவியமும், போகமும் வீட்டளவிலேயே; கண்களினின்றும் நீர்சிந்த புலம்பும் மெல்லியமாதர் தெருவாயிற்படிவரையிலேயே, தேம்பித்தேம்பி இரண்டு கரங்களையும் தலைமேல் வைத்துக் கொண்டு ஏக்கிக்கும் புத்திரர்கள் சுடுகாட்டு வரையிலேயே (நின்றுவிடுவர்) துணையாகவருவது இரண்டு வினைகளாகிய புண்ணியமும் பாவமுமாம்.

(கு—ரை.) ஒருவன் இவ்வுலகில் புண்ணியஞ்செய்து கொண்டிருப்பானாயின் அவனிறந்தபின் அப்புண்ணியம் அவனுயிருடன் சென்று தெய்வலோகத்தில் சேர்க்கும், பாவஞ்செய்து கொண்டிருப்பானாயின் அப்பாவம் அவனுயிருடன்சென்று நரகலோகத்தில் சேர்க்கும் இவ்விரண்டிற்கு அந்நியமாக விசாரித்திருத்தலாவும் வீட்டளவு சிலவும், வீதியளவு சிலவும், சுடுகாட்டளவு சிலவும் தங்கிவிடும்.
(௧௧)

சீயுங்குருதிச்செழுநீர்வழும்புஞ் செறிந்தெழுந்து
பாயும்புடைவையொன் றில்லாதபோது பகலிரவா
நீயுமெறும்பும் புகுகின்றயோனிக் கிரவுபகல்
மாயுமனிதரை மாயாமல்வைக்க மருந்தில்லையே.

(பொ—ரை.) (மாதர்க்குப் புடவை மாத்திரமில்லாதிருக்கி ற சீயும், இரத்தமும், நிறைந்த மூத்திரத்துடன், அழுக்கும் தங்கி வழிந்து ஓடவும், எப்போதும் அசுத்தி ர நாற்றத்தோடு கூடின்

நீயும் எழும்பும் நவைமுகின்ற சீதம்பத்திற்குச் சதாகாலமும், (மோகம் வைத்து) மாளும் மனிதர்களே (அங்ஙனம்) மாயாமல்வைக்க மருந் தொன்றில்லையே.

(கு—ரை) சிவபெருமான் திருவருளாகிய அமிழ்தம் கிடைத் தாலன்றி மரணமயக்கம் நீங்காதென்பதாம். பாதனை ஆசிரியர் இங்ஙனம் விதித்துக் கூறியது என்னையோவெனின்? சாத்திர ஆராய்ச்சியில்லாத நிலமக்களின் இதுபோன்ற திருச்செய்யுள்களைப் படித்தபின்னராயினும் சிறிது ஆலோசித்து மாதர்களின் அங்கங்களில் வைத்திருக்கும் மயக்கத்தினின்று நீங்குவரென்னும் காருண்ணியத் தினாலேயாம். (௯௨)

நெருப்பனிக்குங் கொங்கைக்கும் நேரான தினம்பிறந்து
சீப்பக்கச்சோரு மலமோடு முனைநோக்கிப் பெருந்தால்
வீதிக்குக்கல் விலைமாதருண்டிருக்க மேதினியி
செவிக்குச்சேர்ந்தால் மனமேவெந்தும் புண்படுமே.

(பொ—ரை) நெஞ்சமே! அபிர்க்குபனிபோன்ற (நீசமிக்கொள்ளு வார்க்கு) கிடைக்கக் கண்ணையுண்டு, பிரதிதினமுமவித்துச் சாப்பிட சாதம் கிடைக்காதுண்டு, காமவிச்சை எழுந்தால் தெருவில் கல்லு பொதுமாதரிருக்க, (அங்ஙனம்) இவ்வுலகில் அதன்பொருட்டு மனம் புண்படும்படிச் சலிக்கின்றனை.

(கு—ரை) குளிருக்குக் கந்தையும், வயிற்றிற்குச் சோறும் காம விச்சைக்கு மாதரும் இலேசாகக்கிடைக்கக்கூடியவைகளாக விருக்கக் கவலைபெற்றது என்பதாம். தேகமுள்ள அளவும் அத்தேகத்தின் இச் சிரியங்கட்குச் சுபாவமாக அமைந்துள்ள அழுக்கினை நீக்கிக்கொள்ள வேண்டுவது தருமமாகவிருத்தலினும், கண்ணுளின்றும் பிறவினை

யும், காதினின்றும் குறும்பினையும், மூக்கினின்று சளியினையும், வாயினின்று எச்சிலையும், குறியினின்று நீரினையும், குதத்தினின்று மலத்தினையும் நீக்கிக்கொள்ளுதல்போல சுக்கிலத்தினையுமெடுத்துத் தள்ளவேண்டுமென்பார் விலைமாதருணர்வு என்றார். இம்மாதர்கள் ஒருவர் சுதந்திரத்தி லில்லாமல் யாவருக்கும் பொதுவாகவிருந்து விலைக்குத்தருதலாற் பிறர் சுக்கில உபத்திரவத்தை யொழிப்பவர்களாகலின் அம்மாதரைக் குறிப்பித்தார். கல்வியிலாதார் என்றது வேதங்களினின்றும் பிரிக்க. துறவிக்கு இங்ஙனஞ் சிறப்புண்டாதல் சுருமமோவெனின் இச்சையுடைமாதரைப் புணர்ந்து இன்பமனுபவிக்கவேண்டுமென்னும் வெறுத்துக்கொண்டன்று. தேகத்திலியத்தையந்த வண்டாற் செவ்வடையினை நிவிர்த்திக்கொண்டு தேகத்துடைக்குப் புயகம்வராதிருக்கவேண்டுமென்பதே. மாதரைக்கொண்டேயன்றி வேறுவகையாக நிவிர்த்திசெய்துகொள்ளக்கூடாதோ வெனின், பெரியோர் சுக்கிலம் அப்பிரயோசனமாகப்படாதென்பது தருமம். துறவிகட்கு இங்ஙனம் இச்சைநிகழ்தலில்லை. ஒருக்கால் தேகதருமார்த்தமாக நிகழின் இங்ஙனம் பரிகரித்துக்கொள்ளலா மென்பதாயிற்று.

(கூ)

ஆறுண்டுதோப்புண் டணிவீதியம்பலந் தானுமுண்டு
நீறுண்டுகந்தை நெடுங்கோவணமுண்டு நித்தநித்த
மாறுண்டுலவி புசிக்குமிடமுண்டு தோழமுமொன்று
சோறுண்டுதூக்கப்பின் சும்மாவிருக்கச் சுகமுமுண்டே.

(பொ—ரை.) பிரதிதினமும் விகாரங்கொண்டு சஞ்சரித்தமையக்குகின்ற மனமே! (குளிக்க) நதியுண்டு, (விடாய்தீர) தோப்புண்டு, (தங்கியிருக்க) அழகியதெருக்களில் பொதுவிடமுண்டு, (தரித்துக்கொள்ள) விபூதியுண்டு, (உடுக்க) நீண்டகந்தையாகிய கவுபீனமுமுண்டு,

(புசிக்க) விக்கின்தோறும் சோறுண்டு, இவ்வளவும் அநுபவித்த பின் ஞானமெய்யுற்றபின் சிந்தைகூடியிருக்கச் சுகமுமுண்டே.

(கு—ரை.) இன்றியமையாத வேண்டிய தேகசுகத்திற்குப் பல வற்றை வருந்தித்தேடாமல், இலேசாக யாவற்றையும் அநுபவிக்க லாமென்பதாயிற்று. யாவற்றையுமநுபவித்தபின்னர் முன்னைத்தனி யாகவிருந்து சிவபோகத்தையிலும் கூடிச்சுகமநுபவிக்கலாமென் பார் 'சும்மாவிருக்கச் சுகமுமுண்டே' என்றனர். சிவபோகசாரம், "அருளறிந்த தானு மறிவறிந்த யாக்கும் பொருளறிந்து தானடங்க லிப் போத—விருளகல, விக்கா திருந்து விசும்பாற் பொன்னுமெ, சும்மாவிருக்கச் சுகம்" என்றதனாற் காண்க. இத்திருச்செய்யுள் சிற் சுகமபவித்தியாகமுற்ற சந்நியாசியாயினும் திருநீற்றினை யிடப்ப டாதெனவும், ஞானிக்கு விபூதிவேண்டுவதில்லையென்றும் சொன்ன வர்தியனை மறுத்ததாகுமிற்று. (சக)

உடுக்கத் துகில்குளிர் காற்றுக்கும் வெயிற்கும் வருந்தினதாற்
றொடுக்கப் பழைய பொருவேட்டியுண்டு சகமுழுதும்
படுக்கப் புறத்திண்ணை பெருஞ்செகமுண்டு பசித்துவந்தாற்
கொடுக்கச் சிவனுண்டு நெஞ்சேநமக்குக் குறைவில்லையே.

(பொ—ரை.) உடையாய் தரித்துக்கொள்வதற்கும், போர்த்து கொள்வதற்கும், குளிர்ந்த காற்றினுக்கும் வெய்யிலினுக்கும் வரு ந்தி வந்தால் அவற்றை நீக்கிக்கொள்ள பழமையான ஒருவஸ்திரமுள து. படுத்துக்கொள்ளவேண்டுமானால் உலகமுழுவதும் வெளித்திண் ணைகள் எவ்வெவ்விடங்களிலுமுண்டு, பசியுடன்வந்திடில் சோறு கொடுப்பிக்கச் சிவபெருமானுண்டு, நமக்கு வேறுவிதமான குறை யொன்றுமில்லையே.

(கு—ரை.) உடலைக்காத்திடற்கு இன்றியமையாத ஒரு பழைய வஸ்திரமே போதுமென்பார் 'ஒருவேட்டியுண்டு' என்றனர். இப் புண்ணிய தேயங்களில் தாங்கள் தாங்கள் வீடுகட்டுங்காலத்திலேயே அநாதரவுடைய அன்னியர் படுக்கவே தெருத்திண்ணையமைப்பது சாம்பிரதாயமாகலின் அத்திண்ணையைக்குறித்தனர். இப்பெருந் தருமம் வடதேயத்திலில்லாமலே யிருப்பது பெருங்குறை. "பட்டினித் தாளரொருவருண்டாரே" என்ற தேவாரத்திருவாக்கினுக் கேற்பக் 'கொடுக்கச்சிவனுண்டு' என்றனர். (௧௭)

மாலென்கின் றாண்டு பக்கலுறன் றிடன்று மகிழ்வுடைத்தாய்
ஊனென்பொடும்படி கேட்டிக்கிட்டேபிரிக் கென்னையுமே
பொடுமொழுக்கைத்தறுகண் டுன்னோடொழுங்கைத்தந்து போதருவென்று
தொடுண்டகண்ட வாழ்பார்க்கருக்குத் தம்மையுழுமாணிடே.

(பொ—ரை.) மாடு கன்று இருக்கின்றன மக்களிருக்கின்றனர் என்கிற சந்தோஷிப்பெல்லாம் (ஒருகாலத்தில்) கேட்டிலைப்போடு மெனப் (பெரியோர்களால்) தெரிந்துகொண்டோம். (ஆகையால்) இனிச்செல்லவேண்டிய இடமே! கேட்பாயாக; (பிச்சையெடுக்க) திருவோடு (உடுத்துக்கொள்ள) கந்தையுமாகிய மனத்திலே தியானிக்கப் பஞ்சாட்சரமுளது. குண்டலமணிந்த செவியையுடைய அடியார்கள் சமயத்து உதவிசெய்யவுண்டு இவைகள் கேட்டின்மையுடையன.

(கு—ரை.) முன்குறித்தன இம்மையில் மேலாகின்றனவு மன்றி அவற்றால் மறுமைக்கு உதவிசெய்வனவுமன்று; பின்குறித்தன இம்மையில் மேலுற்றன இவற்றால் பதவிகளுக்குறுமென்பதாம். பற்றற்ற பரமசந்நியாசியாயினும் பஞ்சாட்சசெபம் விடப்படாதென்பதும் அச்செபம் மனதில் இரகசியமாக உபாம்சுசெபம் செய்யவேண்டுமென்பதும் இத்திருச்செய்யுள் விளக்கியது. விவரத்தினைப் பாராசர

த்திகத்தில் செலுத்தவேண்டாமென்றும் சொன்மயாதியவை யுறுத்தற்கறிக. (க0)

மாத்தானவத்தையு மாயாபுரியின் மயக்கத்தையு
நீத்தார்தமக்கொரு நிட்டையுண்டோ நித்த னன்புகொண்டு
வேர்த்தாற்குளித்துப் பசித்தாற்புசித்து விழிதுயின்று
பார்த்தாலுலகத் தவர்போலிருப்பர் பற்றற்றவரே.

(பொ—ரை.) பெரிய பிரபஞ்சத்தால் விளையும் அவத்தையினை யும், மாயையினால் காரியப்பட்ட உடலால் விளையும் அவத்தையையும் நீங்கினவர்கட்குச் சதாசெய்துகொண் டிருக்கவேண்டிய நிஷ்டை யொன்றுண்டோ? (வேண்டுவதில்லை) நித்தியனாகிய (சிவபெருமா னிடத்து) அன்புபூண்டு வியர்த்தபோது ஸ்நானஞ்செய்தும், பசியெ டுத்தபோது ஆகாரமுண்டும், நித்திரைவந்தபோது தூங்கியும் பார்க் கின்றவர்கட்கு உலகத்தினரைப்போலவே வாழ்ந்துவருவர் (பிரபஞ்ச) பற்றில்லாதவர்கள்.

(ஆ—ரை.) "நெக்கு நெக்குள் ளுருகி யுருகிநின்று மிருந்துங்கிட ந்தெழுந்து, நக்கு மழுதுந்தொழுதும் வாழ்த்தி நானாவிதத்தாற் கூத்துநவிற்றிச், செக்கர்போலுந் திருமேனித்திகழநோக்கிச் சிலிர் சிலிர்த்துப், புக்குநிற்பதென்று கொல்லோவென் பொல்லாமணி யைப் புணர்ந்தே." என்ற திருவாசகத்தின்படி 'உலகத்தவர்போ லிருப்பர் பற்றற்றவரே' என்றனர். (கக)

ஒன்றென் றிருதெய்வ முண்டென் றிருவுயர் செல்வமெல்லா
மன்றென் றிருபசித் தோர்முகம்பார்நல் லறமுநட்பு
நன்றென் றிருநடு நீங்காமலே நமக்கிட்டபடி
யென்றென் றிருமனமே யுனக்கே யுபதேசமிதே.

"(பொ—ரை.) மனமே! தெய்வமானது ஒன்றெனவேயெண்ணியிரு, அத்தெய்வம் எக்காலமுமுண்டெனவேயெண்ணியிரு, மிகுந்த செல்வமனைத்தும் நிலையற்றதென வெண்ணியிரு, பசித்துவந்தவர் முகத்தைப்பார்த்து (அன்னமிடு) நல்லதருமமும், சினேகமும் நன்மையெனவெண்ணியிரு, நடுவுநிலைமையினின்றும் நீங்காமல் நமக்குப் (பூர்வசென்மத்தில்) விதித்தபடிக் (கிடைக்கு) மென்றிரு, இதுவேயுனக்கு உபதேசமாகும்.

(கு—ரை.) திருவாசகம் "தெய்வமென்பதோர் சித்தமுண்டாகி" என்றபடி தெய்வமென்பதுண்டு எனக்கொள்வது நல்லவமாகலின் 'தெய்வமுண்டென்றிரு' எனவும், அங்ஙனங் கொள்ளினும் இரண்டுமூன்று தெய்வங்களைக்கொள்ளாது, "ஏகோருத்ரோநத்விதீயா" என்ற அதர்வசிகோபநிடதத்தின்படி ஒரேதெய்வமெனக்கொள்வது அதிகத்துல்லபமாகலின், 'ஒன்றென்றிரு' எனவும், "வாழ்வாவது மாயமிது மண்ணாவது திண்ணம்" மென்றபடி, "உயர்செல்வமெல்லா மன்றென்றிரு" எனவும், "ஐயமிட்டுண்" என்றபடி, 'பசித்தோர்முகம்பார்' எனவும், "அறஞ்செயவிரும்பு" "பெரியாரைத் துணைக்கொள்" என்றபடி, 'நல்லறமுநட்பு நன்றென்றிரு' எனவும், "நாஞ்சொல்லேல்" என்றபடி, 'நடுநீங்காமலே' எனவும், சென்மாந்தரவினையை யனுபவிக்கவேண்டுவது கட்டாயமாகலின் 'நமக்கிட்டபடியென்றென்றிரு' எனவும் கூறிப்போந்தனர். (உ.1)

நாட்டமென்றேயிரு சற்குருபாதத்தை நம்பு பொம்ம
லாட்டமென்றேயிரு பொல்லாவுடலை யடர்ந்தசந்தைக்
கூட்டமென்றேயிரு சுற்றத்தைவாழ்வைக் குடங்கவிழ்நீ
ரோட்டமென்றேயிரு நெஞ்சேயுனக் குபதேசமிதே.

(பொ—ரை.) மனமே! சற்குருவின்றிருவருளையடைவதற் கிலை யென்றிரு, உபயோகமற்றதேகத்தை வீணாகம்புகின்ற பொய்மையைக் கடந்தென்றிரு, சற்சுத்தினரா னெருங்கிய சந்தைக்காலத்தில் மாத்திரம்கூடிப் பிரிந்துபோய்விடும் கூட்டமெனவிரு, (பிரபஞ்ச வாழ்வினை சேர்ப்பாண்டம் கவிழ்தலால் ஆகின்ற கீரோட்டமெனவிரு இதுவே யுனக்குபதேசமாகும்.

(கு—ரை.) உபதேசகாண்டம். "மக்களொ சிறியைப்பேதை மக விணை மருக்குருமுற்ற, வொக்கவேசொக்கி போமார்துறகதிகோர்சுலா ரை, மிக்குநிரைசர்தாழ்வார் மெய்சிறு பறவைகண்டக்கேதர், சுத்த மெய்த்தழளை சுண்டையொண்டு விண்டியலாதென்றே." என்றதற் கேற்ப, உடல், சுற்றம், வாழ்வுமாகும் நிலையல்லனவென்றார். திருமந் திரம். "குருவே சிவமெனக்கூறினர்நந்தி, குருவே சிவமென்பது குறி த்தோரார், குருவே சிவனுமாய்க் கோனுமாய்நிற்கும், குருவே யுரை யுணர்வற்றதோர்கோவே." என்றதனால், 'நாட்டமென்றேயிரு சற் குருபாதத்தை' என்றனர். (௨௯)

என்செயலாவ தியாதொன்றுமில்லை யினித்தெய்வமே
யுன்செயலேயென் றுணரப்பெற்றேனித் தூனெடுத்த
பின்செய்ததீவினை யாதொன்றுமில்லைப் பிறப்பதற்கு
முன்செய்ததீவினையோ விங்ஙனேவந்து மூண்டதுவே.

(பொ—ரை.) (இவ்வுலகில்) சதந்தரமாக என்செயலினாலே யா சியம் விளைவது யாதொன்றுமில்லை, இனிமேல் கடவுளே! (எல்லாவினை யும்) தேவரீர்செயலினாலேயே என்றுதெரிந்துகொண்டேன், இத் தச்சேகம் எடுத்தபிறபாடு (இவ்வுலகில் யான்) செய்த பொல்லா வினையாதொன்றுமில்லை (தேவரீரையறிந்தவன்) பிறப்ப

சற்குருமுன் (பூர்வஜென்மத்தினில்) செய்துகொண்ட பாவகர்மமேது (என்னைக்கழுவிலேற்றும்படி) இந்தப்பிரகாரம் விளைந்துவிட்டது.

(கு—ரை.) பத்திரகிரியாரசனின் மந்திரிமேல்வியபடி வெண்காடரைக் காவலாளர்கள் கழுவேற்ற அக்கழுமரத்தினைச் சபித்தபோது திருவாய்மலர்ந்தருளிய திருச்செய்யுளிது. ஆன்மாபரதந்திரனும் பரமான்மா சுதந்திரனுமாகலான் தன்செயலொன்றிலெல்லாம் அவன்செயலென்றனர். "அவன்செயலலாலேயாதும் வருமெனத்தேறேனும்" என்றனர் தாயுமானவரும். (௨௨)

திருவேடமாகித் தெருவிற்பயின்றெனைத் தேடிவந்து
பரிவாகப்பிச்சை பகருமென்றேனைப் பதம்பணிந்தேன்
கருவாருமேதக் கடற்கரைமேலக் கருதுமென்னை
புருவாக்கிக் கொள்ளவல்லோ விக்ஙனேவென்றுற்றதுவே.

(பொ—ரை.) சிவவேடங்கொண்டு வீதியிதனில் அடியேனை விசாரித்துவந்து ஆசையாகப் பிச்சைகேட்ட வொருவனது திருவடி யினைப்பணிந்தேன். பிறப்பென்னும் துன்பசமுத்திரத்தில் விழவெ ண்ணியிருக்கு அடியேனை அடிமையாக்கிக்கொள்ளவன்றோ சிவபெருமான் (அங்ஙனம்) வந்ததுவே.

(கு—ரை.) தன்னைப்பிறவிக்கடலினின்று மெடுத்து ஆட்கொள்ளும்பொருட்டே சிவனடியார்வேடங்கொண்டு வந்து தன்பாலிரந்தனனென்பார் 'இவ்வினை யெனுற்றதுவே' என்றனர். (௨௩)

விட்டேனுலகம் விரும்பேனிருவினை வீணருடன்
கிட்டேனவருரை கேட்டுமிரேன்மெய் கெடாதநிலை

கெட்டேன்சகத்தைக மற்றுவிட்டேன்றெல்லோரான் மறைத்து
வெட்டேனெனுமப்பா மென்னிடத்தேவந்தெய்தியதே.

(பொ—ரை.) உலகப்பற்றினை நீங்கினன், கல்வி நிலை யினையும் விரும்பேன், (சொரூபமல்லாத) வீண்வார்த்தைகளைப் பேசுவாரோடு சேருகின்றேன், அவர்வார்த்தைகளைச் செவியிற்கேட்டுத் தரியேன், தேசமறியாத சித்தியினையடைந்தேன், இன்பதுன்பங்களை யொழித்தேன், பழமையாகிய நான்கு வேதங்கட்கும் எட்டாதவில்லையென்று சொல்லும்படியான சிவம் என்னிடத்தடைந்தது.

(கு—ரை.) மலத்தடிப்பால் மறைத்திருந்த சிவம் என்னிடத்துவெளிப்பட்டமாத்திரத்துப் பிரபஞ்சமூலமாகவறியவேண்டிய யாதி யவிருத்தமானத்தினும் இனி மனமசெல்லுதலில்லையாம். (௧௪)

அட்டாங்கயோகமு மாதாரமாறு மவத்தைகளைந்தும்
விட்டேறிப்போன வெளிதனிலேவியப்பொன்றுகண்டேன்
வட்டாகிச்செம்மதிப் பாலூறலுண்டு மகிழ்ந்திருக்க
வெட்டாதபேரின்பமென்னைவிழுங்கி யிருக்கின்றதே.

(பொ—ரை.) எட்டுவித அங்கயோகங்களையும், ஆறுவகையான ஆதாரங்களையும், ஐந்துவிதமான அவத்தைகளையும் கழித்துக் கடந்து மேலேசென்ற திருவருள் வியாபகத்திலே ஒருபொருளினைத் தரிசித்தேன், (அவ்விடத்தில்) நிறைமதியாகிய செவ்விய சந்திரனிடத்துண்டாகும் அமிர்தமுண்டு களித்திருக்க (ஒருவரும்) எட்டுதற்கரிய சிவானந்தவின்பமென்றதனை யுட்கொண்டிருக்கின்றது.

(கு—ரை.) யோகம் எட்டாவன:— இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி. ஆதா

தம் ஆறுவன.— மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாக தம், விசுத்தி, ஆக்ஞை. அவத்தை ஐந்தாவன.—சாக்கிரம், சொப்ப னம், சுழுத்தி, துரியம், துரியாதீதம். இவற்றைக்கடந்தோர் திருவ ருண்மயமாகச் சிவராஜயோக நிட்டையிலிருந்துகொண்டு ஞானா மிர்தமுண்டிருப்பரென்பதாம். (உ௯)

எரியெனக்கென்னும் புழுவோவெனக்கென்னு மிந்தமண்ணுஞ்
சரியெனக்கென்னும் பருந்தோவெனக்கென்னுந் தான்புசிக்க
நரியெனக்கென்னும் புன்னாயெனக்கென்னுமிந் நாறுடலைப்
பிரியமுடன்வளர்த்தே னிதனாலென்ன பேறெனக்கே.

(பொ—ரை.) (உயிரினின்று நீங்கியவுடனே) நாற்றத்திற்கேது வாயுள்ள இச்சரீரத்தினை நெருப்புத்தொனக்குரித்தென்னும், புழுக்களுண் டாயினவெனக்கு, மண்ணினாலியும், பருந்துகொத்தும், நரிபின்னும், அற்பநாய்கடிக்கும் (இவையனைத்தும் அவைதனைப் பாகம்பாட்டும் இத்த கையதனை) அன்புடன்காத்தவர்க்கே இதனால் கைகூடிய இலா பமென்னையோ? (ஒன்றுமில்லை.)

(கு—ரை.) திருமந்திரம். "உடலார் குழியி னுயிரார் குழிவர் இடம் பதிஞானம்சேர்ந்துபட்டா," என்றபடி ஆன்மா ஞானமடைதற்குத் தேகமுமொருசாதனமாகவிருக்க இங்ஙனம் இழித்துச்சொற்றதெ ன்னையோவெனின்? தேகமெடுத்ததினால் அடையவேண்டிய இலா பத்தினையடையாதவர் உடலினைக்குறித்துக் கூறியபடியேயாம். அங் ஙனமாயின் தன்னைப்போற்றிக்கூறியதென்னையெனின்? இது சிவ ஞானிகள் வழக்கு. (௩௰)

அன்னைநன்வீதியாகிருப்பாரு மணிபடையோர்
தன்னைநாமவென்பதாமன்றோவது கண்ணுமில்லார்

ஆங்கொனர்ப் பசிக்கு மடைப்பள்ளியாக வமைத்தமெல்லா
மெய்ஞ்ஞானவிசால மலைமேயழித்தனை மென்னெஞ்சமே.

(பொ—ரை.) பொருந்திய (உடலாகிய) இவ்வூரில் ஆன்மாவாகி
ய அரசன் (இருதயத்தினை) அரசிருக்கையாகப் பெற்று (மூலாதார
முதல் ஆஞ்ஞையளவாயில் நிலைவும்) வீதியாகக்கொண்ட முப்பத்தாறு
தத்துவங்களும் ஏவற்படைகளாக விருக்கக்கொண்டது, (அன்றியும்
ஆன்மாவினுக்குப்) பசியுண்டானகாலத்து அதைநிவர்த்திக்கத்தகு
ந்த சமையல்வீடு. இச்சுகத்தைநோக்கி அளவற்றகாலம் வீணே கழி
த்தனன் அவற்றையெல்லாம் திரும்பவும் நினைத்துப்பார்க்க வருமை
யாகும்.

(கு—ரை.) ஆன்மானுபவித்தற் கேதுவாயுள்ள சாதகங்களைப்பெ
ற்ற தேகமென்னும் பட்டணத்திலேயே பழுத்திருக்கிறதன்றி ஆன்மானுப
வத்திற் கனியமாக வேறோரிடத்தில் இலேசமும் பெற்றே
னில்லை யென்பார் 'மெய்ஞ்ஞானவிசாலமமே விடுத்தனை' என்றனர்.

என்பெற்ற தாயரு மென்னைப் பிணமென் றிகழ்ந்துவிட்டார்
பொன்பெற்ற மாதரும் போவென்று சொல்லிப் புலம்பிவிட்டார்
கொன்பெற்ற மைந்தரும் பின்வலம் வந்து குடமுடைத்தா
ருன்பற்றொழியவொருபற்று மில்லை யுடையவனே.

(பொ—ரை.) என்னை (மகவாகப்) பெற்றெடுத்த தாய்மா
ரும் என்னை (யாதொருபயோசனத்திற்கும் வாராத) சவமென நீக்கி
விட்டனர். (இதனோடும்) திரவியம் (என்று) அநுபவித்துவந்த பெ
ண்டிரும் விலகிப்போவெனக் கூறியழுதுவிட்டார். வலிமையுடைய
புத்திரர்களும் பின்புறத்தினின்று நீர்க்குடமுடைத்துவிட்டனர். இனி

மேல் தேவரீரிடத்துவைத்த அன்பேயன்றி வேறுபதார்த்தங்களின் அன்புகிடையாது என்னையுடைமையாக வுடையவனே.

(கு—ரை.) எதோவொருகாரணம்பற்றி என்பால் அதிகவிசுவா சம்வைத்தவரெவரும் அக்காரணத்திற் கேதுவன்பால் விசுவாசம் சென்று முற்றும்வெறுத்துவிட்டனர். தேவரீரைமறந்து அவர்பால் வைத்திருந்த பற்றுனைது இப்போது கெடுவிடவே மேலைவந்தடைக் தேன் ஆட்கொள்வாயாகவென்பார், 'உன்பற்றொழிய வொருபற்று மில்லை' என்றனர். தாயர், மாதர், மைந்தரெனப் பன்மையிற் கூறியவை யின் முன்சென்மங்களிடைத்தவற்றை விளக்கிநின்றன. (உஅ)

கறையற்றபல்லுங் கசித்துணியாடையுங் கள்ளமின்றிப்
பொறையுற்றநெஞ்சும் பொல்லாதவூணும் புறத்திண்ணையுந்
தரையிற்கிடப்பு மிரந்துண்ணுமோடுஞ் சகமதிற்
குறைவற்றசெல்வமென்றே கோலமாமறை கூப்பிடுமே.

(பொ—ரை.) (தாம்பூலமதசித்தவால் விளையும்) கறையில்லாத பல்லும், அழுக்குத்துணியும், பொறுமைவாய்ந்த மனதும், சுவையில் லாத உணவும், வெளித்தெருத்திண்ணையும், பூமியின்மீது படுக்கை யும், யாசித்து உண்ணுதற்கேற்ற மண்ணோடும் (இவையனைத்தும்) உலகப்பிரசித்தமாக ஒருசிறுகுறைவுமில்லாத செல்வமென்றே அழ கியவேதங்கள் முறையிடுகின்றன.

(கு—ரை.) முற்றுந்துறந்த பெரியோர்கள் தாங்கள் இன்றியமை யாது அநுபவிக்கவேண்டியவை இலேசாகக் கிடைத்தற்குரிய பதார் த்தங்களாகவேயிருக்கவேண்டுமென்றும் பிரயாசைப்பட்டுச் சேகரித் தற்குரியவைகளாக விருக்கப்படாதெனவும் அவையே சிறந்தவையெ னவும் கூறுவார் 'குறைவற்றசெல்வமென்றே' என்றனர். (உக)

எட்டுத்திசையும் பதினாறு கோணமு மெங்குமொன்றாய்
முட்டித்ததும்பி முளைத்தெழுஞ்சோதியை மூடரெல்லாங்
கட்டிச்சுருட்டித்தங் கக்கத்திலேவைப்பர் கருத்திலேவையார்
பட்டப்பகலை யிரவென்று கூறிடும் பாதகரே.

(பொ—ரை.) எட்டுத் திக்குகளிலும், பதினாறு கோணங்களிலும் எவ்விடத்தும் ஒரேதன்மையாய்த் ததும்பி மேலெழுந்து அரும்பெழுஞ் சோதியினை, அறிவீனராகிய மூடர்கள் (அப்பெருமானைப் பற்றிச் சொல்லும் நூல்களை) கயிற்றாற் கட்டிச் சுருட்டித் தங்கள் கக்கத்தில் வைப்பரேயல்லாமல் மனத்தில் வைத்துக்கொள்ளார்கள் அந்த வகையர் பட்டப்பகலை இரவென்று சாதிக்கும் பாவிகளேயாவார்கள்.

(கு—ரை.) எக்காலமும் சாத்திரங்களைப் படித்து அவற்றைக் கையிலேந்தித் திரிகின்ற மூடர்கள் திரிகிறார்களன்றி அச்சாத்திரங்களில் சொல்லப்படுகின்ற சர்வவியாபகமாயுள்ள தன்மையினைத் தெரிந்து மனத்துட்கொள்ளாது அப்பெருமான் ஏகதேசியெனவே சாதிப்பர் என்பதாம். (௯௦)

வாய்நாறு மூழுதல் மயிர்ச்சிக்குநாறிடு மையிட்டகண்
பீளைநாறுமங்கம் பிணவெடிநாறும் பெருங்குழியாய்
சீநாறும்யோனி பழுதுபடும்நிதம் சேதனைத்தி
பாய்நாறுமங்கையர்க்கோ விங்ஙனே மனத்தைப் பற்றியதே.

(பொ—ரை.) வாயில் (பற்கறை) நாற்றமெடுக்கும், சிக்குண்ட மயிரினில் (அழுக்கு) நாற்றமெடுக்கும், மையிட்டிய கண்களில் (பீளை) நாற்றமெடுக்கும், தேகத்தில் பிணநாற்றமெடுக்கும், பெரிய பள்ளமாகிய அல்குலில் சீநாற்றமெடுக்கும், குறியில் வெள்ளைநாற்

நமைக்கும், அன்றியும் அதில் கிரானியும் நெருப்போடு காந்தி நமைக்கும் இத்தகைய அங்கங்களையுடைய மாதர்களிடத்திலேயோ 'அடியேன்' மனமானது இச்சைகொண்டது.

(கு—ரை.) புருடர்கள் பகிர்முக நோக்கமுடையார். முமுட்சுக்கள் அகமுகநோக்குடையார் ஆதலின் மாதர்கள்மேல்கொண்ட அலங்காரத்தால் மயங்கி அவர்பாலாசையுற்று வேறுசிந்தையின்றி மயங்கிக்கிடக்கின்றனர் புருடர்கள். அகமுகவிசாரணையில் நிலைத்தால் மயங்காது அவ்வுடற்றினைக்கொண்டிருக்கிற தேகத்தின் துர்க்கந்தங்களையும் விசாரித்து அவற்றிலுள்ள குற்றங்களைநாடி வெறுப்பார்கள் முமுட்சுக்கள். ஆகவே 'மங்கையர்க்கோ விழைந்தேன் மனம் பதறியதே' என்றனர். (௬௧)

உரைக்கைக்குநல்ல திருவெழுத்தைந் துண்டுரைப்படியே
செருக்கித்தரிக்கத் திருநீறுமுண்டு தெருக்குப்பையிற்
தரிக்கத்துணி யாண்டையுமுண் டெத்தச் சாதியிலு
மிருக்கத்துணிந்துகொண்டேன் குறையேதுமெனக்கிலையே.

(பொ—ரை.) வாயாரச்செபித்தற்கு நன்மையான மகாபஞ்சாக்கர மந்திரமுளது, வேதத்திற்சொல்லியபடியே சத்தியோசாதித்துத் தரித்துக்கொள்ள திருநீறுளது, அணிந்துகொள்ள வீதிக்குப்பைகளில் அழுக்குத்துண்டான ஆடையுமுண்டு, எத்தகையசாதியிலும் யாசிக்கத் தைரியங்கொண்டேன் இனி யாதொருகுறையுமில்லை என்றனக்கு.

(கு—ரை.) ஒவ்வொருவரும் மனோவாக்குக்காயங்களைச் சுத்தி செய்துகொண்டால் அடையவேண்டிய சிவசாம்ராச்சிய மாகிய திருவருளினை யடைந்துவிடலாம். அங்ஙனம் சுத்திசெய்வதற்கு இன்றிய பதார்த்தங்களைத் தெரிவித்தனர். மந்திரமயமாகிய பஞ்

தாட்சாயணைத்திரத்தினை மனத்தாலெண்ணி வாக்கால்செபிக்கவே மனமும் வாக்கும் சுத்தியாய்விட்டன. காயத்தில் வேதபடிதமாயுள்ள விபூதிதரிக்கவே காயம்சுத்தியாய்விட்டது. ஆகவே, 'திருவெழுத்தைந்துண்டு,' 'திருநீறுமுண்டு' என்றனர். இன்றியமையாது தரிக்கவேண்டிய வெளிசாதனங்களைக் குறிப்பித்தனர். "சாதியிரண்டொழிய வேறில்லை" என்றபுலோதசரைவதியின் வாக்கியத்தின் மேற்கொண்டு 'ஈன்றசாதியிலும் பிறக்கத்துணிந்துகொண்டேன்' என்றனர். (சு௪)

ஏதப்பட்டாயினி மேற்படப்பட்டெப்டி தெண்றறிந்து
போதப்பட்டாயில்லை நல்லோரிடத்தென்று புகன்றிவர்ல்
வாதைப்பட்டாய்மட மாதர்க்கலவி மயக்கத்திலே
பேதைப்பட்டாய்நெஞ்சமே யுனைப்போலில்லை பித்தருமே.

(பொ—ரை.) மனமே! உலகத் துன்பினையடைந்தவ, பெரியோரிடம் சாடி இனிமேலடையப்போகும் துன்பங்களை யின்னதெனத்தெரிந்துகொண்டு அறிவித்தொண்டாயில்லை. அற்பமாகிய துன்பத்தையடைந்தனை, அறியாமையினையுடைய மாதர்கள் சையோகமயக்கத்திலே பேதையாயினை பித்தர்களுள் உன்னைப்போலொருவருமில்லை.

(கு—ரை.) அறியாமையால் இதுகாறும் அனுபவித்த துன்பங்களைத்தவிரவும் பேச இனிமேலாகிலும், துன்பங்களடையாதிருக்கவேண்டியதற்காகப் பரிகாரம் பெரியோரையடுத்துத் தெரிந்துகொள்ளாமல் இன்னமும் மாதர்மயலில் மடைந்துகொண்டிருப்பாயாகலின் 'உனைப்போலில்லை பித்தருமே' என்றனர். (சு௫

சாப்பற்றுவல்வினை சுற்றமுமற்றுத் தொழில்களற்றுக்
காப்பற்றுமங்கையர் கையிணைக்கற்றுக் கவலையற்று
வாப்பற்றநாதனை வாயாரவாழ்த்தி மனமடங்கப்
பாப்பற்றிருப்பதென்றோ பராபரமானந்தமே.

(பொ—ரை.) பெருமானே! (சாவிவ்வுலகில்) வீண்வார்த்தை பேசுதலில்லாமல், தீயவினைகளையுடைதலில்லாமல், உறவினர் (சேருக்கம்) இல்லாமல், வஞ்சகமில்லாமல், மாதர்கள் சிநேகமில்லாமல், சஞ்சலமில்லாமல், அளவுகடந்த சிவபெருமானை வாய்நிரம்பவாழ்த்தி துதிசெய்து மனமொடுக்கி அவாவில்லாமல் இருக்குந்தன்மை யெப்பொழுது விசேஷ ஆனந்தமே.

(கு—ரை.) மாயாகாரிய ரூபமாகிய போகங்களைத்தரும் பிரபஞ்சத்தில் சுழலவிட்டவன் தீர் சிவபெருமானை வாயாரவாழ்த்தி எத்தகைத்து அனுக்கூலமுண்டாகாதெனவும் அங்ஙனம் எத்தனதில்லையே, தான் பெருமானைத்தழுவும்படிமனவும் விளக்கினாராயிற்று. (௧௨)

பேய்போற்றிரிந்து பிணம்போற்கிடந்திட்ட பிச்சையெல்லாம்
நாய்போலருந்தி நரிபோலுழன்று நன்மங்கையரைத்
தாய்போற்கருதித் தமர்போலனைவர்க்குந் தாழ்மைசொல்லிச்
சேய்போலிருப்பர்கண்டீ ருண்மைஞானந் தெளிந்தவரே.

(பொ—ரை.) மெய்ஞ்ஞானம் உணர்ந்தவர்கள் பேய்பிடியுண்டவனைப்போலச் சஞ்சரித்து, சவம்போல் அசைவின்றிக்கிடந்து, அயலார் கொடுக்கும் பிச்சையின்னை நாயினைப்போலுண்டு, நரியினைப்போல அலைந்து, கற்புடையமாதர்களை அன்னையைப்போலெண்ணி, சுற்றத்தினரைப்போல எவருக்குந் தாழ்ந்து, புத்திரனைப்போல விருந்தவண்ணமிருப்பர்.

(கு—ரை.) தனக்கென ஒருபயன் [illegible] பெரியோர் கண்ட கண்டவிடங்களில் திரி [illegible], அசைவற்றிருப்பினுமிருப்பர், உண்ணினுமுண்பர், உண்ணாதிருப்பினுமிருப்பர், பேசினும் பேசுவர், பேசாதிருப்பினுமிருப்பர், [illegible]ப்போலிருப்பினுமிருப்பர் [illegible]ப்போலிருப்பினுமிருப்பரென்பதாம். (இது [illegible] [illegible] தன்மையினையும் சுட்டியுணர்த்தல் சம்பிரதாயமாம். [illegible]

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

(பொ—ரை.) [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible]

(கு—ரை.) [illegible] [illegible] என்றனர். [illegible]

அழுதாற் பயனென்ன நொந்தாற் பயனென்ன வாவதில்லை
தொழுதாற் பயனென்ன நின்னையொருவர் சுடவுரைத்த
பழுதாற் பயனென்ன நன்மையுந் தீமையும் பங்கயத்தோ
னெழுதாப்படிவருமோ சலியாதிரென் னேழைநெஞ்சே.

(பொ—ரை.) அறிவில்லாமையுடைய மனமே! (ஒருவன் தான் நடக்குங் காலத்தில்) அழுதலினாலே என்னப்பிரயோசனம், அப்போது வருந்துதலினாலே யென்னப்பிரயோசனம், உன்னை வேறொருவர் கோபித்துச் சொல்லினும் குற்றத்தைச் சிந்திப்பதினாலென்ன இலாபம் ஒன்றுமில்லை. பிரமனெழுதிய தலைவிதிப்படியல்லாது வினையுமோ இவற்றினொன்றினாலும் சலிப்பதிலையில்லை.

(கு—ரை) அவரவர்கள் பூர்வ ஜன்மத்திற் செய்த கருமப்படி, அவரவர் தலையிலே பிரமன் விதித்தவிதிப்படியே நடக்கும். ஆதலினாலே மனமேயன்றி அழுதலினாலும் அதைத்தவிர்த்தல் கூடாது, ஒன்றுக்கும் பிரயோசனமில்லையென்பார் 'ஆவதில்லை' யென்றனர். (௬௨)

வரிருடைச்சோ ருடைச்சொக்கு முடம்படைக்கப்
பொரிச்சமன்னன் குழிமேற்றூற்றறைப் புறத்தின்னோடிச்
சரியலாந்தம்பச் சகதிக்குழிக்கிச் சகசைத்த
சேரிருக்கக்கண் றாவேமருவவிளையாடுதே.

(பொ—ரை) (நுனிசிறுத்த வாய்வடிவான) கீழ்ப்பக்கத்தையுடைய கொப்பூழைச் செய்கின்ற (கலைப்பாய்க்) கொங்குகளை, (உங்களுடைய) தேகத்து வாரம் (மதனையின் குண்டை) சமனைச்சூழக்க முலைகளிலே கொத்திய தீர்ந்த நீர்ப்பையை கொள்ளுங்கள்; (உங்களுடைய) சுற்றத்தினர்களின் தம்பிக்கு (பொருளையுள்ள) வெளிப்பிண்டைதனில் செய்யோசிக்

நிகரசெய்து கொண்டிருப்பீர், உலகம்சிரிக்கச் சிலவேடமாயிட அறிவினைக்கொள்வீர் (இங்ஙனஞ்செய்யின்) அப்பரிவேமே அவருடைய இரணைதிருவடிகளைச்சார்ந்தவர்.

(கு—ரை.) திருவெண்காடர்தா மனுபவித்தாரும் சாதனத்தினை உடையார்க்கு தெரிந்து உய்யும்பொருட்டுக்கருணை மிகுதியால் உபதேசித்தருளினர். மதுரையின்கண்ணே கூன்பாண்டியனுக்குச் சுரநோயுண்டாக அது அப்பாண்டியன் அதிரிசிக்கள்ளாகிய சமணமுனிவர்கள் பெரும்பிரயத்தனத்தால் தீராதிருக்க, திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் எழுந்தருளி "மந்திரமாவதுநீறு" என்றதிருப்பதிகத்தைப்பாடி விபூதியிட்டு அச்சுரநோயைத்தீர்த்து அப்பாண்டியனையும் சைவனாக்கினர். தோல்வியடைந்த சமணர்களைப்பாண்டியன் கழுவேற்றினன். அக்குறிப்பு விளக்கி விபூதியின்மகிமையினை விளக்குவான் 'சமணரைக்கழுவேற்றுந்திறல்' என்றனர். (௩௪)

நீற்றைப்புனைந்தென்ன நீராடப்போயென்ன நீமனமே
மாற்றிப்பிறக்க வகையறிந்தாயில்லை மாமறைநூ
லேற்றிக்கிடக்கு மெழுகோடிமந்திர மென்னகண்டா
யாற்றிற்கிடக்குந் துறையறியாம லலைகின்றையே.

(பொ—ரை.) மனமே! விபூதியினைத்தரித்தென்ன, (கங்கை முதலிய துறைகளில்) தீர்த்தமாடுதற்குப்போயென்ன, (எடுத்தவுடலை) மாற்றிஞானவாழ்வுப்பிறக்க வல்லமைதெரிந்துகொண்டாயில்லை பெரியவேதங்களில் எழுதிக்கிடக்கும் அனேககோடானகோடிமந்திரங்களின் (உண்மையினை) என்னவென்றுதெரிந்தாய், (பிரபஞ்ச) நதியிலேவிழுந்து (திருவருளின்) துறைதெரிக்குதெள்ளாமல் அலைகின்றனை.

(கு—ரை.) பிரபஞ்சத்திங்கண்ணே மாயாபோக விஷயங்களி ந்கட்டுண்டு அறிவை மழுங்கிக்கிடப்பவர்கட்கு, விபூதியினாலும், புண்ணியதீர்த்தங்களினாலும் பிரயோசனமெவ்வளவுமின்று; ஆகவேசா தனங்களை அப்படியே செய்யவேண்டுமென்பதாம். (௩௯)

ஓங்காரமாய்நின்ற வத்துவிலேயொரு வித்துவந்து
பாங்காய்முளைத்த பயனறிந்தாற்பதி னாலுலகு
நீங்காமனீங்கி நிறையா[illegible]த்துபதி னாலுகு
யாங்காரமானவர்க் கெட்டாக்கனிவந் தடர்ந்திடுமே.

(பொ—ரை.) பிரணவசொருபமாகிய பொருளினிடத்தே ஒப்ப ற்ற (ஞானமென்னும்) விதையானது அழகாகஉற்பவித்த பிரயோசன த்திலேயிருக்கினும் அறிவிலே தோன்றுதப்படிக்கின, (மாயாவிஷய ங்களில்) நிறையாமல் (திருவருளி) னிறைவில் நிறைந்து வியாபக மாய் அகங்காரசொரூபிகட்கு எட்டாத சிவமாக்கனியானது கிடைக் கப்பெறும். (௪௦)

(கு—ரை.) பிரணவத்தின் கண்ணே நாதமாத்திரையாயெழும் பன்மையினை விசாரித்தால் பிரபஞ்சசொரூபம் தோன்றும்; அக்காரத் திற்குக் காரணமாகிய சிவபெருமான் வெளிப்பட்டருளுவனென்ப தாம். சுதந்தரவீனமுடையார்க்கே இப்பேறுஉண்டாமென்பார் 'ஆங் காரமானவர்க்கெட்டா' என்றனர். (௪௧)

விதியார்படைப்பு மரியாரளிப்பும் வியன்கயிலைப்
பதியார்துடைப்பும் பாலொழுகாது பரானந்தமே
கதியாகக்கொண்டுமெய்த்தெல்லைச்சாயிலிற் கனவெண்ணீ
மதிபாதிருமனமேயிதுகாரணன் மருந்தனக்கே.

பொ—ரை. மனமே! பிரமனுடைய சிருட்டிப்பும், விஷ்ணுவினுடைய இரட்சிப்பும், பெருமைபொருந்திய சிவபெருமான் சங்காரமும் நம்மிடத்து அசைவறாத சிவானந்தமே துணையாகப்பெற்று, மற்றப்பிரபஞ்ச போகமனைத்தும் அநுக்கிரகண்டகளுப்பொருள்களைப் போலக்கருதாமலேயிரு இதுவேஉனக்குநல்லமருந்தாகும்.

(கு—ரை.) பிரபஞ்சகாரியங்களைத் துச்சமெனக்கழித்துத் திருவருளையே ஆதாரமாகக்கொண்டு சிவானந்தத்தினை நாடியிருப்பார்கள் முத்தொழிலிற்கட்டுப்படார்கள். அங்ஙனமுத்தொழிலிற்கட்டுப்படாமற் கேதுவாயுள்ள வினை நோயை நீக்குதற்கு இச்சாதனமே மருந்தாம்.

நாய்க்குண்டு தெண்டு நமக்குண்டு பிச்சை நமனில்லை வெல்லை
வாய்க்குண்டு மந்திர பஞ்சாட்சரமதியாமல்வரும்
பேய்க்குண்டு நீறு திகைப்புண்டு நின்ற பிறவிப்பிணி
நோய்க்குண்டு தேசிகன் றன்னருணோக்கங்கணோக்குதற்கே.

(பொ—ரை) நாயானது (வீடுபேறும் பெறுவதற்கு) இலைக்கட்டுண்டது, நமக்கு (வழங்குகின்ற) பிச்சைச்சோறு உண்டு, நமனை இயமனை செயிப்பதற்குப் பஞ்சாட்சரமகாமந்திரம் வாயிலுள்ளது, மதியாமல் (எதிர்த்து) வருகின்ற பேயினுக்கு அஞ்சவொட்ட (விபூதியுண்டு, பிராரப்பவசமடைந்து உள்ள ஜெனனமரணவியாதியபிணிக்கு ஆசிரியனுடைய திருவருணோக்கமானது நம்மை நோக்குதற்குஉளது.

(கு—ரை.) நாய்க்கு எச்சிலிலை இரைகிடைக்கச்செய்வது போலப்பிச்சைச்சோறும் நமக்குகிடைக்குமென்பார் நாயைக்குறித்தனர். பஞ்சாட்சரமகாமந்திரஞ்செபத்தாலன்றி இயமபயம் நீங்காதென்

யார் 'ஊமைவெல்லவாய்க்குன்மேந்திர பஞ்சாட்சரம்' மென்றனர். சக்ஷிமார்க்கண்டேயர் ஞானவியர். "சொப்பனமென்றெச்சித்திருப்போர்க்கு, அபாயமொருக்காலுமில்லை—உபாயம், இதுவேமதியாருமல்லாத வெல்லாம், விதியேமதியாய்விடும்" என்றதருத்தாண்டதுவாக்கையும் ததினரும் பேயாற்பிடிபுண்டார்க்கு விபூதிப்பிரயோகமே செய்யவேண்டுமென்பார் 'பேய்க்குண்மேற்று' என்றனர். எனவே இவனடியார்கட்குப் பேய்ப்பிடிப்பும் இயமபாதும் பிராதெனவுதாயிற்று. (சசு)

நே[illegible]டைகள் வேதங்களாகமம் நீதிவேதி
யோமங்கடர்ப்பணஞ் சாந்திசெபமந்திர யோகநிலை
நாமங்கள்சந்தனம் வெண்ணீறு பூசி நலமுடனே
சாமங்களேதோறு மிவர்செய்யும்பூசைகள் சர்ப்பனையே.

(பொ—ரை.) [illegible] படித்தல்களும், [illegible]னும், வேதங்களைப்பாராயணஞ்செய்தலும், ஆகமங்களையோதுதலும், (இந்நூல்கள்சொன்னபடி) நியாயவழியிலிருத்தலும், ஓமங்கள்வளர்த்தலும், தர்ப்பணம்புரிதலும், சாந்திநடத்தலும், செபம்பண்ணுதலும், மந்திரஞ்செபித்தலும், யோகநிலைகூடுதலும், தெய்வப்பெயர்களைச் சொல்லுதலும், சந்தனம் விபூதிதரித்தலும், என்னையாகவே யிவர் முழுவதும் இத்தகையர் புரியும் பூசைகளும் வஞ்சனையாகவே முடியும்.

(கு—ரை.) மனத்தினொருவழிப்படுத்தி வேறு சிந்தனைசிறிதுமின்றி மேற்சொல்வனவற்றைச்செய்யின் பலனுண்டாமென்றும் மனத்தினைப்பலவழியிலலையவிட்டு என்ன செய்யினும் சிறிதும்பிரயோசனமில்லை யென்பார் 'சர்ப்பனையே' என்றனர். இவ்வாசிரியரே 'கையொன்றுசெய்யவிழியொன்றுநாடக்கருத்தொன்றெண்ணப், பொய்யொன்றுவஞ்சகநாவொன்றுபேசப்புலால்கமழும், மெய்யொன்றுசாரச்செவி

யொன்றுமெய்கேட்க விரும்பியோன், செய்வினைகளை யெவ்வாறு
கொல்வாய்வினை தீர்த்தவனே யென்றறைந்தானென்க. ௨௨

ஞானத்தினைபுத்தி சொன்னதுங்கேட்டிலை நன்னெஞ்சமே
வெளிப்படக்கெட்டுழன்றாயினியேதுமிலா
வானத்தின்மீனுக்கு வலைவிட்ட வகையதுபோற்
போனதல்லதுமீள வினைத்தின்றதென்ன புத்தியிதே.

(பொ—ரை) நல்லமனமே! ஞானத்தினை அறிவோர்கள் சொல்லியதும் கேட்டுத்தெரிந்தாயில்லை, காரணமென்ன? இவ்வகையாக விபரீதப்பட்டுப் (பிரபஞ்ச) விடயங்களில் திரிகின்றாய், ஆகாயத்திலுள்ள விண்மீனாகிய நட்சத்திரங்கட்கு அஞ்ஞானத்தினர் (அறிவில்லாத) வலையைப்போல இனியாதொருபயனுமில்லாமல் நீங்கியபொருளினை விரும்புகின்றனை இது எவ்வகையான அறிவு.

(கு—ரை.) உலகிலொருவன், சென்றவிஷயங்களைப்பற்றி மறுபடியும் எண்ணி எண்ணித்துக்கித்தல் ஆகாயத்திலுள்ள விண்மீனைப் பிடிக்கவேண்டி மனத்தெண்ணிப் பூமியிலிருந்தபடி அதன்மேல் வலைப் போடக் கருதும் அறிவினைத்தினையொக்குமென்பதாம். (௨௩)

அஞ்சக்கரமெனுங் கோடாலிகொண்டிந்த வைம்புலனாம்
வஞ்சப்புலக்கட்டை வேரறவெட்டி வளாக்கஞ்செய்து
விஞ்சத்திருத்திச் சதாசிவமென்கின்ற வித்தையிட்டுப்
புஞ்செய்க்கலையறுத்தேன் வளர்த்தேன் சிவபோகத்தையே.

(பொ—ரை.) பஞ்சாட்சரமென்ற சொல்லப்படும் கோடாலியினால், இவ்வைம்புலன்களாந் தோன்றுகின்ற வஞ்சகத்தன்மையுடைய கட்டை

லையும்நல்லறம்படிவெட்டி அந்நிலத்தினைக்கொழுமையாக்கி அதிகமாத் த்திருத்தஞ்செய்து சதாசிவம் என்றுசொல்லப்படுகின்ற விதையை ட்டுக்கூட்டமாகிய களைகளைப்பறித்தே ஞானச்சிவபோக மென்னும்பயி ரைவளர்த்தேன்.

(கு—ரை.) ஒருவனுக்குப் பஞ்சாட்சரத்தியானமந்திரம் இருந்து கொண்டிருக்குமாகில் ஐம்புலசேட்டைகள் ஒடுங்கிப்போகும்; அவை யொடுங்கவே மனநிலையுறும்; நிலைபெறவே சதாசிவத்தியானத்திற் சேர்வாகும்; அதுவாகவே சிவபோகம் விளையுமென்பதாம். (சக)

தாயாருஞ்சுற்றமும் பெண்டிருங்கைவிட்டுத் தாழ்ந்திடுநா
ளீயாருநாறு மரணப்புகர்வாரந்த நேரத்திலே
நோயாருவந்து குடிகொள்ளுமேகொண்ட நோயுமொரு
பாயாருக்குமல்லாற் பின்னையேது கட்டாமுடலே.

(பொ—ரை.) உடம்பே! (உன்னை வருந்திப்பெற்றெடுத்த) தாயாரும், உன்னைச்சூழ்ந்து தொடர்ந்திருக்க (உறவினரும், உன்பால் நேசம் வைத்திருந்த) மனைவியரும் (உனக்கொரு) செயலில்லாமலிருக்கும் மரணகாலத்தில் நீயார் நானார் எனப்பேசுவார்கள்; அக்காலத்திலே வியாதியும்வந்து சேர்ந்துவிடும் (கடைசியாக) நிலைபெற்ற நோயும் படுத்தபாயும் தவிரவல்லாது வேறு எந்தப்பொருளும் உன்னோடு வாராதொழிவதேயாயிருக்கும்.

(கு—ரை.) சகலசம்பத்துடன் செ[illegible]யுமாகச் சஞ்சரித்துக் கொண்டிருக்கின்ற காலத்தில் எல்லா[illegible]வியவைத்த உறவாருள் (நோயும்பாயும்மாத்திரம்கிடக்கிற) மரணகாலத்தில் ஒருவருமிருக்கார். அப்பொழுது உயிர்ச்சாக்கேடாகு மருத்திருமி தீர்வுமைச்சுட்ட பரியகாரியத்தைக் கட்டிவிட்டோம்.

பேயுடனே மிக்கடமாமென்று பேசுவதை
நீயுமறிந்திலையோ பொருடேடி நின்றனையே

(பொ—ரை.) (ஓ மனமே) ஆராயுங்காலத்தில் ஒவ்வொருயிர்க்கும் வினைப் பெரியோர்கள் படிக்குமள மலசிறைத்தொட்டியாகிய இத்தேகத்தைச் சுட்டால் பேயாரும் (மேலெழுந்து) கூத்தாடுகின்ற (இத்தேகமானது) சுடுகாடும் (இடமாமென) அறிவுடையோர் பேசுவதை நீயுங்கேட்டு அறிந்தாயில்லையோ (இந்நிலையைக்கருதாது) பொருளைத்தேடிநின்றாயே இது ஆச்சரியம்.

(கு—ரை.) இவ்வுடலின் நிலையாமையினைப்பற்றி அறிஞர்கள் நமக்குசொல்லியிருந்தும் அதனை சிறிதும் தெளியாது அவ்வுடலினைப்போற்றியவர்க்குப் பொருளைத் தேடியலைதல் அறியாமையென்பதாம்.

பூணும்பணிக்கல்ல பொன்னுக்குத்தானல்ல பூமிதன்னைக்
காணும்படிக்கல்ல மங்கையர்க்கல்லநற் காட்சிக்கல்ல
சேணுங்கடந்த சிவனடிக்கல்லவென் சிந்தைகெட்டுச்
சாணும்வளர்க்க அடியேன் படுந்துயர் சற்றல்லவே.

(பொ—ரை.) தரித்துக்கொள்ளும் ஆபரணங்களைக் குறித்தல்ல, பொன்னினைக் குறித்தல்ல, நிலத்தினை யுடைமையாக்கிச் சாதிக்கும்படியல்ல, மாதர்களைப்பிடித்தாயல்ல, கண்களுக்கு இனிய சிறப்பினை நினைத்தல்ல, ஆகாயத்தினையுங்கடந்த சிவபெருமானுடைய திருவடிக்கல்ல, என்மனமானது தன்னிலையினின்றும் கெட்டு வயிற்றினைக்கொண்ட தப்பினையும் பரிபூரணஞ்செய்ய அடியேன் அனுபவிக்கும் துன்பமற்பமல்ல, அபாரம்.

(கு—ரை.) திருவெண்காட்டடிகள் க்ஷேத்திரயத்தில் வாசஞ் செய்துகொண்டிருக்கும் காலத்தில் முவுணவிலையற்றிருந்தாராகலின் ஒருநாள் ஒருவீட்டின் தலைவாயினின்று கைதட்டிப் பிச்சைகேட்க அவ்வீட்டிலுடையவன் அவரைக் கள்வனென வெண்ணிப் புடைக்குங்கையைத் தில்லையலாரோடிவந்து கண்டு செல்வியாரென்றுணர்ந்து வேண்டிய உபசாரம்செய்தபோது பாடியதிருச்செய்யுளிது. பசிநோயானவற்றி னும் கொடியதென்பார் 'பசித்துயர் சற்றல்லவே' என்றனர் ஒளவை யார், "மானங்குலங்கல்வி வண்மையறிவுடைமை, தானந்தவமுயற்சி தாளாண்மை—தேனின், கசிவந்தசொல்லியர்மேற் காமுறுதல் பத் தும், பசிவந்திடப்பறந்துபோம்." என்றதனாலுணர்க.

வெட்டாதசக்கரம் பேசாதமந்திரம் வேறொருவர்க்
கெட்டாதபுட்ப மிறையாததீர்த்த மினிமுடிந்து
கட்டாதலிங்கங் கருதாதநெஞ்சங் கருத்திலுறை
முட்டாதபூசையன்றோ குருநாதன் மொழிந்ததுவே,

(பொ—ரை.) செப்புத்தகட்டிலே செதுக்காதயந்திரமும், வாயி னாலே செபியாத மந்திரமும், மற்றவர்கட்கு எட்டியறுக்கப்படாத மலரும், திருப்பணிசெய்யாத தீர்த்தம், பெட்டகத்தில் கட்டிவையாத லிங்கமும், 'தற்போதமுன்னிட்டு' நினையாதமனமும், உள்ளத் தில் காலவரையல்லாத பூசை அல்லவோ ஆசாரியனுபதேசித்தது.

(கு—ரை.) புறப்பூசைகட்கு இடம்பொருளேவல் இன்றியமை யாது வேண்டியிருத்தலினாலும், ஒவ்வொருகாலத்தில் அவைகட்கு முட்டுப்பாடு வருமாறுபடியாலும், அங்ஙன நேர்ந்தகாலத்தில் நிரு வாக்கேடு உண்டாமாகலினாலும் இத்தகையபூசை இல்லறத்தினர்க ட்கே யனுகூலமாகவிருக்குமன்னபடியாலும், துறவியாகிய தனக்கு

அச்சகையசாதனம் நீங்கி அக்காமூசபூசை யெக்காலத்தும் இடைவிடாமு ன்றி நடத்தும்படி தனதாசிரியர் உபதேசித்தருளினரென்பார், 'குருநாதன்மொழிக்கதுவே' என்றனர். (௨௦)

எருமுட்டைபிட்கி யுதிர்த்திடுஞ்செல்லுக் கெவரழுவார்
கருமுட்டையுக்குக் கழூகன்மீர்களை அக்கமகாப்ப்
பெருமுட்டைப்பட்டவர் போலழும்பேதைகாள் பேதங்கிழீ
ரொருமுட்டுமில்லிட்டு மாறுமபையன்றைக்குமோதுமினே.

(பொ—ரை.) 'ஜெகந்நீரே!' தாயினுடைய கருப்பமாகிய முட்டையுள்ளே பிரவேசித்துச் 'சிவபெருமானுடைய' திருவடிகளை நீங்கினீர், இச்சேகத்தைக் [illegible] துக்கப்படாமல் இவ்வுடல் நீங்கியதின் பொருட்டு பிறக்கவுன்பமும் [illegible]வர்களாய் பெரிய இடையூறுடைத்தவர் போல, 'அழுகின்றவுடர்களே! [illegible]' [illegible] கொள்ளுகிறீர், ஒருகுறையுமில்லாதபடி செய்யும் பரமசிவன் திருநாமங்களை எக்காலமும் தோத்திரஞ்செய்யுங்கள். எருமுட்டையினைப் பிதிர்த்தால் அதிலிருந்து உதிர்கின்ற செல்லுக்கு எவர் அழுபவர்கள். (ஒருவரும் அழார்)

(கு—ரை.) இறந்தபட்ட பலசீவர்கள் எருமுட்டைப் புழுக்களுக்குச் சமானமாகும் ஆகலின் செத்தபிறப்பைக் கண்ணி எண்ணித் துன்பப்படுதலில் சிறிதும் பிரயோசனமில்லை. சிவபெருமானை திருவடியினை மறவாதேமேயென வேக்கங்கொண்டிருந்தின் அதனால் பெரும் பிரயோசனம் விளையுமென்பதாம். (௨௧)

மையாடுகெண்ணியு மைந்தரும்வாழ்வு மனையுஞ்செந்தீ
வையாசின்மாயை யுருவெளித்தோற்ற மகிலத்துள்ளே
மெய்யாயிருந்தது நாட்செலநாட்செல வெட்டவெறும்
பொய்யாய்ப்பழங்கதையாய்க் கனவாய் மெல்லப்போனதுவே.

(பொ—ரை.) சிவந்ததீயினைக்கரத்திலேந்திய ஐயனே! மையினைத்தீட்டிய கண்களைவாய்ந்த மனைவியும், புத்திரரும், பிரபஞ்ச வாழ்வும், வாழ்க்கைவீடும் தேவரீருடைய மாயாகாரியங்களாம், இவ்வுலகிலே முதலில் சத்தியமாகத் தோன்றியது காலங்கழியக் கழிய முழுவதும் பொய்யாகிப் பழமையானக் கட்டுக்கதைகளாய்க் கனவு கண்டதுபோலாய் மெதுவாகநீங்கியது.

(கு—ரை.) பிரபஞ்சசாதனைபண்ணுறது பகிர்முகாட்டத்துடனே வாழுகிறகாலத்தில் எல்லாம் நிலையுள்ள சத்தியப்பொருளாகவே தோன்றின. காருக்குநான் தத்துவசோதனைப்பண்ணிக்கொண்டிருக்கிறகாலத்தில் அவரவர்கள் கன்மத்திறுக்குத் தக்கபடி சிவபெருமான் மாயையிலின்றும் காரியப்படுத்தின[illegible] பதார்த்தங்களாகவே தோன்றுதலு[illegible] அவற்றினிடத்து[illegible]ருக்கவே அவை மறுபடியும் சத்தியமாகத்தோ[illegible]லையாகலின் 'மெல்லப்போனதுவே' என்றனர். (இஉ)

ஆயாப்பலகலை யாய்ந்திடுந்தூய வருந்தவர்பாற்
போயாகிலுமுண்மை யைத்தெரிந்தாயில்லை பூதலத்தில்
வேயார்ந்ததோளியர் காமவிகாரத்தில் வீழ்ந்தழுந்திப்
பேயாய்விழுகின்ற நன்மனமேயென்ன பித்துனக்கே.

(பொ—ரை.) மனமே! பலவாகிய சாஸ்திரங்களைவிசாரியாய், விசாரித்தறிந்த பரிசுத்தம்பொருந்திய தவத்தில் மிகுந்தவரிடத்துச் சென்றாயினும் உண்மையுள்ளமைதனைத் தெரிந்துகொண்டாயில்லை, உலகின்கண்ணே மூங்கிலினையொத்த தோள்களைவாய்ந்த மாதர்களின் காமவிகாரமாகிய சமுத்திரத்தில் விழுந்தழுந்திப் பேய்போலவிழிக்கின்றனை, உனக்கென்னபித்தமோயிது.

(கு—ரை.) மெய்கண்ட சாத்திரங்கள் பலவற்றைக்கற்றலும் கேட்டலுமாகிய இருஞானம்கிடைக்கப்பெறின் தெளிதலும் நிட்டை கூடுதலுமாகிய இருஞானமும் இலேசாகக்கிடைக்குமாதலின் முன்னிரண்டினைமாத்திரம் குறித்தனர். மெய்கண்ட செல்வரிடம்போய் அறிந்து கேட்கவேண்டுமென்பார் 'போயறிலுமென்றனர். மாதர் மயக்கிற்பட்டோர்கட்குச் சாஸ்திரஆராய்ச்சி கிட்டாதென்பார், 'மன்னைப்பிரிந்தனைக்கே' என்றனர். ஈண்டு உண்மையென்றது ஆன்மாவின் பெற்றியிலையாகிய பொதுவினை விசாரியாது ஆன்மதரிசனம் சிவதரிசனமாதலுள்ள விசேடத்தையறிகை. பொதுஇலக்கணம்கூறுவது வேதம் உண்மையாகிய சிறப்பு இலக்கணங்களைக்கூறுவது ஆகமம் ஆகவே ஆகமங்களைவிசாரித்தாயில்லையென்பார் 'உண்மையைத் தெரிந்தாயில்லையென்றனர், சிவஞானசித்தியார், "ஆரணநூற் பொதுச்சைவமருந்திறப்பு நூல்" என்றதனுற்காண்க. (இட)

அடியார்குழுவை மாண்பூசைநிகழு மன்புமின்றிப்
படிமீதிற்செல்வப் பயனுமளித்தாபல் தயன்வகுத்த
குடியானசுற்றமும் மாதும் வாழ்வுங் குயக்கலங்கள்
தடியாலடிபட்டவாறிருக்குமென்றினஞ் சேர்ந்திலையே.

(பொ—ரை.) சிவனடியார்களது கூட்டத்தையும், சிவபூசையில்விருப்பமும், பத்தியுமில்லாமல் இவ்வுலகில் (ஒருவனுக்கும்) பயன்கொடுக்கும் செல்வமேதென்றமோ, பிரமன்வகுத்த குடியிற்பிறந்த உறவினரும், மனைவியும், பிரபஞ்சவாழ்க்கையும், குயவனாற்செய்யப்பட்ட பாண்டங்கள் தடியினாலடிபட்ட வகையாக இருக்குமென்ன வென்னவி (சேர்ப்பு) சிவனடியாராகிய இனத்தினைச் சார்ந்தாயில்லையே.

(கு—ரை.) ஒருவன் இன்றியமையாது அனுபவிக்கவேண்டி[illegible] பெரும்பயன் அடியாருறவும், அரன்பூசையும், அன்பும் ஆகிய [illegible] [illegible]வன்றி வேறுகிடைத்தால் முடியாதென்பார் 'வேறுபயனுள[illegible]' என்றனர். சிவபெருமான் தொண்டர்களிடத்தும் சிவலிங்கத்தினிடத்தும் எழுந்தருளியிருப்பது சத்தியமாகலின் 'அடியாருறவும் அரன் பூசையும்' வேண்டுமென்றனர். அச்சேறும் பூசையும் மனக்கசிவுடச் செய்யவேண்டுமென்பார் அன்பும் என்றனர். சிவப்பிரகாசம் "தொண்டர்களிடத்தும் வானோர்தொழுந்திரு மேனிதாமும், மண்டருங் கண்டியாத வண்ணலேயெனவணங்கி, வெண்டாமக்கள்சிந்த வழிமொழி குழறிமெய்யே, கண்டிசெரண்டிருப்பர்ஞானக் கடலமுதருந்தினோரே." என்றதனுற்காண்க. ([illegible])

ஆங்காரப்பொ[illegible] கோபங்க[illegible] மாளைவத்தா
வீங்காவரண்மனை பொ[illegible]த [illegible]ளிக்க வீடிவளர்
தேங்காமெருமதிற் காமவிகாசத் தேகங்கொண்டு
பாங்காயுனைப்பணிந் தெப்படிஞானம் பலிப்பதுவே.

(பொ—ரை.) அகங்காரத்திற்கு ஒருபொக்கிஷமாயும், கோபத்திற்கு ஒருகளஞ்சியமாகவும், [illegible]அணவமாகியதாளைத்தொழியாத காவல்வீடாயும், பொய்அறைந்துள்ள கூடமாயும், ஆகாயத்திலேயோங்கி வளர்ந்து நிறைந்துள்ள பெரிய மதில்சூழ்ந்த காமசபையாயும், (உள்ள) இலக்ஷணங்களமைந்த தேகத்தைக்கொண்டே! பக்குவமாக உன்னைப்பூசித்துவந்தால் எந்தவிதமாக ஞானம் கைகூடி வரும்.

(கு—ரை.) அகங்காரம், கோபம், ஆணவம், பொய், காமம் ஆகியவற்றிற்கு இடமாயுள்ள தேகத்தினைப் போஷித்துவருதலிலேயே

காலத்தைக்கழித்தலின் ஞானம் சித்திக்குமென்பார் 'எப்படி ஞான மடைவிப்பதுவே' என்றனர். இதனால் அக்காலந்தனை யொழிக்க வே ஞானமடைதற்குச் சிரமசாதனமாகவிருத்தலாலின் அப் போது நடப்பதனிவைதலினால் பேதைவில்லை யென்பதாம்.

அறியாப் பிழையைப் பொறுத்தருள்கியங் குழைந்துருகெஞ்சே
பறியாப் பறவைக் கடைத்தீர்ச் சட்டிய ஆற்றியனே
நெறிமாறுமாந்தரினை மாற்றிடையாளை மனத்திருவன்றி
அறியாப் புலன்சிந்தை யிடம்பெறுதன்மை வேண்டுமென்றே.

(பொ—ள்.) நீக்குதலில்லாத வல்வினையாத செல்மக்கடுமை யொத்த அருளாள அமைந்தமனமே! எக்காலத்திலும் அறியாத மொட்சவீட்டைத்தரு மருந்து (சொல்லேன்) கேட்பாயாக, என்றுமுன் வினை, மறுபிறவியுமடையாமே புலக்கிய கருக்களையடையானே, பெரும்பான்மையைமுடையானை, உயர்ந்த பதவியேவண்டுமென்று மனத்தெண்ணியிருத்த கணங்களில் அருளக்குக்கண்ணீர்மல்கித்தேம்பி அழு (இதுவே மருந்தாம்.)

(ஆ—ரை.) அறியாததல்லவிரு அறியாதவித்தியையுந்தை வகைக வேண்டுமெனவாம் அறியாதது, அறுதியென்றனர். கண்ணீ ரும் கம்பலையுமாக நின்றுமெத்தைமையடைகுமாகலின் 'விம்மி யழு' என்றனர். திருவாசகம் "சோதியானருமிற் சிந்தனிறைத்து விளையாசைப்படுமேன், பூநாள் சம்மதைக் கண்ணீர் ததும்பி வெதும்பி," எனவும், "அழுதாலுன்னைப் பெறலாமே" எனவும் வருவன வற்றுற் காண்க. (௩௫)

நாய்க்கொருசூடு மதற்கோர் மருந்துவைகாட்டிலுண்டோ
பேய்க்கொருஞானம் பிடிபடுமோபெருங் கற்சிலைக்கு

யாக்குவராம நகர்ந்துவரா ததுபோதுடம்பு
திக்கிரையாவதல்லா லேதுக்காமினைதச் செப்புதியே.

(பொ—ரை.) நாயினுக்கு ஒருகருப்பமுமா அக்கருப்பத்திலுக்கு ஒருவைத்தியருமுடை இவ்வுலகிலுளரோ, பேயினுக்கு ஞானம் பற றுமோ, பெரியவட்டிகளை வளர்ப்பவர்யாவர், ஆகாயிலேயுண்ப வர்யாவர், அதுபோல இந்தேகம் நெருப்பிலுக்கு இரையாகவிலே தல்லாமல் எதற்குப் பிரயோசனம் சொல்லுமகனே,

(கு—ரை.) பத்திரகிரியார் தன்னை வணங்கிநின்றபோது அவர் க்கொருறுதியுண்டாம்படி அருளிச்செய்த திருச்செய்யுளிது. நாயி னுக்கு மருத்துவஞ்செய்ய யாருமெத்தப்படார்போலப் பேய்போலு அலை பவனுக்கு ஞானம்போதிப்பாரெனவும், காக்கைகளை யாருக்கும் உப யோகப்படாததுபோலத் தேகமும் பிரயோசனமில்லையென்றனர். இதனால் கயப்பிணித்தரும் மாத்திரை நீக்கி உயிர்நிலைபெறுதரும் மாத்தி ரைகளைத் தலைகுதல் வழக்கத்திலிருத்தல்போல, பாசத்திலுக்கிது வாகிய உடலினைப்போஷியாது புண்ணியத்திற்கேதுவான உடலி னைப்போஷித்தல் நலமெனவேற்பட்டது. (கள)

கச்சிற்கிடக்குங் கனதனத்திற்கடைக் கண்கள்பட்டே
யிச்சித்திருக்கின்ற வேழைநெஞ்சே யிமவான்பயந்த
பச்சைப்பசுங்கொடி யுமைபங்கர் பாதத்திலே
தைச்சிடமனமே பொருகாலுந் தவறில்லையே.

(பொ—ரை.) இறுக்கிக்கட்டிய கச்சியினுக்குள் சமைந்திருக்கும் பெருத்ததனங்களிலே உன்னுடைய கடைக்கண்பார்வை பட்டதி னாலே, அத்தனத்தினை வாய்ந்த மாதர்களிடத்து ஆசைவைத்து நிற்கி க்கின்ற அறியாமையுள்ள மனமே! மலையரசன்பெற்றெடுத்த பச்சை வும் சுகமையாகிய பூங்கொடியை ஒத்தவளாகிய உன்னுடைய தே

விழிவினை வசமாகத்தில் உடையாரது திருவடிகளிலே கரும்பிரு மனமே ஒருகாலத்திலும் எனக்குத் தவறுதல் உண்டாகாது (கைகூடி கிடைக்கும்.)

(கு—ரை.) மாதர்கள் தனமயலில் மாந்தர்கள் சிக்குண்டு கிடப் பது சகசமாகலின் 'தனத்தில்—இச்சித்திருக்கின்ற வேளைமிகுந்தே' என்றனர். பயோதரப்பத்து, "மைந்தர்கள் மனத்தூறையிட்டு" என்ற 'தறுதாளம். திருவடிஞானமே சிவகதிக்கு ஏதுவாகலின் 'பாதத் தறுதாளம். நிலை தைசக்கிட' என்றனர். திருமந்திரம். "திருவடியே சிவமா வது தேரில், திருவடியே சிவலோகஞ் சிந்திக்கில், திருவடியே செல் கதியது செப்பில், திருவடியே தஞ்சமுட்டெளிவார்க்கே" என்றதனுங் (இஃ) காண்க.

மாறூர்ப் பிறவிக் கடற்சூறி வந்தனன் வாழ்குருவுந்
கோதறியெண்ணைக் குடியேற்றிக்கொண்டனன் குற்றமில்லை
போதுமிப் பேதிருந் தாலுமிப் பெற்றிப் பொய்யுடலை
ஞானமுடித்த வுடம்போடிருப்ப தருவருப்பே.

(பொ—ரை.) மாதர்களுடைய கண்ணாகிய வலைவினைக்கடற்கு கடந்தனன், சிவாலயத்தில் வாழ்கின்ற ஆச்சாரியனும் நாயகனுமி அடியேனைத் தனது திருவருட் புதியிற்குடியேற ஏற்றுக்கொண்ட னன் இனியெனக்கு யாதொரு குற்றமுமில்லை, (இனி) இவ்வுடல் நீங்கி றாலும் இவ்வுடம்பொடு உலகிலேயே வாழ்ந்தாலும் கவலையில்லை அஞ் ஞானம் இரகசியம், ஆனாலும் இத்தடத்திலிருப்பது மாத்திரம் அரு வருக்கத்தக்கதாகும்.

(கு—ரை.) அறிகருவியாகிய இச்சேர்க்கையிற் மாதர்கள்மோகத் தினின்று நீங்கியடையவேண்டிய குருகடாட்சம் பெற்றுவிட்ட

படியால் இனி உடல்இருக்கினும் இறக்கினும் ஒன்றேயாம். ஆன்றும் திருவருட்பேறு அடைந்தவரையில் உடற்பற்றால் யாதொருபிரயோசனமுமில்லையென்பார். 'உடம்போடிருப்ப தருவருப்பே' என்றனர்.

சற்றாகினுந்தன்னைத் தானறியாய்தன்னை யாய்ந்தவரை
யுற்றாகிலுமுரைக் கப்பொருந்தாயுனைக் காணகிலே
பற்றாய்க்குருவைப் பணியாய்பரத்தையர் பாலிற்சென்றே
பெற்றாய்மடநெஞ்சமே யுனைப்போலில்லை பித்தனுமே

(பொ—ள்.) சிறிதேனும் உன்னிலைமையினை நீயறியமாட்டா ய்; தன்னைவிசாரித்துத் தேர்ந்தவரை அடைந்தாயினும் அவர்கள் (நல்வழியுபாயங்களையெடுத்துச்) சொல்ல (அவற்றைக்கேட்கப்) பொருந்தமாட்டாய்; உனக்குத்தகுந்த நிலையானது இன்னதெனவரைச் சொல்லாய்; ஆசாரியனை வணங்காய்; வேசியரிடத்திற்போய் என்ன இலாபமடைந்தாய் அறியாமையினைவாய்ந்த மனமே! உன்னைப்போல வொருபித்தன் (இவ்வுலகில்) இல்லை.

(கு—ரை.) தன்னைத்தானறிதலாவது ஆன்மா சுதந்தரனல்லனென்றும், எக்காலும் ஆண்டவனுக்கு அடிமையென்றும், கன்மத்திற்குத்தக்கபடி ரூபகல்பனையறிவித்தாலன்றி யொன்றையுமறியானென்னும் தெரிந்துகொள்ளுதல். தன்னையாய்ந்தவர் என்பது ஆன்மவிசாரம் செய்தவர்; உனைக்காணகிலை என்பது திருவருளைப்பற்றிக்கிடந்தவர், குருவைப்பணியாய் என்றது இவையனைத்தும் தேர்தற்குக்காரணமாயிருப்பது ஆசாரியவழிபாடு என்பதாம். (௬௦)

உளியிட்டகல்லையு மொப்பிட்டசாந்தையு மூத்தைபரப்
புளியிட்டசெம்பையும் போற்றுகிலேனுயர் பொன்னெனவே

பொளிவிட்டதாளிரண் டென்னெஞ்சிருத்துவ தாண்மையென்று
வெளிவிட்டடைத்தனைந்தே னினிமேலொன்றும் வேண்டிலனே.

(பொ—ரை.) இரும்புவுளியினால் செதுக்கப்பட்ட கற்சிலையினையும், தங்கங்கள் ஒழுங்குறவமைத்த கன்னச்சாத்திரநூற் செய்யப்பட்ட உருவத்தையும், புளியீட்டுத் துலக்கிய செம்புவிக்கிரகத்தையும் தரித்து வணங்கேன், உயர்ந்தபொன்னுக்குச் சமானமெனவே பிரகாசியாநின்ற (சிவபெருமானுடைய) இரண்டு திருவடிகளை மனத்திலுள்ளே வைப்பது (கூடுமான) தன்னிலையென்றுசொல்லித் தியானத்தினையடைந்துகொண்டேன் இனிமேலென்றைக்கும் ஒருபொருளும் வேண்டியதில்லை.

(கு—ரை.) பயிர்மூசத்தில் கற்சிலையினையும், சார்துருவத்தினையும், பொற்சிலையினையும் தரிசிக்கிறகாலத்தில் அவ்வவ்வுருவங்களாகத் தோன்றுவதேயன்றித் தெய்வவடிவாகத் தோற்றுவதற்குப் பக்குவப்பேறுகளின் அப்பாவனையால் அபசாரப்படாது, அத்தருணத்தில் சிவபெருமான் திருவடிகளைத் தியானிக்கத்தலைக்கொண்டனர். விக்கிரகங்களைத் தெய்வமாகப்பாவியாது தெய்வத்தை விக்கிரமாகப் பார்க்கவேண்டுமாகலினாலும், அது அதிதீவிரப் பக்குவமுடையார்க்கே விளங்குமாகலினாலும், அங்ஙனப்பக்குவம் விளையாதவழி மனத்தியானத்திலேயே திருப்திபடையவேண்டியதாகலினாலும், 'இனிமேலொன்றும் வேண்டிலனே' என்றனர். இங்ஙனம் பொருள்கொள்ளாது சிலர் ஆசிரியர் விக்கிரகாராதனையை மறுத்துக்கூறினரென்பர். அங்ஙனம் அவர்கள் 'தாளிரண்டு' எனத் திருவடியைக்குறித்த உண்மையைத் தேராதவராவர், 'தாள்' உருவத்திற்கன்றி அருவத்திற்கின்றென்பது யாருமறிந்ததே; 'தாள்' என்பதற்கு வேறு பொருள்கூறி இடர்ப்படுவோருமுளர். அவர்கள் விடாப்பிடியாயமாக உரைகொள்பவரேயாகும். (கஅ)

கல்லாலெறியுண்டுங் காலாலுதையுண்டுங் காவிரைநவில்
வில்லாலடியுண்டு முன்னாள் விடமுண்டு மெரிசிரித்துப்
பல்லாற்புரமெரி யேகம்பவாணர பதாம்புயத்தின்
சொல்லார்செவியினிற் கேளாதிருந்ததென் றொல்வினையே.

(பொ—ரை.) கல்லினாலே யெறிபட்டும், காலினால் உதைபட்டும், (ஒரு) ஆண்மகனுடைய வில்லாலடியுண்டும், பூர்வத்தில் விஷத்தினையுட்கொண்டும் அதற்குமேல் சிரித்துப் பல்லினால் திரிபுரத்தினையெரித்த ஏகாம்பரநாதர் திருவடித்தாமரையின் தோத்திரத்தினை (என்) காதாரக்கொள்ளாதிருந்ததற்குக் காரணம் என்னுடைய பண்டையவினையேயாம்.

(கு—ரை.) கல்லாலெறிந்தவர் சாக்கியநாயனார், காலினாலுதைத்தவர் கண்ணப்பநாயனார், வில்லாலடித்தவர் அருச்சுனன், விஷம் சாப்பிட்டது தேவர்கள்க்ஷேமார்த்தம், திரிபுரமெரித்தது சிவபூசையினின்றும் வழுவியநிமித்தம். காஞ்சி ஏகாம்பரநாதன் பெரும்புகழ்த் தனதுகாதினுக்கெட்டாதிருந்தது தொல்வினையே காரணமென்றனர். (௯௨)

ஒருநான்குசாதிக்கு மூவகைத்தேவர்க்கு முற்பவருக்குந்
திருநாளுந்தீர்த்தமும் வேறுளதோவத் திசைமுகனும்
வருநாளில்வந்திடு மந்தக்கன்ஞானன் வகுப்பெடுத்த
குருநாதனுறைகண்டபர் பின்னையெதிற் றுவையதிதே.

(பொ—ரை.) (உலகில் விளங்கும்) ஒருநான்காகப் பிரிக்கப்பட்ட சாதியில் (வந்தபெரியோர்கட்கும்) மூன்றுவகைப்பட்ட தேவர்கட்கும் தேவர்களுக்கும் (உண்டாயிருக்கிற) திருவிழாக்களும், தீர்த்தங்களும், (சிவபெருமானுக்கு அன்னியமாக) வேறுயுண்டோ (இல்லை)

135-ம் பக்கம்

பட்டினத்தார் தாயாரின் தகனகிரியைகளை முடித்தல்.

தான்முகனால் வகுக்கப்பட்டநாள்களில் (வருவன) வந்தவினையும், அந்தத்தலைவனாகிய பிரமன் (விதித்த) கிரமங்களையனுபவித்தொழித்தால் ஆசாரியன் கட்டளையுண்டாம் (இவ்விரண்டினுக்கும்) வேறுளதன்றே இவ்வுலகின்கண்ணே.

(கு—ரை.) சிவானுக்கிரகம்பெற்றவரையே உலகம்கொண்டாடி மகிழுமாகலின் அப்பெருமானுக் கன்னியமாக வேறொன்றுமில்லையென்பார். 'வேறுன்றோ' என்றனர்; அவரவர்கள் கன்மத்திற்குத் தகுந்தபடி பிரமன் விதித்துள்ள போகங்களை யனுபவித்தொழிந்த பின்னரே திருவருள்பதியக் குருகடாட்சமுண்டாகலின் பிரபஞ்சானுபவத்தில் திருவருளனுபவமும், திருவருளனுபவத்தில் பிரபஞ்சானுபவமும் விளையாதென்பதாம். (௬௨)

---

## எண்சீர் விருத்தம்.

நாப்பிளக்கப்பொய்யுரைத்து நவநிதியந்தேடி
நலமொன்று மறியாத நாரியரைக்கூடிப்
பூப்பிளக்கவருகின்ற புற்றீசல்போலப்
புலபுலெனக்கலகலெனப் புதல்வர்களைப்பெறுவீர்
காப்பதற்கும்வகையறியீர் கைவிடவுமாட்டீர்
கவட்டுத்தொல்மரத்துளையிற் காலுழைத்துக்கொண்
ஆப்பதனையசைத்துவிட்ட குரங்கதனைப்போல [டே
வகப்பட்டீர் கிடந்துழல வகப்பட்டீரே.

(பொ—ரை.) நாவானது பிளக்கும்படிப் பொய்யுரைத்தையலைப்பேசி மக்கள்திரவியத்தைச் சம்பாதனைசெய்து நன்மை

யென்பது சிறிதுமில்லாத பெண்களைப்புணர்ந்து, பூமியானது பிள த்துபோம்படி எழுகின்ற புற்றிலிருந்துவரும் ஈசலினைப்போலப் புல புலவெனவும் கலகலவெனவும் பிள்ளைகளைப்பெற்றிடுவீர் அப்பிள்ளை களைக் காப்பாற்றுதற்கும் வகையேதுமறியீர் அவர்களைக்கைவிட்டிரு க்கவுமாட்டீர் இலையுடன்கூடிய பழைய வொருமரத்தின் பிளவில் காலைத்துறுத்துக்கொண்டு (அப்பிளவினுக்குத் தச்சன்வைத்துப்போ ன) ஆப்பினையசைத்து பிடுங்கிவிட்டபின் (தனதுகாலைமாட்டிக்கொ ண்டு துன்பப்படும்) குரங்கினைப்போல (இப்பிரபஞ்சத்தில்) அகப் பட்டுக்கொண்டீர் தங்கித்திரியவசப்பட்டீரே.

(கு—ரை.) திருவாரூரில் தன்னையடுத்து மிருந்தவிசுவாசத்துட னிருந்த ஒருவனுக்கு விவாகம்நடந்தகாலத்தில் அவன்வேண்டுகோ ளுக்கிணைந்து அவன்மணைப்பந்தலுக்குச் சென்று அவனுக்கு இனி நேரிடுங்காரியத்தை கூறவேண்டி இச்செய்யுளைப் பாடிச் சேவை யிட்டு ஆசீர்வதித்துச்சென்றனர். தச்சனொருவன் ஒருநெடுமரத்தினை வாளால் அறிந்தா மறந்து அப்பிளவிற்கு ஆப்புவைத்துவிட்டுப் போனசமயத்தில் குரங்கோடிவந்து அப்பிளவில் காலையிட்டு ஆப்பி னைப்பிடுங்கிய பின்காலமாட்டிக்கொண்டு துன்பமுற்றதுபோல, உல கின்னதெனச் சிறிதுமாராயாது அப்பிரபஞ்சமயமாய் விவாகம் முடித்துக்கொண்டு பின் திண்டாடப்பெறுவரென்பதாம். (௧௭)

---

அறுசீர் விருத்தம்.

மத்தனை தயிருண்டாறு மலர்மிசைமன்னினானும்
நித்தமுந்தேடிக்காணா விமலனைநீயின்றேகிச்
செய்த்தலைகயல்பாய்சாரங்கூர் செந்தனைவேந்தனிட்ட
கைத்தளைநீக்கியென்முன் காட்டுவெண்காட்டுளானே.

(பொ—ரை.) மத்தினாலே கடையப்பட்ட தயிரினைத் திருடி யுண்டவனாகிய கிருஷ்ணனான நாராயணனும், தாமரைமலரின்மே லிலேபெற்றவனாகிய பிரமனும் பிரதிதினமும் தேடியும் அவர்கட்குக் காணப்படாதுநின்ற மலரவிதனே தேவரீர் இன்றையதினம்சென்று கழனிகளிடத்தில் கயற்கண்டைகளோடியுலவும் சிங்கூர்சேந்தன் என்பவனை அரசன்போட்டுவைத்த கைவிலங்கினைத்தறித்து எனக்கு முன்னே அவனைக்காட்டவேண்டும் திருவெண்காட்டிலிருப்பவனே.

(கு—ரை) திருவெண்காடர் துறவடைந்தபின் தனதுகாரியஸ்தனை அரசன்சிறையிட்டிருப்பதனைக் கேள்வியுற்று அவனை விலங்கி னின்றும்நீக்கித் தன்முன்னே கொண்டுவரும்படி பாடிய திருச்செய்யுளிது. (௩௫)

---

## தாயாருக்குத்
## தகனக்கிரியைச் செய்கையிற்பாடிய
### வெண்பா.

ஐயிரண்டுதிங்களா யங்கமெலா நொந்துபெற்றுப்
பையலென்றபோதே பரிந்தெடுத்துச்—செய்யவிரு
கைப்புறத்தி லேந்திக் கனகமுலை தந்தாளை
யெப்பிறப்பிற் காண்பே னினி.

(பொ—ரை.) பத்துமாதங்களாக (வயிற்றில்) சுமந்து உடம்பு முழுவதும் நொந்து பெற்றெடுத்து (அயலிலுள்ளவர்கள்) ஆண்குழந் தையென்றவுடனே ஆசையுடனெடுத்துச் செவ்விய இரண்டுகைக ளினுமேந்திக்கொண்டு பொன்மலைபோன்ற முலையினின்றும் பாலி னையுண்பித்தவளை இனி யெந்தச்சென்மத்தில் காணப்போகிறேன்

(கு—ரை.) ஒருவள் தனது பிரசவகாலத்தில் எவ்வளவு துன்பமடைந்து மூர்ச்சித்திருக்கினும் பிறர் பிறந்தது ஆண்குழந்தையென்றமாத்திரத்து அத்துன்பமனைத்தையும் ஒருபொருட்டாக மதியாது அப்பிள்ளையினிடத்து மிக அன்புபாராட்டுவாளென்பதாம். பெண்குழந்தையினிடத்து அவ்வளவு அன்புசெலுத்தாது என்பது குறிப்பால் விளக்குகிறது. (௩)

முந்தித்தவங்கிடந்து முந்நூறு நாட்சுமந்தே
யந்திபகலாச்சிவனை யாதரித்துத்—தொந்தி
சரியச்சுமந்துபெற்ற தாயார்தமக்கோ
வெரியத் தழன்மூட்டுவேன்.

(பொ—ரை.) (கருப்பமாயிருப்பதற்கு) முன்னே அனேகமான விரதங்களையெல்லாம் அனுஷ்டித்து, (கருப்பமாயிருந்தபிறகு) முந்நூறுநாள்களளவையில் இரவும்பகலும் (தனதுகருப்பத்திலிருக்கு மாதொரு பங்கமும்வாராதபடி) சிவபெருமானைபூசித்து வயிறுசரியச் சுமந்தீன்ற (என்னுடைய) தாயினுக்கோ நெருப்பெரியமூள்விப்பேன்.

(கு—ரை.) தனது அன்னை இறந்தவுடன் தமது சுற்றத்தினர் சுடுகாட்டிற்குத் தூக்கிக்கொண்டுபோக அவர்களையெல்லாமெதிர்த்துத்துரத்திவிட்டுத் தானே தன்தாயினை யெடுத்துக்கொண்டுபோய் பச்சைவாழைமரங்களின்மீது வைத்துத் தீமூட்டப்பாடிய திருச்செய்யுள்கள் முந்தியது முதல்பின்னேழும். (௪)

வட்டிலிலுந் தொட்டிலிலு மார்மேலுந் தோண்மேலுங்
கட்டிலிலும் வைத்தென்னைக் காதலித்து—முட்டச்

சிறகிலிட்டுக் காப்பாற்றிச் சீராட்டுந்தாய்க்கோ
விறகிலிட்டுத் தீமூட்டுவேன்.

(பொ—ரை) வஸ்திரத்தினுற் செய்யப்பட்ட ஏணையிலும், மரத்தொட்டிலிலும், தனது மார்பின்மீதும், தோளின்மீதும், மஞ்சத்திலும், என்னைவளர்த்தி விரும்பி முழுதும் இடைப்பில்லைத்துக் காப்பாற்றிச் சிறப்புச்செய்யும் தாயாரையோ விறகின்மீதிட்டு நெருப்பை மூள்விப்பேன்.

(கு—ரை.) குழந்தைகள் அழுகிறகாலத்தில் அக்குழந்தைகளின் சோகத்தினைத் தெரிந்துகொள்வதற்குக் கூடாமல் அவ்வழுகையினை மாற்றவும், சுகமாக நித்திரைசெய்விக்கவும் பலவிடங்களில் வைத்துவைத்துச் சுகப்படுத்துவது தாய்மார்வழக்கமென்பதாம். (௧)

நொந்து சுமந்து பெற்று நோவாம லேந்திமுலை
தந்துவளர்த் தெடுத்துத் தாழாமே—யந்திபகல்
கையிலே கொண்டென்னைக் காப்பாற்றுந் தாய்தனக்கோ
மெய்யிலே தீமூட்டு வேன்.

(பொ—ரை.) (அநேகப்) பிரயாசையுடன் வயிற்றில் (பத்துமாதம்வரையில்) தாங்கிப் பின்பெற்றெடுத்து வளர்த்து விருத்தியடைவித்து (என்னைத்தனியே) விட்டுத் தள்ளிவிடாமல் இரவும்பகலும் தனது கையிலெடுத்தே யேந்திக்கொண்டு என்னைக் காப்பாற்றினதாயினுக்கோ உடம்பின்கண்ணே நெருப்பைமூட்டுவிப்பேன்.

(கு—ரை.) தான் எனதுநிமித்தம் எவ்வளவுதுன்பமடையினும் அதனைப்பாராட்டாது எனக்கொரு சிறிதுதுன்பமும் வாராதபடி பாதுகாத்துவந்த அருமைத்தாயின் உடலில் அக்கினிபடும்படி எங்ஙனம் மனந்துணிவேனென்றனர். (௨)

அரிசியோநானிடுவே னாத்தா டனக்கு
வரிசையிட்டுப் பார்த்துமகிழாமல் — உருசியுள்ள
தேனே யமிர்தமே செல்வத் திரவியப்பூ
மானே யெனவழைத்த வாய்க்கு.

(பொ-ரை) அன்னையினுக்குவரிசைவைத்துப்பார்த்துச் சந்தோஷிக்காமல் சுவைவாய்ந்ததேனே, தேவாமிர்தமே, செல்வச்சம்பத்தினைவாய்ந்த மகனே, என (அன்புடனே) அழைத்துவந்தவாயினுக்கு நான் அரிசியினையோ போடுவேன்.

(கு-ரை.) பற்பலஇனிய சொற்களினால் அன்புடனே என்னையழைத்துவந்த எனது அன்னையின்வாயினுக்கு அத்தகைய இனிமையான பதார்த்தங்களைக்கொடுத்து சன்மானிக்காமல் அவ்வாயில் வாய்க்கரிசிபோடும்படி நேரிட்டது என்தலைவிதியோ வென்றனர். ()

அள்ளியிடுவ தரிசியோ தாய்தலைமேற்
கொள்ளிதனை வைப்பேனோ கூசாமல் — மெள்ள
முகமேன் முகம்வைத்து முத்தாடியென்றன்
மகனே யெனவழைத்த வாய்க்கு.

(பொ-ரை.) (ஆசையுடையவளாய்) மிருதுவாக என்முகத்தின் மீது தன்முகத்தினைவைத்து முத்தமிட்டு எனது மகனே யென்றழைத்த வாயினுக்கு வாய்க்கரிசியையோ அள்ளிப்போடுவது தாயினுடைய சிரசின்மேலே, கைகூசாமல் கொள்ளியினை யிடுவேனோ.

(கு-ரை.) பேரானந்தத்துடனணைத்து முத்தமிட்ட எனது அன்னையின்சிரசில் அக்கினியையும், மிகுந்த உருக்கமுடன் என்மகனே என்றழைத்த வாயினுக்கு வாய்க்கரிசியும் போடும்படி நேரிட்டுவிட்டதும் கன்மமேயெனத் துக்கித்தபடியாம். (௭)

### கலிவிருத்தம்.

முன்னையிட்டதீ முப்புரத்திலே
பின்னையிட்டதீ தென்னிலங்கையி
லன்னையிட்டதீ யடிவயிற்றிலே
யானுமிட்டதீ மூள்கமூள்கவே.

(பொ-ள்.) முதலில் (சிவபெருமானால்) இடப்பட்ட நெருப்பு முப்புரத்தின்கண்ணே (மூண்டெரிந்தது) பிற்பாடு (அநுமனால்) இடப்பட்ட நெருப்பு தென்னிலங்கைநகரில் (மூண்டெரிந்தது) (இப்போது) என் தாயாரால் இடப்பட்ட நெருப்பு என்னுடைய அடிவயிற்றில் (மூண்டெறிகின்றது) (அங்ஙனமாக) யானும் தாயாருடம்பில் இட்டநெருப்பு மூண்டெரிக மூண்டெரிக.

(கு-ரை.) பெருநெருப்பு விஷயமாகப் பிரஸ்தாபிப்பது முப்புரத்திலேயும் இலங்கையிலேயுமாகலின் அவ்விரண்டினையும் கூறினர். முப்புரத்திலேயுண்டானதுபோல என்வயிற்றிலுண்டாயதென்றும், அநுமார் மூட்டியதுபோல நான்மூட்டினேனென்றும் குறிப்பித்தனர். அதாவது தனக்குண்டாய துக்கம் இவ்வளவிற்றெனக் கூறமுடியாதெனவும் தாயிடவேண்டியது இன்றியமையாத செயலெனவும் தெரித்தனர். (அ)

### வெண்பா.

வேகுதே தீயதனில் வெந்துபொடிசாம்ப
லாகுதே பாவியேன்னையகோ — மாகக்
குருவிபறவாமற் கோதாட்டி யென்னைக்
கருதி வளர்த்தெடுத்த கை.

(பொ-ள்.) ஆகாயத்தில் பறக்கின்ற பறவைகள் (எனக்குநேர்க்கமேலே) பறவாதபடி என்னைப்பாராட்டி (மனத்திலேஅன்புடனே)

எண்ணிவளர்த் தெடுத்தகையானது நெருப்பிலவேகாநிற்றேநிற, வெந்து ஒன்னியசாம்பலாயிற்றே ஐயகோ தீவினையேன் எங்ஙனம்பார்த்துக்கொண்டிருப்பேன்!

(கு-ரை.) ஆகாயத்தில் சஞ்சரிக்கும் பட்சிகட்குநேரே காலைமாலைகளில் சிறுகுழந்தைகள் நேர்படில் பட்சிதோடமுண்டாமென்பது சாஸ்திரவழக்காதலின் 'குருவிபாராமல்' என்றனர். இம்மைக்குவேண்டியவற்றைநல்லாங் உதவி மறுமையிற்புத்தென்னுநரகத்திற்கும் போகாதபடி நடத்த மோட்சத்தையடைதற்கு வேண்டிய வைதிக சாதனங்களையும் நடத்திவருவானென்று தாயெண்ணியிருந்தாளாதலால் 'கருதி' என்றனர். (அ)

வெந்தாளோ சோணகிரி வித்தகா நின்பதத்தில்
வந்தாளோ என்னை மறந்தாளோ — சந்ததமு
முன்னையே நோக்கி யுகந்துவரங் கிடந்தென்
றன்னையே யீன்றெடுத்த தாய்.

(பொ-ரை) திருவண்ணாமலையி லெழுந்தருளியிருக்கின்ற ஞானவடிவானவனே! எப்போதும் தேவரீரையேநாடி மகிழ்ச்சியுடன்வரம் பெறவேண்டித்தங்கி என்னைப்பெற்றெடுத்த தாயானவள் வெந்து போயினளோ, உன்திருவடியில்வந்து சேர்ந்தனளோ என்னைமறந்துவிட்டனளோ.

(கு-ரை.) திருவெண்காடரைப்போன்ற சற்புத்திரனைப்பெறுதற்குச்சிவபெருமானை நோக்கி அரியதவங்கிடந்திருந்தாலன்றிப் பலியாதாதலின், 'வரங்கிடந்து' என்றனர். சங்கசக்கப்படரித்தியாக மடையத்தக்கொரு புத்திரனைப்பெற்றவள் உடனேமோட்ச மடைவள் என்பது சாஸ்திரசித்தமாதலின் 'நின்பதத்தில்வந்தாளோ' என்றனர். (கூ)

வீற்றிருந்தா ளன்னை வீதிதனி லிருந்தாள்
நேற்றிருந்தா ளின்றுவெந்து நீறானாள் — பாற்றெளிக்க
வெல்லீரும் வாருங்க ளேதென் றிரங்காம
லெல்லாஞ் சிவமயமே யாம்.

(பொ-ரை.) (எனது) தாயானவள் (சுகமாக) விருந்துகொண் டிருந்தாள் வீதியிலு (மலைந்து) கொண்டிருந்தாள், நேற்று (சீவதி சையுட) னிருந்தாள் இன்றையதினம் (நெருப்பில்) வெந்து சாம்ப லாயினாள், இதென்ன ஆச்சரியமென்று (மனம்) இரங்காமல் பால் தெளிக்கும் பொருட்டு நீவிரெல்லோரும் வாருங்கள் எல்லாம் சிவம யமேயாகும்.

(கு-ரை.) தனது தாயார் தனைக்கிரியையின் முன்னிலையாக உ லகநிலையாமையினைக் குறிப்பித்தனர். இந்நிலையசெயல்பிரபஞ்சத்தில் நிகழ்வது சகசமாமென்பர் 'ஏதென்றிரங்காமல்' என்றனர்; தோன்று தலும், வாழ்தலும், இறத்தலும் நமது விருப்பத்தின்படி சிறிதும் நடவாது பூர்வகன்மத்திற்குத் தக்கபடி சென்றுகூட்டிவைப்பானென் பர் 'எல்லாம் சிவமயமே' என்றனர். (௩௦)

---

## திருவிடைமருதூர்.

மென்று விழுங்கி விடாய்கழிக்க நீர்தேட
லென்று விடியுமெனக் கெங்கோவே — நன்றி
கருதார் புரமூன்றுங் கட்டழலாற் செற்ற
மருதாவுன் சந்நிதிக்கே வந்து.

(பொ-ரை.) என் தலைவனே! நன்மையினை விரும்பாதவர்களுடை ய முப்புரங்களையும் பெருநெருப்பினால் சாம்பலாக்கின திருவிட

மருதூர்ப்பிரானே! தேவரீருடைய சந்நிதியிலேயிருந்து ஆகாரத்தினை மென்று உட்கொண்டு தாகவிடாய் தணித்துக்கொள்ளும்பொருட்டு நீரினைத்தேடுந்தொழிலானது எக்காலத்தில் எனக்குமுடிவுபெறும்.

(கு—ரை.) திருவருண்மயமாகவிளங்கும் சிவாலயத்திலேயே யிருந்துகொண்டு, பசிப்பிணிபொருட்டுப் பிறரைநாடி ஆகாரத்திற்கு வேண்டியவற்றைக் கொள்ளாதிருக்கும் நாள் எக்காலம் சித்திக்குமென்பார் 'என்றுவிடியும்' என்றனர். (க)

## திருவொற்றியூர்.

கண்டங் கரியதாங் கண்மூன் றுடையதாம்
அண்டத்தைப் போல வழகியதாந்—தொண்டர்
உடலுருகத் தித்திக்கு மோங்குபுக ழொற்றிக்
கடலருகே நிற்குங் கரும்பு.

(பொ—ரை.) புகழானது ஓங்கிய திருவொற்றியூரின் சமுத்திரக் தீரத்திலேயிருக்கும் கரும்பானது கண்டம் கருமையானதாம், மூன்று நேத்திரங்களையுடையதாம், ஆகாயத்தினைப்போல அழகினையுடையதாம், சிவனடியார்கள் திருமேனியானதிளகத் தித்தித்துக்கொண் டிருக்கும்.

(கு—ரை.) சிவனடியார்கள் திருவொற்றியூர்ப் படம்பக்கநாதனைத் தியானிக்குந்தோறும் அவர்கள் மனத்தில் பேரானந்தசுவை விளைந்துகொண்டிருக்குமாகலின் அக்கடவுளைக் கரும்பென்றனர். (உ)

ஓடு விழுந்து சீப்பாயு மொன்பதுவாய்ப் புண்ணுக்
கிடு மருந்தை யானறிந்து கொண்டேன்—கடலருந்து

தேவாதி தேவன் திருவொற்றி யூர்த்தெருவிற்
போவா ரடியிற் பொடி.

(பொ—ரை.) கட்டிகள் உண்டாகிச் சீப்பாயாகின்ற ஒன்பது துவாரங்களுள்ள உடலினுக்கு இட்டு அதனைப்பரிகரிக்கத்தகுந்த ஔடதத்தினை நான்தெரிந்துகொண்டேன் அதென்னெனின் நஞ்சினையுண்ட தேவாதிதேவனுடைய திருவொற்றியூர்த் தெருவின்கண்ணே நடப்பவர்களுடைய திருவடியின்துகளேயாம்.

(கு—ரை.) சிவனடியார்கள் நெருங்கி எக்காலத்துமுலவும் திருவொற்றியூர் மாடவீதியிலுள்ள மண்ணிற் சிறிதினையொருவன் சிரசிற்றரித்துக்கொள்ளுவானேல் அவன் பிறப்புஎடுத்தற்கேற்ற வினையானது நீங்கிவிடுமென்பதாம். இது மூர்த்திக்ஷேத்திரமாகலின் - இவ்வுண்மை நமது திருவெண்காடர் தெரிந்தன்றோ, பற்றற்றதுறவியாகிய அவர் உலகத்தின்கண்ணே பற்பலக்ஷேத்திரங்களையும் விரும்பாது இத்தலத்தினையடைந்து ஞானசமாதிகொண்டு வீற்றிருந்தருளினர். (௮)

வாவி யெல்லாந் தீர்த்த மணலெல்லாம் வெண்ணீறு
காவணங்க ளெல்லாங் கணநாதர் — பூவுலகில்
ஈது சிவலோக மென்றென்றே மெய்த்தவத்தோ
ரோதுந் திருவொற்றி யூர்.

(பொ—ரை.) இது இவ்வுலகத்திலுள்ள சிவலோகமாகும் என்று பலதரம்தோத்தரித்து மெய்கண்ட தவத்தினையுடையவர்கள் புகழ்ந்துகொண்டிருக்கும் திருவொற்றியூரிலுள்ள தடாகங்களியாவும் புண்ணியதீர்த்தங்களாம், மணல் முழுவதும் திருவெண்ணீறும், சோலைகளெல்லாம் சிவகணங்களாம்,

(கு—ரை) திருவொற்றியூர்ப் பூலோககைலாசமென்னச் சிவஞானிகள் சொல்லுவதால் உண்மைச் சிவனடியார்கட்கு அத்தலத்துத் தடாகங்கள் புண்ணியதீர்த்தமாகவும், மணல் விபூதியாகவும், விருட்சங்கள் சிவகணங்களாகவும் தோன்றுமென்பதாம். ஆகவே திருவெண்காடர் தாங்கண்ட அநுபவ உண்மையை யிங்ஙனங் கூறினர். (௪)

### திருவாரூர்.

ஆரூரிங்கிருக்க வவ்வூர்த் திருநாளென்
றூரூர்க டோறு முழலுவீர்—நேரே
யுளக்குறிப்பை நாடாத வூமர்கா ணீவீர்
விளக்கிருக்கத் தீத்தேடு வீர்.

(பொ—ரை) திருவாரூருடையார் இவ்விடத்திலிருக்க (இத்தலத்தினைக் கடந்து) அந்தவூரில் திருநாளென்றும், எல்லாவூர்களிலும் சென்று அலைபவர்களே! நேராக மனக்கருத்தையறியாத மூங்கைகளே! நீங்கள் தீபமிருக்க நெருப்பைத்தேடுவீர்கள்.

(கு—ரை) "புகழுமூவரி னுருத்திரமூர்த்தி பொங்கொளியிற், றிகழுஞாயிறு வகைகளிற் செம்பொனஞ்சிலம்பு, பகருமந்திரத் தஞ்செழுத் தென்னவே பலவா, நகரின்மேன்மைபெற் றதுமலையு மாரம்." என்றபடி இத்தலத்திலு திருவிழாவைத் தரிசித்தபின் வேறு தலத்தின் திருவிழாவை தரிசிக்க மனமவராதாகலின், ஊரூர்க டோறுமுழலுவீர், என்றனர். (௫)

### திருவையாறு.

எருவாய்க் கிருவிரன்மே லெழுவண் டிருக்குங்
கருவாய்க்கோ கண்கலக்கப் பட்டாய்—திருவாரூர்த்

தேரோடும் வீதியிலே செத்துக் கிடக்கின்றாய்
நீரோடும் தாரைக்கே நீ.

(பொ—ரை.) மலத்துவாரத்திற்கு இரண்டங்குலத்திற்கு மேலே ஏறிய புழுக்கூடாகிய பிறப்பிடத்திற்குக் கண்கலக்கினை, திருவாரூரிலுள்ள தேரோடும் திருவீதியில் நீ நீரோடும்வழியின்பொருட்டு மாண்டுகிடக்கிறாயே.

(கு—ரை.) தன்னைப்பிடித்திருந்த ஒருசெல்வடியார் தன்கட்டளைப்படி விவாகம்செய்து வாழ்ந்துகொண்டிருக்கையில் பெண்சம்பந்தமான சுகசன்னியினால் மாண்டுபோக அதுதெரிந்து அவளைச்சமீபித்து இத்திருச்செய்யுளைப்பாடி எழுப்பிவிட்டனர். (௭)

## திருக்காளத்தி.

பொய்யை யொழியாய் புலாலைவிடாய் காளத்தி
ஐயரையெண்ணா யறஞ்செய்யாய்—வெய்ய
சினமே யொழியாய் திருவெழுத்தைந் தோதாய்
மனமே யுனக்கென்ன மாண்பு.

(பொ—ரை.) மனமே! பொய்பேசாதிராய், புலாலுண்ணுதலினின்றும் நீங்காய், திருக்காளத்திநாதனை நினைக்கமாட்டாய், தருமத்தினைச்செய்யாய், கொடியகோபத்தினை நீக்காய், அழகிய பஞ்சாட்சரத்தினைசெபியாய், உனக்கென்ன பெருமையுண்டாகப்போகிறது.

(கு—ரை.) ஒருவன் மனிதப்பிறப்பையெடுத்து அதனாலடையவேண்டிய அரியபாக்கியத்தையடையவேண்டுமாயின் நீக்கவேண்டுவன சில, செய்யவேண்டுவன சில, அவையாவன பொய், புலால்,

கோபம் இவற்றையொழிதல்வேண்டும். சிவசிந்தனை, சிவதருமச்சிந்தனை, பஞ்சாட்சரதியானம் இவற்றைப்பெறல்வேண்டும். (எ)

## திருக்காஞ்சி.

எத்தனையூ ரெத்தனைவீ டெத்தனைதாய் பெற்றவர்கள்
எத்தனைபே ரிட்டழைக்க வேனென்றே—நித்தம்
எனக்குக் களையாற்ரு யேகம்பா கம்பா
உனக்குத் திருவிளையாட் டோ.

(பொ—ரை.) திருவேகம்பமுடையானே! கம்பாநதியுடையானே! எத்தனை ஊர்கள், எத்தனை வீடுகள், எத்தனை தாய்மார்கள் ஈன்றோர்கள், எத்தனைபேர்வைத்தழைக்க ஏன என்றுவிட்டதொழித்தென்று நாள்தோறும் அடியேனுக்கு விடாய்தணியாய் தேவரீருக்கு இது ஒருதிருவிளையாட்டாயிருக்கிறதோ.

(கு—ரை.) எடுத்த சனனங்கட்கு எண்ணிக்கை இவ்வளவென கணக்கிட முடியாதாகிலும், அந்தந்த சென்மங்கள்தோறும் அனுபவித்த துன்பங்கட்கு அளவில்லையாகிலும் அதனால்விடாயுற்றிருக்குமெனக்கு இச்சென்மத்திலாவது அக்களைதீர்த்து இனி சென்மமெடாதபடி செய்வாயென்பார் 'களையாற்ருய்' என்றனர். 'திருவிளையாட்டோ' எனச்சந்தேகித்ததனால் திருவிளையாட்டன்று எனது கன்மமென்றபடியாம். (அ)

## திருவிருப்பையூர்.

மாதாவுடல்சலித்தாள் வல்வினையேன் கால்சலித்தேன்
வேதாவுங் கைசலித்து விட்டானே—நாதா
விருப்பையூர் வாழ்சிவனே யின்னமோ ரன்னை
கருப்பையூர் வாராமற் கா.

(பொ—ரை.) (என்னைப்பெற்ற) தாயானவள் உடம்புதளர்ந்தாள், வலியவினையையுடைய நான்கால் ஓய்ந்துவிட்டேன், பிரமனும் கைதளர்ந்துவிட்டான், தலைவனே திருவிருப்பையூரில் வாழ்கின்ற சிவபெருமானே இனிமேலும் ஒருதாயினுடைய கருப்பையாகிய ஊரில் வருந்தப்பொருந்தாமல் என்னைக்காத்தருள்வாயாக.

(கு—ரை.) எடுத்தசன்மங்கட்கு அளவில்லையாகலின் அவ்வளவு சென்மங்களிலும் என்னைப்பெற்ற தாய்மாரும், சிருட்டித்தபிரமனும், கொன்ற இயமனும் சலித்துவிட்டனர்களாகலின் இனியவர்கட்குச் சிறிது ஆறுதலுண்டாம்படி என்னைப்படையாதிருக்கவேண்டுமென்றனர். (க)

## திருக்காரோணம்.

அத்திமுத லெறும்பீ றானவுயி ரத்தனைக்குஞ்
சித்தமகிழ்ந்தளிக்குந் தேசிகா—மெத்தப்
பசிக்குதையா பாவியென் பாழ்வயிற்றைப்பற்றி
பிசிக்குதையா காரோணரே.

(பொ—ரை.) யானைமுதலாக எறும்பு ஈறாகவுள்ள எல்லாவுயிர்கட்கும் மனமகிழ்ந்து அவைகள்வேண்டியவற்றைக் கொடுக்கின்ற ஆசாரியனே! மிகவும் பசிக்கின்றது ஐயனே! பாவியாகிய என்னுடைய பாழாகிய உதரத்தைப்பற்றி இழுக்கின்றது கடவுளே திருக்காரோணத்திலிருப்பவரே!

(கு—ரை.) ஆன்மகோடிகட்கெல்லாம் அவரவர்கள் கன்மத்திற்குத்தக்கபடி உணவூட்டிக் காத்துவருபவன் நீயேயாகலின் அவ்வான்மகோடிகளுள் ஒருவனேயாகிய நான்மாத்திரம் இங்ஙனம் பசியால் துக்கப்படலாமோ உடனே தணிக்கவேண்டுமென்றனர். (௨)

## திருக்குற்றாலம்.

காலன் வருமுன்னே கண்பஞ் சடைமுன்னே
பாலுண் கடைவாய் படுமுன்னே — மேல்விழுந்தே
உற்றா ரழுமுன்னே யூரார் சுடுமுன்னே
குற்றாலத் தானையே கூறு.

(பொ—ரை.) எமன்நெருங்குதற்கு முந்தியே, கண்பஞ்சடைவதற்கு முந்தியே, பாலுண்ட கடைவாய்ப்பல் விழுவதற்குமுந்தியே, உறவினர்மேலே விழுந்து அழுவதற்குமுந்தியே, ஊரிலுள்ளார் மயானத்திற்கொண்டுபோய் சுடுவதற்குமுந்தியே, திருக்குற்றாலத்தி லெழுந்தருளியிருக்கும் சிவபெருமானைத் துதிப்பாயாக.

(கு—ரை.) மரணத்தருவாயில் இந்திரியங்கள் கலங்கிவிடுமாகையின் அச்சமயத்தில் நினைத்தற்கேதுவாகிய காரணங்களும் அகலுமேயாகும் ஆகலின் அறிவானது தெளிவாகவிருக்கின்றகாலத்திலேயே தியானம்பண்ணுதல் வேண்டுமென்றனர். ([illegible])

## திருவையாறு.

மண்ணுந் தணலாற வானும் புகையாற
வெண்ணரிய தாயு மிளைப்பாறப் — பண்ணுமயன்
கையாறவும்மடியேன் காலாறவுங் கண்பா
ரையா திருவை யாறா.

(பொ—ரை.) என்தந்தையே! திருவையாற்றிலெழுந்தருளியிருப்பவனே! பூமியானது (தன்னுடைய) அனல் அடங்கும்படியாகவும், ஆகாயமானது (தன்னுடைய) புகையடங்கும்படியாகவும் (என்னைச் சனனங்கள்தோறும் பெற்றெடுத்த) அனேக தாய்மார்கள் இளைப்பா

றம்படியாகவும், சிருஷ்டிசெய்யும் பிரமன்கையா[illegible]றம்படியாகவும் அடியேனுடையகால்கள் ஆறம்படியாகவும் திருக்கோ[illegible]கம்லைத்தருளவேண்டும்.

(கு—ரை.) எடுத்தசனனக்கட்குக் கணக்கில்லையாகலின் அவ்வவ் செனனங்கடோறும் மரணகாலத்தில் கொளுத்தியபோதுஉண்டாகிய நெருப்புப்புகையும், பிறந்தகாலத்தில் தாய்மார்க்குண்டாகிய நோயும், பிரபஞ்சயோகத்தினை யனுபவிக்கும்படி பிரமன் எழுதிவைத்ததையும், அக்கன்மப்பிரகங்களை யனுபவிக்கிறகாலத்தில் உகைமெய்க்குத் திரிக்கனுத்தகாலும் இளைப்பாறு கணவே அதாவது இனிச் செனனமில்லாததபடி திருவடியிற்சேர்த்துக்கொள்ளவேண்டுமென்பதாம். (கஅ)

## சிதம்பரம்.

சிற்றம்பலமுஞ் சிவனு மருகிருக்க
வெற்றம்ப லந்தேடி விட்டோமே—நித்தம்
பிறந்திடத்தைத் தேடுதே பேதைமட நெஞ்சே
கறந்திடத்தை நாடுதே கண்.

(பொ—ரை.) திருச்சிற்றம்பலமும் (அவ்வம்பலத்தில் ஆனந்தநிர்த்தஞ்செய்தருளும்) நடராஜப்பிரபுவும் சமீபத்திலிருக்க, வெறுமையாகிய அம்பலத்தைத்தேடிக்கொண்டோமே (என்னெனின்) அறியாமையினையும் மடமையினையும் வாய்ந்த மனமானது எந்நாளும் தான் பிறந்தவிடத்தினையே தேடாநின்றதே, கண்ணானது தான் (பால்) உண்ட இடத்தினையே நாடாநின்றதே.

(கு—ரை.) பிறப்புதற்கிடமாயுள்ள சிற்றம்பலமும் பாலுண்பதற்கு இடமாயுள்ள தனமும் ஒவ்வொருவரையும் மயக்கின் காமத்தைமூட்டுவதற்கேதுவாகப் பிரபஞ்சத்திலிருந்துகொண்டிருத்தலினால், அம்

மயக்கித் திரிக்காது உலகத்திலுள்ள மாதரனைவரையும் தாய்மார்களா கப் பாவித்து வாழவேண்டுமென்பதாம். (௧௫)

---

## போது.

தோடவிழும் பூங்கோதைத் தோகையுனை யிப்போது
தேடினவர் போய்விட்டார் தேறியிரு—நாடிநீ
என்னை நினைத்தா லிடுப்பி லுதைப்பேன்
உன்னை நினைத்தா லுதை.

(பொ—ரை.) இதழானது விரியாநின்ற புட்பமாலையினைத்தரித்த பெண்ணே, உன்னை இப்போது தேடினவர் போய்விட்டார், மனந்தெளிந்திரு; நீ என்னைவிரும்பி நினைந்தனையாயின், நானுன்னை இடுப்பிலுதைப்பேன், உன்னை நினைந்தேனாயின் நீயென்னை யுதை.

(சு—ரை.) அநேககோடி சன்மாந்தரங்களிலும் மாதருடன் கலந்து கலந்து மயங்கிக்கிடந்த மனமானது ஒருவழிதன்னையறியாது எதிரிட்டமாதொருவன்பால் நாடி அவனைவசியஞ்செய்துவிட உடனே தன்மனதைத் தன்வழித்திருப்பிக்கொண்டு அம்மாதினை நிக்கிரகித்தபடியாம். சாமான்னியர் மனத்தின்வழி அறிவினைவிட்டு மயங்குவர், அறிஞர் அம்மனத்தினை அறிவால் தன்வயப்படுத்திடுவர். எத்தகையினராயினும் பிராரத்துவத்தை யநுபவித்தே தீரவேண்டும், ஆனால் அபக்குவர்கட்கு அநுபவமாயும் பக்குவர்கட்கு வாசனாமாத்திரமாயும் நீங்கும், ஈண்டுச்சுவாமிகட்பால் சேர்ந்தது பூர்வவாசனையேயாம்.

(௩)

வாசற் படிகடந்து வாராத பிச்சைக்கிங்
காசைப் படுவதில்லை யண்ணலே—யாசைதனைப்

பட்டிருந்த காலமெலாம் போதும் பரமேட்டி
சுட்டிறந்த ஞானத்தைச் சொல்.

(பொ—ரை.) பெருமையிற்சிறந்த பெருமானே! நான்வாசற்படியைக்கடந்து தாண்டிக்கொண்டுவந்து இடாதபிச்சையினுக்கு இப்போது ஆசைப்படுவதில்லை (அங்ஙனம்) அப்பிச்சையினுக்கு ஆசைகொண்டிருந்து கழிந்தகாலமனைத்தும் போதும், இனிக்குறித்துச் சொல்லுதற்கேலாத ஞானோபதேசம்செய்தருளுவாய்.

(கு—ரை.) ஒன்றினைச்சுட்டில் சுட்டுவோனாகிய ஞாதுருவும், மனமாகிய ஞானமும், சுட்டப்படும்பொருளாகிய ஞேயமும் மூன்றுந் தோன்றுமாகலின், சுட்டிறந்த ஞானவேண்டும் என்றனர். ஞானமனமாலை. "என்னுனை மாணவகா வீதென்று சுட்டாதே, பன்னுளு மூண்மைதனைப் பாராதே—தின்னுலே, யொன்றலது வொன்றுந்தங் குன்னுனை யொன்றுயே, யொன்றுமிரண்டல்லாதவொன்று" என்றதனுற்காண்க. (௨)

நச்சரவம் பூண்டானை [illegible]ருய்த் தொழுவதுவு
பிச்சையிலே தானங் கிருப்பதுவு—பிச்சையை
வாங்குவது முன்பதுவும் வந்துதிரு வாயிலிலே
தூங்குவதுந் தானே சுகம்.

(பொ—ரை.) விடத்தினையுடைய பாம்பினைத்தரித்த பரமசிவனை நன்றாக வணங்குவதும், தன்னிஷ்டப்படி யிருந்துகொண்டிருப்பதும், பிச்சையெடுப்பதும், சாப்பிடுவதும், வந்து சிவாலயவாயற்படியிலே நித்திரைசெய்வதும்தானே இன்பமாகும்.

(கு—ரை.) இந்திரியமையா தண்டாருய பசியினை மாத்திரம் தணித்தற்குப் பிச்சையேற்றுண்டு சிவாலயதரிசனஞ்செய்தபின் அக்

கோயில் வாயற்படியிற் கிடத்தலே சுகமென்றனர். அதனால் எத்சைவினர்கட்கும் சிவாலய வழிபாடொன்றே மோட்சந்தருமென்பதாம். இதுபற்றியன்றோ, "திருக்கோயிலில்லாத திருவில்லூரும்" எனவும், "ஆலயந்தொழுவது சாலவுநன்று" எனவும், "கோயிலில்லாதவூரில் குடியிருக்கவேண்டாமெனவும்" பெரியோர் பணித்துள்ளார். (௬)

இருக்கு மிடந்தேடி யென்பசிக்கே யன்ன
முருக்கமுடன் கொண்டுவந்தா லுண்பேன் — பெருக்க
வழைத்தாலும் போகே னரனே யென்றேக
மிளைத்தாலும் போகே னினி.

(பொ—ரை.) சிவபெருமானே! நானிருக்கும் இடத்தினைத்தேடி யென்பசியினைத்தணித்திடற்கு அன்னத்தினைப் பரிவுடனேகொண்டு வந்தால் புசிப்பேன் அங்ஙனம் செய்யாமல் மிகவும் வருந்தியழைத்தாலும் போ[illegible] னது தேகமெலிந்தாலும் இனிப்போக மாட்டேன்.

(கு—ரை.) பசியைத்தணித்தலின்பொருட்டு அன்னத்திற்கெனவெளிவரின் வீதிகடோறும் ஒவ்வொருவீட்டினும் செல்லவேண்டியிருக்கிறது, அவ்வவ்வீட்டினுள்ள சாமான்யரையெல்லாம் கெஞ்சவேண்டியுமிருக்கிறது, அவ்வமயம் மெய் வாய் கண் மூக்குச் செவிமுதலியவற்றிற்குப் பிரபஞ்சவேடிக்கை விளைகின்றது, அவ்விளைவின்வழியே மனஞ்செல்லுகிறது, செல்லவே இச்சைவிளைகின்றது இச்சைவிளையவே அவ்விச்சையினையனுபவிக்க முயற்சியுண்டாகின்றது, அம்முயற்சியில் இன்பதுன்பம் விளைகின்றன, அவை புண்ணியபாவக்கட்டிடமாய்ப் பிறப்பினுக்கேது உண்டாகின்ற இத்தகைய விபரீதங்கட்கிடங்கொடாதபடி யிருந்தவிடத்திலேயிருத்தலே நலமென்பார் "போகேனினி" என்றனர். (௭)

விட்டுவிடப் போகுதுயிர் விட்டவுடனே யுடலைச்
சுட்டுவிடப் போகின்றார் சுற்றத்தார்—பட்டதுபட்
டெந்நேர முஞ்சிவனை யேத்துங்கள் போற்றுங்கள்
சொன்னே னதுவே சுகம்.

(பொ-ரை.) ஜகத்திலே பிராணனது உடலைவிட்டுநீக்கப்போகிறது விட்டவுடன் சரீரத்தினை உறவினர் சுட்டுவிடப்போகின்றார், ஆகையால் என்னபாடுபட்டாயினும் எப்பொழுதும் சிவபெருமானைத்துதியுங்கள் வணங்குங்கள் சொல்லிவிட்டேன் அதுவேசுகமாவது.

(கு—ரை.) உலகத்திலே ஒருவன் சற்கதியினையடையவேண்டியதற்கேற்ற சாதனங்கள் உடலுடன் உடல்கூடியிருக்கும் காலத்திலேயே சம்பாதித்துக்கொள்ளவேண்டும். உடலோ அநித்த கணம் நமதுவசத்திலிருப்பது மல்லவாம் ஆதலின் உடலோடிருக்கும் காலமெல்லாம் ஒவ்வொரு கணத்தோறும் சிவசிந்தனையுடனிருக்கவேண்டுமென்பார் 'எந்நேரமுஞ் சிவனை [illegible] றனர். (௩)

ஆவியொடு காய மழிந்தாலு மேதினியிற்
பாவியென்று நாமம் படையாதே—மேவியசீர்
வித்தார முங்கடம்பும் வேண்டா மடநெஞ்சே
செத்தாரைப் போலே திரி.

(பொ—ரை.) அறியாமைவாய்ந்த மனமே! உயிருடன்கூடிய சரீரமானது அழிந்தபோதிலும் உலகத்திலே பாவியென்ற பெயரினைப் படைக்காதே, பொருந்தியசிறப்பினைவாய்ந்த விஸ்தாரவார்த்தையும் உலகவுறவும் உனக்குவேண்டாம் மாண்டவர்போலத் திரிவாயாக.

(கு—ரை.) உலகத்தில் விவகாரமுள்ளவனாயில் நன்மைதீமைகட்கேதுவாகிய விஷயங்களுள் சிக்குண்ணவரும். அவ்வனம்சிக்கவே

எவ்வழியிலாவது பாவியென்றபேருண்டாம். ஆகலின் மவுனம்பூண்டு கடைப்பிணம்போ லிருந்துகொண்டிருத்தலே யுத்தமமென்றனர். “பாவியென்ற பேர்படைத்துப் பாழ்நரகில்வீழாமல், ஆவிநின்ற சூத்திரத்தை யறிவதினியெக்காலம்” என்றனர் பத்திரகிரியாரும். (௬)

---

## பின்முடுகு வெண்பா.

இப்பிறப்பை நம்பி யிருப்பையோ நெஞ்சமே
வைப்பிருக்கவாயின் மனையிருக்கச் சொப்பனம்போல்
விக்கிப்பற் கிட்டக்கண் மெத்தசெரு கிட்டப்பைக்
கக்கிச்செத் துக்கொட்டக் கண்டு.

(பொ—ரை.) மனமே! செல்வமிருக்க, வீடும் மனைவியுமிருக்க, கனவினைப்போல நிலையிலதாகி, விக்கலெடுத்து, பற்கள்கிட்டிவிட, கண்கள்மிக [illegible]க்கு, நீரையுங் கோழையையுங்கக்கி, இறந்து சாப்பிறையடித்தலைக்கண்டிருந்தும் இந்தச்சன்மத்தினை நம்பி யிருப்பரோ (அறிவுடையோர்கள்.)

(கு—ரை.) அனுபவிக்கவேண்டிய சகலபோகங்களும் குறைவறவிருக்க அவற்றையெல்லாம்விட்டுக் கணத்திலிறந்துவிடும் உண்மையினைப் பிரத்தியட்சமாகத் தினமுங் கண்டும் இவ்வுடலில் அபிமானம்வைத்துக்கொண்டு பெருமானை மறந்திருப்பது தகுதியாமோ என்றனர். (எ)

மேலுமிருக்க விரும்பினையே வெள்விடையோன்
சீலமறிந்திலையே சிந்தையே—கால்கைக்குக் [வுடல்
கொட்டையிட்டு மெத்தையிட்டுக் குத்திமொத் தப்பட்ட
கட்டையிட்டுச் சுட்டுவிடக் கண்டு.

(பொ—ரை.) மனமே! காக்கைகளுக்குச் சிறுதீனாகிய இவ்வுடலுக்கு மெய்யென்ற தன்மைக்கு (அடிமைகள் வயப்படுமின்றிருந்தும்) சூத்திய இச்சைப்பட்ட வுடலை விரகிலிட்டுச் சுட்டுவிடப்பார்த்தும் இனிமேலுமிருக்க விரும்பினையே, வெள்ளிய விடபவாகனத்தை யுடைய பரமசிவனது கல்யாணகுணங்களை யறிந்திலையே.

(கு—ரை.) பந்தபலவகையிலும் உப்புதசித்தலைத் தாங்கொண்டிருந்த வுடலைப் பிரத்தியட்சமாக நெருப்பிலிடுவதைக் கண்ணாரக்கண்டிருந்தும், நித்தியருசி சிவபெருமான் திருவருளினைநாடாது உடலுடனே வாழவேவிரும்புகின்றனை யென்னைப்பிரயோசனமடைவா யென்பதாம். (அ)

ஒன்பதுவாய்த் தோற்பைக் கொருநாளைப் போலவே
யன்புவைத்து நெஞ்சே யலைந்தாயே—வன்கழுக்க
டத்தித்தத் திச்சட்டை தட்டிக்கட்டிப்பிட்டுக்
கத்திக்குத் தித்தின்னக் கண்டு.

(பொ—ரை.) மனமே! வலிமைபொருந்திய கழுக்கள் குதித்துக் குதித்து இறகுகளைத்தட்டி மூடி உடலைச் சிறகுறுவனாக்கி இரைச்சலிட்டு மூக்கினால் குத்தித்தின்னப்பார்த்தும் ஒன்பதுவாயில்களையுடைய தோற்பையாகிய உடலின்பொருட்டு எந்நாளுமே அன்புவைத்துத் திரிந்தாயே.

(கு—ரை.) கழுகுமுதலியனவைகள் தமதுபசியாற்றும் பொருட்டுப் பிடுங்கித்தின்னுதற்கேதுவாக உடலிருந்துகொண்டிருத்தல் பிரத்தியட்சமாகலின் அன்னம் அவற்றிற்கு உடலிரையாகாதபடித் திருவருளிற்கலந்துகொள்ள முயற்சிக்கவேண்டுமென்பதாம். (கூ)

இன்னம்பிறக்க விசைவையோ நெஞ்சமே
மன்னரிவ ரென்றிருந்து வாழ்ந்தவரை—முன்ன
மெரிந்தகட்டைமீது துன்னாக்கோ வணத்தை
யுரித்திருட்டிப் போட்டது கண்டு.

(பொ—ரை.) மனமே! அரசர்கள் இவரென்றுசொல்லப்பட்டிருந்து வாழ்ந்தாரை முன்னம் (வெகுருபிணம்) எரிந்தமேட்டின்பேரில் ஆண்மைக்குத் திரையாகவிருந்த கௌபீனத்தையும் உரித்துக்கொண்டு எருமுட்டைகளின்மேல் வளர்த்திவிட்டதைப்பார்த்தும் இனிமேலும் பிறப்பதற்கு இணங்குவையோ.

(கு—வா.) பிறருக்கு எவ்விதத்திலும் பிரயோசனப்படாத அல்பத்துண்டாகிய கௌபீனத்தினையும், தன்னுடன்வைத்துக்கொள்ளத் தற்கு இயலாதிருக்க அருமையென நம்பாராட்டி யநுபவித்து வந்த பொருள்களுக்கு நமக்குமென்ன சம்பந்தமுண்டென்பதை யாலோசித்து அவற்றிற்பற்றுவையாது பிறப்பினுக்கும் ஏதுவுண்டாக்கிக்கொள்ளாதிருக்கவேண்டுமென்பதாம். (40)

முதற்சங் கமுதூட்டு மொய்குழலார் தம்மை
நடுச்சங்க நல்விலங்கு பூட்டும்—கடைச்சங்க
மாம்போ ததூது மம்மட்டோ விம்மட்டோ
நாம்பூமி வாழ்ந்த நலம்.

(பொ—ரை.) முதலிலுண்டாகிய சங்குபாலை யூட்டும், மாதர்களுடைய ஆசைகாரணமாக உண்டாகிற நடுச்சங்கமானது உறுதியான விலங்குபூட்டும்படி செய்யும், கடைசிகாலத்தில் உண்டாகிற சங்கானது இறந்துபோகுங்காலத்திலுக்குரியதாகி ஊதப்படும், நாமடைந்ததில் வாழ்ந்த சுகம் அவ்வளவோ இவ்வளவோ அறியேம்.

(கு—ரை.) குழந்தைப்பருவத்தில் பாலூட்ட உபயோகப்படுத்துவது முதற்சங்கு (பாலாடை.) விவாக மமைந்த காலத்தில் ஊதுவது இடைச்சங்கு, மயானத்திற்கு எடுத்துக்கொண்டுபோம்போது ஊதுவது கடைச்சங்கு. (கச)

எத்தனைநாள் கூடியெடுத்த சரீரமிவை
யத்தனையு மண்டினைய தல்லவோ—வித்தகனார்
காலைப் பிடித்துமெள்ளக் கைகூடவேற்றியதன்
மேலேக் குடியிருப் போமே.

(பொ—ரை.) இவைகள் எத்தனைநாள்சேர்ந்தெடுத்த உடம்புகள் அவ்வளவும் மண்ணுண்பதல்லவோ கடவுளின் திருவடியினை யெல்லப்பற்றி இராப்பகலற்ற இடத்திலே மேன்மைக் குடியாகவிருப்போம்.

(கு—ரை.) புல்லாய்ப் பூடாய்ப் புழுவாய் மரமாய் மிருகமாய் பறவையாய் பாம்பாய் கல்லாய் மனிதராய் என்றபடி எத்தனையோ சன்மங்களெடுத்தபின்னர் மனிதப்பிறப்பை யெடுக்கப்பெற்றும் அம்மனிதப்பிறப்பை மன்றுக்கு வீணாக்கிக்கொடுக்காமல் அப்பிறப்பிலேயே சிவபெருமான் திருவடித்தியானஞ்செய்து மோட்சவீடடைதலே சிறந்ததென்றனர். (கரு)

எச்சிலென்று சொல்லி யிதமகிதம் பேசாதே
யெச்சி லிருக்கு மிடமறிவீர்—நச்சிறந்
துய்த்திருந்து பார்த்தா லொருமை வெளிப்படுமப்பின்
சித்த நிராமய மாமே.

(பொ—ரை.) சித்தவைஸ்தர்களை எச்சிலென்று இகழ்ந்துரைத்து நன்மைதீமைகள் பேசவேண்டாம், எச்சிலிருக்குமிடத்தினைத் தெரி

த்தியில்லை, எச்சிலை யூகித்திருந்து பார்த்தால் ஒற்றுமையே யாகும் பிறரு மனத்துக்கயமற்றதாகும்.

(கு—ரை.) ஒருவன் தவினை எச்சிலென்று நீக்கின் எச்சிலில்லாத ஒன்றில் விருப்பமுண்டாம், ஆகவே ஒன்றில்விருப்பும் ஒன்றில் வெறுப்பு மிகும் அது ஏதுவாக சுகதுக்கம் விளைந்து புண்ணியபாவக்கட்டுப்பட்டு ஜனனமரணங்களில் அலைதல்வேண்டிவரும்; ஆகலின் உலகிலுள்ள எல்லாப்பதார்த்தங்களினிடத்தும் சமபுத்தியாரிட்டு இருவினையற்றிருக்கவேண்டுமென்பார் 'இதமகிதம்பேசாதே' என்றனர். எச்சிலுண்டாமிடத்திலேயே எச்சிலில்லாததும் உண்டாகுமென்பதனைத் தேர்ந்தீரில்லை யென்பார் 'இடமறியீர்' என்றனர். ஈண்டு எச்சிலென்றது வாய்நீரையன்று கீச்சிரந்தடவல்துக்களை.

எத்தனைபேர் நட்டகுழி யெத்தனைபேர் தொட்டமுலை
யெத்தனைபேர் பற்றி யிழுத்தவிதழ்—நித்தநித்தம்
பொய்யடாபேசும் புவியின்மட மாதரைவிட்
டுய்யடா வுய்யடா வுய்.

(பொ—ரை.) எத்தனைபேர் தங்கள்தங்கள் கோசத்தினை நாட்டிய பள்ளம், எத்தனைபேர் தங்கள்தங்கள் கரங்களினால் பிடித்த தனம், எத்தனைபேர் தங்கடதங்கள் பற்களால் கடித்து இழுத்த மேலுதடு, ஆகையால் அடா தினந்தோறும் பொய்யினையேபேசுகின்ற உலகிலுள்ள அறியாமையுடன்கூடிய மாதர்களினின்று நீங்கிப் பிழையேடா பிழையேடா பிழை.

(கு—ரை.) ஈண்டு மாதரெனப் பொதுப்படக்கூறினும் வேசிகளையே குறித்ததென்றும். நாளொன்றுக்குப் பற்பல ஆடவர்களைக் கலந்து அவ்வவர்கட்குத் தக்கபடி அவரவர்கள் நம்புமாறு உண்

யைப்பானவார்த்தைகளைப்போலவே இரகசியப் பொய்ப்பேசிப் பொருளைக்கவர்ந்துகொண்டு அவர்களைவஞ்சிப்போர்களாகலின் அத்தகையர் கூட்டுறவு எக்காலத்தும் கூடாதென்பார். 'உய்யடா' வெனப் பலதரம் வற்புறுத்திக் கூறினர். (சஎ)

இருப்பதுபொய் போவதுமெய் யென்றெண்ணி நெஞ்சே
யொருத்தருக்குந் தீங்கினையுன் னாதே—பருத்ததொந்தி
நம்மதென நாமிருக்க நாய்நரிகள் பேய்க்கழுகு
தம்மதென்று தானிருக்குந் தான்.

(பொ—ரை.) மனமே உலகிலிருப்பது பொய் இறந்துபோவது மெய் என்று ஆலோசித்து ஒருவர்க்காயினும் தீங்கினைநினையாதே, பெருத்தவயிறானது நம்முடையதென்று நாமிருக்க, நாயும் நரியும் பேயும் கழுகும் தம்முடையதென்று தாமிருக்கும்.

(கு—ரை.) உலகின்கண்ணே பிறந்தவிறப்பது பிரத்தியட்ச சாட்சியாகலின் அதனையறிந்து தெரிந்துகொண்டு ஒருவருக்கும் தீங்கு செய்யாதிருந்தால் காயாதிகளுக்கு இரையாகாமல் மோட்சமடையலாம், தீங்குசெய்யின் காயாதிகட்கு இரையாகவேண்டுவது நிச்சயமென்றனர். (சஅ)

எத்தொழிலைச் செய்தாலு மேதவத்தைப் பட்டாலு
முத்தர்மனமிருக்கு மோனத்தே—வித்தகமாய்க்
காதிவிளை யாடியிரு கைவீசி வந்தாலுந்
தாதிமனம் நீர்க்குடத்தே தான்.

(பொ—ரை.) அதிசுலபமாக அசைந்து விளையாடிக்கொண்டு இரண்டு கைகளை வீசிவரினும் பெண்ணின் மனமானது தன்தலையின் மீதுள்ள நீர்க்குடத்தின்கண்ணதேயாகும், அதுபோலஎந்தத்தொழி

லச் செய்பினும் எந்த அவஸ்தையனுபவித்தாலும் முத்தர்களுடைய மனமானது மவுனநிலையிலேயேயிருக்கும்.

(கு—ரை.) பெரியோர்கள் உலகத்திலே ஆடுவோரோடாடியும், பாடுவோரொடுபாடியும், பெண்டு பிள்ளை சுற்றத்தினர் மத்தியிலிருந்தும், பகிர்முக விளையாட்டுகள் எவ்வளவு செய்பினும் அந்தர்முகத்தியானத்தினை ஒரு நிமிஷமும் விட்டு நீங்கார்; இதுவே சிவராஜயோகநிலையாம். (௬௬)

மாலைப் பொழுதினறு மஞ்சளரைத்தே குளித்து
வேலை மினக்கிட்டு விழித்திருந்து—ஞாலமெப்
பெற்றாள் வளர்த்தாள் பெயரிட்டாள் பெற்றபிள்ளை
பித்தானா லென்செய்வாள் பின்.

(பொ—ரை.) மாலைக்காலத்திலே மணத்துடன்கூடிய மஞ்சளினையரைத்துப் பூசிக் குளித்து வேலைமெனக்கிட்டுக் கண்விழித்திருக்கு கர்ப்பமாகி (ஒருபிள்ளையினை) யீன்றெடுத்தாள் பெயருமிட்டாள் அங்ஙனம் பெற்றபிள்ளையானது பித்தனாகிவிட்டால் பிறகு அவள் யாது செய்வாள்.

(கு—ரை.) உலகில் ஒருவன் ஒருகாரியத்தைப் பலவகையாக வெகுபிரயாசையுடன் முடிக்க எத்தனித்திலும் அது அவனிச்சைப்படி வாராது வேறுவிதமாக முடியினுமுடியும். ஆகலின் அவரவர்கள் கன்மத்திற்குத் தக்கபடி இறைவருள் கட்டளைக்குமேயல்லது தற்சுதந்தரத்தாலொன்றும் நடவாதென்பதாம். (௬௭)

பட்டினத்துப்பிள்ளையார் பாடலும்
[illegible]ர்த்தவுரையும்
முற்றுப்பெற்றது.

## உடற்கூற்றுவண்ணம்.

தனதனதான தனதனதான
 தந்ததனந்தன தந்ததனந்த
தனனதனந்த தனனதனந்த
 தானனதானன தானனதந்த—
 தந்ததனதான தனதானனா.

ஒருமடமாது மொருவனுமாகி யின்பசுகந்தரு
மன்புபொருந்தி யுணர்வுகலங்கி யொழுகியவிந்து
 வூறுசுரோணித மீதுகலந்து—

(பொ—ரை.) ஒரு அழகியபெண்ணும், ஒரு வாலிபனும் கூடி இன்பமாகிய சுகத்தினைக்கொடுக்கத்தக்கதாகிய அன்பினையடைந்து (கலவியில்) அறிவுமாறியபோது வெளிப்பட்ட சுக்கிலம் பெண்ணிடத்திலிருந்த சுரோணிதத்துடன் கலந்து;

பனியிலொர்பாதி சிறுதுளிமாது பண்டியில்வந்துபு
குந்துதிரண்டு பதுமவரும்பு கமடமிதென்று
 பார்வைமெய்வாய்செவி கால்கைகளென்ற—

(பொ—ரை.) பனித்துளியில் பாதித்துளி யளவாகி மாதினுடையவயிற்றிற் பிரவேசித்துத்திரட்சியுற்றுத் தாமரைமொக்கினை ஒத்த ஆமையுருவெனவாகிக் கண், உடல், வாய், காது, கால், கைகளென்று சொல்லத்தக்க;

உருவமுமாகி யுயிர்வளர்மாத மொன்பது மொன்று நி
றைந்துமடந்தை யுதரமகன்று புவியில்விழுந்து
யோகமும்வாரமு நாளுமறிந்து—

(பொ—ரை.) உருவத்தினையுமடைந்து உயிர்விருத்தியாதற்குப் பத்துமாதங்கள் பூர்த்தியாகி அம்மாதின்வயிற்றினின்று வெளிவந்து பூமியில்விழுந்து (அச்சமயம் இன்ன) யோகம் இன்னவாரம் இன்ன நட்சத்திரமெனத் தேர்ந்து;

மகளிர்கள்சேனை தரவணையாடை மண்படவுந்தியு
தைந்துகவிழ்ந்து மடமயில்கொங்கை யமுதமருந்தி
யோரறிவீரறி வாகிவளர்ந்து—

(பொ—ரை.) மகளிர்கூட்டம் வீட்டினில் வளைந்து (அங்கேயே யிருந்தும்) பூமியில் தாலியும் ஆடையுமாகத் தொங்கிக்கொண்டு கவிழ்ந்து மயில்போன்றசாயலையுடைய (தனது தாயின்) முலைப்பாலைக்குடித்து சிறிது சிறிதாக அறிவு கூர வளர்ந்து;

ஒளிநகையூற லிதழ்மடவாரு முவந்துமுகந்திட
வந்துதவழ்ந்து மடியிலிருந்து மழலைமொழிந்து
வாவிருபோவென நாமம்விளம்ப—

(பொ—ரை.) பிரகாசிக்கின்ற பற்களுடன் ஊறும் உதட்டினையுடைய மாதர்கள் முத்தமிடத் தவழ்ந்து தாயின்மடியிலிருந்துகொண்டு குதலைமொழிகளைச்சொல்லி வா போவென இரண்டொரு சொற்களைக்கூறி;

உடைமணியாடை யரைவடமாட வுண்பவர்தின்பவர்
தங்களொடுண்டு தெருவிலிருந்து புழுதியளைந்து
தேடியபாலரொ டோடிநடந்து—
அஞ்சுவயதாகி விளையாடியே—

101



(பொ—ரை.) உடுக்கத்தகுந்த ஆடையாகவுங்கும் வஸ்திரங்களுடன் அலைநாலன அசைய (அன்னம்) சாப்பிடவிருட்டிலும் (பலகாரம்)[1] இன்பவருட்டிலும் புசித்து வீதிக்குக்கத [illegible] கொண்டு சாடிவரும் மற்றையபிள்ளைகளுடன் [illegible] ஓர்தலையதுவளர் யில் இங்ஙனம் விளையாடிடே; (4)

உயர்தருஞானகுருவுபதேசமுர்த்தி [illegible]
புங்கனைகழன்றி வளர்பிறைமொன்று [illegible]
வாழ்பதிஞான பிராயமுமவள் [illegible]—

(பொ—ரை.) உயர்வாகிய ஞானாசிரியர் [illegible] உபதேசமும், தமிழ்ச்சாத்திரங்களில் அனைத்தும் தெரிந்து வளர்பிறை [illegible] சொல்லப்படுகின்ற வயதடைந்து;

மைபர்முடிசோதி மறைபதமே வணங்குமிர் தன்னுடைய
தொழிலைப்புரிந்து பணிபொனில்கு பணிகளணிந்து
மாகதர்போகதர் கூடிவணக்க—

(பொ—ரை.) தலைமையிர் சோதிமுடித்து, வண்கேசம் தங்கிப் பாடும் ஒளிர்கின்பொருந்திய மாலைகளைத் தலையிற்றரித்து இரத்தினங்களிழைத்த பொன்னாற்செய்த ஆபரணங்களை பூண்டு மாகதர் போதகர் ஆகிய பாடகர்கள் சேர்ந்து புகழ்ந்து வணங்க;

மதனசொரூபனிலேனமோரம பண்மைபுரிகவிடு
குன்றுதிரண்டு வரிவிழிகொண்டு கழியிலமரிந்து
மாமயிலொப்பாவைபோல்வதியும்—

(பொ—ரை.) மன்மதன் போன்ற வடிவுனிஞ்சொல்லர் காமமாதர்கள் பார்த்து மனமருண்டு கூடி வண்டுகளையொத்த விழிகளினால் மருட்ட அழகிய அவர்களைப்பார்த்து

மன்றுபொருமலர் பிறகோடி மங்கலசெங்கல
சந்திகழ்கொங்கை மருங்குமயங்கி யிதழமுதுண்டு
தேடியமாமுதல் சேரவழங்கி—

(பொ—ள்.) மனந்தாளாது அம்மாதர்பின்னுறவோடி மங்கலமான செவ்விய கலசத்தினையொத்த தனங்களோடணைந்து மயங்கி அதரபானம்பண்ணித் தாஞ்சம்பாதித்த செல்வமுழுவதையும் பொருக்கேகொடுத்து;

ஒருமுதலாகி முதுபொருளாயிருந்த தனங்களும்
வம்பிழந்து மதனசுகந்த விதனமிதென்று
வாலிபகோலமும் வேறாயிருந்து—

(பொ—ள்.) ஒருமுதற் பொருளாகவும் அபாரமாகவுமிருந்த செல்வமுழுவதும் வீணாகச்செலவழித்து மதனலீலை விசனத்திற்கே துவைந்து வாலிபபருவத்தினின்றும் வேறுபட்டு;

வளையப்புமாறி விளங்கப்புமாறி வன்பல்விழுந்திரு
கண்களிருண்டு வயதுமுதிர்ந்து நரைதிரைவந்து
வாதவிரோத குரோதமடைந்து—
செங்கையினிலோர் தடியுமாகியே—

(பொ—ள்.) அழகுகெட்டு, இளமைகெட்டு, வலியபற்களுதிர்ந்து, இரண்டுநேத்திரங்களும் மறைந்து, மூப்படைந்து நரையும் திரையும், அதிகப்பட வாதரோகமும், யாவரையும் விரோதிக்குங்கோபமும் பெற்று செவ்வியகரத்தினிடத்தில் ஒருதடிபிடித்துமே. (1)

வருவதுபோலவொருமுதுகூனு மந்தியெனும்படி
குந்திநடந்து மதியுமழிந்து செவிதிமிர்வந்து
வாயறியாமல் விடாமன்மொழிந்து—

(பொ—ரை.) ஒருமுதுகு கூனுடன் வருவதும் போவதுமாகி குரங்கினைப்போலக் குந்திக்குந்திநடந்து அறிவுகெட்டுச் செவிடுபட்டு இன்னதுசொல்வதென்றறியாமல் எந்நேரமும்பேசி;

துயில்வருநேர மிருமல்பொருது தொண்டையுமினைந்துமு
லர்ந்துவறண்டு துகிலுமிழ்ந்து சுண்ணமுமழிந்து
தோகையர்பாலர்கள் கோரணிகொண்டு—

(பொ—ரை.) தூங்குகின்ற சமயத்தில் இருமல் சகிக்கமுடியாமல் தொண்டையும் மார்பும் உலர்ந்து வறண்டு இடுப்பிலுள்ள வஸ்திரம் நழுவ சுரணையின்றி மாதரும் பிள்ளைகளும் கோளாறுசெய்யப்பெற்று;

கலியுகமீதி லிவர்மரியாதை கண்டிடுமென்பவர்
சஞ்சலமிஞ்சு கலக்கமுமன்று மலசலம்வாதி
கால்வழிமேல்வழி சாரநடந்து—

(பொ—ரை.) இக்கலியிலே இவர்தன்மையினைப் பாருமெனச் சொல்பவர்கட்குத் துன்பமதிகரிக்கக் கலக்கமுண்டாக மலமும் சலமும் பெருகிக் கால்வழியாகவும் தேகமேலும் பெருகுந்த வழிந்து;

தெளிவுமிராம னுரைதருமாதிர சிந்தையுநெந்தமு
லைந்துருண்டு திடமுமிகுந்த பிணியுமிகுந்து
தேறிலாத வேதனையோர்ந்து—

(பொ—ரை.) மனத்தெளிவின்றிக் குளறுபடிவார்த்தையுடைத்து மனமும் என்னைறும் அலைத்து நல்ல ஆதாரத (இக்காலத்திலேதந்நிலையென) வருந்தி;

மறையவன் வேத நெறிமுறையால் வந்ததுதான்டும்
மெய்யம்பலத்து [illegible] யைக்கண்ட பின்னியெனக்கேர்த்த
மேதினிவாழ்வு நீ வாதினி யின்று—

(பொ—ரை.) வேதங்களுக்குரிய பிரமன் தலையில் எழுதியவிதி கெருங்கிவிட்டது, இனி மரணைக்கண்டுகொள் தெரிந்த இறைசக்காட்டிநலும் வேறு கண்டுமேது இனி வெணச்சம்பர்சமானது, இனி உலகவாழ்வு இல்லாது மாக்கியாகவிருக்கும்;

கடன்முறைபேச மௌனவுறைநாவு நன்வியிழுந்ததை
கொண்டுமெர்ழிந்து கைடவழிகற்றி பொருமிடவர்த்து
இகபூநாதக வாசமுகின்று—
சேதுக்கதிப்பாதி வருவேரயே—

(பொ—ரை.) கடன்முதலியவற்றைப்பற்றி ஏதாவது எதயாவெ செய்யவேண்டுமென்ன பேசவேவொன்று சொல்லிக்கொண்டிருந்தாவனது நாவு விழுந்துக்கொள்ள, கைகளிறுவேல சாவை டசாட்டவாயில்வார்க்குமே கற்றே பக்கங்களின் ஒழுகியிட பஞ்சபூதங்களும் விடுகின்ற பிரணையாயுடை குறைய மனத்தவொத்துதாஞ்டான காலத்தே.

(௩)

வளர்பிறைபோல வெளி அரும்சேம முத்தசடையப்பூசி
குஞ்செயும்கிருச்மன திமிருக்கட வடிவுபெயர்க்க
மாமலைபோல்யும அதர்களவந்து—

(பொ—ள்.) வளர்கின்ற சந்திரனது காலையினைப்போலப்பெற்சுளரும் மயிரும் சடையும் திருகுமீசையும் கரண கடினமனதாம் இருண்ட உருவமும் தோன்ற பெரியமலையினைப்போல யமதூதவர்கள் வந்து;

வலைகொடுவீசி யுயிர்கொடுபோக மைந்தரும்வந்துரு
கிர்ந்தழுதொக்கு மடியில்விழுந்து மனைவிபுலம்ப
மாழ்கினரேயிவர் காலமதிந்து—

(பொ—ள்.) வலையினைவீசி உயிரைப் பிடித்துக்கொண்டு போகவே புத்திரரும் ஓடிவந்து குளிர்ந்து துக்கப்பட வருத்தமாக மடிமேல்விழுந்து மனைவிபுலம்ப இறந்துவிட்டனரே;

பறையுமவர்க்கிறு மெதுமயலார்கள் பஞ்சபறந்திட
கின்றவர்பந்த ரிடுமெனவந்து பறையிடமுந்த
வெயினம்வேக விசாரியுமென்று—

(பொ—ள்.) இக்காலத்தினைக்கேட்டு இவர் மிகவுமோதிகவெனகிர்த்து ஆயவர்கள் உடனேயோடிவந்து பந்தர்முதலிய இடச்செய்து மேளமுதலிய அடிப்பித்துப் பிணத்தினைக்கொண்டுபோக விசாரியுங்களென்று;

பல்லைமுடிமேவிமுதியவர்தாமிருந்தசவங்களு
வஞ்சிலைரென்று பனிதுகிரெங்கள் களைபுமணிந்து
பாவகமேசெய்து நாழுமடம்லப—

(பொ—ள்.) பல்லையுமனுப்பிக்கேட்டுப்பெரியார்சிலரைக்கொண்டு பிணத்தினையலம்பச்செய்து ஆபரணம், வஸ்திரம், மாலை, வாசனை தரித்துத் தோத்திரமாகச்செய்து தர்வாசனையுடைய தேகந்தை;

வரிசைகெடாம லெடுமெனவோடி வந்திளமைந்தர்கு
னிந்துசுமந்து கடுகிநடந்து சுடலையடைந்து
மானிடவாழ்வென வாழ்வெனநந்து—

(பொ—ரை.) கிரமமாகத் தூக்குமென வருந்தியோடிவந்த இளமையான பிள்ளைகள் குனிந்து தாங்கிச் சீக்கிரம் நடந்து சுடுகாட்டை நெருங்கி இவ்வளவுதானோ மனிதவாழ்வென வருந்தி;

விறகிடமூடி யழல்கொடுபோட வெந்துவிழுந்து
நிணங்க ளுருகியெலும்பு கருகியடங்கி
யோர்பிடிநீறுமி லாதவுடம்பை—

நம்புமடியேனை யினியாளுமே.

(பொ—ரை.) விறகு அடுக்கிமூடி நெருப்புமூட்டிவிட்ட பிணம் வெந்து விழுந்து முறிந்து கொழுப்புகளும் எலும்புகளுந் தீய்ந்து ஒருகைப்பிடிசாம்பலுக்கு ஆகாத தேகத்தினை நம்பியிருக்கின்ற அடியேனை ஆட்கொள்ளவேண்டும்.

(கு—ரை.) பிறப்பு, பாலியம், யௌவனம், மூப்பு, மரணம் முதலிய நிச்சயமாகவினும், பிரத்தியட்சமாகவினும், இத்தகைய அவஸ்தைகள் இனியுண்டாகாதபடி இப்பிறப்பிலேயே உண்மை விசாரித்து திருவருளினைத்தேர்ந்து பெருமானுடன் இரண்டறக்கலந்துவாழும் பாக்கியத்தையடையவேண்டுமேயொழிய இவ்வுடலினை நம்பி வாழுதல் அப்பிரயோசனமென்பார் 'நம்புமடியேனை யினியாளுமே' என்றனர். (1)

பட்டினத்துப்பிள்ளையார் உடற்கூற்றுவண்ணமும்
ஞானார்த்தவுரையும்
முற்றியது.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

பட்டினத்துப் பிள்ளையார்

# அருட்புலம்பலும்

அனுர்த்ததீபவுரையும்.

## முதல்வன் முறையீடு.

(கன்னி[illegible]வனநாதா கன்னிவனநாதா.)

(பொ—ரை.) கன்னிவனமென்று சொல்லப்படுகின்ற மதுரை மாநகரில் எழுந்தருளியுள்ள சிவபெருமானே!

(கு—ரை.) பாண்டிநாட்டு மலயத்துவஜபாண்டியற்கும் காஞ்சனமாலைக்கும் பார்வதி புத்திரியாக அவதாரஞ்செய்து தனது கன்னிப்பருவத்தே தான் அரசாட்சிசெய்த நாடானதால் கன்னிநாடு என மதுரைக்கு ஒருபெயராயது.

மூலமறியேன் முடியுமுடிவறியேன்
ஞாலத்துட்பட்டலையர் நாடகடக்குடா.

(பொ—ரை.) உற்பத்தியறியேன், அவ்வுற்பத்தியந்தமாகும் நிர்மாணமறியேன்; உலகத்திற்சேர்ந்த துன்பம் வினைச்சார நடத்துவிக்கிறது.

(கு—ரை.) வினைபுரிந்தபடியிருக்கும் அவ்வினையைப் போக்கடித்துக்கொள்ளற்கும் தக்கவிசாரம்செய்து தெரிந்துகொள்ளாததால் அவ்வினையாலனுபவிக்கவேண்டிய துன்பம் பிடிக்கிறதென்பதாம். (௪)

அறியாமையாமலத்தா லறிவுமுதற்கெட்டனடா
பிரியாவினைப்பயனாற் பித்தாய்ப்பிடித்தனடா.

(பொ—ரை.) அறியாமையினைச்செய்கின்ற [illegible]மலத்தினால் எனது அறிவுமயக்கினேன், தேகமுள்ளளவும் பிரிதலில்லாத வினையினால் புத்தியில்லாதவன்போலாயினேன்.

(கு—ரை.) ஆன்மாக்களுக்கு அறியாமையைச்செய்வது ஆணவமே, பிரியாதிருப்பது பிராரத்தவினை. ஆணவமலத்தினைத் திருவருளைக்கொண்டு நீக்கிக்கொள்ளினும், பிராரத்துவம் அனுபவித்தே தீரவேண்டுமாகையால் இதனைப் 'பிரியாவினை' என்றனர். (௫)

தனுவாதியாலென்றுந் தானுமயங்கினேனடா
மனுவாதிசத்தி வலையிலகப்பட்டனடா.

(பொ—ரை.) தேகமுதலாகச் சொல்லப்பட்ட நான்கினாலும் அம்மயமாகவேயிருந்து மயங்கினேன், முதன்மையான திரோதான சத்தியாகிய வலையில் அகப்பட்டேன்.

(கு—ரை.) தனுவாதியவை—தேகம், கரணம், புவனம், போகம். ஆன்மா இவற்றிற் கட்டுப்பட்டு மயங்கி இவற்றிற்கு அன்னியமாகத் தானிருப்பதாகத் தெரிந்துகொள்ளாதிருத்தலின் 'தானும் மயங்கினேன்' என்றனர். உண்மையினை விசாரிக்கவொட்டாது அடிக்கடி மறைவுண்டாவது திரோதானசத்தியாலாகலின் 'சத்திவலையி லகப்பட்டேன்' என்றனர்.

(௬)

மாமாயையென்னும் வனத்திலலேகிறண்டா
காமாபுல[illegible]த்துந் தடுதகலங்கிறண்டா.

(பொ—ரை.) பெரியமாயையென்று சொல்லப்படுகின்ற காட்டில் அலைகின்றனன். காமாதப் பிரபஞ்சத்தில் மனக்கலக்கமுற்றிருக்கின்றேன்.

(கு—ரை.) உலகமனைத்தும் மாயாகாரியப்பாடாகலின் அக்காரியத்திற் சிக்குண்டார் அம்மாயையைக்கடத்தல் அசாத்தியமாகலின் உலகினை வனமென்றனர். (௧)

(கள்ளிவனநாதா கள்ளிவனநாதா.)

(பொ—ரை.) கள்ளிவனமென்று சொல்லப்படுகிற மதனையும் பெருமானே.

மண்ணாசைபட்டேனே மண்ணுண்டுபோட்டு[illegible]
பொன்னாசைபெண்ணாசைபோகேனேயென்குதே.

(பொ—ரை.) பூமியினிடத்தில் ஆசைவைத்திருந்த என்னை அப்பூமியே சாப்பிட்டுவிட்டது. பொன்னாகிய விருப்பமும் பெண்ணாகிய விருப்பமும் நீங்கக்கூடவில்லை.

(கு—ரை.) மண்ணிலதிக விருப்பத்தை வைத்திருத்தலின் அவ்வுடல் மூலமலசத்தியிலொன்றை யாடையாமல் மண்ணில்புதைக்கப்படியான தன்மையையடைகிறது. மற்றைய பொன்மோகமும் பெண்மோகமும் நேருமுள்ளவும் தாக்குமென்பதாம். (௨)

மக்கள்சுற்றத்தாசை மறக்கேனேயென்குதே
திக்கரசாமாவாசை தீரேனேயென்குதே.

(பொ—ரை.) புத்திரரிடத்தும், உறவினரிடத்தும் வைத்துள்ள ஆசையானது மறக்கக்கூடவில்லை, நிகளைத்தையும் அரசாட்சி செய்யும்படியான ஆசையானது நீங்கினதில்லை.

(கு—ரை.) 'கடக்தவர்களும் நடப்பரோ மக்கட்டுமெல்லாதல்' என்றதாலும் "கடன்மீதிலே ஆசைசெலவிலே வினைவர்" என்றதாலும் புத்திரர்மேல்விருப்பமும், அரசாட்சியில் விருப்பமும் நீங்காதென்பதாம். (க)

வித்தைகற்குமாசையது விட்டொழிந்தேயெனென்றதே
சித்துகற்குமாசை சிதைந்தேனேயென்றதே.

(பொ—ரை.) கல்வியில்பயிலும் விருப்பம்நீங்குவதில்லை, சித்திகளையடையுமாசை யொழிவதில்லை.

(கு—ரை.) கல்விக்கு அளவில்லையாகலின் கற்றோரும் மேலும் [illegible] விருத்தியடைதற்கே முயற்சியுண்டாம். ஆன்மார்த்தமாகப் பிரயோசனமில்லையாயினும் உலகத்தை பிரட்டுதற்கு உபயோகமாகலின் சித்தியிலவாவதிகரிக்கிறதென்பதாம். 'அஷ்டமாசித்தியுமென்செய்' என்றனர் தாயுமானவர். (எ)

மந்திரத்திலாசை மறக்கேனேனேயென்றதே.
சந்தரத்திலாசை துறக்கேனேயென்றதே.

(பொ—ரை.) மந்திரத்தில் வைத்துள்ள விருப்பம் மறப்பதில்லை அழகில் வைத்துள்ள ஆசை நீங்குகிறதில்லை.

(கு—ரை.) பஞ்சாட்சர முதலிய மகாமந்திரங்களை செபிக்க வேண்டிய இந்திரியங்களைத்தடைசெய்யாவிடினும், திருவருளைப் பெறுமாறடைதற்குச் செபிக்காமல் யாதாமொரு உலகசித்தியடைய

வேண்டுமெனச் செபித்தல்கூடா தாகலின் 'மறந்தேனே' என்றனர். (௮)

கட்டிவர்க்கத்தாரை கழுவேலேனேயென்குதே
செட்டுதனிவோனை சிதைபேறனேயென்குதே.

(பொ—ரை.) பலவகையான ஆடைகளில் ஆசைசேர்க்குதலில்லை, திரவிய இக்கனத்தில் ஆசைகுறைதலில்லை.

(கு—ரை.) குளிர்முதலியவற்றிற்கு அவசியமாக ஒரு ஆடையுடனிருக்கத் திருப்தியடையாமல் மேலும் மேலும் சித்திரவிசித்திரமான பீதாம்பர முதலிய உடைகளிலும், முக்கியமாகச் செய்யவேண்டிய தருமங்களிலும் பொருளைச்செலவிடாமல் சேகரித்தலைப்பதிலும் ஆசைசேர்க்கவில்லையென்பதாம். (௯)

மாற்றாஞ்சலவை மறந்தேனேயென்குதே
சோற்றுக்குறிபுபின்றுங் தாரேனேயென்குதே.

(பொ—ரை.) அடிக்கடி மாற்றிச் சலவைவஸ்திரங்களைத் தரிப்பதில் மறப்புண்டாவதில்லை, சோற்றினை யடைத்தற்கே ஆசைகொண்டு வயிறுகிய பள்ளம் இன்னம் அடையவில்லை.

(கு—ரை.) ஒருவஸ்திரத்தினையே தோய்த்துக்கட்டிக்கொள்ளவிலையாது, அடிக்கடி சலவைத்துணிகளையே அணிய விருப்புறுதலால் 'மறந்தேனே' எனவும், உண்ணும்போதும் பசியேயிருந்துகொண்டிருத்தலின் 'தாரேனே' எனவும் கூறினர். (௧௦)

(கன்னிவனசாதா கன்னிவனநாதா.)

(பொ—ரை.) கன்னிவனமென்று சொல்லப்படுகின்ற மதுரையில் எழுந்தருளியுள்ள சிவபெருமானே!

ஐந்து புலனை யடக்கேனே யென்குதே
சிந்தை தவிக்கிறதுந் தேறேனே யென்குதே.

(பொ—ரை.) பஞ்சேந்திரிய வுணர்ச்சி யடக்கினபாடில்லை, மனமு மொடுங்கினபாடில்லை.

(கு—ரை.) சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம் என்னும் ஐம்புலன்களும் தாம்செய்யுஞ் சேட்டைகளினின்று நீங்கினாலன்றி மனவியாபாரம் குறையாதென்பார் 'அடக்கேனே' 'தேறேனே' என்றனர். (௧௧).

காமக் குரோதங் கடக்கேனே யென்குதே
சாமே பரசென்று சாரேனே யென்குதே.

(பொ—ரை.) காமமும் கோபமும்விட்டு நீங்குவதில்லை; சாவே தலைமைபெற்றிருக்கவேண்டுமென எண்ணமுந் தோன்றுகிறது.

(கு—ரை.) காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியம் ஆகிய இவைகள் நீங்கினாலன்றி அழியாச்சமையமாதல் இல்லை. அங்ஙனம் ஆகாதிருக்கவே தலைமையாய்த்திருக்கவேண்டுமென்ற இறுமாப்புண்டாம் என்பார். 'கடக்கேனே' எனவும் 'என்குதே' எனவும் கூறினர். (௧௨)

அச்சமாங்கார மடக்கேனே யென்குதே
கைச்சும்பின் னுமானங் கடுகேனே யென்குதே.

(பொ—ரை.) அச்சமும், அகங்காரமும் அடங்கினதில்லை, உலகத்தினை வெறுத்தும் பின்னும் மானமானது நீங்கினதில்லை.

(கு—ரை.) உலகர் தாட்சண்ணியத்தின் பொருட்டு அச்சங்கொள்ளுதலும், கருவித்திருத்தலும் சன்னியாசிகளுக்கு இடையூ

தலாலும், மாணத்தைவிட்டாலன்றிப்பிரபஞ்சவாசைநீங்காதாகலி னாலும் 'அடங்கேனே' எனவும் 'அழிலேனே' எனவுங்கூறினர். (௩௧)

நீர்க்குமிழிபோலுடலை நித்தியமாயென்றுநேச
அர்க்குமுபாயமே யறியேனே யென்குதே.

(பொ—ரை.) நீரினிடத்தே தோன்றி உடனே மாறும் குமிழியை யொத்த தேகத்தை நித்தியமெனவும், எந்தவகையினாலும் விருத்தி யாகின்ற அதை நீக்காமலுமிருந்து கொண்டிருக்கிறது.

(கு—ரை.) பசுபாசவிசாரணை [illegible] சாஸ்திரமுணர்ந்து விசா ரியாத முறையினால் உடம்பினித்தியமெனவும், அதை [illegible] ஆசைநீக்காமலும் இருக்க வினைவினைநிறுத்தன்பதாம். (௩௨)

கன்றுவக்குங்கண்ணெனநீயே [illegible] யென்றும்
என்றுமந்திரமா யிருப்போமென்றென்றுதே.

(பொ—ரை.) நித்தியமாக [illegible] பின்னேயிரு ந்து [illegible] செனென்றிருப்பேன் [illegible] வினைகின்றது.

(கு—ரை.) நித்தியம் தன்கண்முன்னே [illegible] உடல்கள் அழிவெட்டுதல்பேகக்கண்டும் அங்ஙனம் தனக்கும் [illegible] கோத்தில் உண்டாகுமென்பதை யாலோசிப்பதில்லை. (௩௩)

அநித்தியத்தைநித்தியமென் றாதரவாயென்றுநேத
தனித்திருக்கவென்குதே தன்னைமறந்தேனென்குதே.

(பொ—ரை.) அநித்தியமாக வுள்ளவற்றை நித்தியமாகவிருந்து மென்றெண்ணி யவற்றினிடத்தில் ஆசையுண்டாகிறது. ஏகாந்தமாக விருக்கவும் தன்னைமறந்திருக்கவும் கூடவில்லை.

(கு—ரை.) உலகம் மாயகாரியமாகலினாலும் அக்காரியமொரு காலத்து மாறிவிடுமாகலினாலும் அத்தகையவற்றில் மனம் வைத்தல் அப்பிரயோசனமென்பார் 'ஆதரவாயென்னுமே' என்றனர். தனித்திருத்தல் பிரபஞ்சபோகம் அனுபவியாதிருத்தலாவது, தன்னைமறத்தலாவது சிவராஜயோக நிஷ்டைகூடியிருத்தல். (கசு)

நரகக்குழியுமின்று நான்புகிப்பேனென்றோ
உரகப்படத்தல்குல் உன்னைக்கெடுப்பேனென்றோ.

(பொ—ரை.) நரகக்குழியானது 'எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது. பாம்பின்படம்போன்ற நிதம்பம் தன்வசப்படுத்துகிறது.'

(கு—ரை.) நரகத்திற்கேதுவான பாவத்தொழில்களே மேலும் மேலும் விளைக்குங்கொண்டிருக்கின்றன. மாதர் ஆசையும் நீங்கினதில்லையென்பதாம். (கஎ)

குரும்பைமுலையுங் குடிகெடுப்பேனென்றோ
அரும்புநிகர்விழியும் ஆவியுண்பேனென்றோ.

(பொ—ரை.) தென்னங்குரும்பையையொத்த தனம் மயக்குகின்றது, நீலோற்பலத்தினையொத்த நேத்திரம் உயிரைவிழுங்குகின்றது.

(கு—ரை.) மாதர்கள் தனங்களும் கண்களும் கண்டு மருண்டோர் மறுபடியும் அதனின்று மீளுதல் அசாத்தியமாகலின் 'ஆவியுண்பேன்' 'குடிகெடுப்பேன்' என்கிறதென்றனர். (கஅ)

மாதருருக்கொண்டு மறலிவருஞ்சமென்றுமே
ஆதரவுமற்றிங் கரக்காயுருகிறேனடா.

(பொ—ரை.) இயமனானவன் 'பெண்ணுருவாய்த்து வஞ்சிக்கின்றான். அதனால் யானொரு ஆதாரமில்லாமல் நெருப்பிலிட்ட அரக்கினைப்போல உருகுகின்றேன்.

(கு—ரை.) "வீடுசென்றோறும் பெண்களைப் படைத்து எமனை பெண்செயப் படைத்தாய்" என்றபடி எமனை பெண்களாய் மாறி யுள்ளாரெனவும் அவரினின்றும் தப்பித்துக்கொள்ளுதற்கேற்ற சிவ சாதனமான ஆதாரமொன்றும் தேடிக்கொள்ள வில்லை யெனவும் கூறினர். (கக)

கர்த்தனையின்றருளுங் கன்னியனையாதா
எத்தனைத்தந்திறு னெறிப்படருவனடா.

(பொ—ரை.) கந்தப்பெருமானைப் பெற்றெடுத்த மாதாவைப்பெரு மானே! எந்தவகையிலும் (தேவரீர் திருவடியினை) யடைந்து வாழ் வேன்.

(கு—ரை.) திருவடியினையடைதற்கேற்ற சிவசாதனங்களிலொ ன்றுங் கைக்கொண்டு இதுவரையும் பழகியறிகிலேனாகலின் எவ்வண்ணம் 'எதிர்ப்படருவேன்' என்றனர்.

புல்லாகிப்பூண்டாய்ப் புலர்ந்தநாள்போதாதோ
கல்லாய்மரமாய்க் கழிந்தநாள்போதாதோ.

(பொ—ரை.) புல்லாகியும், பூண்டாகியுமிருந்து பலநாள் கழித்ததும் கல்லாய் மரமாயுமிருந்து பலநாள் கழித்ததும் போதாதோ.

(கு—ரை.) கன்மத்திற்குத் தகுந்தபடி எடுத்தசனனங்களில் வெல்லாம் துறவியாகி வாழ்ந்ததுமுண்டெனக்கூறாம். (கஉ)

கிரியாய்க்கிடமாய்க் கெட்டநாள்போதாதோ
நேரியாபூர்வனவாய் நின்றநாள்போதாதோ.

(பொ—ரை.) கிரிப்பிள்ளையாகியும் பறவையாகியும் (அறிவு) கெட்டிருந்த காலங்களும், நீர்வாழ்வனவாயும், ஊர்கின்ற பாம்பு முதலிய செந்துக்களாயும் வாழ்ந்தநாளும் போதாதோ.

(கு—ரை.) எடுத்த அளவில்லாத சனனங்களுள் மூவறிவுயிரான செந்துக்களாகச் சிலகாலம் வாழ்ந்ததுமுண்டென்பதாம். (உஉ)

பூதமொடுதேவருமாய்ப் போனநாள்போதாதோ
வேதனைசெய்தானவராய் வீழ்ந்தநாள்போதாதோ.

(பொ—ரை.) பூதங்களுடனே தேவர்களுமாகி வாழ்ந்தநாள்களுடன், துன்பத்தினைச்செய்கின்ற அசுரர்களாய் தங்கியநாள்கள் போதாதோ.

(கு—ரை.) உயர்ந்த பிறப்புக்களுள் ஐயறிவுடன்கூடிய சென்மமாய்ப் பிறந்து வாழ்ந்தநாள்களும் பலவுண்டென்பதாம். (உஉ)

அன்னைவயிற்றி[illegible]ந்தநாள்போதாதோ
மன்னவனுமாய்[illegible] மரித்தநாள்போதாதோ.

(பொ—ரை.) தாயின் வயிற்[illegible]கர்ப்பத்தியாகி யழிந்தநாள்களுடன் அரசனுசவாழ்ந்து இறந்தகாலங்கள் போதாதோ.

(கு—ரை.) கர்ப்பத்திலகப்பத்தியாகி வெளிவருதற்கு முந்தியுள்ள பத்துமாதங்களுள் ஒருகாலத்தில் இறந்தும், பிறந்தபின் அரசனுயிருக்கும் வாழ்வைப்பெற்றும் மரணமடைதற் கேதுவுண்டென்பதாம்.

தாயாகித்தாரமாய்த் தாழ்ந்தநாள்போதாதோ
சேயாய்ப்புருடனுமாய்ச் சென்றநாள்போதாதோ.

(பொ—ள்.) ஒருவருக்குத் தாயாகியும், ஒருவனுக்கு மனைவியாகியும் தங்கிவாழ்ந்த நாள்களுடன் ஒருவனுக்குக் குழந்தையாம், ஒருவனுக்குப் புருஷனையும் தாங்கியநாள் போதாதோ.

(கு—ரை.) இத்தகைய பிறப்புகளில் கன்மத்திற்குத் தக்கபடி ஆணையும், பெண்ணையும் மாறிமாறிப் பிறந்தநாள்களு முண்டென்பதாம். (உ௬)

நோயுண்ணவியமெலிந்து நொந்தநாள்போதாதோ
பேயுண்ணப்பேயாய்ப் பிறந்தநாட்போதாதோ.

(பொ—ள்.) பலநோய்களுண்டாக அதனால் மெலிவடைந்து துன்பமனுபவித்தநாள்களுடன் அறியாமையாய்த்த பேயாய்ப்பிறந்த நாள்கள்போதாதோ.

(கு—ரை.) இத்தகைய ஜனனங்கள்தோறும் வந்ததாக்க அனுபவித்த [illegible]களுக்கோ அளவில்லை. யாவரும் வெறுக்கத்தக்க பேயாய்ப்பிறந்த[illegible]முண்டென்பதாம். (உ௭)

[illegible]உடல்கூன்குருடாய் யுற்றநாள்போதாதோ
[illegible]போசிப்பி மேசைத்தநாள்போதாதோ.

(பொ—ள்.) மாமிசவுடலில் கூனும், குருடும் அடைந்தாருட[illegible] பசியினிமித்தம் தேடியலைந்தநாள் போதாதோ.

(கு—ரை.) மனிதஜென்மமெடுத்ததற்க புண்ணியம்பெற்றும் [illegible]ஜென்மங்களில் அங்கவீன மடைந்திருந்தும், வயிற்றினிமித்தம் இரைத்தேடியலைந்து அதனால் தேகம்வாடியதுமுண்டென்பதாம்.

பட்டகஷ்டமும் பாதகிப்பும்போதாதோ
கெட்டநான்கெட்டேனென்று கேளாதும்போதாதோ.

(பொ—ரை.) எண்ணிறந்த செனனங்களால் உண்டாகிய இளைப்பும் பரதவிப்புமுண்டானதுடன் வீணாகக்கழிந்தநாள் கழிந்துவிட்டது இனிவேனும் பிறவாதிருக்கை வேண்டுமென்று, வேண்டா திருந்ததும் போதாதோ.

(கு—ரை.) எத்தனையோ எண்ணிலடங்கா [illegible] டதனால் விளைந்த இளைப்புடன் உண்மைதெரியாது சாவதும் [illegible] போகப் பின்னராவது உண்மையறிந்தனமாயடைந்து உண்மையைத் தெரிந்துகொள்ளவில்லை யென்பதாம். (உ-அ)

விள்ளாமைக்கேயழுது இன்றநாள்போதாதோ
எல்லாருமென்பார மெடுத்தநாள்போதாதோ.

(பொ—ரை.) உலகம் நிலையற்றதாகவிருக்கிறதேயென்று விசனப் பட்டதுடன், என்தேகத்தைச் சனங்கள்போற்றும் பலதாய்மார் சுமந்ததும்போதாதோ.

(கு—ரை.) தேகம் இறந்துவிடுமே என்று துக்கப்பட்டு [illegible] மன்றி அது நிலைபெறச்செய்துகொண்டேனில்லை, [illegible] [illegible] அவர்கட்குச் சிரமங் [illegible] (உ-கூ) [illegible] னைக்கில்லையாம்.

காமன்கணையாற் கடைப்பட்டல்போதாதோ
யமன்கரத்தா லிடிபடல்போதாதோ.

(பொ—ரை.) மன்மதன்பாணத்தால் துன்பமடைந்ததுடன் இய மனைகளினால் இடிபட்டதும்போதாதோ.

(கு—ரை.) சனனந்தோறும் காமாத்தகாரண [illegible] துன்பம் [illegible] சென்மங்களினும் இயமனால் துன்பமடைந்தேனென்பதாம்.

நான்முகன்பட்டோலை கறுக்குண்டல்போதாதோ
தேன்றுளபத்தானேமி தேக்குண்டல்போதாதோ.

(பொ—ரை.) நான்முகனுடைய விதி யெட்டினைகிழித்ததும் தே ன்ததும்பும் துளபமாலையுடைய விஷ்ணுவின் சக்கரத்தின் கீழ்வைப்புண்டது போதாதோ.

(கு—ரை.) ஒவ்வொருசென்மத்திலும் இறக்கும்போது பிரமன் தான் விதித்திருந்த எட்டினைக்கிழித்துவிடுவான் என்பார். 'கறுக் குண்டல்' எனவும், விஷ்ணுமூர்த்தியின் இரட்சிப்பிலடங்கி யுணவுக் குத்தின்டாடினதுண்டென்பார். 'தேக்குண்டல்' என்றனர். (கக)

உருத்திரனார்சங்காரத் தற்றநாள்போதாதோ
வருத்தமறக்கைதயிலே வாவென்றழைத்தையிலே.

(பொ—ரை.) உருத்திரமூர்த்தியின் சங்காரத்தில் பொருந்திய நாள்போதாதோ, என்னுடைய துன்பத்தைநீக்காயில்லை, என்னை வாவென்றுமழைத்தாயிலை.

(கு—ரை.) சிருட்டியிலும், திதியிலும், சங்காரத்திலும் கட்டுப் பட்டலைத்து அளவில்லாத துன்பத்தினையடைந்த வென்னை யழை த்து அநுக்கிரகம்செய்தாயில்லையே யென்றார். (கஉ)

(கன்னிவனநாதா கன்னிவனநாதா.)

(பொ—ரை.) கன்னிவனமென்று சொல்லப்படுகிற மதனாயி லெழுந்தருளியிருக்கும் சிவபெருமானே!

பிறப்பைத்தவிர்த்தையிலே பின்னுக்கொண்டையிலே
இறப்பைத்தவிர்த்தையிலே யென்னென்றுகேட்டையிலே.

(பொ—ரை.) பிறப்பினை நீக்கினாயில்லை, பின்பு ஆட்கொண்டா யில்லை, இறப்பினை நீக்கினாயில்லை, என்னை விசாரித்தாயில்லை.

(கு—ரை.) இறப்பினின்றும் பிறப்பினின்றும் நீக்கி இனிச் சென்மம் வாராதபடி செய்து திருவருள் புரிந்து அனுக்கிரகிக்கவேண்டுமென்பதாம். (௧௧)

பாசமொழித்தையிலை பரதவிப்பைத் தீர்த்தையிலை
பூசியநீற்றைப் புனைவென் றளித்தையிலை.

(பொ—ரை.) மலத்தினை யொழித்தாயில்லை, துன்பத்தினை நீக்கி னாயில்லை, அணியத்தகுந்த விபூதியினைத் தரித்துக்கொள்ள வீந்தா யில்லை.

(கு—ரை.) ஒழித்தாயென்றதனால் பாசமென்றது சஞ்சி தத்தினை ஆசாரியன் ஞானக்கண்ணினால் சஞ்சிதத்தை யெரித்தலை யிப் பிறப்புக்காதாரமின் அன்னை கூறினர். விபூதியானது பல ரோகமின்றால அருமருந்தாகலின் 'அளித்தையிலை' என்றனர். (௧௨)

அடிமையென்று சொன்னையிலை யக்குமணி தந்தையிலை
விடுமுலகப் போக்கியுன்றன் வேடமளித்தையிலை.

(பொ—ரை.) (அடியேன் தேவரீருக்கு) அடிமையென்று சொன்னாயில்லை, உருத்திராக்கக் கண்டிகையளித்தாயில்லை, நீங்கத்தகுந்த பிரபஞ்சவாழ்க்கையினை நீக்கித் தேவரீர் திருவேடத்தினைத் தந்தா யில்லை.

(கு—ரை.) ஆசாரியரே சிவம் கொண்டவர்க்கு அடிமையாக்கிக் கொண்டு சிவயோக்கியம் தந்து சிவவேடம் பொலியச்செய்பவரில்லை யென்பார், 'தந்தையிலை' 'அளித்தையிலை' என்றனர். (௧௩)

உன்னிலழைத்தனையிலை யொன்றாக்கிக்கொண்டையிலை,
நின்னடியார்கூட்டத்தி லியையழைத்துவைத்தனையிலை.

(பொ—ரை.) தேவரீருக்குச் சமீபத்தில் அழைத்தாயில்லை, இரண்டறக்கலந்து வாழச்செய்தாயில்லை. அல்லது தேவரீருடைய அடியார்கள் கூட்டத்திலொருவனாகவிருக்கச் செய்தாயில்லை.

(கு—ரை. 'உன்னிலழைத்தனையிலை' என்பது சிவசாரூபத்தினையும், 'ஒன்றாக்கிக்கொண்டையிலை' என்பது சிவசாயுச்சியத்தினையும் குறித்தபடியாம். அந்நிலையடையும் பக்குவமிலையேல் அந்நிலையினை யடைதற்கேதுவாகிய சிவனடியார்க்கூட்டத்தினையாயினும் செய்யா யென்பார். 'அழைத்துவைத்தனையிலை' என்றார். (கசு)

ஓங்குபரத்தொளிர்வார்க்கடியான்
ஈங்கோரடியா னெமக்கென்றுரைத்தனையிலை.

(பொ—ரை.) ஓங்கிய சிவபரத்தின் பிரகாசிக்கின்ற சிவனடியார்களுக்கு அடியானாகிய இவனும் இவ்வுலகில் ஒரு அடிமைத் தேவரீருக்கென்று திருவாய்மலர்ந்தருளினீரில்லை.

(கு—ரை.) சிவசாம்பிராச்சிய திருவருளைப்பெற்ற சிவனடியார்கள் திருக்கூட்டத்திலொருவன் என்னும் பக்குவமுடையவும் அப்பக்குவமடைந்தனனென்று தேவரீர் கடைக்கணிக்கவும் உண்டாவதென்றோ வென்பார். 'உரைத்தனையிலை' என்றனர். (கஎ)

நா[illegible]த்தனையிலை நாயெனுமியானின்றனையிலை
சேமவருளிலெனைச் சிந்தித்தழைத்தனையிலை.

(பொ—ரை.) சிவனடியானென்னும் பெயரை யளித்தாயில்லை, நான் என்னும் அகங்காரம் நீக்கச்செய்தாயில்லை, திருவருட்பொக்கிஷத்தை அடியேனனுபவிக்கும்படி விளைத்தாயில்லை.

(கு—ரை.) சிவனடியானென்னும் பெயருக்கு இலக்காகுமின்றி அகங்காரமடங்குவது கூடாதாகலினாலும் அது அடங்கினாலன்றித் திருவருளடைய முடியாதாகலினாலும், மூன்றையும் முறையே கூறி வைத்தனர். (௧௮)

முத்தியளித்தாயில்லை மோனங்கொடுத்தாயில்லை
சித்தியளித்தாயில்லை சீராட்டிக்கொண்டாயில்லை.

(பொ—ரை.) சிவசாம்பிராச்சியம் அளித்தாயில்லை, மவுனநிலையினில் வைத்தாயில்லை, அருட்சித்திபேறக்கொடுத்தாயில்லை, அன்பனாக்கிக்கொண்டாயில்லை.

(கு—ரை.) அன்பினால் திருவருளும், திருவருளினால் மவுனநிலையும், மவுனநிலையினால் சிவசாயுச்சியமும் உண்டாகுமாதலின் முறையே கூறினர். (௧௯)

தவிப்பைத் தவிர்த்தாயில்லை தாளாக்கிக்கொண்டாயில்லை
அவிப்பரிய தீயாமென் னாசை தவிர்த்தாயில்லை.

(பொ—ரை.) 'எனக்குண்டாயிருக்கும்' பரிதவிப்பினை நீக்கினாயில்லை, சிவமாந்தன்மை செய்தாயில்லை, அவித்தற்கரிய நெருப்பினையொத்த ஆசாவினையொழித்தாயில்லை.

(கு—ரை.) தவிப்பாவது திருவருள் என்று கிடைக்குமோவென்ற பெரியவேக்கமாம். தாளாக்கிக்கொள்ளுதலாவது அத்துவித நிலை கூட்டிவைத்தலாம். இவ்வளவுமடைதற்குத் தடையாயிருப்பது பிரபஞ்ச

ஞானசை. இவ்வாஞ்சையினின்றும் விலகுவது அசாத்தியமென்பார் 'அவி ப்டரியதீயாமென்றுமை' என்றனர். (௨0)

நின்றநிலையி னின்றுநிற்கவே வைத்ததுமில்லை
அன்றாங்கரணமொழி தொக்கழியப்பார்த்ததுமில்லை.

(பொ—ரை.) (திருவருளைப்பற்றுக்கொண்டு) நின்றிருக்கும் நிலையினின்றேயிய அசைப்படாதபடி அடியேனை நிறுத்திவைத்தாயில்லை, பொருந்திய அந்தக்கரணம் புறக்கரணங்களுடன் கூடிய கூட்டத்தினை நீக்கத் திருவுளம்பற்றாயில்லை.

(கு—ரை.) ஒரோவழி திருவருள்கிட்டியகாலத்தும் பூர்வ ஜென்மார்ச்சிதவினையால் மாயாசலங்கள் வந்து மயக்குமாகலின் அங்ஙன் மயங்காதபடி செய்யவேண்டுமென்பார் 'வைத்ததுமில்லை' என்றும், 'கரணமொழிதொக்கு' என்றது தத்துவக்கூட்டத்தினை. (௨௧)

கட்டறுகைக்காட்டிக் கட்டொழியப்பார்த்ததுமில்லை
கிட்டைப்பிடித்துவிடவென்று நிறுத்திக்கொண்டதுமில்லை.

(பொ—ரை.) (வினையினின்று) கட்டதற்குக்த பிரபஞ்சமாயாக்காட்சிகளின் சம்பந்தம் நீக்கிறதாயில்லை, சிவராஜயோக சமாதியில் நிறுத்தினாயில்லை.

(கு—ரை.) திருநோக்கால் நீட்சைசெய்தாலல்லாமல் பிரபஞ்ச மூகமாயுள்ள பார்வை நீங்காதென்பார் 'பார்த்ததுமில்லை' என்றனர். அங்ஙனமாகும் சிவஞானயோகநிட்டையிலேனும் நிலைபெறச்செய்யா வென்பார் 'நிறுத்திக்கொண்டதுமில்லை' என்றனர். (௨௨)

(கன்னிவனநாதா கன்னிவனநாதா.)

(பொ—ரை.) கன்னிவனமென்று சொல்லப்படுகின்ற மதுரை யம்பெருமானே!

கடைக்கணருள் தாடா கன்னிவனநாதா
கெடுக்குமலமொருக்கிக் கிட்டிவரப் பாரேடா.

(பொ—ரை.) மதுரையம்பெருமானே! திருக்கடைக்கண்ணருள் திருவருளைத் தருக, அழிக்கத்தக்கதுவாயுள்ள ஆணவத்தைக் குறைத்துத் தேவரீர்சந்நிதியில் வருதற் கேதுவினைச்செய்க.

(கு—ரை.) திருவருட்சக்திதானத்தினை யடைதற்குத் தடையா யிருப்பது ஆணவமலமேயாகலினாலும் அம்பலம் பெருமான் திருவருள்நோக்காலன்றித் தீராதாகலினாலும், 'தா' 'வரப்பார்' என்றனர்.

காதல்துணிப்பேனோ கண்டுமகிழ்வேனோ
சாதலற்றிரேனோ சங்கடந்தான் தீரேனோ.

(பொ—ரை.) பெருமானே! (தேவரீர் திருவருள் அடியேனுக் குக் கிடைக்கில்) பிரபஞ்சஆசையை நீக்கிக்கொள்வேனோ, தேவரீரைத் தரிசித்துச் சந்தோஷிப்பேனோ, இறப்பினின்றும் நீங்கேனோ, துன்பத் தினின்றும் நீங்கேனோ.

(கு—ரை.) பிரபஞ்சபற்றையொழித்தற்கும், தெய்வதரிசனஞ்செய் தற்கும் மரணத்தை நீக்கிக்கொள்ளற்கும், துன்பம்நீக்கற்கும் திரு வருளேவேண்டுமென்பதாம். (௨௪)

உன்னைத்துதியேனோ ஊர்காடுவாரேனோ
பொன்னடியைப்பாரேனோ பூரித்திருக்கிலேனோ.

(பொ—ரை.) (தேவரீர் திருவருள்கிடைக்கின்) தேவரீரைப் புகழ்ந்து பாடேனோ! தெருக்கள்தோறும் வாரேனோ, திருவடிதரிசனஞ் செய்யேனோ, ஆனந்தமடையேனோ.

(கு—ரை.) சிவாலயங்களிற்சேறலும் தொழுதலும், சிவபெருமா ன் திருவடியினைத் தரிசித்தலும், வையாபரஞ்சோதி தரிசித்தலும், சிவனைத்தத் தினைத்தலுமே சிறப்பென்றார். (சு)

ஓங்காரப்பொருளிலிடும் அல்லகையுமடிரோ
பாங்கானத்தண்டை ஓலையணியும்பாதமே.

(பொ—ரை.) ஓங்காரமே சொரூபமாகிய அழகான சிலம்பின து அழகினையும், அவ்வகையாகிய தண்டையுடனே கூடிய பதிருவடி யின் ஆபரணங்களையும் தரிசியேனோ.

(கு—ரை.) பரிமேலழகருக்கு வேதமே சிலம்பாய்க்கிடந்து காதலொலியைச் செய்துகொண்டிருத்தலின் 'ஓங்கார ... ப்பு' என்றனர். ஈண்டு சிலம்பும் வேதங்களைக்குறித்து நின்றது.

வீரகண்டாமணியின் வெற்றிதனைப்பாடியே
ஆர்தன்போற் றமைத்துச் சந்தைநிறைந்தப்பாரேனோ.

(பொ—ரை.) ஜெயத்தைக்குறிக்கும் வீரகண்டாமணி யென்னும் ஆபரணத்தினையும், அதிபராக்கிரமசாலிகள் தோத்தரிக்கும் திருமேனியின் அழகினையும் தரிசியேனோ.

(கு—ரை.) பிரமமுதல் பிபீலிகைபரியந்தமுள்ள ஆன்மகோடிகளையெல்லாம் ஜெயித்தவரும் இயமனை உதைத்தருளினதிருவடி யில் பூண்ட ஆபரணத்தினை வீரகண்டாமணியென்றனர். (௪௪)

இடைவிடாப்புகழ்த்தேவர் ஏத்தக்கலம்பாரேனோ
விண்டுமெழுந்தருளும் வெற்றிதனைப்பாரேனோ.

(பொ—ரை.) அரையிலே புலித்தோலினையணிந்த அழகினையும் இடப்பாகத்தினின்ற [illegible] தரிசியேனோ.

(கு—ரை.) புலித்தோலையுடுத்த அவசரமாவது, தாருவனத்துமுனிவர்செய்த அபிசாரயாகத்தினின்றும் வெளிவந்து தன்னையெதிர்த்த புலியினை நகநுனியாலுரித்துத் தரித்த சர்மத்தை அரையிலுடுத்தியானது. (கஅ)

ஆனையுரிபோர்த்த அழகுதனைப்பாரேனே
மானைப்பிடித்தேந்து மலர்க்கரத்தைப்பாரேனே.

(பொ—ரை.) ஆனையின்தோலினைப்போர்த்துக்கொண்ட செல்வனது அழகினையும், மானைத்திருக்கரத்திலேந்திய நிலையும் தரிசியேனோ.

(கு—ரை.) ஆனையின்தோலைப்போர்த்த அவசரமாவது கயாசுரனென்னும் யானையைத் தேவர்களுடைய துயர்தீர்த்தற்பொருட்டுப் போர்புரிந்து சங்கரித்துக் கஜசம்மாரத்தியானது. மானையேந்தியது தாருவனத்தார் ஏவியதாம். (க௯)

மாண்டார்தலைப்பூண்ட மார்பழகைப்பாரேனே
ஆண்டார்நமக்கென்று நவின்றுதிரியேனே.

(பொ—ரை.) இறந்ததேவர்களின் தலைகளை மாலையாகத்தரித்த மார்பினுடைய அழகினையும், சிவபெருமானே நம்மையடிமையாக ஆட்கொண்ட ஆண்டவரென்று சொல்லித்திரியேனே.

(கு—ரை.) சர்வசங்காரகாலத்தில் இறந்துபோன பிரமாதி தேவர்களின் தலைமாலைகளைத்தரிப்பது மறுசிருஷ்டியில் வரும் பிரமாதி

தேவர்கள் அம்மாவேயிவேனக்கண்டு செருக்கடையாது வாழ்வித்த மாம். (௫௦)

கண்டங்கறுத்தநின்ற காரணத்தைப்பாரேனோ
தொண்டர்குழுவினின்ற தோற்றமதைப்பாரேனே.

(பொ—ரை.) கண்டமானது கருமைநிறத்துடன் கூடியிருந்த காரணத்தையும், சிவனடியாரெல்லாம் ஒருங்குகூடியிருந்தகாட்சியினையும் காணேனென்று.

(கு—ரை.) திருப்பாற்கடல் [illegible] விஷயத்திலுந் தேவர்கள் இறந்துபோகாதபடி அவ்விடத்தினைக் கண்டத்திலடக்கி [illegible] காரணமூர்த்தியாய் [illegible] கருணையையின் [illegible] (௫௧)
[illegible]

அந்தப்பழ [illegible] மாணைத்தைப்பாரேனோ
திருநயனச்சடையோனிருக்கச் செழும்பொழில் [illegible]

(பொ—ரை.) திருவருள் தங்கிய சத்திரபதிப்பிரமுக [illegible] செய்த [illegible] க்ஷேத்திரங்களின் அப்பிரதாபம் [illegible] அறிகிலேன்.

(கு—ரை.) [illegible] ஸ்ரீஞானியர்கள் [illegible] (௫௨)
[illegible]

தென்பழநின் [illegible] பாரேனே
அந்தமிலா [illegible] ரேனே.

(பொ—ரை.) செவ்விய குமிழம்பூவினையொத்த நாசியினுண்டான அழகினையும், அழகிய கொவ்வைப்பழத்தினைக்காட்டிலும் மிகு [illegible] யொத்த அதரத்தினையும் தரிசியேனே.

(கு—ரை.) பெருமான் அங்கங்கள் உவமையற்றதாயினும் உலகோர் நோக்கி அலங்காரஞ்செய்யும்பொருட்டு உவமித்துக்கூறினர்.

முல்லைநிலவெறிக்கு மூரலொளிபாரேனே
அல்லார்புருவத் தழகுதனைப்பாரேனே.

(பொ—ரை.) முல்லைநிலவொத்தின் அழகினையொத்த பற்களின் பிரகாசத்தினையும், இருள் [illegible] புருவத்தின அழகினையும் தரிசியேனே.

(கு—ரை.) புருவத்திலுள்ள உரோமம் அதிநெருக்கமுள்ள [illegible] மையாயிருக்குமாகலின் 'அல்லார்' என்றனர். [illegible] [illegible] அதற்கேற்பமுல்லையொக்குமென்க [illegible] (86) ப்பட்டது.

பச்சிடக்கொளிரும் வன்மைதனைப்பாரேனே
இருபடியமுதுஞ் செஞ்சடையும்பாரேனே.

(பொ—ரை.) பகாமனைது தன்னிப்பிரானின் அழகினையும், சிரசின் அழகினையும் செஞ்சடையினையும் தரிசியேனே.

(கு—ரை.) பகரமென்றது முதலெழுத்துக்களின் [illegible] சேர்ந்த கருவி [illegible] ஆகாரம் [illegible] முடியெழுதினும் [illegible] [illegible] மென்பது [illegible] முடியென்பதற்கு [illegible] (63) னவும் கொள்ளப்படும்.

கங்கைபிறைசூடிநின்ற காட்சிதனைப்பாரேனே
பொங்கராத்தாழ்சடையில் பூண்டவிதம்பாரேனே.

(பொ—ரை.) கங்காநதியுடனே சந்திரன்றங்கிய அழகினையும், மிருத்யான சர்ப்பங்களைச் சடாபாரத்தில் தரித்த தன்மையினையும் தரிசித்தேனே.

(கு—ரை.) கங்காதேவியாயினும் அக்கங்கை இமயமலையரசன் பத்தினியாகிய மேனைக்கு இரண்டாவது புத்திரியே கங்கையுடையாய் விளக்கியதனால் அக்கங்கையை யொருபெண்ணாகச் சொல்வதுமுண்டு. (௫௪)

சரக்கொன்றை யிறுத்த சடைக்காட்டைப்பார்த்தேனே
மருக்கமழு மத்தமுயலினையுங்கொண்டதைப்பார்த்தேனே.

(பொ—ரை.) சொரிகின்ற கொன்றைமலர்கள் பூத்தன்ன சடைக்காட்டினையும், எருக்கு, ஊமத்தை, அறுகு முதலியன தரித்த கோலத்தினையும் தரிசித்தேனே.

(கு—ரை.) கொன்றையென்பது பிரணவாகாரமாயுள்ளதொரு சிறந்த புட்பமாதலின் அது பெருமானுக்கு அதிக உசிதமாயிற்று. சடையின் அதிகநெருக்கத்தினை சடைக்காடென்றனர். (௫௫)

கொக்கிறகு சூடிநின்ற கோலம்பார்த்தேனே
அக்கினியையேந்திநின்ற கரத்தைப்பார்த்தேனே.

(பொ—ரை.) கொக்கின் இறகினைத் தரித்திருக்கும் சந்தோஷத்தையும், மழுவினையேந்தியுள்ள களிப்பினையும் தரிசித்தேனே.

(கு—ரை.) அற்பமாகிய கொக்கினை யாட்கொண்டதும் பொருட்டு அதன் இறகினையும், கரத்தால் ஏந்தப்பட்ட அக்கினியையுந்தரித்த அருமையினைப்பற்றி 'அவசியம்' என்றனர். (௫௬)

தூக்கியகாலுந் துடியடியும்பாரேனே
நாக்குமுயலகன்மேற் றாண்டவத்தைப்பாரேனோ.

(பொ—ரை.) மேலேயெடுத்த திருவடியும், காதிற்றூங்கிய துடியின் ஓசையையும், முயலகன்மேல்வைத்துன்ன நடனத்தையும் தரிசியேனோ.

(கு—ரை.) தூக்கியகால் குஞ்சிதபாதம், துடியுடி வலக்கையிலுள்ள உடுக்கையிற்பிறக்கும்நாதவொலி, தாண்டவம் சிற்சபையில் செய்யும் ஆனந்ததாண்டவம். ௯

வீசுகரமும் விகசிதமும்பாரேனே
ஆசையளிக்கு மபயகரம்பாரேனோ.

(பொ—ரை.) வீசுகின்ற கரத்தினையும், மந்தகாசத்தையும், ஆசையினையுண்டாக்கும் அபயஹஸ்தத்தினையும் தரிசியேனோ.

(கு—ரை.) வீசியகரமாவது திருவடியைக்காட்டிக்கொண்டிருக்கும் திருக்கரம், அபயகரமாவது ஆட்கொள்வேமென்னும் குறிப்பினைக்காட்டும் திருக்கரம், மந்தகாசமாவது திருமுகத்திவாயில் உண்டாகும் குஞ்சிரிப்பு. ௰

அரிபிரமர்போற்ற வமரர்சயசயவெனப்
பெரியம்மைபாகம்வளர் பேரழகைப்பாரேனோ.

(பொ—ரை.) விஷ்ணுவும், பிரமனும் ஏத்த தேவர்கள் சயசய என்ன அம்பாள் இடதுபாகத்தி லெழுந்தருளியிருக்க உண்டாகுமழகினைத் தரிசியேனோ.

(கு—ரை.) அரிபிரமர் போற்றவென்றது நடேசப்பிரபுவின் ஆனந்ததாண்டவகாலத்தில் அரிமத்தளம்போடவும் பிரமன் தாளக்

நட்டவனாய் நின்றதன்மை பெரியபுராணம் பெற்றது சிவகாமிநாதா மின்றா. (௬௬)

சுந்தரநீற்றின் றிருக்குன்றனைப் பாரேனோ
சந்திரசேகரனுக்குத் தவறுசெய்தலைப் பாரேனோ.

(பொ—ரை.) அழகியவிபூதியின் விசேஷத்தினையும், சந்திர சேகரனுக்குத் தொண்டுசெய்தலையும் தரிசியேனோ.

(கு—ரை.) 'பூசுவதும் வெண்ணீறு' என்றதற்கேற்ப விபூதி திருமேனியில் அழகைக்கொடுக்குந் தன்மையால் 'சுந்தரநீறு' என்றனர். திருஞானசம்பந்தமூர்த்திநாயனாரும் 'சுந்தரமாவது நீறு' என்றனர். தடாதகை சாபமேற்று அடைக்கலம்புகுந்த சந்திரனையணிந் கொண்ட அமரர் சந்திரசேகரமூர்த்தி. (௬௭)

(கன்னியனாகாத கன்னியனாகாதா.)

(பொ—ரை.) கல்வியனென்று சொல்லப்படுகிற மறையப் பெருமானே!

கெட்டநாள்கெட்டாலும் இருவினைப்பிணிப்பாரோடா
பட்டநாள்பட்டாலும் பதமெனக்குக்கிட்டாதோ.

(பொ—ரை.) தேவரீரைத்தரிசியாது கெட்டுப்போயின காலங்கள் கெட்டுப்போனாலும் இனிமேலும் தீவினைசெய்யப்பொரா, நன் பம்அடைந்தகாலங்கள் பலவுண்டானாலும் இனிமேலும் தேவரீர் திரு வடியெனக்குக்கிட்டாதோ.

(கு—ரை.) அரியனம மேலிட்டதால் இதுவரையும் அறியாது கெட்டேன் ஆதலால் பலநன்மைகளையுமிழந்தேன் இனியுள

யைத் தோராதபடி கருணைசெய்து திருவடிதந்தருளவேண்டு மென்றா
னன். (௩௧.)

நற்பருவமாக்குமந்த நாளெனக்குக் கிட்டாதோ
எப்பருவமுங்கடந்த வேகாந்தங்கிட்டாதோ.

(பொ—ரை.) தேவரீரையடைதற்கேற்ற பரிபக்குவகாலம் எனக்குண்டாகாதோ, எந்தவகைய பக்குவங்களையுங் கடந்த ஏகாந்தநிலையுண்டாகாதோ.

(கு—ரை.) பக்குவகாலமாவது மலத்தடிப்புகுறைந்த அவசரம். ஏகாந்தமாவது தனியேயிருந்து சிவராஜயோகநிஷ்டை கூடும்நிலை, 'தனியேயிருப்பதற்கென்னெரியேனை சாமிநீயறியாததோ' என்றனர் தாயுமானவரும். (௩௨)

வாக்கிறந்துநின்ற மவுனமது கிட்டாதோ
தாக்கிறந்துநிற்குமந்தத் தற்சுத்தி கிட்டாதோ.

(பொ—ரை.) பேச்சற்றநிலையாகிய மவுனநிஷ்டை உண்டாகாதோ, பிரபஞ்ச சம்பந்தமில்லாதுநிற்கும் ஒப்பற்ற சுத்தமாந்தன்மை உண்டாகாதோ.

(கு—ரை.) மனோவாக்குக்காயங்களால் உண்டாகும் பிரபஞ்ச சேஷ்டைகளைக் கடந்து அந்தர்முகமாகவிருந்துசெய்யும் தியானம் மவுனநிலை. விஷயாந்தரசையிலேயே சதாகாலமிருக்கினும் அதிற் பற்றின்றியிருக்குந்தன்மை தற்சுத்தி. (௩௩)

வெந்துயரந்தீர்க்குமந்த வெட்டவெளி கிட்டாதோ
நிந்தையையுந்தீர்க்குமந்தத் தேறலது கிட்டாதோ.

(பொ—ரை.) கொடியதுன்பத்தினை நீக்குமந்தச் சிதாகாயமுண்டாகாதோ, எவ்வளவிய எண்ணத்தை முடிக்குமந்த திருவருட்டேன் உண்டாகாதோ.

(கு—ரை.) வெட்டவெளியாவது சிதம்பரகாசம். அது தரிசித்தார்க்கு வெந்துயர் நீக்குமென்பதாம். மெய்யடியார்கள் சிந்தையில் திருவருள் தேன்போலினிக்குமாதலின் 'தேறல்' என்றனர். (௧௩)

அனவரதமடியார்க் கடிமைகொளக் கிட்டாதோ
மனமறவென்னை யுணர்த்தெளிவித்தல் கிட்டாதோ.

(பொ—ரை.) தேவரீருக்கான மெய்யடியார்கட்கு அடிமைபூண்டொழுகும்படி உண்டாகாதோ. குற்றமற அடியேற்குத் திருவருளைத் தெளிவித்தல் உண்டாகாதோ.

(கு—ரை.) அடியார்க்கடிமையாய் வாழ்தலே சிறந்த சாதனமானதால் 'அடிமைகொள' என்றார். 'அறிவித்தாலன்றி அறியாதவன்' என்றதற்கேற்பத் திருவருளைச் சுட்டிவைக்கவேண்டுமென்பார். 'உணர்த்தெளித்தல்' என்றனர். (௧௪)

என்னென்றுசொல்லுவன்கண்டாய் வெந்துயரைக்கொண்டா
பின்னையெனக்கு நீயன்றிப் பிறிதிலையே.

(பொ—ரை.) அடியேனையடிமையாக ஆட்கொண்ட ஆசிரியனே (என்று அன்பாயழைத்திடவும்) என்றுமெனையெய்த்து விசரிப்பேன், தேவரீரையல்லாமல் வேறு எனக்குத்துணை ஏது.

(கு—ரை.) அனுபவிக்கும் துன்பம் சிறிதாகவிருக்கின் சந்நிதானத்தில் விண்ணப்பிக்கக்கூடும், அளவில்லாத துன்பத்திற் றட்டுப்பட்டுக் கிடத்தலின் 'என்னென்று சொல்லுவன்' என்றனர். தே

வர்க்கசந்நிதானத்தில் விண்ணப்பித்தால் பரிகாரமுண்டேயன்றி வே
றொருவரிடத்திற் சொல்லுதிற் பிரயோசனமென்னவென்பார். 'நீ
யல்லாற் பிறிதில்லையே' என்றனர். (௧௮)

(கன்னிவனநாதா கன்னிவனநாதா.)

(பொ—ரை.) கன்னிவனமென்று சொல்லப்படுகின்ற மதுரை
யிற்கண்ணே எழுந்தருளியிருக்கும் சிவபெருமானே!

அன்னவிசாரமது அற்றவிடங்கிட்டாதோ
சொன்னவிசாரந் தொலைத்துவிடங்கிட்டாதோ.

(பொ—ரை.) ஆகாரவிஷயமாக விளைகின்ற விசாரமொழிந்த
நிலையும், பொன்னைத்தேடியலைகின்ற விசாரமொழிந்தநிலையும் என
க்குவாராதோ.

(கு—ரை.) இன்றியமையாதவினையும் பசியும் அதனைப்பரிகரி
க்கப்பொன்னைத் தேடியலைகின்றதாகிய முயற்சியுமற்ற நிலையே வே
ண்டுமென்பதாம். (௧௯)

உலகவிசாரமொழிந்துவிடங்கிட்டாதோ
மலக்குருவின்பின்னூர் வசிப்பதுங்கிட்டாதோ.

(பொ—ரை.) பிரபஞ்சமோகமாக விளையும் விசாரந்நீங்கியநிலை
யும், மலக்கூட்டத்தினையொத்த மாதர்களினின்று நீங்கியநிலையும்
வாராதோ.

(கு—ரை.) உலகப்பற்றுமாசைகளையும் முயற்சியும், மாதர்கள்
சார்வுசேரும் நீங்கின மனநிலையும் பேரின்பவிச்சையும் உண்டா
மென்பதாம். (௨௦)

ஒப்புவமைபற்றே றொழிந்துவிடக்கிட்டாதோ
செப்புதற்கு மெட்டாத் தெளிந்துவிடக்கிட்டாதோ.

(பொ—ரை) சமானம், நிருட்டாந்தம், பந்தம் இவைநீங்கிய நிலையும், வாக்கினாற்சொல்லுதற் கரிதாகிய சந்தேகமற்ற நிலையும் வாராதோ.

(கு—ரை) திருவருளினுக்குச்சமானமுதலிய எத்தவனையினும் இல்லையென்பார் 'ஒப்புவமைபற்றே றொழிந்துவிடம்' எனவும், வைகரியாக்கித்தெட்டாத்தன்மை 'செப்புதற்குமெட்டா' எனவுங் கூறினர். (௯௧)

வாக்குமனாதீத வகோசரத்திற்செல்லவெனைத்
தாக்குமருட்குருவே நின்றாளிணைக்கேயான்போற்றி.

(பொ—ரை.) வாக்கினுக்கும் மனதினுக்கும் எட்டாதவிடத்தில் அடையும்படி அடியேனைக்கூட்டிவைத்த திருவருட்சொரூபமாகிய ஆசாரியனே தேவரீர் இரண்டுதிருவடிக்கே துதிசெய்கின்றேன்.

(கு—ரை.) சிவபோகநிலையானது ஆசாரியன் திருவருளின் மூன்றவிட்டே படைத்தவொன்றாகலினாலும், அத்திருவருளினிலையானது வைகரிவாக்கினாலும், தற்போதமனத்தினாலும் சொல்லுதற்கூடாத தன்மையதாகலினாலும், அவ்வரியநிலையைக் கூட்டிவைத்தார்க்கு வந்தனை கூறுவார் 'போற்றி' என்றனர். (௯௨)

பட்டினத்தார் முதல்வன்முறையீடு
முற்றிற்று.

பட்டினத்துப்பிள்ளையார்

குருவே முன்னிலையாகத் திருவாய்மலர்ந்த

## அருட் புலம்பல்.

ஐங்கரனைத் தெண்டனிட்டே னருளடையவேண்டுமென்று
அங்காமல்வந்தொருவன் றன்சொரூபங்காட்டியெனைக்,

(பொ—ரை.) திருவருளினைப்பெறவேண்டுமென்று ஐந்துதிருக்கரங்களுடன் கூடிய விநாயகக்கடவுளை வணங்கினேன். நாமறியாமல் 'முதல்வன்' எழுந்தருளிவந்து தனது சொரூபத்தினைத் தரிசிப்பித்து அடியேனை,

(கு—ரை.) திருவருளினையடைதற்கும் பிரபஞ்சமூலமாக விக்கினம்வராதபடி விநாயகனை வணங்கியவுடன் முதல்வன்றரிசனம் கிடைத்ததென்பார் 'சொரூபங்காட்டி' என்றனர். (௧)

கொள்ளைப்பிறப்பறுக்கக் கொண்டான்குருவடிவம்
கள்ளப்புலனறுக்கக் காரணமாய்வந்தாண்டி.

(பொ—ரை.) கட்டமாகிய சென்மங்களையொழிக்க ஆசாரியமூர்த்தங்கொண்டு வஞ்சகமாயுள்ளபுலன்களை வெல்லுதற்கேதுவாய் வந்தனன்.

(கு—ரை.) முத்திபெறத்தின்ன பிறப்புகட்கு அளவில்லையென்பார் 'கொள்ளைப்பிறப்பு' என்றனர். ஆசாரியர்தரிசனத்தால் இந்திரியங்களின்சேஷ்டையொழிக்குமென்பார், 'கள்ளப்புலனறுக்க' என்றனர்.

(௨)

ஆதாரமோராறு மைம்பத்தோ ரக்கரமும்
ஞாதாரகோட்டையெல்லாஞ் சுட்டான்பரிசறவே.

(பொ—ள்.) ஆறாதாரங்களையும், அவ்வாதாரங்களிலுள்ள ஐம்பத்தோரெழுத்துக்களையும் அவ்வாதார கோணங்களையும் ஆகிய எல்லாவற்றையும் ஆசாரியன் தனதுநேத்திரத்தால் ஒழித்தனன்.

(கு—ரை.) ஆறாதாரமாவன.— மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி. ஐம்பத்தோரட்சரமாவன — அவ்வவ் வாதாரங்களிலுள்ள எழுத்துக்கள். கோட்டையாவன — அவ்வவ்வாதார ங்களின் கோணங்கள். (௯)

மெய்த்தவிகாரம் விளைக்கும்பலபலவாம்
தத்துவங்களெல்லாந் தலைகெட்டுவெந்ததுவே.

(பொ—ள்.) ஆசாரியன் அனுக்கிரகித்ததனால் பற்பலவிகாரம் விளைச்செய்யும் பற்பலவாம் தத்துவங்களெல்லாம்பொசுங்கிவிட்டன.

(கு—ரை.) ஆசாரியர் உபதேசத்தெளிவினால் தத்துவங்களின் உண்மையினை விசாரிக்க அவை சடமெனவிசாரித்தவுடன் அவற் றைவிலக்க காரியப்படாமே நின்றுவிட்டன என்பார் 'தலைகெட்டுவெந் தது' என்றனர். (௰)

என்னுடனேபிறந்தா ரெல்லாரும்பட்டார்தம்
தன்னந்தனியே தரித்திருக்கமாட்டேனடி.

(பொ—ள்.) அடியேனுடன் பிறந்தவர்களாகிய தத்துவங்கள் எல்லாரும் நீங்கினார்கள் இனி நான் தனித்திருந்து வாழேன்.

(கு—ரை.) ஆன்மா தேகமெடுத்தபோழ்தே தத்துவங்களுடனே வாதலின் 'உடன்பிறந்தார்' என்றனர். ஆசாரியரனுக்கிரகத்தால் தத்

தலங்களின்சேஷ்டை யொழிந்ததென்பார் எல்லாரும் பட்டார்கள் என்றனர். (௬)

எல்லாரும்பட்டதனை யென்றுந்தெரிசிப்பது
சொல்லிறழுதநாற் அபாரமெனக்கண்டிலமே.

(பொ—ரை.) எல்லாத் தத்துவங்களும் ஐக்கியமிடம் ஏன்று ரால் நீக்கும், ஞானதத்துவப்பிள்ளை வாயாரச்சொல்லியபடிதால் என்று யாமொழியும.

(கு—ரை.) அஞ்செட்டெழுத்தென்றது நம-ஆம்-அவ்வும்-சிவாயநமவென்றதாம். பிஞ்செழுத்தென்பது சத்தியாட்சரமாகிய வகாரம் மற்றிவற்றின் விபரங்களைத்தையும் அதிகாரத்துவிரு நித்தாந்தமை இசை வைசகர்களைப்படித்து உபதேசக்கிரமமாகத் தெரிந்துகொள்ளவேண்டும். (உ-ங.)

அக்கறுகு கொன்றைதும்பை யம்புலியுஞ் சூடுகின்ற
சொக்கர்திருத்தாளைத் தொழுதுவணங்காமல்
மக்கள்பெண்டிர் சுற்றமுடன் வாழ்வைமெய்யென்பாய்
எக்காலுமுன்னிடஞ் சென்றிரந்தாயே நெஞ்சமே.

(பொ—ரை.) மனமே! உருத்திராட்சத்தினையும், அறுகம்புல்லினையும், கொன்றைப்புட்பத்தினையும், தும்பைமலரினையும், சந்திரனையுந்தரிக்கின்ற சொக்கலிங்கப்பெருமான் அழகியசரணங்களைத்தொழுதுவணங்காமல், புத்திரர், மனைவியர், சுற்றத்தினர் இவர்களுடன் கூடிவாழுதலையே அதிகமாக நம்பி ஆசையாய் எக்காலமும் சத்தியமாயிருக்குமென்று நினைத்துவிட்டனையே.

(கு—ரை.) என்றுஞ்சத்தியமாயுள்ள சிவபெருமான்றிருத்தாளை வணங்காதுஎன்றும் அசத்தியமாயுள்ள வாழ்வினையாசைப்பிரிதலிற் கண்டபயனென்னை யென்பதாம். (௨௫)

ஆண்டகுருவி னருளைப்பெறப்போற்றி
வேண்டுங்கயிலாயர் வீட்டுவழிபாராமல்
பூண்டகுழன்மாதர் பொய்மாய்கைக்குள்ளாகி
தூண்டிலகப்பட்டுத் துடிகெண்டையானேனே.

(பொ—ரை.) மனமே! அடிமையாக ஆட்கொண்ட ஆசாரியனின் திருவருளை அதிகமாகவாதரித்து அத்தியாவசியமாக வடையவேண்டும் திருக்கயிலாயவழியினை யெதிர்பாராமல், (புட்பத்தினைத்) தரித்தகூந்தலையுடைய மாதர்களின் பொய்யாகிய வஞ்சனையிற்சிக்கி, தூண்டிலிலகப்பட்டுத் துடிக்கின்ற கெண்டைமீனுக்கு ஒப்பானேன்

(கு—ரை.) ஆசாரியமூர்த்தியின் அநுக்கிரகத் தன்மையினை யடைந்தால் கயிலையடைதல் நிச்சயமாதலின் அக்கணம்செய்யாது

[illegible] (௩௫)

[illegible]

(பொ—ரை.) [illegible]

(கு—ரை.) [illegible] (௩௬)

[illegible]

(பொ—ரை.) [illegible]

எதன்பொருட்டு வெள்ளெருக்கம் பூவினைப்போல நினைந்து, எத்தியவரு
வில்தங்கிய வைத்திற்குச்சமானமானவனுமாயினேன்.

(கு—ரை.) திருக்கைலாயத்தின் கண்ணேயுள்ள சிவபெருமா
னைத் தியானித்தலின்றியே முத்திபெண்டாம், வேறுபட்டபொருள்
களாகிய தேவர்கள்பால் சித்தத்தைவைத்தின் எழுவேழிறப்பினைத் தின்
னிலையினைபொருக்குமென்பதாம். (௬௭)

நிலைவிட்டுடலையுயிர் நீக்கியகுறும்பன்போல
சிலைதொட்டவேடனெச்சிற் றின்றதனைச்சேராமல்
வலைபட்டுழலுகின்ற மான்போற்பரதவித்தும்
கலைகெட்டநாலதுபோற் றட்டழிந்தாய்நெஞ்சமே.

(பொ—ரை.) தேகத்தின் நிலையினைப்பிரிந்து உயிர்நீங்குமுன்
னர், வில்லினைக்கரத்திலேந்திய வேடராகியகண்ணப்பர் எச்சிலையு
ண்டபரமனிலையினையடையாமல், வலையிற்சிக்குண்ட மானினைப்போல
வும், அனியகப்படாதநாவினைப்போலவும் மாழ்கெட்டேன் என்ற
னர்.

(கு—ரை.) சிவபெருமானையணைக்காது வேறுபட்டமனத்தரியா
வரும் வலையிற்சிக்குண்டமான் கஷ்டப்பட்டதுபோலவும், அனிசா
ஆத நால்சிக்குண்ணுவதுபோலவும் மானினைபொருந்தாள் துன்
பப்படுவதன்றி, அற்சிக்கினைப்பெறப் பிறருக்குத்துன்பம் கொடுப்ப
ரென்பதாம்.

(௬௮)

முடிக்குமயிர்ப்பொல்லா முழுக்குரம்பையின்னுரின்
இடைக்குடைக்குமிதங்கொண்டவார்த்தைசொல்லி

அடிக்கொண்டதில்லைவனத் தையனேதாயனேயேன்
விடக்கையிழந்த பிழைபாதையானேனே.

(பொ—ரை.) புட்பங்களைமுடிக்கும் கூந்தலினையுடையது, நீ ஐம்பாலிய தேகத்திலேயெடுத்துள்ள மாதர்களின்றுகிற்பிறைக்கும், யுடையிறைக்கும் (உவமித்த) பிறைமாலியவசைத்தமதுயினைப்பெரி அன்பரின்பொருட்டுத் திருவடியினைவைய்த்த தில்லை வனத்தின்கண்ணே யெழுந்தருளியிருக்கும் ஐயனேதாயனே தந்தையிழந்த பிழைக்கொத்த வருதியேனென்.

(கு—ரை.) மாதர்களின் அங்கங்களுக்கு உவமானம் சொல்லி முக்கியமாகிறதைகளையெடுத்துக் கூறினைவைக்கட்டுக்குள்தோதும் விபரீத்தாக் குஞ்சிதபாதத்தினையுடைய பெருமானைநினைவடைக்கடமாத்திருப்பது தனக்குடன்னவாக்கட்டிய மாயைத்தினைவிழுந்த பிழைத்திறைக் கொல்லென்றாரம். (௩௪)

நேரனைப்போற்றும் புகழ்மதுரைச்சொக்கநாதா
சிற்பதும்போற்றிச் செய்கோலாகுங்கோமான்
நாவாசகித்தாலும் நீயெபுதுந்நாய்போல
ஆக்காதெநெஞ்சமே யலைத்துதிரிந்தாயே.

(பொ—ரை.) பிரமனைசவத்தின்னும் புகழினையுடைய மதுரையி லெழுந்தருளியிருக்கும் சொக்கலிங்கப்பெருமானது சிறப்புப்பொருந் திய திருவடியினைத்தோத்திரித்துச் செய்தவினையை யாமல் விட்டுணரா மாம்பேதை மொழிபேசிக்கொண்டு (மனம் ஒழிந்தொத்துள்ளதுக்) காலினைப்போல (ஒன்றிறுக்கும்) உபயோகப்படாதமனமே நீ அலைந்துதிரிந்தனையே.

(கு—ரை.) மதுரைச்சொக்கலிங்கப் பெருமானைத்தோத்தரித்து அடையவேண்டிய சற்பதவியினையடையாமல் நாய்போன்ற தூனா

கடத்தித்தல் வினைக்கேறு [illegible] எல்லாரும் [illegible] பிறவிக்கு [illegible] இருக்குமென்பதாம்.

(௪०)

பத்தெட்டாபோனைத் தாய்ப்ப [illegible] புகட்ட
சுத்திட்டபின் [illegible]
செத்திட்டபின்று நீர்கண்ணாலித்து [illegible]
வித்திட்டாய்ச்செந்தேச விடாயையாமே.

(பொ—ரை.) மனமே! பத்து, எட்டு [illegible], பதினாறு [illegible] முப்பத்தாறு தத்துவங்களை [illegible] [illegible] சொரூபத்தினை வணங்காமல் அலைந்து [illegible] [illegible] ஆதாரமாகும் [illegible].

(கு—ரை.) தத்துவாதீதனுக்கிடைத்தும் பெருமானை வணங்காது [illegible] மயக்கி [illegible] [illegible] வினையினை [illegible] யாம்.

(௪௧)

அருந்தட்டினையும் [illegible] [illegible] [illegible]
பிறந்திருந்த வினைக்கொடுமையைப்போற்றும்
[illegible] வினையைப்போர் [illegible]
[illegible] கண்டவைப்போல் [illegible] [illegible].

(பொ—ரை.) ஐந்து, எட்டு, பதினாறு, [illegible], ஒன்று ஆகிய [illegible] தத்துவங்களையும் [illegible] [illegible] பொருமல் பற்றிவிட்ட [illegible] விதுமுனைப்பினைப்போல [illegible].

(கு—ரை.) தத்துவாதீதனுக்கிடைக்கும் பெருமானைப்போற்றும் [illegible], பஞ்சியில் அக்கினி [illegible] போல [illegible] [illegible] விட்டுமுன் பாதினை [illegible] [illegible] [illegible].

ஊனுடலினை யுடைபரப்புபூக்கட்டிடை
பானுடலினைக்கடந்த மன்னுலகில்மேனாமல்
ஆனந்தருபஞ்சவர்க னாண்டருநீர்க்கேதச்சம்விட்டுப்
போனதுபோலேனாம் போய்ப்பிறைழத்தோ மில்லையே.

(பொ—ள்.) ஊனேமீ ருந்தத்தடனே அறிந்துபோகும்புழுக் கள்நிறைந்து கூண்டுபோலேயோத்த உடலோக்கவருகூட்டடனே தாங்கப் புவியிலே சாகாமல்பஞ்சவர்க்டலோன் ஆன்மாட்சிசெய்துகொண்டி ருக்கத்தேவர்த்தீர்க்கக் காட்டிற்சென்றதுபோல நாம்சென்று உயர்த் தோமில்லை.

(கு—ள்.) பஞ்சபாண்டவர்கள் சக்ரவர்த்தி பிறந்துகொண்டு பக்காளிகள் உயர்ந்திரவனியாமல் அவர்களைவிட்டு நீங்கியேகாட்டிற் சென்று பெரியோர்கட்டத்திலிருந்து வாழ்ந்ததுபோல, இவ்வுடற் றின்கண்ணேன பிறந்துகொண்டிருந்து அனேகபானசச்சரவுகளுடன் சஞ்சலப்படாது வெளியேவிந்து மெய்ப்போதவிழியப்பெற்றனர்? (துரைகைசேகவமானம்) (௧௨)

உடனுறவிளைக்கின்ற யூப்பிருந்தபாண்டவர்தா
நாறுபல்லாயிரகுப்பைபரப்பூக்கட்டிடை
விருப்பத்தைத விரும்புகின்றவைதப்பெருகிய
ஞானந்தோரடி என்றீருதேகனின்மையே.

(பொ—ள்.) சகலமான்கேவிச பிறைக்கின்ற கப்பமடைத்தபாண் டத்திற்கொத்தத்தோ, கற்றுமெடாததுபோல் தோன்றிகாறிக்கொண் டிருக்கு நிருவாலதந்தில்அறிபடும் புழுக்கோடுத்தகட்டிடமே, இருமாப்பு வைக்கவேடும் விரும்புகின்றதெங்கு வன்னமழ்ந்தனிறு அறிவில்லாத புவியில் சென்றிருந்தேதனில்லை.

(கு—ரை.) எக்கவிதத்திலுந்தெரிதலும் கூடுமென்பதற்கிடையாத உடலினைநம்பி சுத்தபூமியிலேபேசுவாரும் பாக்கியப்பேற்றிலுப்பெற்றிலே விக்கேலே. (௩௭)

அரியவளிதேடி யழியாவொருமுதலைப்
பரிவுடனேபோற்றும் பரஞ்சுடரைப்போற்றாமல்
கரியபெருவாழ்வைநம்பிக் காமத்தழுந்தியே
அரிவாயிற்பட்ட கரியதுபோலானேனே.

(பொ—ரை.) அருமையானவிஷ்ணுமூர்த்தி தேடி அறிந்துகொள்ளக்கூடாத ஒப்பற்றமுதல்வனை ஆசையுடன்போற்றும் மேலானசுடரைத்தோத்தரியாமல் கரித்துப்போகத்தக்க பெரியவாழ்வினைநம்பி கொண்டுகாமசாகரத்திலழுந்தியே சிரசத்தின்வாயிலகப்பட்டயானையைப்போல வாயினேன்.

(கு—ரை.) பிரபஞ்சவாழ்வானது அநித்தியவாழ்வென்று தெரியாதுமறந்துபெருவாழ்வாக நினைத்திருக்கின்றமையால் பெருவாழ்வென்றனர். இவ்வாழ்க்கையின் செக்கத்தின்வாயிப்பட்டயானையின் கதியேயாமென்றனர். (௩௮)

தந்திரத்தைப்பின்னி தவத்தைமிகவிட்டாறு
மந்திரத்தைப்பின்னி மயங்கித்தடுமாறி
விந்துருவொதமே மேலிலொளியைக்காணாமல்
அந்தரத்தேகோலெறிந்த அந்தகன்போலானேனே.

(பொ—ரை.) சிவாகமங்களைப்படித்து அதன்படி தவமுறச்செய்யாது; சாமான்னிய மந்திரங்களைக்கற்று அதில்மயங்கித்தடுமாறி விந்துநாதங்களைக்கடந்தசோதி சொரூபத்தினைத் தரிசியாமல் ஆகாயத்தில் கைக்கோலைவீசிவிட்ட குருடனையொத்தேன்.

(கு—ரை.) [illegible]
பஞ்சாக்கர [illegible]
[illegible]
[illegible] (௩[illegible])

வில்லார்மேரு [illegible]
வில்லார்க்கை [illegible]
அல்லாப் [illegible]
புல்லாப் [illegible]

(பொ—ரை.) [illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

(கு—ரை.) [illegible]
[illegible]
[illegible]
[illegible] ([illegible])

செந்நெறிப்படலம் முற்றிற்று.

---

## பட்டினத்துப்பிள்ளையார்

## பூரணமாலை.

மூலத் துதித்தெழுந்த முக்கோணச் சக்கரத்துள்
வாலைதனைப் போற்றாமல் மதிமறந்தேன் பூரணமே.

(பொ—ரை.) எங்குநிறைந்தநின்றபொருளே! மூலாதாரத்திலேயுதி த்தமுக்கோணவடிவமாயுள்ள சக்கிரத்திலேகன்னிகையை யெழுந்தருளியி ருக்கும் வாலாம்பிகைத்தாயைத் தோத்திரியாமல் புத்திகெட்டேன்.

(கு—ரை.) மூலாதாரமானது காலெலும்பும் இரண்டெலும்பும் கூடிய இடம்குய்யம். குய்யத்திற்கும் குதத்திற்கும் நடுவேயுள்ள டவிவட்டமாய் அந்தவட்டத்திற்கு நடுவேநாலிதழுடைய ஒருவட்டமாய்க் கடப்பம்பூப்போன்றிருக்கும். அந்தப்புட்பத்திற்குநடுவில் ஓங்காரவெழுத்திருக்கும் அந்த ஓங்காரத்திற்கு நடுவில் விக்கினேசுரனும், வல்லபைசத்தியும் எழுந்தருளியிருப்பார்கள். (க)

உந்திக் கமலத் துதித்துநின்ற பிரமனைச்
சந்தித்துக் காணாமற் றட்டழிந்தேன் பூரணமே.

(பொ—ரை.) எங்குநிறைந்தநின்றபொருளே! உந்தியாகியகமலத்தி லேதோன்றியிருக்கின்ற பிரமனை நெருங்கித்தரிசியாமல் தடுமாறி னேன்.

(கு—ரை.) இதன்பொருள் சுவாதிட்டானம் மூலாதாரத்திற்கு இரண்டுவிர ற்கடைமேலிருப்பது சாற்சதுரமும் அச்சதுரத்தினடுவே ஆறிதழ்க ளையுடைய ஒருபுட்பவட்டமும் அதன்மத்தியிலே லிங்கபீடமும் பிறை த்தண்டின்வடிவுமாயிருக்கும் அதனிடைமத்தியிலே நகாரவெழுத்திருக்கும். அந்நகாரத்தினடுவில் பிரமனும் சரஸ்வதியும் வீற்றிருப்பார். (உ)

நாவிக்கமல நடுநெடுமால்காணுமல்
ஆவிகெட்டபோது மறிவழிந்தேன்பூரணமே.

(பொ—ரை.) எங்குநிறைநின்றபொருளே! உந்தியின்கமலமாகி யநடுவிலேவிஷ்ணுமூர்த்தியைத்தரிசியாமல் உயிரிழந்து அடியேனும் புத்திகெட்டேன்.

(கு—ரை.) இது மணிபூரகம். சுவாதிஷ்டானத்திற்கு எட்டுவிரற் பிரமாணத்திற்குமேலிருப்பது. இது அண்டம்போல ஆயிரத்தெட்டு நரம்புநாடிகளும் சூழநாடிக்கெல்லாம்வேருள்ளது. இது உந்திக்குமேலி ல்அப்புத்தானத்தில்எழாம்பிறைதகினைவிருக்கும் இதனிலேபத்து இதழுடைய ஒருபுட்பம் வட்டமாயிருக்கும், அந்தப்புட்பத்தினடு வில் மகாரமெழுத்துநிற்கும். அம்மகாரத்திற்குநடுவில் மகாவிஷ்ணு வும் இலட்சுமியும் எழுந்தருளியிருப்பர். (௯)

உருத்திரனையிருதயத்தி லுன்னையுடன்பாராமல்
கருத்தழிந்துநானுங் கலங்கினேன்பூரணமே.

(பொ—ரை.) எங்குநிறைநின்றபொருளே! உருத்திரமூர்த்தி யையிருதயத்திலே பிரத்தியட்சமாகத்தரிசியாமல் மனங்கெட்டு அடி யேனுங்கலங்கினேன்.

(கு—ரை.) இது அநாகதம். மணிபூரகத்திற்குமேல் பத்துவிரற் கடைபிரமாணமுள்ள இடத்திற்குமேலுள்ளது, இது இருதயகமல மாம் இத்தேயுத்தானத்தில் முக்கோணமாயிருக்கும். அம்முக்கோண த்தினடுவில் பன்னிரண்டிதழையுடைய ஒருபுட்பவட்டமாயிருக்கும். அப்புட்பத்தினடுவில் சிகாரவெழுத்துநிற்கும் அச்சிகாரத்தினடுவில் உரு த்திரனும்பார்வதியும் எழுந்தருளியிருப்பர். (௰)

விசுத்திமயேசுரனை விழித்திறந்துபாராமல்
பசித்தருமிநெஞ்சம் பதறினேன்பூரணமே.

(பொ—ரை.) எங்குநிறைந்தின்றபொருளே! விசுத்தியிலே மகேசுரனைவிரித்துக்கொண்டிருந்த தரிசியாமற்பெரியாதுவருந்தியமனம் பதைத்தேன்.

(கு—ரை.) இதுவிசுத்தி. அநாகதத்திற்குமேலே பத்துவிரற்கடைப் பிரமாணமுள்ள இடத்திலிருப்பது. இதைக்கண்டவர்கள் [illegible] அறுகோணமாயிருக்கும் அக்கோணத்தினடுவில் பதினாறிதழையுடைய ஒருபுட்பவட்டமாயிருக்கும் அப்புட்பத்தினடுவே வகாரவெழுத்திருக்கும் அதனடுவில் மகேசுவரனுமகேசுவரியும் எழுந்தருளியிருப்பர். (௫)

நெற்றிவிழியுடைய நிர்மலசதாசிவத்தைப்
பத்தியுடன் பாராமற் பொறியழிந்தேன் பூரணமே.

(பொ—ரை.) எங்குநிறைந்தின்றபொருளே! நெற்றியின்கண்ணே நேத்திரத்தையுடைய மலரகிதராயுள்ள சதாசிவத்தினை அன்புடனே தரிசியாமல் அலைந்தழிந்தேன்.

(கு—ரை.) இது ஆஞ்ஞை. விசுத்திக்குப்பன்னிரண்டு விரற்கடைப் பிரமாணமுள்ள ஸ்தானத்திற்குமேலிருப்பது. விளக்கினுடைய சுடர்போல வடிவமைந்திருக்கும். நெற்றிப்புருவத்தின்வெளியாய் ஆகாயதானத்தில் மூன்றிதழையுடைய ஒருபுட்பத்தினடுவே யகாரவெழுத்தோடிணங்கியிருக்கும். அவ்வெழுத்தினடுவே சதாசிவரும் மனோன்மணியும் எழுந்தருளியிருப்பர். (௬)

நாதவிந்துதன்னை நயமுடனே பாராமல்
போதமயங்கிப் பொறியழிந்தேன் பூரணமே.

(பொ—ரை.) எங்குநிறைந்தின்றபொருளே! சீதத்தோய்த்தாயத்தினையும் விந்துநாதத்தின் புகழ்விருப்பமுடனே தரிசியாமல் அறிவுகெட்டு இந்திரியங்களைச் செலுத்தினேன்.

(கு—ரை.) காதத்துக்குள் [illegible] கண்டு, [illegible] பெறப்பட்டன. (௭)

உச்சிவெளியை யுறுதியுடன் பாராமல்
அச்சமுடனே யறிவழிந்தேன் பூரணமே.

(பொ—ரை.) எங்குநிறைந்த பொருளே! உச்சியிலேயிருக்கும் வெளியினை யுறுதியாகத் தரிசியாமல் பயத்துடனே யறிவிழந்தனன்.

(கு—ரை.) உச்சிவெளியாவது விந்துநாதமாகிய தத்துவங்களைக் கடந்த சிதாகாயமென்னும் பரவெளியாம். (௮)

மூக்குமுனையை முழித்திருந்து பாராமல்
ஆக்கைகெட்டேனே யறிவழிந்தேன் பூரணமே.

(பொ—ரை.) எங்குநிறைந்த பொருளே! மூக்கின் நுனியாகிய இடத்தினைக் கண்விழித்திருந்து தரிசியாமல் உடல்கெட்டு அறிவையும் அழியப்பெற்றேன்.

(கு—ரை.) மூக்கினுனியாவது சுழுமுனைஸ்தானம். அவ்விடத்தில் பார்வையினை நாட்டித் தியானஞ்செய்வது ஒருமுறை. (௯)

இடைபிங்கலையி னியல்பறியமாட்டாமல்
தடையுடனே யானுந் தவித்தேனே பூரணமே.

(பொ—ரை.) எங்குநிறைந்த பொருளே! இடைகலை, பிங்கலையின் தன்மையினை உணரமாட்டாமல் தடையுடனே அடியேனும் தத்தளித்தேன்.

(கு—ரை.) இடைகலையாவது மூக்கின் இடத்துவாரத்தின் வழி யாகவரும் பிராணவாயுவாகிய சுவாசம். இதனைச் சந்திரகலையென்பர். பிங்கலைமூக்கின் வலத்துவாரத்தின்வழியாகவரும் பிராணவாயுவாகிய சுவாசம் இதனைச்சூரியகலையென்பர். (௧௦)

உடலுக்குள் நீநின் றுலாவினதைக் காணாமல்
நானென் றிருந்து நலமழிந்தேன் பூரணமே.

(பொ—ரை.) பரிபூரணப்பொருளே! உடலுக்குள்ளே தேவரீர் (ஜீவாத்மாவிற்கு ஆன்மாவாகவிருந்து) உலாவிக்கொண்டிருப்பதனைத் தெரிந்துகொள்ளாமல் நானே அப்பரமான்மாவென விருந்தநலமனைத்தையுமிழந்தேன்.

(கு—ரை.) இது, ,,யாக்கையேகடவுளென்றிடு பாதகர்தவரை" குறித்தது. (௧௧)

மெய்வாழ்வைநம்பி விரும்பிமிகவாழாமல்
பொய்வாழ்வைநம்பிப் புலம்பினேன்பூரணமே.

(பொ—ரை.) எங்குநிறைகின்றபொருளே! உண்மையானவாழ்வதனைச் சத்தியமென நம்பிக்கைக்கொண்டு ஆசைப்பட்டுவாழாது, பொய்மையான வாழ்வதனைச் சத்தியமென நம்பிவியசனமடைந்தேன்.

(கு—ரை.) மெய்வாழ்வாவது சிவபெருமானுடன் இரண்டறக் கலந்துவாழ்வது. பொய்வாழ்வாவது பிரபஞ்சத்தினைச் சத்தியமென எண்ணிவாழ்வது. (௧௨)

பெண்பிள்ளை தந்தைதாய் பிறவியுடன்சுற்றமிவை
யுண்டென்று நம்பி யுடலழிந்தேன்பூரணமே.

(பொ—ரை.) எங்கும்நிறைந்தபொருளே! மனைவி, புத்திரர், பிதா, அன்னை, சோதரருடன் உறவினர் ஆகியஇவர்களெல்லாம் எனக்காளுயிருப்பரென வெண்ணித்தேகமழியப் பெற்றேன்.

(கு—ரை.) இவர்களனைவரும் எக்காலுமிருந்து தனக்குதவி புரிவார்களெனநம்பி அவர்களைக்காக்கும்பொருட்டு உழைத்துழைத்து உடலிளைத்தேனேயொழியத்தனக்கென்ன வொன்றுஞ்சம்பாதித்துக்கொண்டேனில்லையென்பார் 'உடலிழந்தேன்' என்றனர். ()

தண்டிகைப்பல்லாக்குடனே சகலசம்புத்துக்களும்
உண்டென்றுநம்பி யுணர்வழிந்தேன்பூரணமே.

(பொ—ரை.) எங்கும்நிறைந்தபொருளே! தண்டிகை, பல்லக்கு மற்றையசெல்வங்கள் ஆகியஇவைகளெல்லாம் எனக்காளுயிருக்குமென நம்பி அறிவழிந்தேன்.

(கு—ரை.) தனதுயுபரியர்த்தம் தானநுபவித்துவரும் போகங்கள் தனக்கு உபகாரமாகவிருக்குமென நம்பி மோசம்போயினனென்பர் 'உணர்வழிந்தேன்' என்றனர். (௧௪)

இந்தவுடலுயிரை யெப்போதுஞ்சாசுதமாய்ப்
பந்தமுற்றுநானும் பதமழிந்தேன்பூரணமே.

(பொ—ரை.) எங்குநிறைந்தபொருளே! இவ்வுடலிலே உயிரானது எக்காலத்தும் நிலைபெற்றிருக்குமெனப் பந்தப்பட்டவனாகி அடியேனும்பர்பதத்தையிழந்தனன்.

(கு—ரை.) உலகிலேயெக்காலமும் நீடித்திருப்பனெனநம்பிக்கொண்டு அடையவேண்டியபதத்தையடையாது இழந்தேன் என்பார் 'பதமிழந்தேன்' என்றனர். (௧௫)

மாதர்பிரபஞ்ச மயக்கத்திலேவிழுந்து
பேதமயக்கிப் பொறியழிந்தேன்பூரணமே.

(பொ—ரை) எங்குநிறைந்தபொருளே! மாதர்களென்னும்பிர பஞ்சமோகத்திலேயழுந்தி அறிவுகெட்டுமயக்கி மதிகெட்டனன்.

(கு—ரை.) ஒருவன் மயக்கமடைவதற் கேதுவாகிய போகப் பொருள்கள் உலகத்திலே எண்ணிலவாயிருப்பினும் அவற்றுள் மாதரே சிறந்தவராய் எத்தகையினரையு மயக்கத்தக்கப்பொருளாயிருத்த லின் 'மாதர்பிரபஞ்சம்' என்றனர். (கக)

சரியைகிரியாயோகந் தானுஞானம்பாராமல்
பரிதிகண்டமதியதுபோற் பயனழிந்தேன்பூரணமே.

(பொ—ரை.) எங்குநிறைந்தபொருளே! சரியை, கிரியை, யோ கம் ஞானமுதலியவற்றி லொன்றினையுமாடாமல், சூரியனைக்கண்ட சந்திரன்போலப் பிரயோசனமிழந்தேன்.

(கு—ரை.) நான்குவகைப்பட்ட சாதனங்களுமொவ்வொன்றுக்கொவ்வொன்று பதிவாயினும் அதற்குத்தக்க பிரயோசனமடைதல் நிச்சயமாதலின் அங்ஙனஞ்செய்யாது அப்பிரயோசனத்தை யிழந்தேனென்பார் 'பயன ழிந்தேன்' என்றனர். (கஉ)

மண்பெண்பொன்னாசை மயக்கத்திலேவிழுந்து
கண்கெட்டமாடதுபோற் கலங்கினேன்பூரணமே.

(பொ—ரை.) எங்குநிறைந்தபொருளே! மண்ணாசை, பெண் ணாசை, பொன்னாசை யென்கிறமயக்கத்திலே சிக்குண்டு கண்ணிழந் தவொரு மாட்டினைப்போலக்கலக்கமுற்றேன்.

(கு—ரை.) சகுணாத்திரயங்களிற் சிக்குண்டு அகத்தின்கணிற்பட்டார்க்குச் சிவபெருமானுண்டென்னும் எவ்விதத்திலும் தோன்றாதென்பார் 'கண்கெட்டேனே' என்றனர். (கஅ)

தனிமுதலைப் பார்த்துத் தரித்திருக்க மாட்டாமல்
அனியாயமாய்ப் பிறந்திறந் தலைந்திட்டேன் பூரணமே.

(பொ—ரை.) எக்குறைவுமில்லாதபெரியோனே! ஒப்பற்றமுதல்வனாகிய (சிவபெருமானை) தரிசித்துச (சுகமாக) விருக்குமாறறிவையடையாமல் அனியாயமாக இறத்தலிலும், பிறத்தலிலும் பொருந்தியலைந்து ஆயாசமடைகின்றேன்.

(கு—ரை.) யாரொருவர் சிவபெருமானின் தரிசனத்தைப் பெறுகின்றனரோ அவரே இறப்பினும் பிறப்பினும் வாராரென்பது நிச்சயமாதலின் அஃதுணர்ந்து தரிசியாததனினால் சனனமரணத்தில் கட்டுண்டேனென்பார் 'அலைந்திட்டேன்' என்றனர். (க௯)

பாராதனக்கலக்குளிருந் தாகடத்தாமலுணர்ந்து
ஆசைப்பட்டுப் பாரமா மதிகெட்டேன் பூரணமே.

(பொ—ரை.) எக்குறைவுமின்றபெரியோனே! பாவாத்மாவாகிய நான் விருக்குமென்று ஞானமடையச்செய்யுந்தெரிவினையும் விசாரித்துத் தரிசனம்செய்யாமல் மதிகெட்டேன்.

(கு—ரை.) சிவபோகம்புரிந்து அவ்விபோகசமாதியில் ஆனந்தசாகரத்திலே யுள்ள பெருமானைத் தரிசியாது வாழ்ந்ததலினாலே 'மதிகெட்டேன்' என்றனர். (உ0)

வாசிதனைப்பார்த்து மகிழ்ந்தனலைத் தானெழுப்பாமல்
காசிவரைபோய்த்திரிந்து காலலுத்தேன் பூரணமே.

(பொ—ரை.) எங்குநிறைகின்றபொருளே! பிராணவாயுவினைக் கண்டு சந்தோஷித்துத் தேவரீரைத் தோத்திரியாமல், காசித்தலம் வரையிற்சென்று அலைந்துகவல்கொண்டேன்.

(கு—ரை.) சிவயோகசமாதிகூடிப் பிராணவாயுவினையடக்கியிருந்து அந்தர்முகத்திலேதரிசியாது உலகம்சுற்றியலைந்தேனென்பார் "கவலுற்றேன்' என்றனர். பெருமான்உள்ளும்புறம்பும் வியாபித்தானென வுண்மையினைத்தெரிந்து கொள்ளாதுவெளிமுகமாக நாட்டத்திலேமாத்திரம் கருத்தினைவைத்துக் காசிமுதலியதலங்கட்கு யாத்திரைசெய்வதிற் பிரயோசனமில்லையென்றபடியாம். (௨௧)

கருவிகடொண்ணூற்றாறிற் கலந்துவிளையாடினதை
இருவிழியாற் [illegible] விட்டுழித்தேன் பூரணமே.

(பொ—ரை.) எங்குநிறைகின்றபொருளே! தத்துவங்களாகிய தொண்ணூற்றாறிலும் இரண்டறக்கலந்து நடித்ததை இருநேத்திரங்களாலும் தரிசியாமல்விட்டேன்.

(கு—ரை.) அவரவர்கள் கன்மத்திற்குத்தக்கபடி அவரவர்கள் தத்துவங்களைச் சேட்டிப்பிப்பவன் சிவபெருமானென்ற வுண்மையினைத்தெரிந்து கொள்ளவில்லையென்பார் 'விட்டுழித்தேன்' என்றனர்.

உடலுக்குள்நீநின் றுலாவினதைக்காணாமல்
கடமலைதோறுந்திரிந்து காலலுத்தேன்பூரணமே.

(பொ—ரை.) எங்குநிறைகின்றபொருளே! தேகத்திற்குள்ளே தேவரீர் எழுந்தருளியிருந்து சஞ்சரித்ததைத் தரிசியாமல் காடுமலைகளிற்சென்று திரிந்துகால்நொந்தேன்.

(கு—ரை.) உயிருக்குயிராயிருந்து உயிரைச் சேட்டிப்பிக்கும் தன்மையை விசாரித்துத்தேராது அன்னியமாகக்காணும்பொருட்டு

வருநாதாக்களிற் சென்று அலைதல் பிரயோசனமில்லையென்பார் 'கா வலுத்தேன்' என்றனர். (உ௧)

எத்தேசகாலமு நாமிறவா திருப்பமென்று
உற்றானைத்தான் பரமை யுருவழிந்தேன் பூரணமே,

(பொ—ரை.) எங்குநிறைகின்றபொருளே! எக்காலமும் நான் சாகாமலே யிருந்துகொண்டிருப்பேனென்று (நிர்ணயித்துத்) தேவரைப்பற்றிவிசாரியாது நான்கெட்டேன்.

(கு—ரை.) தேகம் அநித்தியமெனும் உண்மையினைத் தேர்ந்து அது அழியுமுன்னே நித்தியமாகிய சிவபெருமானைவிசாரித்து அச் சுகப்பேறடையாது அஞ்ஞானத்தினாலேயே யொழிவாக்கிருப்பபெறுவனென் னிவிசாரியாத் கெட்டேனென்பார் 'உருவழிந்தேன்' என்றனர்.

எத்தனை தாய்தந்தை யிவர்களிடத்தேயிருந்து
பித்தனாயானும் பிறந்திறந்தேன் பூரணமே.

(பொ—ரை.) எங்குநிறைகின்றபொருளே! எண்ணிலாத தாய் தந்தையர்கள் கர்ப்பத்திற்றங்கிப் பேதையானும் இறப்பினும் பிறப்பினும் உட்பட்டேன்.

(கு—ரை.) ஒரே சன்மத்திலேயே விசாரிக்கவேண்டிய உண்மையினை விசாரித்து அவ்வழியிலேநின்று பெறவேண்டிய பேற்றினை யடையாததால் அனேகசென்மங்களை எடுக்கும்படி நேரிட்டதென்பார் 'பித்தனாயானும்' என்றனர். (உ௨)

பெற்றாளுத்தாள் தாயார் பிறந்துழந்தேன் யானுமுன்றன்
பொற்றாளைத்தான்தந்து புகலருள்வாய் பூரணமே.

(பொ—ரை.) எங்குநிறைநின்றபொருளே! தாய்மார்கள் எண்ணிலர்கள் என்னைப்பெற்று அலுத்துவிட்டார்கள், அடியேனும்பிறந்து அலுத்துவிட்டேன் (இனியாகிலும்), தேவரீர் அழகிய இரண்டு திருவடிகளைத் தந்தருளி அடைக்கலந் தந்தருளாய்.

(கு—ரை.) பெற்றெடுத்த தாய்மார்கட்கும், பிறப்பெடுத்ததற்கும் இவ்வளவென்ன என்னுற்றுக் கூட்டாமையின் 'அலுத்தார் அலுத்தேன்' என்றனர். 'இனியாகிலும் தடுத்தாண்டுகொள்ள வேண்டுமென்பார் புகலருள்வாய்' என்றனர். (௭௨)

உற்றாருஞ் சுற்றத்தா ருறன்முறையார் கட்டழுதார்
பெற்றலுத்தாள் தாயார் பிறந்தலுத்தேன் பூரணமே.

(பொ—ரை.) எங்குநிறைநின்றபொருளே! சுற்றத்தினர் அழுது அலுத்துப் போய்விட்டனர், உறவினர் தீயிலிட்டு அலுத்துப்போய் விட்டனர், தாய்மார் பெற்றலுத்து விட்டனர்கள், அடியேன் பிறந்து அலுத்துவிட்டனன்.

(கு—ரை.) எடுத்தசென்மங்களிலே பெற்ற தாய்மார்கட்கும், இறந்துபோதலுற்றச் சுற்றத்தினர்க்கும் சுடுகாட்டிற்கொண்டுபோய் கொளுத்தினவர்களுக்கும் கணக்கில்லையெனவும் அங்ஙனமே அடியேனும் அலுத்துப்போனேனென எடுத்துச்சொன்னவாறு எனவுங் கூறினர்.

பிரமன்படைத்தலுத்தான் பிறந்திறந்து நானலுத்தேன்
உரமுடைய அக்கினிதா னுண்டலுத்தான் பூரணமே.

(பொ—ரை.) எங்குநிறைநின்றபொருளே! பிரமதேவனோ உண்டாக்கி வருந்தினன், அடியேனோ பிறப்பிலும் இறப்பிலும் துன்புற்றேன், பசிபொருந்திய நெருப்போ அருந்தி வருந்திப்போய்விட்டது.

(கு—ரை.) அடிக்கடி பிறந்தும், அடிக்கடி இறந்தும் சரீரா த்தில் மூன்றுபேர் சிரமங்கள் படைக்கவும், அக்கினி கொளுத்தவும் வெவ்வே று பிறப்புகளில் அவர்கள் அழுத்தவும் பெறவும் அவர்களால் சாமங்க ளையும் அனுத்தேனெனவும் கூறினர். (உக)

எண்பத்து நான்கு நூறாயிரத்தின் சென்மமாந் தொனித்தும்
பண்பட்டோனாயும் பலம்பிழைத்தேன் பூரணமே.

(பொ—ரை.) எங்கும் நிறைகின்ற பொருளே! எண்பத்து நான்கு நூறாயிரஞ் சென்மங்களிலும் பிறந்து துன்பமுற்றுத் துக்கமடைந்தேன் பா ன்.

(கு—ரை.) சன்மத்திற்குத் தக்கபடி பற்பல சென்மங்களிலும் உ ட்பட்டிருக்க வேண்டுமென்பது நிச்சயமாதலின் எண்பத்து நான்கு நூறாயிரஞ்சென்மமென்றனர். (உ0)

என்னை அறியாமல் எனக்குள்ளே நீயிருக்க
உன்னை அறியாமல் உடல்விழுந்தேன் பூரணமே.

(பொ—ரை.) எங்கும் நிறைகின்ற பொருளே! ஞானதிருஷ்டியில்லா தபடி என்னிடத்திலுள்ள தேவரீர் எழுந்தருளியிருக்கத் தேவரீரையறிந்து கொள்ளமாட்டாமல் தேகத்தை தவிட்டுத் தீர்ந்தேனே.

(கு—ரை.) சிவபெருமான் ஆன்மாக்கள் தோறும் அந்நுவிதமாக கலந்திருந்தும் மலத்தடிப்பால் தெரிந்துகொள்ளாமலே இறந்தும் தேகமெடுத்தலின் 'உடல் விழுந்தேன்' என்றனர். (உஉ)

கருவாய் உருவாய்க் கலந்தலைந்து நீ போய்
அருவாய் நின்ற அறிவே என் பூரணமே.

(பொ—ள்.) எங்குநிறைகின்றபொருளே! பிறப்பிலும், உருவத்தினிலுமிருந்து கொண்டிருப்பதேயல்லாமல் உலகமனைத்தும் சர்வவியாபியாய் அருவமாகநின்ற உன்னுருவினை அறிகின்றேனில்லை.

(கு—ரை.) பிறப்பினுக்கேதுவாகிய கருவினிடத்தும், விக்கிரகங்களிடத்தும் மற்றுமுள்ளவைகளினிடத்தும் வியாபித்திருக்கும் விசாரித்து உண்மையினைத்தெரிந்து கொண்டேனில்லையென்பார் 'அறிகிலேன்' என்றனர். (௩௨)

செம்பொற்கமலத் திருவடியைப்போற்றாமல்
பம்பைவிரித்தாடும் பசாசானேன் பூரணமே.

(பொ—ள்.) எங்குநிறைகின்றபொருளே! செவ்விய அழகிய தாமரைமலர்போன்றநினது சரணத்தினைத் தோத்திரியாமல், உடுக்கை தட்டித் தலைவிரித்தாடும் பேயினையொத்தேன்.

(கு—ரை.) சிவபெருமான் திருவடியினைத் தரிசியாதவர்கள் எத்தகையினரேனும் பேய்ச்சென்மமெடுப்பார் என்பார் 'பசாசானேன்' என்றனர். (௩௩)

எனக்குள்ளே நீயிருக்க வுனக்குள்ளே நானிருக்க
மனக்கவலைதீர வரமருள்வாய் பூரணமே.

(பொ—ள்.) எங்குநிறைகின்றபொருளே! என்னிடத்தே தேவரீர்வாழவும், தேவரீரிடத்தே நான்வாழவும் எனது மனத்துன்பம் நீங்கிவாழவும் வரந்தந்தருளவேண்டும்.

(கு—ரை.) ஆன்மாவினிடத்தும் பரமான்மா இரண்டறக்கலந்து அத்துவிதமாகவிருக்கினும் மலத்தடிப்பால் அவ்வுண்மை தெரியவாராதிருக்கின்றபடியால் அதனைத் தெரிந்துகொள்ளும்படி செய்யவேண்டுமென்பார் 'வரமருள்வாய்' என்றனர். (௩௪

163



எழுவகைத்தோற்றத் திருந்தனிலே பாடுனைதைப்
பழுதறவேபாராமற் பயனழிந்தேன்பூரணமே.

(பொ—ரை.) எக்குறைவின்றபொருளே! எழுவகையானபிறப்புகளிலும் தேவரீரெழுந்தருளி அவ்வப்பிறப்புகடோறும் கிருபை செய்துகொண்டிருக்கிறதனைச்சூழ்ந்து தெரியாதுகெட்டேன் என்பார் 'பயனழிந்தேன்' என்றனர்.

(கு—ரை.) தேவர், மக்கள், விலங்கு, புள், ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் முதலியவகையில் செனனமெடுக்குந்தோறும் உபகரித்திருந்தவன் சிவபெருமானென்பதனை தேர்ந்துகொள்ளாமையால் மேலும்மேலும் சென்மங்களுக்கேதுவாயிற்றென்பார் 'பயனழிந்தேன்' என்றனர். (சுஉ)

சாதிபேதங்கள் தனையறியமாட்டாமல்
வாதனையானின்று மயங்கினேன்பூரணமே.

(பொ—ரை.) எக்குறைவின்றபொருளே! சாதிவித்தியாசங்கள் தன்மையினைத்தெரிந்துகொள்ளமாட்டாமல் வேதனைபட்டுக்கொண்டிருந்து மயக்கமுற்றேன்.

(கு—ரை.) சாதிபேதங்கள் தொழிற்பாட்டினைக்குறித்து ஏற்பட்டதென்பதனை விசாரியாது அப்பேதங்களைச்சத்தியமென யெண்ணி வழுத்தினவைகளுதலால் பலதுன்பத்திற்கேதுவுண்டாயிற்றென்பார் 'மயங்கினேன்' என்றனர். (சுங)

குலமொன்றாய்க்கிடைத்த குறியையறியாமற்பாழ்
மலபாண்டத்துள்ளிருந்து மயங்கினேன்பூரணமே.

(பொ—ரை.) எக்குறைவின்றபொருளே! குலமொன்றாகவே யிருந்திருக்கவும் அந்தக்குறிப்பினைத்தெரிந்துகொள்ளாமல் மலநிறைந்த தேகத்தினிற்கட்டுபட்டு மயக்கமுற்றேன்.

(கு—ரை.) மனிதஜென்மமுற்ற மொருவனைப் பட்டிருத்தும் அத்துணையாயல் கற்பித்துள்ள பேதங்களிலொத்துண் டறிவுமயக்க முற்றேனென்பார் 'மயங்கினேன்' என்றனர். (௯௦)

அண்டபிண்டமெல்லா மணுவுக்கணுவாகக்
கொண்டவடிவின் குறிப்பறியேன் பூரணமே.

(பொ—ரை.) எங்குநிறைநின்றபொருளே! அண்டத்திலேயும் பிண்டத்திலேயும் அணுவிற்கு அணுவாகித் தெரியாமலிருக்கும் வடிவத்தின் குறிப்பதனைத் தெரிந்துகொள்ளாதவனாயினேன்.

(கு—ரை.) அண்டபோகத்திற்கும் பிண்டபோகத்திற்கும் அதிருக்குமகாரணமாகவிருந்து காரியப்படுத்தும் அருளின் வடிவைத்தை விசாரித்துணர்ந்தேனில்லையென்பார் 'குறிப்பறியேன்' என்றனர். (௯௧)

சகஸ்திரத்தின்மேலிருக்குஞ் சற்குருவைப்போற்றாமல்
அகந்தையுடையபாவத்தா லறிவழிந்தேன்பூரணமே.

(பொ—ரை.) எங்குநிறைநின்றபொருளே! ஆயிரந்தழுடன்கூடிய தாமரைபோன்ற (இருதயத்திலே) எழுந்தருளியிருக்கும் ஆசிரியனைத் தோத்தரியாமல் அவ்விருதயத்திலேயே யிருந்துகொண்டிருக்கும் அகங்காரத்தால்கெட்டேன்.

(கு—ரை.) இருதயத்திலேயே ஆசிரியராகியசிவபெருமானுறைந்தும் அகங்காரத்துவம் தெரிந்தொள்ளாதபடி அமிழ்ந்துகொண்டிருந்ததினால் 'அறிவழிந்தேன்' என்றனர். (௯௨)

ஐந்துபொறியை யடக்கியுள்ளேபோற்றாமல்
நைந்துருகிநெஞ்சு நெக்கிலேன்பூரணமே.

(பொ—ரை.) எங்குநிறைநின்றபொருளே! பஞ்சேந்திரியங்களை யடக்கித்தேவரீரைத் தரிசியாமல் வாடிமனமிளகி நெக்குருகேன்

(கு—ரை.) இந்திரியங்களைக்கொண்டாவது நீச் சிவபெருமானைத் தரிசனம்பண்ணிட்டவேது அருமையாதலின் அங்ஙனஞ்செய்யாது விளையாட்டொழிந்தேனென்பார் 'கலங்கினேன்' என்றனர். (௫௦)

என்னைத்திருத்தி யெப்படியோ வாட்டுவித்தாய்
உன்னையறியா துடலழிந்தேன் பூரணமே.

(பொ—ரை.) எங்குநிறைகின்றபொருளே! அடியேனை (என்ன கன்மத்திற்குத்தக்கபடி) பலதேகங்களெடுக்கத்திலே இப்பிரகாரமாகத் தேவரீர் ஆட்டுவித்தனை. தேவரீரை நானறியாமல் தேகமிழக்கிறேன்.

(கு—ரை.) ஆன்மாக்களின் கன்மத்திற்குத்தக்கபடி அவரவர் கன்மபோகத்தினை யநுபவிக்கும்படிக் கட்டளையிடுகின்றவனாகச் சிவபெருமானிருக்கும் அதுதெரியாது போயினேனென்பார் 'உடலழிந்தேன்' என்றனர். (௫௧)

நரம்புதசைதோலெலும்பு நாற்றக்குடிலிருந்து
வரம்பறியமாட்டாமல் மயங்கினேன் பூரணமே.

(பொ—ரை.) நரம்பு, மாமிசம், தோல், எலும்பு முதலிய வைகளால் நாற்றத்துடன்கூடிய தேகத்திலேயிருந்து தேவரீர் அளவைத் தெரிந்துகொள்ளாமல் மயக்கமுற்றேன்.

(கு—ரை.) உடலிலேகட்டுப்பட்டுக் கிடக்கிறதேயன்றித் தேவரீர் சர்வவியாபக உண்மைகளைத் தெரிந்துகொள்ளாதிருக்கிறேன் என்பார் 'மயங்கினேன்' என்றனர். (௫௨

சிலந்திபுடைநூல்போற் சிலசெந்துக்குள்ளிருந்த
நலந்தனைத்தான்பாராமல் நலமழிந்தேன்பூரணமே.

(பொ—ரை.) எங்குநிறைகின்றபொருளே! சிலந்தி பூச்சியிலிருந்து நூலுண்டானதுபோல ஆன்மாவினிடத்து நீக்கியிருக்கு நன்மையினைப்பார்த்தறியாமல் திகையுற்றேன்.

(கு—ரை.) சிலந்தியானது தன்னுடலிலேயிருந்து நூலினையுண்டாக்கல்போல, தேவரீர் மாயையினிடத்திலிருந்து உலகத்தைக் காரியப்படுத்தினுண்மை விசாரித்துணராது விழலனேனென்னென்பார் 'அலமருகின்றேன்' என்றனர். (௪௩)

குருவாய்ப்பரமாகிக் குடிலைசத்தி நாதமுமாய்
அருவாயுருவான தறிகிலேனென்பூரணமே.

(பொ—ரை.) எங்குநிறைகின்றபொருளே! குருவாகியும், பரம்பொருளாகியும், சுத்தமாயையாகியும், சத்தியாகியும், நாதமாகியும், விந்துவாகியும், அருவாகியும், உருவாகியும்நின்ற உண்மையினையறிந்தேனில்லை.

(கு—ரை.) சகலான்மக்களைத் தடுத்தாளும்பொருட்டு ஆசாரிய கோலங்கொண்டு வருபவனாதலின் குருவாயெனவும், எல்லாருக்கு மேலானவனாதலின் பரமாகியெனவும், சுத்தமாயையினையும் நாதவிந்துக்களையும் காரியப்படுத்துபவனாதலின் குடிலைநாதவிந்தாயெனவும், சத்தியினைத்திருமேனிகொண்டு விளங்குபவனாதலின் சத்தியெனவும், சொரூபத்தில் நிஷ்களமாயும் தடத்தத்தில் சகளமாயும் விளங்குபவனாதலின் அருவாயுருவானவெனவுங்கூறினர். (௪௪)

ஒளியாய்க்கதிர்மதியா யுள்ளிருளாயக்கினியாய்
வெளியாகிநின்ற வியனறியேனென்பூரணமே.

(பொ—ரை.) எங்குநிறைகின்றபொருளே! சோதியாய்ச் சூரியசந்திராய் ஆணவவிருளாய்த் தீயாய் ஆகாயமாயிருந்த ஆச்சரியத்தினைத் தெரியேன்.

(கு—ரை.) ஒளி, கதிர், மதி, மலம், அக்கினியாவும் சிவபெருமானையன்றிக் காரியப்படாதாகலினாலும், தான் சிதாகாயமான வெளியாகி நிற்பவனாகலினாலும் 'வியனறியேன்' என்றனர். ([illegible])

இடையாகிப் பிங்கலையாய் யெழுந்தசுழு முனையாய்
உடலுயிராய்த் தரித்திருந்த வுளவறியேன் பூரணமே.

(பொ—ரை.) எங்குநிறைகின்றபொருளே! இடைகலை நாடியாகியும் பிங்கலைநாடியாகியும், சுழுமுனைநாடியாகியும், உடலின்கண்ணே உயிராயும் நீ தங்கியிருந்தருளியிருந்த தந்திரத்தினையறியேன்.

(கு—ரை.) மூலவாயுவென்பட்ட பிராணவாயு சரிப்பதுவும், உடலின்கண் உயிர் நிலைபெற்றிருத்தலும் சிவபெருமான் பிரேரேபணையாலாகலின் அவ்வுண்மை தெரிந்துகொள்ளவில்லையென்பார் 'உளவறியேன்' என்றனர். ([illegible])

மூலவித்தாய் நின்று முளைத்துடல்தோறுமிருந்து
காலின் வழிக்குங் கணக்கறியேன் பூரணமே.

(பொ—ரை.) எங்குநிறைகின்றபொருளே! (ஆன்மாக்கள் உண்டாதற்குக்) காரணமாயிருந்து தோன்றியபின் அவர்களுடலின் மன்னி இயமனுக்கிசைந்து சஞ்சரிக்கும் உண்மையறியேன்.

(கு—ரை.) ஆன்மாக்களின் இச்சைப்பிரகாரம் உண்டாக்குதலும் காத்தலும், அழித்தலும் ஆகிய தொழிலுண்மை தெரியேனென்பார் 'கணக்கறியேன்' என்றனர். ([illegible])

உள்ளும்புறம்புமா யுடனாகிநின்றிருந்த
தெள்ளவுநானறியா திருந்தேனே பூரணமே.

(பொ—ரை.) எங்குநிறைகின்றபொருளே! தேகத்தினிடத்தே உள்ளேயும் வெளியிலேயும் எழுந்தருளியிருந்த தன்மையினைச் சிறிதும் தெரிந்துகொள்ளாதிருந்தேன்.

(கு—ரை.) கன்மத்திற்குத் தக்கபடி ஆன்மாவின் உயிருக்குயிரா யிருந்து சேட்டிப்பித்தும், பிரபஞ்சபோகத்தினை யூட்டுவித்தும் நிற்பவன் சிவபெருமானென்பதனைச் சிறிதும் தெரிந்துகொள்ளவில்லை யென்பார். (அறியா திருந்தேன்) என்றனர். (சஅ)

தாயாகித்தந்தையாய்த் தமர்களுமாய்ச்சுற்றமெல்லாம்
நீயாகிநின்ற நிலையறியேன்பூரணமே.

(பொ—ரை.) எங்குநிறைகின்ற பொருளே! அன்னையாகியும் பிதாவாகியும், உறவினராகியும், தேவரீராகியிருந்த நிலையினை யறியேன்.

(கு—ரை.) ஒருவனுக்கு உலகத்தின்கண்ணே உதவியாகவிருப்பவராகக் கூட்டிவைப்பவனும் இவர்கட்கு அன்னியமாகவிருப்பவனும் சிவபெருமானேயென்னும் தன்மையினைத் தேரேனென்பார் 'நிலையறியேன்' என்றனர். (சகூ)

விலங்குபுள்ளூர்வனசரம் விண்ணவர்நீர்ச்சாதிமனுக்
குலங்களெழுவகையில்நின்ற குறிப்பறியேன்பூரணமே.

(பொ—ரை.) எங்குநிறைகின்ற பொருளே! விலங்கு, புள், ஊர்வன, தாவரம், தேவர், நீர்வாழ்வன, மக்கள் ஆகிய பிறப்புக்கள் எழுவகையினுமிருந்த வகையையறியேன்.

(கு—ரை.) எழுவகைப்பட்ட பிறப்புக்களினும் அவ்வவற்றின் கன்மத்திற்குத்தக்கபடி தனுகரணபுவனபோகங்களைக் கூட்டிவைப்பவன் சிவபெருமானென்னும் கருத்தையறியேனென்பார் (வகையறியேன்) என்றனர். (௰)

ஆணாகிப்பெண்ணாய் அலியாகிவேற்றுருவாய்
மாணாகிநின்ற வகையறியேன்பூரணமே.

(பொ—ரை.) எங்குநிறைகின்ற பொருளே! ஆணாகவும், பெண்ணாகவும், அலியாகவும், இவைகளைக்கடந்த வேறுபட்ட உருவமாகியும், பெருமையுடனின்ற தன்மையினையறியேன்.

(கு—ரை.) ஆன்மாவொன்றினை அதன்கன்மத்திற்குத் தக்கபடி சீவன் ஆணாகவும், பெண்ணாகவும், அலியாகவும், அஃறிணையாகவும் சிருஷ்டிப்பவன் சிவபெருமானேயென்னும் தன்மை தெரிந்திலேனென்பார், 'வகையறியேன்' என்றார். (௰க)

வாலையாய்ப்பக்குவமாய் வளர்ந்துகிழந்தானும்
பாலையாய்நின்ற பயனறியேன்பூரணமே.

(பொ—ரை.) எங்குநிறைகின்ற பொருளே! பாலை, வாலை, யௌவனம், மூப்பு ஆகியிருந்த பிரயோசனத்தினைத் தேரேன்.

(கு—ரை.) மானுடனாது எப்போதுமேயிருக்கினும், பிராரத்தவினை யனுபவிக்குமளவு தேகமிருக்குமாகலின் பலபருவங்களையடைந்தே தேகமிருப்பது கன்மத்தினாலே என்பதாம். (௰உ)

பொய்யாய்ப்புவியாய்ப் புகழ்வாரிதியாகி
மெய்யாகிநின்ற வியனறியேன்பூரணமே.

(பொ—ரை.) பொய்யாகியும், பூமியாகியும், புகழ்ப்பகிம் சமுத்திரமாகியும் மெய்யாகியும் இருந்த ஆச்சரியமறியேன்.

(கு—ரை.) தெய்வமில்லையென்பார்பாலே பொய்யாகியும், உண்டென்பவர்பால் மெய்யாகியும், மண்-நீர் என இரண்டெடுறப்பட்ட பிரபஞ்சம் காரியப்படுதற்கேதுவாகியும் சிவபெருமானிருந்ததாகிய உண்மையினை யறியேனென்பார் 'மயக்கறியேன்' என்றனர். (௯௩)

பூவாய் மணமாகிப் பொன்னாகி மாற்றாகி
நாவாய்ச் சொல்லான நயமறியேன் பூரணமே.

(பொ—ரை.) எங்கும் நிறைகின்ற பொருளே! பூவாகியும் அதன் வாசனையாகியும், பொன்னாகியும் அதன் மாற்றாகியும், நாவாகியும் அதன் சொல்லாகியுமுள்ள அருமையினை யறியேன்.

(கு—ரை.) புஷ்பத்தில் மணமும், பொன்னில் மாற்றும், நாவில் சொல்லும் தாதான்மிய சம்பந்தமுற்றுச் சிவமும் சத்தியும் விளங்கும் மெய்யினைத் தேர்ந்தேனில்லையென்பார் 'நயமறியேன்' என்றனர். (௯௪)

முதலாய் நடுவாகி முப்பொருளாய் மூன்றுலகா
யிதமாகி நின்ற வியல்பறியேன் பூரணமே.

(பொ—ரை.) எங்கும் நிறைகின்ற பொருளே! ஆதியாகவும், நடுவாகியும், (அந்தமாகியும்) மூத்தேவர்களாகியும், மூன்றுலகங்களாகியும், நன்மையாகவும் இருந்த தன்மையினைத் தெரியேன்.

(கு—ரை.) ஆதியாந்தமில்லாதவனாயிருந்தும், ஆதியந்தமுடையவன் போலிருந்து, மும்மூர்த்திகளை யதிட்டித்துக்கொண்டு மூவுலகங்களையுங்காத்து எல்லாநன்மையினையும் ஆன்மகோடிகட்குச் செய்து

வ்ருபமுடைய தன்மையினைத் தேரேனென்பார் (இயலறியேன்) என்றனர். (௬௫)

ஊனுடலுயிரா யுண்ணிறைந்தகண்ணொளியாய்த்
தேனாய்ருசியான திறமறியேன் பூரணமே.

(பொ—ரை.) எங்குநிறைகின்ற பொருளே! ஊனுடலும், உடலில் உயிராகியும், உயிருள்நிறைந்த கண்ணொளியாகியும், தேனும் அதன் சுவையாகியும் இருக்குந்தன்மையினை யறியேன்.

(கு—ரை.) ஆன்மாவினுள் பரமான்மாவாகவிருந்து சேட்டிப்பிக்கிறதினாலேயே ஊனுடலினிலேத்திருத்தலினால் அவ்வுண்மையறியேனென்பார் 'திறமறியேன்' என்றனர். (௬௬)

வித்தாய்மரமாய் விளைந்தகனியாய்ப்பூவாய்ச்
சித்தாகிநின்ற திறமறியேன் பூரணமே.

(பொ—ரை.) வித்தாகியும் (அதன்காரியமான) மரமாகியும், (அம்மரத்திலுண்டாகும்) பழமாகியும் (அப்பழத்திற்கேதுவாகிய) புட்பமாகியும் அறிவுசொருபமாகி நின்ற உண்மையறியேன்.

(கு—ரை.) அசித்தாயுள்ள ஒருவிதை பலவகையாகக் காரியப்படுகிறதற்கு ஏதுவாயுள்ள சித்துரூபமுடையவனே காரணமென்பதனைத் தேரேனென்பார் 'திறமறியேன்' என்றனர். (௬௭)

ஐவகையும்பெற்றுலகை யண்டபகிரண்டமெல்லாந்
தெய்வமெனநின்ற திறமறியேன் பூரணமே.

(பொ—ரை.) எங்குநிறைகின்ற பொருளே! பஞ்சகிருத்தியங்களைச்செய்து உலகமுழுவதினிலும் தெய்வமாக எழுந்தருளியிருக்கின்ற உண்மையறியேன்.

(கு—ரை.) இவ்வுலகத்தில் ஆன்மகோடிகட்குப் பஞ்சகிருத்தியநடத்த அரனொருவனே எல்லாரும் தெய்வமென்றெண்ணி வழிபடுதற்கேதுவானவனென்ற உண்மையறியேனென்பார் 'திறமறியேன்' என்றனர். (௩௮)

மனமாய்க்கனவாகி மாய்கையாயுள்ளிருந்து
விளைவாகிநின்ற நிலையறியேன்பூரணமே.

(பொ—ரை.) எங்குநிறைகின்ற பொருளே! மனமாகியும், (அம்மனத்தில் விளையும்) கனவாகியும் மாயமாக உள்ளேயிருந்து விளைப்பனவாயிருந்த நிலைதனையறியேன்.

(கு—ரை.) உடலின்கண்ணே ஆன்மாவானது அவஸ்தாபேதமடைதற்குக் காரணமும் சிவபெருமானென்ற தன்மையினை யறியேனென்பார் 'நிலையறியேன்' என்றனர். (௩௯)

சத்திசிவமிரண்டாய்த் தான்முடிவிலொன்றாகிச்
சித்திரமாய்நின்ற திறமறியேன்பூரணமே.

(பொ—ரை.) எங்குநிறைகின்ற பொருளே! சத்திசிவமென்னும் இரண்டுபொருளாகி, முடிவில் ஒருபொருளாகி விசித்திரத்தன்மையதாகவிருந்த உண்மையறியேன்.

(கு—ரை.) சிவமொன்றே புனர்சிருஷ்டியில் ஞாயிறும் அதனொளியும்போல இரண்டென்னச் சிவசத்தியாகி லயகாலத்தில் சத்திசிவத்திலொடுங்கச் சிவமேயாயிருந்த உண்மையினை விசாரித்தறியேனென்பார் 'திறமறியேன்' என்றனர். (௪௰)

பொறியாய்ப் புலனாகிப் பூதபேதப்பிரிவாய்
அறிவாகிநின்ற வளமறியேன்பூரணமே.

(பொ—ரை.) எங்குநிறைகின்ற பொருளே! ஐம்பொறிகளாக வும், ஐம்புலன்களாகவும், பூதங்களாகவும் அவற்றின் பேதங்களாகவும், அறிவு சொரூபமாகவுமிருக்க அவ்விதனையறியேன்.

(கு—ரை.) ஞானேந்திரிய முதலிய தத்துவமனைத்தும் காரியப்படுதற்கேதுவாக அவற்றினைப் பிரவேசித்தும் தாக்கற்றுச் சித்ரூபமாகவிருந்துகொண்டிருக்கிற தன்மையறியேனென்பார் 'அளவறியே' னென்றனர். (௬௪)

வானிற்கதிர்மதியாய் வளர்தழிற்றென்றனதுபோல்
ஊனுடலுக்குள்ளிருந்த வுயிர்ப்பறியேன்பூரணமே.

(பொ—ரை.) எங்குநிறைகின்ற பொருளே! ஆகாயத்தின்கண் ணே சூரிய சந்திரர்களாய் விளங்கப்பெற்றது ஒருதன்மையானது போல ஊனுடன்கூடிய தேகத்திற்குள்ளிருந்த பிராணனைத் தெரியேன்.

(கு—ரை.) சகலகேவலமற்ற அவசரத்தில் இ[illegible]ல் தோன்றுத அருளொளியொன்றே தோன்றுமென்பார் [illegible] அதுபோல் என்றும், தேகத்தினிடத்தே பிராணவாயு [illegible]சரிக்குமவிதமறியே னென்பார் 'உயிர்ப்பறியேன்' என்றனர். (௬௫)

பொய்யும்புலையுமிகப் பொருந்தும்வீண்பேசலன்றி
ஐயோவுனையுரைக்க வறிந்திலேன்பூரணமே

(பொ—ரை.) எங்குநிறைகின்ற பொருளே! பொய்மையும், புலா லுண்ணுதலையும், அதிகமாகப்பெற்ற வீண்வார்த்தை பேசுவதேயொழிய அந்தோ! தேவரீரைத் தியானிக்கத் தெரிந்திலேன்.

(கு—ரை.) நாள்முழுவதும் பிழைத்தற்கும் பொய்பலபேசுதலும், உடலைப்பெருத்தற்குப் புலாலுண்ணுதலுமாகி இக் காலத்தினைக் கழித்தேனேயன்றித் தெய்வசம்பந்தமாக வொன்றும் செய்தேனில்லையென்பார் 'அறிவிலேன்' என்றனர். (௩௬)

நிரந்தரமாயெங்கு நின்றுவிளையாடினதைப்
பரமதுவேயென்னப் பதமறியேன்பூரணமே.

(பொ—ரை.) எங்குநிறைகின்ற பொருளே! நித்தியமாகவெங்குமிருந்துகொண்டு விளையாடிக்கொண்டிருப்பதாகிய தன்னையே பரமப்பொருளென்னும் தன்மையினைத் தேரேன்.

(கு—ரை.) சர்வவியாபகமாக எங்குநிறைந்துகொண்டு பிரபஞ்சகாரியம் செய்துவராநின்ற வொரு பெரிய வஸ்துவே பொருளென்பதனை யுணர்ந்துகொண்டேனில்லையென்பார் 'பதமறியேன்' என்றனர். (௩௭)

கொல்வாய்ப்பிறப்பிப்பாய் கூடவிருந்தேசிகிப்பாய்
செல்லாப்பிறர்க்குட் செயலறியேன்பூரணமே.

(பொ—ரை.) எங்குநிறைகின்ற பொருளே! சங்காரஞ்செய்வாய் சிருஷ்டிப்பாய், கூடவிருந்து காத்துவருவாய், உள்ளுணர்வாயிருந்துகொண்டிருப்பாய் இக்காரியத்தினைத் தேரேன்.

(கு—ரை.) ஆன்மாக்கட்கு முத்தொழில்செய்வதுடன் உள்ளும் புறம்புமாய் விளங்கும் காரியத்தைத் தெரிந்துகொண்டேனில்லையென்பார் 'செயலறியேன்' என்றனர். (௩௮)

வாரிதியாய்வையமெல்லா மண்டமண்டபிண்டமெல்லா
ஊரநிறாய்நின்ற நிலைமறியேபூரணமே.

[ஞ

(பொ—ள்.) எங்குநிறைகின்ற பொருளே! சமுத்திரமாய் உலகமனைத்திலு நிலைபெற்ற அண்டபிண்டமனைத்திலுமிருந்து நடத்துகின்றதன்மையினைத் தேரேன்.

(கு—ள்.) நீரும் நிலனுமாகப் பிரிந்துள்ள சர்வாண்டங்களாகிய தேரினை நடத்துகின்ற வொருசாரதியினையொப்பாக விருந்து கொண்டிருக்கின்ற இடந்தேரேன் என்பார் 'தாமறியேன்' என்றனர். (௯௧)

வித்தாய்மரமாய் வெளியாயொளியாகி
சத்தாயிருந்த தாமறியேன்பூரணமே.

(பொ—ள்.) எங்குநிறைகின்ற பொருளே! விதையாகி, மரமாகி, ஆகாயமாகி, பிரகாசமாகிநின்ற தேவரீர், உண்மையாயிருந்த தன்மை தேரேன்.

(கு—ள்.) யாவற்றிற்கும் காரணமாகியும் அவைகள் காரியப்படுதற்கும் ஏதுவாயும், சிதாகாயமாகியும் அதனில் விளங்கும் அருட்சோதியாகியும், நித்தியவஸ்துவாகியும் இருந்ததன்மையைத் தேரேன் என்பார் 'தாமறியேன்' என்றனர். (௯௨)

தத்துவத்தைப்பார்த்[illegible]யறிந்தபினால்
உய்த்துணர்ந்தான்பார் [illegible]பூரணமே.

(பொ—ள்.) எங்குநிறைகின்ற பொருளே! தத்துவதரிசனம் செய்த பின்னர் ஆன்மாவாகிய தன்னை விசாரித்து விசாரித்த அறிவைக்கொண்டு ஆராய்ந்து உன்னைத்தரிசிப்பதல் வாழ்வுகள் உய்ச்சிப்பரோ.

(கு—ரை.) தத்துவதரிசனம், ஆன்மதரிசனம் செய்தபின்னர் சிவதரிசனஞ்செய்ய முயலாது வாழ்பவர் அடையவேண்டிய பிரயோசனத்தினையடையாரென்பார் 'உய்வரோ' என்றனர். (கஅ)

ஒன்றாயுயிரா யுடல்தோறு நீயிருந்தும்
என்று மறியார்க ளேழைகள்தாம் பூரணமே.

(பொ—ரை.) எங்குநிறைகின்ற பொருளே! ஒன்றாகியும், உயிராகியும், ஒவ்வொருதேகத்தும் நீ தங்கியிருந்தும் எக்காலத்தும் தெரிந்துகொள்ளார்கள் அறிவிலிகள்.

(கு—ரை.) ஒப்பற்ற ஒருதெய்வமாகவிருந்தும், உயிருக்குயிராயிருந்தும், உடலினைக் காரியப்படுத்தியும் இருந்துகொண்டிருக்கிற உண்மையினைக் கல்வியில்லாதவர்கள் தெரிந்துகொள்ளுதலில்லையென்பார் 'அறியாரேழை' என்றனர். (கசு)

நேற்றென் றுநாளையென்று நினைப்புமறப்பாய்ப்படைத்
மாற்றமாய்நின்ற வளமறியேன் பூரணமே. [த

(பொ—ரை.) எங்குநிறைகின்ற பொருளே! நேற்றையதினமென்றும், நாளையதினமென்றும், நினைவையும், மறதியையுமடைந்து, வேறுபட்டிருக்கும் தன்மையறியேன்.

(கு—ரை.) இறந்தகாலம் எதிர்காலங்களில் கட்டுப்பட்டும் சகல கேவலமடைந்தும் இவற்றைக்கடந்து வாழவேண்டிய உண்மையைத் தேரேன்என்பார் 'வளமறியேன்' என்றனர். (உ0)

மனம்புத்திசித்தி மகிழறிவாங்காரமதாய்
நினைவாந்தலமான நிலையறியேன் பூரணமே.

(பொ—ரை.) எங்குநிறைகின்ற பொருளே! மனம், புத்தி, சித் தம்தரிக்கின்ற அறிவென்னும் ஆங்காரம் ஆகியவிவைகளோதற்கேது வானவிடத்தின் நிலையினைத்தேர்ந்தேன்.

(கு—ரை.) அந்தக்கரணம் நான்கும் உண்டாதற்கேதுவாயுள்ள தத்துவத்தின் உண்மை தெரிந்து அவற்றையொடுக்கிக்கொண்டே னில்லையென்பார் 'நிலையறிந்தேன்' என்றனர். (எ௧)

உருப்பேதமின்றிப் பெயர்த்தசத்தபேதமதாய்க்
குருப்பேதமாய்வந்த குணமறிந்தேன்பூரணமே

(பொ—ரை.) எங்குநிறைகின்ற பொருளே! உருவத்தினால் வே றுமையின்றிச் சொல்லின் சத்தபேதத்தினாலேயே மாத்திரமுண்டா கின்ற உண்மையறிந்தேன்.

(கு—ரை.) ஆண், பெண், அலி என்னும் வேற்றுமைசொல்லி ன் சத்தத்தால் அமைந்த பேதவிந்தியாசமேயன்றி (ஆன்மாவிற்குச் சொல்லுமில்லை) என்னும் உண்மை தேர்ந்தேன் என்பார் 'குணமறிந்தே ன்' என்றனர். (எ௨)

ச[illegible]மயபேதத்தான் தானிலைக்குத்தப்பி[illegible]லொரு
உட்சம[illegible]டேன் ஞானமறைத்தனையேபூரணமே.

(பொ—ரை.) [illegible]ருளே! அறுவகைச்சம யபேதக்கோட்பாட்டைக்கண்டு மேலும் [illegible]ற்றையெல்லாம் அடக்கிக்கொ ண்டிருக்கின்ற உட்சமயமுண்டென [illegible]சாரியசொல்லக் கொண்டெழு ந்தருளித்தெரிவித்தனையே.

(கு—ரை.) அறுசமயங்களாவன:—பாடாணவாதசைவர், பேத வாதசைவர், சமவாதசைவர், சங்கிராந்தவாதசைவர், ஈசுவரவிகார

வாதசைவர், சிவாத்துவிதசைவர் ஆம். உட்சமயமாவது சுத்தாத்துவித சித்தாந்தவைதிக சைவம். (௭௩)

முப்பத்திரண்டுறுப்பாய் முளைத்துப்படைத்துள்ளிருந்த
செப்படிவித்தைத் திறமறியேன்பூரணமே.

(பொ—ரை.) எங்குநிறைகின்றபொருளே! முப்பத்திரண்டு அங்கங்களுடன் கூடிய ஒருஉடலினையு[illegible]க்கி அவ்வுடலிலிருந்து கொண்டு செய்யுங்காலத்தின் சாமர்த்தியத்தினையறியேன்.

(கு—ரை.) ஒருவனுக்கு கேசாதிபாதம்வரையிலுள்ள உறுப்புகள் முப்பத்திரண்டு இவ்வளவுமமைந்த ஒருவன்உயிருக்குயிராயிருந்து அவரவர்கள் கன்மத்திற்குத்தக்கபடிக் கூட்டிவைப்பவ னென்பார் 'செப்படிவித்தை' என்றனர். (௭௪)

என்னதான்கற்றாலென் னெப்பொருளும்பெற்றாலென்
உன்னையறியாதாருய்வரோபூரணமே.

(பொ—ரை.) எங்குநிறைகின்றபொருளே! எவ்வளவுசா[illegible]திரங்களைப்படித்திருந்தும் என்ன? எவ்வளவுசெல்வமடைந்திருந்து மென்ன? தேவரீரைத்தெரிந்து கொள்ளாதவர் உச்சீ[illegible]யரோ

(கு—ரை.) தெய்வவுண[illegible]ாதவர்கள் எவ்வளவுபடித்தாலும், எவ்வளவு செல்வமடைந்தாலும் சிறிதுபிரயோசனமில்லை யென்பதாம் (௭௫)

கற்றறிவோமென்பார் காணார்களுன்பதத்தைப்
பெற்றறியார்[illegible]களுக்குப் பிறப்பறுமோபூரணமே.

(பொ—ள.) எங்கு நிறைகின்றபொருளே! கல்வி கற்றுத்தெரிந்து கொள்வமென்பார் (கற்றபின்) இன்பதத்தைக் காணார்கள், உன்னருளைப்பெற்றறியாதவர்க்குப்பிறப்பு நீங்குமோ.

(கு—ள.) மெய்கண்டசாஸ்திர வாசாய்ச்சியின்றி இலக்கியஇலக்கணநூல்கள் எவ்வளவுகற்றாலும் சிவபெருமானுடைமையினைத் தோரார் அவனருளையின்றிச் சனனமரணநீங்கார். (எக)

வாசேன்பாரல்[illegible]ன்பார் வாய்ஞானமேபேசித்
தாமென்பார்வீணர் தினையறியார்பூரணமே

(பொ—ள.) எங்குநிறைகின்றபொருளே! ஆகாயமேவிருப்பிடமென்பர், அண்டத்திலுள்ள (பதங்க) ளென்பர் வாசாஞைக்கறியப் பேசித்தானே (தெய்வ) மென்பர் (இவர்களெவரும்) தன்னையாராச்சி செய்யாதவர்யாவர்.

(கு—ள.) ஆன்மவிசாரணையில்லாத சிலர் சிவபெருமானுக்கும் பலஇடங்களைக் கற்பிப்பர். சிலர்தாமே பிரமமெனப்பிதற்றிவாய் ஞானம்பேசித்திரிவர் என்பதாம். (எஉ)

[illegible]யென்பாரத்தமென்பா ரதற்குணர்வாயிருந்த
சோதி[illegible]ன்பார்காதத் தொழிலறியார்பூரணமே.

(பொ—ள.) [illegible]றைகின்றபொருளே! உற்பத்திசொல்லுவர், முடிவுசொல்லுவார்; அவற்றிற்கு நடுவேயுள்ள சோதிசொரூபமென்பர் நாதசொரூபமாக விருக்கின்றகாரியத்தை யறியார்.

(கு—ள.) ரூபத்தைக்கூறத் தத்துவங்களையுங்கடந்த நாதசொரூபமாயுள்ள சிவத்தினுண்மையையறியாதவர் பலவிடமுமாகமுடிவுகட்டிக் கூறுவர் தங்கள் தங்கள் தெய்வத்திற்கொவ்வொன்று. (எ௩)

மூச்சென்பாருள்ளமென்பார் மோகமென்றுமோட்சமென்பார்
பேச்சென்பாருன்றனுடைய பேரறியார்பூரணமே.

(பொ—ரை.) எங்குநிறைகின்றபொருளே! (சிலர்) பிராணவாயு வென்பர், (சிலர்) மனமிலையான மோட்சமென்பர், (சிலர்) சத்த ரூபமென்பர் (இவரனைவரும்) தேவரீர்திருநாமத் தன்மையறியார்.

(கு—ரை.) சிவபெருமானுக்குள்[illegible]யபரின்பரத்துவ உண்மையறியார் யாரும்பற்பலவிதமாகப் பிராணவாயுவே என்பாரும், மனமிலையேயென்பாரும், சத்தரூபமேயென்பாருமாகியமூவரென்பதாம். (௭௧)

பூரமென்பார் பானுவென்பார் பாழ்வெளியாய்நின்ற
வரமென்பாருன்றன் வழியறியார் பூரணமே.

(பொ—ரை.) எங்குநிறைகின்றபொருளே! (சிலர்) மேலான தென்பர், (சிலர்) சூரியனென்பர், (சிலர்) சூனியவெட்டவெளியா யிருக்கும் மேன்மைப்பொருளென்பர் (இவரனைவரும்) தேவரீர் (உண்மை) வழியறியார்.

(கு—ரை.) சிவபெருமான் உண்மைத்தன்மையைப் பற்றி பிரதிபாதிக்கும் பதிஞானிகளாயிருக்க பாரா[illegible] பசுபாசஞானக்கிளை ஜபித்தவர்களுக்கு இஷ்டமானபடிபார்த்துவழிசொல்லுவரென்பதாம்.

எத்தனைபேரோ வெடுத்தெடுத்துத் தானுரைத்தார்
அத்தனைபேர்க்கொருவனே தமியேனென்பூரணமே.

(பொ—ரை.) எங்குநிறைகின்றபொருளே! உலகில்எண்ணிலா தவர் நின்பெருமையினைப் பற்பலவிதமாகவெடுத்துப் பேசினர் (அக்

னையபேரினும்) அத்தனைபெயருக்கும் நீயேயொருபொருளாகவே விளங்கிக்கொண்டிருக்கின்ற தன்மையறியேன்.

(கு—ரை.) சிவபெருமான் ஒருவனே அவரவர்கள் கன்மத்திற்குத் தக்கபடி அவரவரின் அறிகின்றதெய்வமாகத் தானேயிருந்து அனுக்கிரகிப்பானாகலின் 'ஒன்றுணர்ந்தறிகிலேன்' என்றனர். (அ௬)

நகாரமகாரமென்பார் நடுவேசிகாரமென்பார்
வகாரயகாரமென்பார் வகையறியார்பூரணமே.

(பொ—ரை.) நகரவெழுத்தென்பர், மகரவெழுத்தென்பர், இடையுள்ள சிகரவெழுத்தென்பர், வகரவெழுத்தென்பர், யகரவெழுத்தென்பர் இவற்றினுண்மைவகையினையறியார்.

(கு—ரை.) நகாரம் திரோதானசத்தியெனவும், மகாரம் மலமெனவும், சிகாரம் சிவமெனவும், வகாரம் சத்தியெனவும், யகாரம் ஆன்மாவெனவும் உண்மையினை விசாரித்தறியாரென்பார் 'வகையறியார்' என்றனர். (அ௭)

கௌரவமாய்ச்சீவ மயக்கத்துக்குள்ளிருந்து
பிரித்தறியமாட்டாமற் பயனழிந்தேன்பூரணமே.

(பொ—ரை.) எங்குநிறைகின்ற பொருளே! கௌரவமாய்ச் சீவமயக்கத்திற் சிக்குண்டு பிரித்தறியமாட்டாது பிரயோசனமிழந்தேன்.

(கு—ரை.) மாயாமயக்கத்திற் கட்டுப்பட்டு அநிலதிசமாய அமிழ்ந்துவிட்டமையின் அவ்வின்பத்திற் கன்றிவேறு பெரியஇன்பமொன்று உண்டென்னத் தெரிந்துகொள்வதற்கு வலாமையின் 'பயனழிந்தேன்' என்றனர். (அ௮)

உண்மைப்பொருளை யுகந்திருந்தப்பாராமற்
பெண்மயக்கத்தாலே பிறந்திருந்தேன் பூரணமே.

(பொ—ரை.) எங்குநிறைகின்ற பொருளே! சத்தியமான பொருள்தன்னை விரும்பியிருந்து தரிசியாமல் மாதரிடத்துவைத்த வாசையால் வீணாகப்பிறந்திருந்தேன்.

(கு—ரை.) மனிதப்பிறப்பெடுத்தும் மாதரிடத்துவைத்துள்ள மோகத்தினாலே சிவபெருமான்தான் உண்மையானதெய்வமெனத் தெரிந்து தரிசித்தற்கேலாதவனாயினே னென்பதாம். (அச)

வாயாரவாழ்த்தி மகிழ்ந்துனைத்தான்போற்றாமல்
சாயமெடுத்துக் கலங்கினேன்பூரணமே.

(பொ—ரை.) எங்குநிறைகின்ற பொருளே! வாய்நிரம்ப வாழ்த்தெடுத்துச் சந்தோஷத்துடன் தோத்திரியாமல் தேகமெடுத்துக்கலக்கமுற்றேன்.

(கு—ரை.) எக்காலமும் உனைப்பாடுதலிலும், நின்னைக்கண்டு தரிசிப்பதிலும் பொழுதுபோக்காமலிருத்தலினாலே அநேகமானப் பிரபஞ்சகலக்கம்வந்து போராடுகிறதென்பார் 'கலங்கினேன்' என்றனர். (அ௫)

சந்திரனைமேகமது தான்மறைத்தவாறதுபோற்
பந்தமுறயானுமுனைப் பார்க்கிலேன்பூரணமே.

(பொ—ரை.) சந்திரனை மேகமானது மறைத்துவிடுவதுபோன்று பாசத்தடிப்பனிடம் (அதனால்) தேவரீரைத் தரிசித்தேனில்லை.

(கு—ரை.) மேகமறைத்து விடுதலினாலே சந்திரனுக்கியற்கையாயுள்ள நிலவு தடைபடுவதுபோன்று ஆணவமலமறைத்துவிடுதலினாலே ஆன்மாவினுக்கியற்கையாயுள்ள நல்லறிவு தடைபட்டுச் சிவபெருமானைத் தரிசித்தற் கிடமில்லாமற் போயிற்றென்பதாம். (அசு)

செந்தாமரைத்தாளைத் தினந்தினமும் போற்றாமல்
அந்தரமாய்நின்றங் கலைந்தேனே பூரணமே.

(பொ—ரை.) எங்குநிறைகின்ற பொருளே! சிவந்த தாமரை போன்ற திருவடியினை நித்தியமும் தோத்திரியாமல் அநாதரவாயிருந்து உழன்றேன்.

(கு—ரை.) சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் சிவாலயத்துட்பிரவேசித்து அப்பெருமான் திருவடிகளைக் கண்களாரத் தரிசித்துத் தோத்திரியாதவர்கள் எச்சார்புமின்றி அலைவரென்பார் 'அலைந்தேனான்' என்றனர். (அஎ)

நீர்மேற்குமிழிபோல் நிலையற்றகாயமதைத்
தாரகமென்றெண்ணிநான் றட்டழிந்தேன் பூரணமே.

(பொ—ரை.) எங்குநிறைகின்ற பொருளே! ஜலத்தின்மேலே தோன்றும் குமிழினையொத்து நிலையில்லாத தேகத்தினை ஆதாரமென்று நினைத்துத் தடுமாறினேன்.

(கு—ரை.) நீரினிடத்தே குமிழியானது தோன்றி மறைவதுபோல இவ்வுடல் இவ்வுலகினில் அடிக்கடி அதிசீக்கிரத்திற்றோன்றி மறையும் நிலையினையுடையதென்பதைச் சிறிதும் ஆலோசித்துப் பாராததால் சதமெனவெண்ணி உடலிற் பற்றுவைத்தவினால் தடுமாறினேன் என்பார் 'தட்டழிந்தேன்' என்றனர். (அஅ)

சற்றுமுருகி நினைந்துனைத்தான் போற்றிவிடு
மயக்கத்தைப்போக்க வகையறியேன் பூரணமே.

(பொ—ரை.) நிறைந்துநிற்கின்ற பொருளே! மனங்கசிந்து உன்னைச் சேவிக்கத் தெரிந்திலேன்; (எனக்குள்ள) மயக்கத்தினைப்போக்கிக்கொள்ள வகையொன்றும் அறிந்திலேனில்லை.

(கு—ரை.) அப்படியே மனமுருகுதலைச் சிவபெருமானைத் தோத்திரித்தலைக் குறைகட்கு மனத்தின்கண்ணே பிரபஞ்சசம்பந்தமாகவெழும் மயக்கமாமென்பார் 'வகையறியேன்' என்றனர்.

என்றுமொன்றுபோலெங்குநிறைந்திருந்த
உன்னையறியா துருகினேன் பூரணமே,

(பொ—ரை.) எங்குநிறைகின்ற பொருளே! எல்லாவிடங்களையும் வியாபித்திருப்பதுபோலச் சர்வவியாபகமாக நிறைந்துள்ள உண்மையினை, மனத்தினிடத்தே தெரிந்துகொள்ளாது உருகினேன்.

(கு—ரை.) சிவபெருமான் சர்வவியாபகமாக இருந்துகொண்டிருக்கும் தன்மையினை விசாரித்துணராத தன்மையினாலே அப்பெருமான் சம்பந்தமாகவிளையும் சந்தேகங்கட் கிடங்கொடுக்க மனம் வாடினேனென்பார் 'உருகினேன்' என்றனர். (௧௦)

மாயாபிரபஞ்ச மயக்கத்திலேவீழ்ந்தே
போயாச்சென்ன மொழித்திலேன் பூரணமே.

(பொ—ரை.) காரியரூபமாயுள்ள உலகத்தின்கண்ணே மயங்கி நீக்காதபிறப்பினை நீக்கிக்கொண்டேனில்லை;

(கு—ரை.) பிரபஞ்ச மாயாகாரியமாகவென்று மிருத்தலின் இதனிடத்திற் பிறந்து இறத்தல்கூடாதென்பதை யுணராது அதனிடத்து மோகம்கொண்டிருத்தலினாலே பிறப்பிறப்புக்கேது வுண்டாயிற்றென்பார் 'ஒழிக்திலேன்' என்றனர். (கக)

பூசையுடன் புவன போகமெனும் போக்கியத்தால்
ஆசையுற்றோரேனு மறிவழிந்தேன் பூரணமே.

(பொ—ரை.) எங்குநிறைகின்ற பொருளே! சிறுதெய்வப்பூசையினும், உலகத்தின்கண்ணே அனுபவிக்கப்படும் போகவஸ்துக்களினும் அவாவைத்து வாழ்ந்ததினாலே அடியேனு மறிவுகெட்டேன்.

(கு—ரை.) சிவபூசையல்லாத வேறு அற்பபூசைகளிலும், உலக போகமனுபவிப்பதிலுமே அவாவைவைத்துக் காலத்தினைக்கழித்ததனாலேயே நல்லறிவின்றி கெட்டேன் என்பார் 'அறிவழிந்தேன்' என்றனர். (கஉ)

படைத்துமழித்திடுவாய் பார்க்கிற்பிரமாவெழுத்தைத்
தொடைத்துச்சிரஞ்சீவியாய்த் துலங்குவிப்பாய் பூரணமே.

(பொ—ரை.) எங்குநிறைகின்ற பொருளே! உண்டாக்கியும் சங்கரிப்பாய்; ஆராயில் பிரமனினாலேவிதித்த எற்பாட்டினை நீக்கி நித்தியனாகவிருந்து பிரகாசிக்கும்படி செய்வாய்.

(கு—ரை.) சிருஷ்டியாதி தொழில்களைத் தேவரீரே செய்வதல்லாமல் வேறு தேவர்கள்விதித்துள்ள விதியையுமாற்றிவைக்கும் சர்வசாமர்த்தியத்துடன் விளங்குந் தெய்வம் நீயே யென்பார் 'துலங்குவிப்பாய்' என்றனர். (கங)

மந்திரமாய்ச்சாத்திரமாய் மறைநான்காய்நின்றிருந்த
தந்திரத்தைநானறியத் தருமோதான் பூரணமே.

(பொ—ரை.) மந்திர சொரூபியாகியும், சாஸ்திரத்தினால் பிரதிபாதிக்கப்படுபவனுயும், வேதநான்களாலும் கொண்டாடப்படுபவனுயும், தேவரீர் எழுந்தருளியிருக்கு மூலவிளை யடியேன் தெரிந்து கொள்ளத்தருமோ.

(கு—ரை.) வேதங்களினுலேயும் சாஸ்திரங்களினுலேயும் கொண்டாடப்படுகிற தெய்வமாகத் தேவரீரிருப்பதுடன் அவற்ருல் பஞ்சாக்ஷர மந்திரசொரூபி தேவரீரேயெனக் கூறுவதும் ஆகிய உண்மையினைச் சிற்றறிவினையுடைய நான்தெரிந்துகொள்ளத்தக்கவனேயோ.

அல்லாய்ப்பகலா யனவரதகாலமுமாய்ச்
சொல்லாய்ப்பொருந்த தொடர்பறியேன்பூரணமே.

(பொ—ரை.) எங்குநிறைகின்ற பொருளே! இரவாயும், பகலாயும், எல்லாக்காலமாயும், சொல்லாகியும் வகுத்துள்ள சம்பந்தத்தினை யறிந்தேனில்லை.

(கு—ரை.) இவ்வுலகத்தினைக் காலபேதத்தாலும், சத்தரூபத்தாலும் அமைத்துவைத்துள்ள சம்பந்தாசம்பந்தத்தினைச் சாஸ்திர மூலமாக விசாரித்து அவற்றினுண்மை தெரிந்துகொண்டேனில்லை யெனபார் 'தொடர்பறியேன்' என்றனர். (கஒ)

நாகந்தவங்கத்தமென கண்ணுமிரண்டுண்டாயும்
அரகரவென்ப தறிகிலேன் பூரணமே.

(பொ—ள்.) நரகமெனவும், சுவர்க்கமெனவும் பொருந்திய இரண்டு இடங்களேற்பட்டிருந்தும் அரகரவெனச் சொல்லத் தேர்கிலேன்.

(கு—ரை.) சிவபெருமான் திருநாமங்களிலொன்றாகிய அரகர சப்தம்செய்பவர்க்கு மோட்சமும், சொல்லாதவர்கட்கு நரகமும் உண்டாமென்பதைத் தெரிந்திருந்தும் தன்மிவசத்தால் அப்பெயரையுச்சரிக்கும்வகைத் தெரிந்திலேன் என்பார் 'அறிகிலேன்' என்றனர்.

பாவபுண்ணியமென்னும் பகுப்பாய்ப்படைத்தழித்திங்
காவலேயுண்டாக்கிவைத்த வருளறியேன்பூரணமே.

(பொ—ரை.) எங்குநிறைந்நின்ற பொருளே! பாவமெனவும் புண்ணியமெனவும் இருவகையாகவுண்டாக்கி, சிருட்டித்தும், சங்கரித்தும், பிரபஞ்சமுகமாக ஆசையினை விளைவித்தும்வைத்த திருவருளினுண்மையறியேன்.

(கு—ரை.) ஆன்மாக்களின் கன்மத்திற்கும் தக்கபடி இருவினை வகுத்தும் பிறப்பினும் இறப்பினும் செலுத்தியும், பிராரத்துவம் புசித்துத் தொலைக்குமாறு போகத்திலவாவினை யுண்டாக்கியுஞ்செய்து வரும் திருவருள் விளையாட்டினைத்தேறேன் என்பார் 'அருளறியேன்' என்றனர். (௧௭)

சாந்தமெனுங்கோபமென்றுஞ் சாதிபேதங்களென்றும்
பாந்தமென்றும்புத்தியென்றும் படைத்தனையேபூரணமே.

(பொ—ரை.) எங்குநிறைந்நின்ற பொருளே! பொறுமையெனவும், கோபமெனவும், பலவகையான சாதிகளெனவும், பந்தமெனவும், புத்தியெனவும் உண்டாக்கினை.

(கு—ரை.) பெற்றமை, கோபம், சாதி, பாவம், புத்திரமுதலிய யாவும் ஆன்மாக்களினுடைய கன்மத்திற்குத் தக்கபடியே விளையுமா யினும் அக்கன்மத்தினைக் கூட்டிமுடிப்பவன் சிவபெருமானேயாக லின் 'படைத்தனையே' என்றனர். (௯௮)

பாசமுடலாய்ப் பசுவுயிராய்த் தானுயிராய்
நேசமுடனீபொருளாய் நின்றனையே பூரணமே.

(பொ—ரை.) எங்குநிறைகின்ற பொருளே! உடல் பாசமாக வும், உயிர் பசுவாகவும், தேவரீர் பதியாகவும், அன்புடனே எழுந் தருளினை.

(கு—ரை.) பாசசடமாகலினாலும், பசுசதசத்தாகலினா லும் இரண்டினையும் கன்மத்திற்குத் தக்கபடி கூட்டி முடிப்பித்துக் கொண்டு இருப்பவன் பதியாகலின் திரிபதார்த்தமாகவும் நீயேயா யிருந்தனை யென்பார் 'நீபொருளாய் நின்றனை' என்றனர். (௯௯)

ஏதிலடியா ரிரங்கி யிகத்தில்வந் துன்றன்
பாதமதிற் றாழப் பரிந்தருள்வாய்ப் பூரணமே.

(பொ—ரை.) எங்குநிறைகின்ற பொருளே! குற்றமில்லாத சிவ னடியார்கள் மனமிரங்கி இம்மையில்வந்து தேவரீர் திருவடியில் வணங்க அவர்கட்கு விருப்பத்துடன் திருவருள்புரிவை.

(கு—ரை.) தேவரீருடைய திருவடியில் அன்புமயமாகவிருந்து மனங்கசிந்து வணங்குமுண்மைச் சிவனடியார்கட்கு வேண்டியவற் றைத் திருவருள்புரிவை யென்பார் 'பரிந்தருள்வாய்' என்றனர்.

நானேநீயேனு மிரண்டேமொன்ருனல்
தேனின்ருசியதுபோற் றெவிட்டாய்ப் பூரணமே.

(பொ—ள.) எங்குநிறைகின்ற பொருளே! (சிவமாந்தன்மையடைய) நானே நீயாகவும், நீயே நானாகவும் இருவருமொருதன்மையினையடைந்தால் அவ்வமயம் தேனினுடைய சுவையினைப்போல இனித்திடுவை.

(கு—ள.) ஆன்மாவும்பரமான்மாவும் இரண்டறக்கலந்த அத்துவிதமுத்தியிருக்கும் அவசரத்திலேயும் சிவானந்தம் ஆன்மாவிற்குத் தேனினையொக்குமென்பார் 'தேனின்ருசியது' என்றனர். ஈண்டு முத்திசுகாநுபவத்தில் தேனின்சுவையை ஒருபுடையுவமையாகக் கூறினமையின் ஏகான்மவாதத்தினை மறுத்தவாறாயிற்று. என்னை? அநுபவம் இரண்டுபதார்த்தினுக்கேயன்றி ஒன்றினுக்கின்மையின்.

முடிவிலொருசூனியத்தைப் பிடித்துநின்றுபாராமல்
அடியிலொருசூனியத்தி லலைந்தேனே பூரணமே.

(பொ—ள.) எங்குநிறைகின்ற பொருளே! (தத்துவங்களையெல்லாங்கடந்த) முடிவில் சிதாகாயசொரூபமாக விளங்குகிற சூனியத்தினைத் தெரிசித்திருந்து தரிசியாமல், ஆரம்பத்திலேயே யொன்றுமில்லையென (அறியாமையினாலே) சூனியத்தின்பாற் பட்டேன்.

(கு—ள.) ஈண்டு சூனியமென்பது விளங்காமைபொருட்டாம். தற்போதத்திற்கு விளங்காது சூனியமாகவிருக்கின்ற சிதாகாயசின்மயவெளியினை அருட்போதத்தைக்கொண்டு தரிசிக்கமுயலாமல், ஆரம்பத்திலேயே தற்போதங்கொண்டு யாவும் சூனியமென அறியாமையால் உழன்றேன்.

(௪0௨)

பூரணமாலை தன்னைப் புத்தியுடனோதினர்க்குத்
தாரணியில் ஞானந் தழைப்பிப்பாய் பூரணமே.

(பொ—ரை.) பூரணமாலையென்னும் இப்பிரபந்தத்தினை அன்புடனே படித்தார்க்கு இவ்வுலகில் ஞானத்தினை யருள்செய்வாய்.

(கு—ரை.) ஆன்மாக்களின்பொருட்டு மனமிரங்கிக் கருணைகூர்ந்து நித்யாநித்ய உண்மையினைப் பூரணமாலையினில் விளக்கிக் காட்டினமையின் அந்நால் சிவனடியார்கட்குப் பிரயோசனமாமாறு சிவபெருமானை ஆசிரியர் வணங்கிக் கேட்டுக்கொண்டவிதமாக இத்திருச் செய்யுளை யருளினர். (௧0௩.)

பூரணமாலை முற்றிற்று.

## பட்டினத்துப் பிள்ளையார்

# நெஞ்சோடு மகிழ்தல்.

அன்றுமுதலின்றளவு மாக்கையொடு கூட்டியுமாய்
நின்றநிலையறிய நேசமுற்றாய்நெஞ்சமே.

(பொ—ரை.) மனமே! பிறந்தநாளாகிய அந்நாள்முதல் இன்றுவரையில் தேகத்துடனே தந்திரமாகவிருந்தநிலையினையறிந்துகொள்ள (என்பால்) விருப்பம்வைத்தனை.

(கு—ரை.) உடல்வந்ததற்குக்காரணமும் அவ்வுடலுடன் இன்றையதினம்வரையில் உயிர்சம்பந்தப்பட்டு நடத்திக்கொண்டிருக்கிற தன்மையும் இத்தகையதென விசாரித்துத் தெரிந்துகொள்ளற்குக் காரணமாயிருந்தனை. (௧)

அங்கங்குணர்வா யறிவாகியேநிரம்பி
எங்கெங்குமானதிலே யேகரித்தாய்நெஞ்சமே.

(பொ—ரை.) மனமே! அவ்வவ்விடங்களில் அறிதற்கேதுவான அறிவாகியிருந்து, எவ்விடத்துமான எவற்றிலும் கலந்தனை.

(கு—ரை.) மனமானது எப்பதார்த்தங்களில் தாவுகின்றதோ அவ்வப்பதார்த்தங்களின் மயமேயாகி அவற்றுடன்கலந்து வேற்றுமையின்றி யிருந்துகொண்டிருக்கின்றனை. (௨)

அலையாதபேரின்ப வானந்தவெள்ளத்தில்
நிலையாயுருவிறந்து நின்றனையேநெஞ்சமே.

(பொ—ரை.) மனமே! சலனமில்லாத பேரானந்தக்கடலில் சாசுவதமாகத்தங்கித் தலையெடாதிருந்தனை.

(பொ—ரை.) சிவானந்தமாகிய சமுத்திரத்திலழுந்தித் தலையெடாதபடி அவ்வானந்தமே தனக்குரியசெயலாய்த் தற்போதமுமின்றியிருந்தனையென்பார் 'உருவிறந்து' என்றனர். ஏனையவுருவென்றது வெளிப்படை.

(௯)

பாராமற் பதையாமற் பருகாமல் யாதொன்றும்
ஓராதுணர் வுடனே யொன்றினையே நெஞ்சமே.

(பொ—ரை.) மனமே; நோக்காமலும், அவசரப்படாமலும், உண்ணாமலும், எத்தனையும் ஆராயாமலும், சிவபெருமானுடனே சேர்ந்தனையே.

(கு—ரை.) பிரபஞ்சரூபமாக விருந்துகொண்டு யாதொருசீவச் செயலைச்செய்யாது சிவமயமாகவிருந்தனை யென்பார் 'ஒன்றினை' என்றனர்.

(௰)

களவிறந்து கொலையிருந்து காண்பனவுங் காட்டியும்போ
யளவிறந்து நின்றநிலை யன்புற்றாய் நெஞ்சமே.

(பொ—ரை.) மனமே! (பிறபொருளைக்) கிரகிப்பதிலுமின்றி, கொலைத்தொழிலற்று, ஒருதருஞானத்தோன்றாது எல்லையற்றபொருளினிடத்தே விருப்பம்வைத்தனை.

(கு—ரை.) உலகிலேயுற்று உண்டாகுந்தீதையாகிய செயலை யொழித்துச் சிவபெருமானை யடைதலிலேயே விருப்புற்றனை என்பார் 'அன்புற்றாய்' என்றார்.

(௧௧)

பேச்சிறந்து மாசற்றுப் பின்னிறந்து முன்னிறந்து
நீச்சிறந்து நின்றநிலை நேசமுற்றாய் நெஞ்சமே.

(பொ—ரை.) மனமே! மவுனத்திற்குரியதாகி, ஏகதேசமின்றி நிறைந்ததாகி, எதிர்காலம், இறந்தகாலங் குறித்தலில்லாமல், அசைவற்றவொரு பொருளினிடத்தே விருப்பம்வைத்தனை.

(கு—ரை.) எல்லாவகையானப் பிரபஞ்சசெயல்கட்கும் அப்பாற்பட்டுவிளங்கும் சிவபெருமானிடம் ஆசைகொண்டனை யென்பார் 'சேமத்தாய்' என்றனர். (௬)

விண்ணிறைந்து மண்ணிறைந்து வெளிநிறைந்து ஒளிநிறைந்து
எண்ணிறைந்து நின்றதிலே யேகரித்தாய் நெஞ்சமே.

(பொ—ரை.) மனமே! ஆகாயம்நிறைந்தும், பூமிநிறைந்தும், வெளிநிறைந்தும், பிரகாசம்நிறைந்தும், அளவற்றிருந்த வஸ்துவினிடத்தே யொன்றாகக்கலந்தனை.

(கு—ரை.) பௌதிகசம்பந்தமாயுள்ள பொருள்களனைத்திலே யுஞ்சென்று விளங்கும்வியாபக வஸ்துவாகிய சிவபெருமானோடொன்றாகக்கலந்திருந்தனை. (௭)

பார்த்தவிடமெங்கும் பரமெனவே யுட்புறம்புஞ்
சேர்த்தபடியுண்மையெனக் கொண்டனையே நெஞ்சமே.

(பொ—ரை.) மனமே! நோக்கிய விடங்கடோறும் சிவமயமொன்றேயாகி அகமும்புறமுமொன்றாகக்கலந்திருத்தல் சத்தியமெனத்தெரிந்துகொண்டனை.

(கு—ரை.) சிவத்தியானத்தைப்பெற்று உலகமனைத்தையும் சிவமயமாகக்கண்டு உள்ளும்புறம்பு மொரேதன்மையாகவுள்ள நிலையினைத்தெரிந்து கொண்டனையென்பார் 'உண்மையெனக்கொண்டனை' என்றனர். (௮)

உரையிறந்துவொளியிறந்து வெளியிறந்த
சீரிறந்துநின்றநிலை சேர்ந்தனையேநெஞ்சமே

(பொ—ரை.) மனமே! தேசமிழந்து, பூதப்பிரகாசமொழிந்து, பூதாகாயமொழிந்து பிரபஞ்சச்சிறப் பொழிந்திருந்த நிலையினிலே கலந்தனையே.

(கு—ரை.) தனக்கெனஊர்முதலிய வொன்றுமில்லாது எவற்றி னும் கடந்து விளங்குஞ்சிவபெருமான் திருவருளில் இரண்டறவிளங் கினையே என்பார் 'கலந்தனையே' யென்றனர். (௯)

ஆண்பெண்ணலியென் றழைக்கவரிதாய்நிறைந்து
காண்பவரிதாயவிடங் கண்ணுற்றாய்நெஞ்சமே.

(பொ—ரை.) மனமே! அவன், அவள், அதுவெனவழைக்கத் தகுந்த வேற்றுமைப்பொருட்டன்மைக் கருமையாயிருந்து காண்டற் கரிய விடத்தினைத் தரிசித்தனை

(கு—ரை.) இன்னதன்மையனென் றழைத்தற்கரிய சிவபெரு மான் எழுந்தருளியிருக்குமோர் இடத்தினைத்தெரிந்து கொண்டனை யென்பார் 'கண்ணுற்றாய்' என்றனர். (௧௦)

ஆங்காரமச்ச மகற்றியறிவினொடு
தூங்காமற்றூங்கிச் சுகம்பெற்றாய்நெஞ்சமே

(பொ—ரை.) மனமே! அகங்காரம், பயம்நீங்கி ஞானமயமாகி தூங்காமலே தூக்கங்கொண்டு இன்பமுற்றாய்.

(கு—ரை.) சிவானந்தவின்பம் அடைதற்கிடையூறாயுள்ள அகங் காரமுதலியவொழித்துத் தற்போதமுன்னிட்டுத் தூங்காமல் அருட்

போதமுன்னிட்டேத் தூங்கிச்சிவானந்தமுடைந்தனை யென்பார் 'சுக மூர்றாய்,' என்றனர். (சக)

ஆதியாய்நின்ற வகண்டபரிபூரணத்தைச்
சாதியாநின்றவிடஞ் சார்வுற்றாய்நெஞ்சமே.

(பொ—ரை.) மனமே! எல்லாவஸ்துக்களுக்கும் தலைமையாகவுள்ள வியாபகமான பரிபூரணவஸ்துவைத் தெரிவிக்கத்தருக்கு இடத்தினைச்சேர்ந்தனை.

(கு—ரை.) சிவபெருமானைத் தெரிந்துகொள்ளுதற் கேதுவா இ திருவருளாகியவொரு இடத்தினைக்கலந்தாயென்பார் 'சார்வுற்றாய்' என்றனர். (சஉ)

விருப்புவெறுப்பில்லாத வெட்டவெளியதனில்
இருப்பேசுகமென் றிருந்தனையேநெஞ்சமே.

(பொ—ரை.) மனமே! விரும்புதற்கும் வெறுதற்கும் ஏதுவில்லாத சிதாகாயவெளியிலேயுள்ள வாழ்வேசுகமெனக் கொண்டனை.

(கு—ரை.) சகலகேவலமற்ற சிதம்பரவெளியே தனக்கிடமாகக் கொள்ளுதல் இன்பமென்றுகொண்டனை யென்பார் 'சுகமென்றிருந்தனை' என்றனர். (சங)

ஆருமுறாப்பேறண்டத் தப்புறத்துமிப்புறத்தும்
நீருமுப்புமென்ன நிலைபெற்றாய்நெஞ்சமே.

(பொ—ரை.) மனமே! எவரும் அடைதற்குக்கூடாத அண்டத்தினுள்ளும் புறம்பும் நீருமுப்பும்போலக் கலந்தநிலையுற்றனை.

(கு—ரை.) நீரினிடத்தே உப்புக் கலந்தபோது உப்பின் தடிப்பு நீங்கியதுபோல சிவபெருமான் திருவருள் வியாபகத்தில் நினைவு தோன்றாதிருந்தனை யென்பார் 'நிலைபெற்றாய்' என்றனர். இதுவ ஏகதேசஉவமையாம். (கஎ)

உடலுகவேயிருந்த பூரணவரியாறே
கடல்நீருமாறும்போற் கலந்தனையே நெஞ்சமே.

(பொ—ள்.) மனமே! என்றும் கலந்திருந்தும் அறிதற்கருமை யாகவிருக்கின்ற பெருமானுடன் சமுத்திரமும் நதியும் போலக்கலந் தனையே.

(கு—ரை.) ஆன்மாவுடலிருந்து கொண்டிருந்தும் அணுவுத்தால் வெளிப்படா திருக்கின்ற சிவபெருமானுடன் கடலிலும் ஆற்றுநீருமான் சேர்ந்தபோலச்சேர்ந்தனை யென்பார் 'கலந்தனை' என்றனர். இதுவும் உருபுடைய பொருந்துமையாலின் ஏகதேசவுவமை. (கஅ)

கொடியகத்தைப்போக்கி நின்றசமுக்கறுத்துப்
படிகத்துக் கும்பப்போற் பற்றினையே நெஞ்சமே.

(பொ—ள்.) மனமே! நீயப்பிறத்தலும், நிலையற்றகுற்றங்களும் நீங்கிப்படிகப்பாண்டம்போலக் கிரகித்தனை.

(கு—ரை.) படிகத்தாற்செய்துள்ள வொருகுடமானது தனக்கு முன்னிட்ட நிறங்களைக் கிரகித்துத் தனக்கென வொருநிறமின்றி யிருத்தல்போலச் சார்ந்ததன் வண்ணமாய் நிற்கின்றனை யென்பார் 'பற்றினை' என்றனர். (கக)

வேலாவியெங்கும் விளங்கும் பரம்பொருளிற்
பாலூறமைமென்றனவைபோற் பற்றினையே நெஞ்சமே.

(பொ—ரை.) எவற்றினுக்குஞ்சிறந்து விளங்குகின்ற பெருமானிடத்துப் பாலு மதன்சுவையும்போல விருந்தனை.

(கு—ரை.) பாலினின்றுநீங்காத சுவையினைப்போலச் சிவபெருமானிடத்து விளங்கினையென்பார் 'புற்றினை' என்றார். உவமைகோடரி யுடைவமையும் ஏகதேசமாகலின் குணகுறி பேதவுவமைகொள்ளாது ஒன்றிநிலாவி விளங்கும்தன்மை மாத்திரங்கொள்ளுக. (௪௭)

நீரோடுதண்ணளியின்று நீரானவாறேபோல்
ஊரோடுபேரில்லானோ டொன்றினையேநெஞ்சமே.

(பொ—ரை) மனமே! நீருடனேகுளிர்ச்சி பொருந்திய ஆலங்கட்டிபழையபடி நீரானதன்மைபோல ஊரும்பேருமற்ற சிவ்பெருமானுடன் பொருந்தினை.

(கு—ரை.) நீரும்ஆலாங்கட்டியும் ஒருபுடையுவமையேயாகலின் நடிப்புநீங்குந்தன்மை யவ்வளவினுக்கே கொள்ளுக. (௪௮)

இப்பிறப்பைப்பாழ்ப்படுத்தி யிருந்தபடியேயிருக்கச்
செப்பவரிதாயவிடஞ் சேர்ந்தனையேநெஞ்சமே.

(பொ—ரை.) மனமே! எடுத்தசன்மத்தினைப் பாழாக்கியதனையிலையி லிருந்திடச்சொல்லற்கரிய இடத்தினையடைந்தனை.

(கு—ரை.) மறுசென்மமுண்டாதற் கேதுவாகியதத்துவ சேஷ்டைகளை இச்சென்மத்திலேயே யொழித்துமவுனநிலை யடைந்தனையாகலின் திருவருளினையாதாரமாகப் பெற்றனையென்பார் 'சேர்ந்தனை' என்றனர். (௪௯)

மேலாம்பதங்களெல்லாம் விட்டுவிட்டாராய்ந்து
நாலாம்பதத்தி னடைந்தனையோநெஞ்சமே.

(பொ—ரை.) மனமே! மேற்பட்டுள்ள (மும்மூர்த்திகளின்) பதங்களையெல்லாம் (விசாரித்து) நீக்கி (உண்மை) தேர்ந்து நாலாவது பதவியினை நாடிச்சேர்ந்தனை.

(கு—ரை.) நாலாம்பதமாவது பிரமனுலகு, விஷ்ணுலகு, உருத்திரனுலகு மூன்றையுங்கடந்த அரியமூர்த்தியாகிய சிவபெருமான் சிதாகாயவுலகாம். (உ0)

கடங்கடங்கடோறுங் கதிரவனூடாடி
யடங்குமிடந்தானறிந் தன்புற்றாய்நெஞ்சமே.

(பொ—ரை.) மனமே! ஒவ்வொருபாண்டத்திலும் சூரியன்பிரதிபிம்பித்திருந்து கடமுடைந்தவழி பிரதிபிம்பம் சூரியனிற்சாரும் என்னுமுண்மைதெரிந்து விருப்பமுற்றனை.

(கு—ரை.) சூரியன்பாண்டங்கள்தோறும் தோன்றிப்பாண்டமுடைந்தவழிபிரதிபிம்பம் சூரியனைச்சாருமாறுபோல, மாயையானது உடல்தோறும் காரியப்பட்டிருந்து உடல்நீங்கிய காலத்துக் காரியமாயை காரணமாயையி லொடுங்குமென்பதாம். இப்பிரதிபிம்பத்தினைப் பிரமத்தின்மேலேற்றிக்கூறுவர் ஏகான்மவாதிகள். பிரமத்தின்கன்னியமாகவெல்லாம் சூனியமெனுமவரைப் பிரதிபிம்பிரதிபிம்பிக்குமேறுவஸ்து ஏதெனக்கேட்டு அவரைமறுக்க. (உக)

கற்றவனுங்கேட்டவனுங் காணானுங்காண்பவனும்
உற்றவனுய்நின்றநிலை யொன்றுபட்டாய்நெஞ்சமே.

(பொ—ரை.) மனமே (எல்லாம்) கற்றவனாகவும், எல்லார் (பிரார்த்தனையும்) கேட்டவனாகவும், (ஒருவருக்கும்) காணாதவனாகவும்

(அடியார்கட்கு) காண்பவனாகவும் (எல்லாரிடத்தும்) கலந்தவனாகவுமுள்ள அவனிடத்தே கலந்தனே.

(கு—ரை.) ஆன்மாக்கள் சிவபெருமானையறியாதவர்களாக விருக்கினும் சிவபொருமான் தன்வியாபகத்து ளடங்கியஆன்மாக்களின் செயலனைத்தையும் தெரிந்துகொள்ளுவனென்பதாம். (உஉ.)

நாலு[illegible]கைக்கரண நல்குபுலனொன்றாய்ச்
[illegible]றநின்றதிலே சேர்ந்தனையேநெஞ்சமே.

(பொ—ரை.) மனமே! நான்குவகைப்பட்ட அந்தக்கரணங்களும், (விஷயங்களைக்) கொடுக்கும் ஐம்புலன்களும் ஒற்றுமைப்பட்டுச் சத்தான அவசரத்திலே கலந்தனை.

(கு—ரை.) கரணங்களும், புலன்களும் பிரபஞ்சமுகமான செயல்களினின்று நீங்கியகர்முகமாக நடக்கும்அவசரத்தே கலந்தனையென்பார் 'சேர்ந்தனை' என்றனர். (உ௩.)

விட்டிடமுந்தொட்டிடமும் விண்ணிடமுமண்ணிடமுங்
கட்டுமொருதன்மையெனக் கண்ணுற்றாய்நெஞ்சமே.

(பொ—ரை.) மனமே! நீங்கியஇடமும் அடைந்தஇடமும், ஆகாயமும், பூமியுஞ்சேர்ந்த ஒரேதன்மையுடையதெனப் பார்த்தனை.

(கு—ரை.) விட்டிடம்மண்ணிடம், தொட்டிடம் விண்ணிடம் இவற்றுள்விண் உயர்ந்ததில்லையெனவும், மண் தாழ்ந்ததில்லையெனவும் பேதங்கருதுவதில்லை யென்பார் 'கண்ணுற்றாய்' என்றனர். (உ௪)

எங்கெங்குநாளு மிருந்தபடியேயிருக்க
அந்தச்சாக்ஷித மாக்கினையேநெஞ்சமே.

(பொ—ரை.) மனமே! எக்காலமும் ஒருநிலையிலேயே தங்க் அசஇன்பமாகச் விருக்கச்செய்தனையே.

(கு—ரை.) எக்காலத்தும் ஒரேதன்மையான மவுனநிலையுடன் கூடிச்சிவானந்த மனுபவிக்கச் செய்தனை என்பார் 'ஆக்கினை' என்றனர். (௨௬)

வாக்கிறந்து நின்ற மனோகோசரந்தனிலே
தாக்கறவே நின்றதிலே தலைசெய்தாய்நெஞ்சமே.

(பொ—ரை.) மனமே! சொல்லற்கடங்காத மனோதீதநிலையிலே யாதொன்றிலும் சம்பந்தப்படாதநிலையிலே தலைமைவாய்ந்தாய்.

(கு—ரை.) சொல்லாலெடுத்து விவகரித்தற்கும், மனத்தினுலே நினைத்தற்கும் அரியசகாதீதநிலையிலே தனித்து நின்றனை என்பார் 'தலைசெய்தாய்' என்றனர். (௨௭)

எத்தேசமும் நிறைந்தே யெக்காலமுஞ்சிறந்து
சித்தாயசித்திடஞ் சேர்ந்தனையேநெஞ்சமே.

(பொ—ரை.) மனமே! எல்லாத்தேயங்களினும் பூரணமாகி, எப்போதும் சிறப்புற்றுவிளங்கும் அறிவுருபமாயுள்ள சிவத்திலடைந்தனையே.

(கு—ரை.) சர்வவியாபகமாய் எல்லாவற்றினும் மேன்மையடைந்த சூக்குமசித்துருபமாகவிளங்கும் அறிவுமயமானபெருமானிடம் கலந்தனையென்பார் 'சேர்ந்தனை' என்றனர். (௨௮)

தாழாதே நீளாதே தன்மயமாய் நிறைந்து
வாழாதே வாழும் மருவினையேநெஞ்சமே.

(பொ—ரை.) மனமே! தாழ்வுபடாமலும், உயர்வடையாமலும், ஒரேதன்மையினையுற்றுப் (பிரபஞ்சமுகமாக) வாழாமல் (திருவருளினை முன்னிட்டு) வாழக்கலந்தனை.

(கு—ரை.) திருவருள்வியாபகத்திற் றிளைத்தலென்றும் ஒருபடித்தாயிருக்குந்தன்மையினை யடைந்தரென்பார் 'மருவினை' என்றனர். (உஅ)

உள்ளும்புறம்பு மூவிட்டாதவானந்தத்
தேனருந்திநின்றதிலே கண்ணுற்றாய்நெஞ்சமே.

(பொ—ரை.) மனமே! அகத்திலேயும் புறத்திலேயும் தெவிட்டாதசிவானந்தத்தேனருந்தியநிலையிலேயே இலட்சியம்வைத்தனை.

(கு—ரை.) எக்காலத்தும், எவ்வகையினும் விருப்புவெறுப்புண்டாகாதசிவானந்தசமுத்திரத்திற றிளைக்கக்கருதினையென்பார் 'கண்ணுற்றாய்' என்றனர். (உகூ)

வாதனைபோய்நிட்டையும்போய் மாமௌனராச்சியம்போய்
பேதமறநின்றவிடம்பெற்றனையேநெஞ்சமே.

(பொ—ரை.) மனமே! பிரபஞ்சவாசனை யொழிந்து, யோகம் கலைந்து, மவுனநிலையினின்று நீங்கி அபேதமாகவுள்ள திருவருணிலையடைந்தனை.

(கு—ரை.) [1] திருவருணிலையையடைதற்குச் சாதனமாயிருந்தவாறிருக்கைகளெல்லாம் தாமேநெகிழ்ந்துவிடச் சாந்தியுற்றாயென்பார் 'பெற்றனை' என்றனர். (௩௦)

இரதம்பிரிந்துகலந் தேகமாம்வாறேபோல்
விரகந்தவிர்ந்தணைப்பால் மேவினையேநெஞ்சமே.

(பொ—ரை.) மனமே! பாதரசம்பிரித்தகாலத்து உடனேகலத்தலிடுமாறுபோல மோக[illegible] அக்கினியினிடத்தும் பொருந்தினையே.

(கு—ரை.) ஒவ்வொருசம[illegible] பிரபஞ்சவிகாசம் தாக்கியகாலத்து வெளிமுகப்படினும் அக்கணமேபறை[illegible] திருவருளிற்கலந்து விடுவையென்பார் 'மேவினை' என்றனர். [illegible]னைவன்றது, அக்கினிபொருபனானசிவம். (௬௧)

சோதியான்சூழ்பனீர் சூறைகொளுமாறேபோல
நீதிகுருவின்றிருந்தாள் நீபெற்றாய்நெஞ்சமே.

(பொ—ரை.) மனமே! (சூரியனானவன்) தன்பிரகாசத்தால்தன்னைச்சூழ்ந்துள்ள 'பனிநீரினை நீக்கி விடுமாறுபோன்று நீதியுடன்கூடிய ஆசாரியன்மூர்த்தியின் அழகிய சரணங்களை நீயடைந்துவிட்டனை.

(கு—ரை.) சூரியன்பனியை யொழித்தற்போல, ஆச்சாரியன் பிரபஞ்சவியாபாரத்தினை யொழிக்கத்திருவருள்பெற்று அவனடியினை யடைந்தனையென்பார் 'நீபெற்றாய்' என்றனர். (௬௨)

## நெஞ்சோடுமகிழ்தல் முற்றிற்று.

பட்டினத்துப்பிள்ளையார் வாக்குற்றிரட்டினுக்கு, அநபாயன்முதலமைந்தாயன்மாருள் ஒருவராயவாயிலார்நாயனார் பரம்பரையில்வந்தவரும், சுத்தாத்துவித சித்தாந்தவைதிகசைவ பிரவர்த்தகாசாரியரும், சென்னை மெய்கண்டசந்தானசபை அக்கிராசனாதிபதியுமாகிய, சித்தாந்தசரபம், அஷ்டாவதானம்பூவை கலியாணசுந்தரர் இயற்றிய

## ஞானார்த்ததீபவுரை முற்றியது.

——•——

158-வது பக்கம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

---

பட்டினத்தார்சுவாமிகள்சீடராகிய

# பத்திரகிரியார்சரித்திரச்சுருக்கம்.

---

தவராஜ சிங்கமாகிய திருவெண்காட்டடிகளென்னும் பட்டினத்துச் சுவாமிகள் சிவ சங்கப் பரித்தியாக முற்றக் காவிரிப்பூம் பட்டினத்தினின்றும் வெளியேறிச் சிவத்தலயாத்திரை செய்துவருகையில், பத்திரகிரி மகாராஜன் நகர்ப் புறத்திலுள்ள ஒரு விநாயகர் ஆலயத்தினையடைந்து சிவஞான நிஷ்டை கூடி யிருக்குஞ்சமயத்தில், கள்வர் சிலர் பத்திரகிரியரசன் மாளிகையிற் பிரவேசித்து வெகு திரவியங்களைக் கொள்ளையடித்துக் கொண்டு போகும்போது வழியில் தாங்கள் பிரார்த்தித்துக் கொண்டு வந்த விநாயகருக்குச் சமர்ப்பிக்க வெண்ணி ஒரு ரத்தினமாலையை இருட்டில் அவ்விநாயகர் கோயிலில் சிவயோக நிஷ்டையிலிருந்த பட்டினத்தடிகளை விநாயக ரென்றெண்ணி யவர் கழுத்திற் போட்டுப் போயினர். உதயத்தில் கள்வரைத் தேடிக் கொண்டு புறப்பட்ட அரண்மனைக் காவலர்கள் பட்டினத்தடிகள் கழுத்தில் ஆபரண மிருக்கக்கண்டு இவரும் கள்வரைச் சேர்ந்தவரென பிடித்துக் கொண்டு போய் அரசன் முன்னிலையில் விடுக்க, அரசன் வினாக்கட்கெல்லாம் சிவ! சிவ! என்று சொல்லிக் கொண்டிருந்த சுவாமிகளைப் பற்றி யொன்றுந் தோன்றாது அமைச்சனை நோக்கி நீ உன்னிஷ்டப்படி யாக்கினை நடத்துவென, அவ்வமைச்சன் கழுவேற்ற விதித்தனன். அங்ஙனமே காவலர்கள் சுவாமிகளை யழைத்துக் கொண்டுபோய் கழுமரத்தின் முன்னிறுத்த, சுவாமிகள் புன்னகை செய்து "என் செயலாவது யாதொன்றுமில்லை யினித்தெய்வமே"

என்றுந் திருச்செய்யு[illegible] பாடக் கழுமரம் எரிந்துவிட்டது. அத் கண்டார் அரசனுக்கு அறிவிக்க அரசன் திடுக்கிட்டு ஓடி வந்து சுவாமிகள் திருவடியில் விழுந்து நமஸ்கரிக்க அவ்வரசனுக்கு மனப்பக்குவத்தினை யுணர்ந்து தமது திருக்கண்களால் தீட்சிக்க உடனே யரசன் இராஜ கோலத்தினை நீக்கி உடன் தொடர "நீ திருவிடை மருதூரினுக்குச் செல்வாய்" எனக் கட்டளையிட்டு மீண்டும் தாம் அநேகமான சிவத்தலங்களை யடைந்து சிவதரிசனஞ் செய்து திருவிடைமருதூரில் கீழைக் கோபுர வாயிலில் வீற்றிருந்தருளினர். பத்திரகிரியாரும் ஆசாரியன் ஆணையை பெற்று அநேகமான சிவத்தலங்களைத் தரிசனஞ்செய்து கொண்டே திருவிடை மருதூரை யடைந்து குருவைத் தரிசித்துக் கொண்டு அவர் கட்டளைப்படி மேலைக் கோபுரவாயிலிலிருந்து கொண்டிருந்து தினம் பிச்சையேற்று வந்து குருநிவேதனம் செய்து மீதிச் சேடத்தை யுண்டு நிஷ்டாபரராக விருந்தனர். இங்ஙனமாக, பத்திரகிரியாரிடம் ஒரு பெட்டை நாய்க் குட்டி வந்து வாலைக் குழைத்துத் தன் பசி நோயைக் குறிப்பித்து நிற்க, அதனை யறிந்து தனது சேடப்பிரசாதமளிக்கப் பசியாறி, அவருடன் கூடவே யிருந்துவிட்டது. ஒருநாள் மருதவாணர் ஒரு யாசகனைப் போல வேடங்கொண்டு பட்டினத்தாரிடஞ்சென்று அதிகப்பசியுள்ளவர்போல நடிக்க, பட்டினத்தடிகள் "யான் கோவணந் தாங்குவதே பாரமாக வுடையேன் மேற்குக் கோபுரவாயிலி லொரு சமுசாரியிருக்கின்றான்" அவனிட மேகினால் பசியாற்றுவனெனக், இது கேட்டு மருதவாணர் மேலைக் கோபுரவாயிலை யடைந்து, பட்டினத்துச் சுவாமிகள் புகன்றதையுரைக்கக்கேட்ட பத்திரகிரியார் இவ்வோடும், நாய்க்குட்டியுமே என்னைச் சமுசாரியாக்கியது எனப் பாத்திரத்தை யெடுத்தெறிய, அது நாயிற் சிரத்திற் பட அது இறந்தது. மருதவாணர் மறைந்தனர். அந்நாயானது காசிராஜாவின் மகளாகப்பிறந்து வளர்ந்து பக்குவமடையத் தந்தை யறிந்து புரோகிதரை யழைத்துத் தனது புத்திரிக்குத்

தக்க நாயகன் நியமிக்க வேண்டுமென ஆலோசிக்கையில் இதுதெரிந்த பெண் பிதாவை நோக்கி, ஐய! யாவொருவனுக் குரியவளல்லள். "திருவிடைமருதூரில் மேலைக்கோபுரவாயிலில் எழுந்தருளியிருக்கும் எனது குருநாதரிடம் ஒப்புவிப்பீர்" என அரசனிசைந்து அவ்வுண்மை விசாரித்தறிந்து புத்திரியைப் பத்திரகிரியார் முன் கொணர்ந்து விட, அவர் சிவநிஷ்டையை விடுத்து விழித்து நோக்க, அப்பெண் "அடிநாய் மீண்டும் திருவடியை நாடி வந்தது" என, யாவும் திருவுளத்திலறிந்த பத்திரகிரியார் எழுந்து அப்பெண்ணின் கரத்தினைப் பற்றிச் சென்று தனது ஆசிரியர் முன் விட்டு தேவரீர் உச்சிட்டமுண்டு வளர்ந்த நாய்க்கும் இப்பிறவி நோய் வரலாமோ வெனச் சுவாமிகள் "அவன் செயலன்றி யாவதொன்றுமில்லை" எனத் திருவுளங் காட அப்போது ஒரு அருட்பெருஞ்சோதி தோன்றி அதனில் அப்பெண்ணுடன் பத்திரகிரியார் மறைந்தருளினர். சுபம்.

---

இந்நூலுரையாசிரியரியற்றிய

## பத்திரகிரியார் திருநட்சத்திர வெண்பா.

ஓங்குதிரு வெண்காட் டொரடிகள் தன்னருளைப்
பாங்குபெற வேபெற்ற பத்ரகிரி—யாங்கொளியாய்ச்
சித்திரை மாமகத்திற் சேர்ந்தனனே மாமருதூர்க்
கத்த னருளிற் கலந்து.

பத்திரகிரியார் பதாம்புயம் வாழ்க.

---

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

---

பத்திரகிரியார்

# மெய்ஞ்ஞானப்புலம்பலும்

## ஞானார்த்ததீபவுரையும்.

---

### விநாயகர்வணக்கம்.

முத்திதரும்ஞான மொழியாம்புலம்பல்சொல்ல
அத்திமுகவன்றன் அருள்பெறுவதெக்காலம்.

(பொழிப்புரை.) (ஆன்மகோடிகளின் மோட்சத்திற் கேதுவான) ஞானசம்பந்தமாகிய (அநுபவ) வார்த்தைகளால் (மெய்ஞ்ஞானப்) புலம்பலைப் பாட (அந்நூல், இடையூறின்றி முடிதற் பொருட்டு) யானை முகத்துடன் கூடிய (மூத்த பிள்ளையாரின்), திருவருளினை அடைவ தெக்காலம். என்றவாறு.

### நூல்.

ஆங்காரமுள்ளடக்கி ஐம்புலனைச்சுட்டறுத்துத்
தூங்காமற் றூங்கிச் சுகம்பெறுவதெக்காலம்.

(பொ-ரை.) (என்றுமொப்பாரில்லையென அகந்தைப்படுதற்கு காரணமாயுள்ள) ஆங்காரத் தத்துவம் (காரியப்படாதபடி) அடங்கச் செய்து (அந்த அகங்காரத்தினின்றுந் தோன்றும் மெய், வாய், கண், மூக்கு, செவியென்னும் ஞானேந்திரியங்களாகிய) பஞ்சேந்திரியங்களைக் (காரியப்பட வொட்டாமல்) கெடுத்து (நித்திய சுழுத்தியினைப் போல வொன்றுந் தோன்றாதபடி) தூங்காமல் (திருவருளினை முன்னிட்டு அறிவுமயமாக விருந்து) தூங்கிச் சிவானந்த மடைவ தெக்காலம், எ-று. (1)

நீங்காச் சிவயோக நித்திரைகொண் டேயிருந்து
தேங்காக் கருணைவெள்ளந் தேக்குவது மெக்காலம்.

(பொ-ரை.) (என்னெ யொழுக்குப் போலத் தொடர்ச்சியாய்) இடைவிடாத சிவராஜயோக சமாதியடைந்திருந்து (மாயாகாரியங்க ளால்) தளும்பாத சுகவாரி (என்னிடத்து) நிறைந்திருத்த லெக் காலம். எ-று. (2)

தேங்காக் கருணைவெள்ளந் தேக்கியிருந் துண்பதற்கு
வாங்காமல் விட்டகுறை வந்தடுப்ப தெக்காலம்.

(பொ-ரை.) நிறைந்துள்ள கிருபா வெள்ளம் (என்னிடம்) ததும்பி யிருந்து (அதனை) யனுபவித்தற்குப் பின் வாங்காமல் (பூர்வசென்மாந் தரபுண்ணிய) சேஷம் (என்னை) யடைந்து (அதனை யுண்ணும்படி செய் வது) எக்காலம். எ-று. (3)

ஐயாக் கவலையினா லுள்ளுடைந் துவாடாமல்
மாயாப் பிறவி மயக்கறுப்ப தெக்காலம்.

(பொ-ரை.) (பிரபஞ்சத்தின் கண்ணே) நீங்கப் பெறாத (மண், பெண், பொன் என்பவற்றால் விளையும்) துன்பத்தினால் மனம் தளர்ச் சியடைந்து மெலியாமல் (அசுத்த) மாயா காரியத்தால் (உண்டாகும்) சென்மத்தினால் (விளையும்) மயக்கத்தினை யொழித்துக் கொள்வது எக்காலம். எ-று. (4)

மாயாப் பிறவி மயக்கத்தை யூடறுத்துக்
காயாபுரிக் கோட்டை கைக்கொள்வ தெக்காலம்.

(பொ-ரை.) மாயை சம்பந்தத்தா லுண்டாகிய சென்மத்தால் விளை யும் (பிரபஞ்ச) மயக்கத்தினை அடியோடு நீக்கித் தேக மென்னும்

கோட்டை (நிலைபெறுமாறு காயசித்தியைச்) செய்து கொள்வது எக்காலம். எ-று. (5)

சாயாபுரிக்கோட்டை கைவசமாய்க்கொள்வதற்கு
மாயாவநுபூதி வந்தடுப்பதெக்காலம்.

(பொ-ரை.) (காயசித்தியினால்) தேகத்தினை நிலைபெறச்செய்து கொள்வதற்கு (சுத்த) மாயா சம்பந்தமாகச் சிவாநுபூதி (என்னிடத்துச்) சுவாநுபூதியாய் விளைவது எக்காலம். எ-று. (6)

சேயாய்ச்சமைந்து செவிடூமைபோற்றிரிந்து
பேய்போலிருந்துன் பிரமைகொள்வதெக்காலம்.

(பொ-ரை.) (இவ்வுலகிலே) யொரு புத்திரனாகப்பிறந்து (பிரபஞ்ச சம்பந்தமான விஷயங்கள் கேளாத) செவிடனாகவும் (தற்போதவார்த்தைகளைப் பேசாத) ஊமையனாகவும் சஞ்சரித்துப் (பிசாசால் பிடியுண்டவன் தேகத்திலே பொருத்தர் பண்ணும் பிரகாசிதங்கள் பிடித்த பேய்க்கேயாகத் தனக்குப் பாரமற நிற்பது போலச் சுதந்திரமின்றி) பேய்பிடிப்பான் போற்சஞ்சரித்து (சிவபெருமானுடைய) தேவரீரிடத்து மெய்யறிவு கொள்வது எக்காலம்-எ-று. (7)

பேய்போற்றிரிந்தும் பிணம்போற்கிடந்துபெண்ணைத்
தாய்போனினைத்துத் தவமுடிப்பதெக்காலம்.

(பொ-ரை.) பேய் ஆவேசம் கொண்டவனைப் போலச் (சுதந்திரமின்றி) அலைந்து (பிரபஞ்ச வாசனை நீங்கியும் நாக்கோர்த்த நிருவிகற்ப சமாதியில் சலனமற்று) பிணம்போற்கிடந்து (உலகிலுள்ள மாதர்களைத் தாயாரைப் போலப் பாவித்து (வாழும்) விரதத்தினைப் பூர்த்தி செய்து கொள்வது எக்காலம்-எ-று. (8)

கால்காட்டிக் கைகாட்டிக் கண்கள்முகங்காட்டி
மால்காட்டும் மங்கையரை மறந்திருப்பதெக்காலம்.

(பொ-ரை.) செம்பஞ்சூட்டிய மிருதுவான கால்களைக் காட்டியும், கைகளினால் சாடை நீதவிய காட்டியும் பற்பல சைகைகள் கண்களாற் காட்டியும் முகம் மினுக்கிக் காட்டியும் காம விச்சையினைக் காட்டியும் வாழுகின்ற (வேசிகளாகிய) மாதர்களை மறந்து தேவரீர் திருவருள் மயமாக இருப்பது எக்காலம்-எ-று. (9)

பெண்ணினல்லா ராசைப் பிரமையினைவிட்டொழிந்து
கண்ணிரண்டுமூடிக் கலந்திருப்பதெக்காலம்.

(பொ-ரை.) பெண்டன்மையுடைய மாதர்களிடத்து வைக்கும் காமவாசையான மயக்கத்தினை நீக்கிப் பௌதிக சம்பந்தமான இரண்டு கண்களையு மூடிக் கொண்டு அறிவாகிய (கண்களைத் திறந்து) தேவரீர் திருவருளில் கலந்து சுகித்திருப்பது எக்காலம்-எ-று. (10)

வெட்டுண்டபுண்போல் விரிந்தவல்குற்பைதனிலே
தட்டுண்டுநிற்கை தவிர்வதுவுமெக்காலம்.

(பொ-ரை.) கத்தியினால் காயப்பட்ட புண்ணினைப்போலப் பிளப்பினையுடைய நிதம்பமென்கிற பாம்பின் படம்போன்ற வதனிலே மனம் சிக்கிக்கொண்டு நிற்றலினின்று நீங்கியிருத்தலுமெக்காலம்-எ-று. (11)

ஆறாதபுண்ணி லழுந்திக்கிடவாமல்
தேறாதசிந்தைதனைத் தேற்றுவதுமெக்காலம்.

(பொ-ரை.) எவ்விதமான மருந்தினாலேயும் சௌக்கிய மடையாத புண்ணினைப்போலவிருக்கும் (அல்குல் ஆசையினில்) மனம் அழுந்தி யிராமல் திருவருளினை யாராயாத சிந்தையினை நன்னெறியினில் சேர்ப்பது எக்காலம்-எ-று. (12)

தந்தைதாய்மக்கள் சகோதரரும்பொய்யெனவே
சிந்தைதனிற்கண்டு திருக்கறுப்பதெக்காலம்.

(பொ-ரை.) பிதா, மாதா, புத்திரர், சோதரரும் வந்தவாறும் போமாறும் மாயாஜாலமெனவே மனத்தினால் உண்மை விசாரித்துத் தெளிந்து பிரபஞ்ச மயக்கை யொழிப்ப தெக்காலம்-எ-று. (13)

மன்னுயிரைக்கொன்று வதைத்துண்டுழலாமல்
தன்னுயிர்போலெண்ணித் தவமுடிப்பதெக்காலம்.

(பொ-ரை.) (ஆடு, கோழி, மச்ச முதலிய) ஜெந்துக்களைக்கொன்று (அவற்றை) உபத்திரவப்படுத்தி வயிராறத்தின்று பாவசொரூபிகளாகத் திரியாமல் தன்னுயிரைப் போலவே பிறவுயிர்களையும் பாவித்துக் கொல்லாவிரதத்தினைப் பூர்த்தி செய்வது எக்காலம்-எ-று. (14)

பாவியென்றேபேர்படைத்துப் பாழ்நரகில்வீழாமல்
ஆவிநின்றசூத்திரத்தை யறிவதினியெக்காலம்.

(பொ-ரை.) பிறருக்குத் தீங்கு செய்வதனால் பாவி யென்று யாரும் சொல்லும்படியான பேரை யடைந்து அதற்குப் பலனாகப் பாழாகிய நரகத்தில் வீழ்ந்து வருந்தாமல் உயிரானது உடலில் நிலைத்து நின்ற இரகசியத்தினைத் தெரிவித்துக் கொள்வ தெக்காலம்-எ-று. (15)

உளியிட்டகல்லு முருப்பிடித்தசெஞ்சாந்தும்
புளியிட்டசெம்பும் பொருளாவதெக்காலம்.

(பொ-ரை.) உளியைக் கொண்டு செதுக்கியமைத்த சிலாவுருவத்தினையும், செவ்விய சுண்ணாம்பு சாந்தினாலமைத்த வுருவத்தினையும், புளியினாற் சுத்தம் பண்ணப்பட்ட செப்பு விக்கிரகத்தையும், (கல், சாந்து, விக்கிரக மென்று சாமானியமாகப் பாவிக்காமல் அவற்

றையிட்டித்துக் கொண்டு சிவபெருமான் அனுக்கிரகிக்கும் உண்மைப்) பொருள் இவ்வகையெனத் தெரிவது எக்காலம்-எ-று. (16)

வேடிக்கையுஞ்சொரூப மெய்ப்பகட்டும்பொய்ப்பகட்டும்
வாடிக்கையெல்லா மறந்திருப்பதெக்காலம்.

(பொ-ரை.) பிரபஞ்ச வேடிக்கையிலும், அழகாக நடப்பதிலும், தேகத்தை யலங்கரித்துக் கொள்ளுவதிலும், பெரியாரைப் போல நடிப்பதிலும் செய்யும் வழக்கத்தினை யெல்லாம் மறந்து எவற்றினும் பற்றற்றிருப்பது எக்காலம்-எ-று. (17)

பட்டுடைபொற்பணியும் பாவனையுந்தீவினையும்
விட்டுவிட்டுன்பாதம் விரும்புவதுமெக்காலம்.

(பொ-ரை) பீதாம்பர முதலிய தரித்துக் கொள்ளுவதிலும், ஆபரணங்களால் அலங்காரம் செய்து கொள்வதிலும், பிறர் போல் நடித்தலிலும், கொடிய பாவங்கள் செய்தலிலு மிருந்து நீங்கித் தேவரீர் திருவடியினையே விரும்புவது எக்காலம்-எ-று. (18)

ஆமைவருமாட்கண் டடக்கஞ்செய்தாற்போல்
ஊமையுருக்கொண் டொடுங்குவதுமெக்காலம்.

(பொ-ரை.) ஆமையானது தனக்குச் சமீபத்தில் வரும் மனிதனைக் கண்டு நீரிலடைந்து தனது தலை காலுகால் என்னு மைந்துறுப்புக்களையும் தன்னுடற்கு ளிழுத்துக் கொள்ளுதல் போல (மெய், வாய், கண், மூக்கு செவி யென்னு மைந்து இந்திரியங்களின் வழியே செல்லும் விஷயங்களையடக்கிக் கொண்டு) மவுனநிலையுற்று விகாரமற்று ஒடுக்கி யிருப்பது எக்காலம்-எ-று. (19)

தண்டிகையுஞ்சாவடியுஞ் சாளிகையுமாளிகையுங்
கண்டுகளிக்குங் கருத்தொழிவதெக்காலம்

(பொ-ரை.) (சிலையார் பொருவர்பாலிருக்கத் தகுந்த நல்லனவாகிய) பல்லக்கினையும், சத்திரத்தினையும், மணப்பையினையும், வீட்டினையும் பார்த்து எக்காலும் தனக்குச் சொந்தமெனச் சந்தோஷித்திருக்கும் எண்ணத்தின் நீக்குவது எக்காலம்-எ-று. (20)

அத்தனிருப்பிடத்தை யாராய்ந்துபார்த்தறிந்து
செத்தசவம்போற் றிரிவதினியெக்காலம்.

(பொ-ரை.) (பொதுத்தன்மையில் சருவ வியாபகமாகவும், சிறப்புத்தன்மையில் குருலிங்க சங்கமங்களிலும்) சிவபெருமானெழுந்தருளியிருக்கும் உண்மையிடமொவ்வொன்றையும் (மெய்கண்ட சாஸ்திரங்களைக் கொண்டு) விசாரித்துத் (திருவருளை முன்னிட்டுத்) தரிசித்து எக்காலும் உயிர் நீங்கிய பிணம்போலப் பிரபஞ்ச சுதந்திரமின்றிச் சஞ்சரிப்பது எக்காலம்-எ-று. (21)

ஒழிந்தகருமத்தினைவைத் துள்ளொழிந்தவெள்ளெலும்பாய்க்
கழிந்தபிணம்போலிருந்து காண்பதினியெக்காலம்.

(பொ-ரை.) (பாவத்தினின்று) நீங்கிய (பதி) தருமத்தினை ஆதாரமாக வைத்துக்கொண்டு உடலின் கண்ணேயுள்ள என்பு வெளுத்தவெலும்பாகித் தசைகழிந்த சவம்போலவாழ்ந்து உன்னைத்தரிசிப்பது எக்காலம்.

அற்பசுகமறந்தே யறிவையறிவாலறிந்து
கொப்பத்தில்வீழ்ந்துகொண்ட கேளறுப்பதெக்காலம்

(பொ-ரை.) (பிரபஞ்ச சம்பந்தமான) சிற்றின்பத்தினை மறந்து அறிவு சொரூபமாகவுள்ள சிவபெருமானைத் திருவருளை முன்னிட்டு உண்மையறிவினாற்றெரிந்து பிறவியில் தங்கும்படி வாய்ந்த தீமையை நீக்கிக்கொள்வது எக்காலம்-எ-று. (23)

கருப்படுத்தி என்னை யமன் கைப்பிடித்துக்கொள்ளாமுன்
உருப்படுத்தியாள வுடன்படுவதெக்காலம்.

(பொ-ரை.) பிரமன் மனிதனாகப் பிறப்பித்து வாழ்ந்த பின்னர் என்றனை இயமன் பிடித்துக் கொண்டேகா முன்னம், சிவமாந்தன்மை செய்து ஆட்கொள்ளக் கருணை கூர்தல் எக்காலம்-எ-று. (24)

தூண்டுவிளக்கணைய தொடர்ந்திருள்முன்சூழ்ந்தாற்போல்
மாண்டுபிறந்துவந்த வகைதெரிவதெக்காலம்.

(பொ-ரை.) தூண்டுகோலினையுடைய தீபமானது அணைந்து விட உடனே இருள் தொடர்ந்து எங்கும் சூழ்ந்து கொண்டு ஒளியும் இருளும் மாறி மாறி வருதல் போல அடிக்கடி இறந்து பிறந்து உலகில் வந்தவிதம் விருப்பு வெறுப்பினால் விளைந்த கன்மத்தினாலெனத் தெரிந்து கொள்வது எக்காலம்-எ-று (25)

தூரியினின் மீன்போற் சுழன்றுமனம் வாடாமல்
ஆரியனைத் தேடி யடிபணிவதெக்காலம்.

(பொ-ரை.) பெருவலையினிற் பட்ட மீனைப்போல (பிரபஞ்சமாயா வலையிற் பட்டுத்) திரிந்து மனமிளைக்காமல் குருநாதனைத் தேடித் (கண்டு) அவன் திருவடியினை வணங்குவது எக்காலம். எ-று. (26)

எண்ணூறுகமிருந்து மெய்தாத வீடுபெற
வெண்ணீறு பூசி விளங்குவதெக்காலம்.

(பொ-ரை.) (விபூதியினையணியாது) அநேகமான யுகங்களிருந்தாலும் அடையக் கூடாத மோட்சத்தினை யடைய வெண்மையான விபூதியினைத் தேகமனைத்திலும் சண்ணித்துக்கொண்டு (அதனால்) மோட்சவீட்டில் வாழ்ந்திருப்பது எக்காலம்-எ-று. (27)

அவவேடம்பூண்டிங் கலைந்திரியாமற்
சிவவேடம்பூண்டு சிறந்திருப்பதெக்காலம்.

(பொ-ரை.) புறச்சமயத்தினர்க்குரிய அப்பிரயோசனமான வேடத்தினைத் தரித்து இவ்வுலகில் நாய் போல அலைந்து உலையாமல் சைவ சமயத்திற்குரிய (விபூதி ருத்திராட்சமான சின்னங்களை) வேடந் தரித்து (சிவஞானச் செல்வத்தில்) சிறப்படைந்து இருப்பதெக்காலம். (28)

அண்டருக்காச் சாகாமருந்தி அம்பலத்தினின்றாடுங் [காலன்
தொண்டருக்குத் தொண்டனெனத் தொண்டுசெய்வதெக்

(பொ-ரை.) தேவர்க ளனைவரும் சாகாதிருக்கும் பொருட்டு விடத்தினையுண்டு தில்லைச்சிற்றம்பலத்திலே ஆனந்த நிர்த்தனஞ் செய்யும் நடராஜமூர்த்தியின் அடியார்கட்கு அடியனென அவர்கட்கு பணிசெய்வது எக்காலம்-எ-று. (29)

பன்றிவடிவெடுத்துப் பாரிடந்துமால்காணாக்
குன்றில்விளக்கொளியை கூறுவதெக்காலம்.

(பொ-ரை.) விஷ்ணுவானவர் பன்றியுருவினை யெடுத்து (ஆயிர வருஷ காலம்) பூமியினை யகழ்ந்தும் காணப்படாத திருவண்ணாமலையின் (முடியில் விளங்கும்) ஞானதீபத்தினை (வாயாரச்) சொல்வதும் எக்காலம்-எ-று. (30)

தித்திக்குந்தெள்ளமிர்தை சித்தாந்தத்துட்பொருளை
முத்திக்குவித்தை முதல்நினைப்பதெக்காலம்.

(பொ-ரை.) (மெய்யடியார்கள் உள்ளத்தில்) தித்திக்கும்படியான தெள்ளிய தேவாமிர்தம் போன்றவனை (வேதாந்தத்தைக் கடந்த வேதாந்த சாரமாகிய) சித்தாந்தத்திலே (விளங்கும்) உட்பயனை (முத்

தாத்துவித சித்தாந்த) முத்தியிறுக்கு வித்தினை (எத்தேவர்கட்கும்) மூலமாகத் தியானிப்பது எக்காலம்-எ-று. (31)

வேதாந்தவேதமெல்லாம் விட்டொழிந்தே நிஷ்டையி
லேகாந்தமாக விருப்பதினியெக்காலம். [சேல

(பொ-ரை.) (ஆன்மகோடிகட்குப் பொதுவாகச் சொல்லப்பட்டுள்ள) உபநிடதங்களுடன் கூடிய வேத மந்திரங்களையும் விட்டு (சத்தியாத உத்தமர்களுக்குச் சிறப்பாகச் சொல்லப்பட்டுள்ள) சிவாகமந்தனை குறித்த நிஷ்டையினில் தனியாக விருப்பது இனியெக்காலம். (32)

மற்றிடத்தைத்தேடியென்றன் வாழ்நாளைப்போக்காமல்
உற்றிடத்தைத்தேடி யுறங்குவதுமெக்காலம்.

(பொ-ரை.) பகிர்முகமாகவுள்ள அந்நிய பிரபஞ்சத்தினைத் தேடி எனது ஆயுள் நாள்களை வீணாக்காமல் அந்தர்முகமாகவுள்ள அந்நிய பிண்டத்தினைத் தேடி யுண்மை யறிந்து சிவானந்த யோக நித்திரையி லிருப்பது எக்காலம்-எ-று. (33)

இன்றுள்ளோர்நாளை யிருப்பதுவும் பொய்யெனவே
மன்றுளோர்சொல்லும் வகையறிவதெக்காலம்,

(பொ-ரை.) இன்றைய தினம் இருப்பவர் அடுத்தநாள் இருப்பதுவும் நிச்சயமில்லையெனவே அறிவாளிகள் கூடிய சபையிலேயுள்ள பெரியோர்கள் சொல்லும் தன்மையினைத் தெரிவது எக்காலம்-எ-று. (34)

கஞ்சாவபினியுடன் கள்ளுண்டுவெசடாமற்
பஞ்சாமிர்தம் பருகுவதுமெக்காலம்,

(பொ-ரை.) அறிவை மயக்கும் விபரீதங்களிற் புத்தியினைச் செலுத்துகின்ற கஞ்சா, அபினி, கள் இவைகளைத் தின்றும், குடித்

தும் மயக்கமடையாமல் சிவபெருமானுக்கு அபிஷேகித்த தயிர், பால், நெய், சருக்கரை, பழம் கூடிய பஞ்சாமிர்தத்தினை உண்ணுவதும் எக்காலம்-எ-று. (35)

செஞ்சலத்தினாற்றிரண்ட ஜென்மமோக்ஷம்பெறவே
சஞ்சலத்தைவிட்டுன் சரணடைவதெக்காலம்.

(பொ-ரை.) கருப்பாசயத்தினில் கலந்த இரத்தத்தினால் வடிவெடுத்த பிறப்பானது மோட்சமடையவே பிரபஞ்ச சம்பந்தமாக வுள்ள மாயாகாரிய துன்பத்தினின்று நீங்கித் தேவரீர் திருவடியினை யடைவதெக்காலம்-எ-று. (36)

கும்பிக்கிரைதேடிக் கொடுப்பாரிடந்தோறும்
வெம்பித்திரிகை விடுப்பதினியெக்காலம்.

(பொ-ரை.) வயிற்றினுக்கென்று சாப்பாடு தேடி அது கொடுப்பாருடைய வீடுதோறும் மனம் புழுங்கித்திரிதலைத் தடுத்துக்கொண்டு இருக்குமிடந் தேடிவர வாழ்தல் எக்காலம்-எ-று. (37)

ஆடுகின்றசூத்திரந்தா னறுமளவுமோடிதிரிந்து
போடுகின்றநாள்வருமுன் போற்றுவதுமெக்காலம்.

(பொ-ரை.) உலகத்தில் சஞ்சரிக்கின்ற இத்தேகமானது சாமளவும் உலவி இறக்குநாளை யடைவதற்குமுந்தியே தேவரீரை துதிப்பது எக்காலம்-எ-று. (38)

நவசூத்திரவீட்டை நானென்றிலையாமல்
சிவசூத்திரத்தைத் தெரிந்தறிவதெக்காலம்.

(பொ-ரை.) ஒன்பது துவாரங்களோடுங்கூடிய உடலினை ஆன்மாவாகிய நானென்றிலையாமல் சிவஞானபோத சூத்திரத்தினைப் படித்தறிவது எக்காலம்-எ-று. (39)

மறந்துமலசலங்கள் மாயும்புழுக்கூட்டைவிட்டுக்
கரந்தனடியிணைக்கீழ்க் கலந்துநிற்பதெக்காலம்.

(பொ-ரை.) அறிவுமயங்கி மலமும் சலமும் தாமே வழியும்படி இறந்துபோகும் புழுக்கள் நிறைந்த தேகத்தினின்று நீங்கி நினது திருவருளில் மறைந்து தேவரீர் இரண்டு திருவடிக்கீழ் இரண்டறக் கலந்து தங்குவது எக்காலம்-எ-று. (40)

இம்மைதனிற்பாதகனா யிருவினைக்கீடாயெடுத்த
பொம்மைதனைப்போட்டுன்னைப் போற்றிநிற்பதெக்காலம்.

(பொ-ரை.) இப்பிறப்பில் பாவியாக பூர்வஜென்மத்திற் செய்த நல்வினை தீவினைக்குத் தக்கபடி யெடுத்த பொம்மையாகிய உடலை நீக்கி விட்டுத் தேவரீரைத் தோத்தரித்து வாழ்வது எக்காலம்-எ-று. (41)

உப்பிட்டபாண்ட முடைந்துநாறுக்கொள்ளுமுன்னே
அப்பிட்டவேணியனுக் காட்படுவதெக்காலம்.

(பொ-ரை.) உப்பினையடைத்து வைத்திருந்த பாண்டமுடைந்துபோவதுபோல நிலையற்றிராதபடி அழிந்து மறையுமுன் பிறைமதியோடு தன் முன்னரே கங்காநதியினைத் தரித்த சடாபாரத்தினையுடைய பரமசிவனுக்கு அடிமையாவது எக்காலம். எ-று. (42)

சேவைபுரிந்து சிவரூபக்காட்சிகண்டு
பாவத்தினைக்கழித்துப் பேறடைவதெக்காலம்.

(பொ-ரை.) ஆலய வழிபாடுசெய்து சிவலிங்கப்பெருமான் திருவுருவத்தினைத் தரிசித்து மாதர் மயக்கத்தினை நீக்கி மோட்சப் பிரவேசனத்தை யடைவதெக்காலம். எ-று. (43)

காண்டத்தைவாங்கிக் கருமேகம்பெய்ததுபோல்
பாண்டத்தைநீக்கிப் பரமடைவதெக்காலம்.

(பொ-ரை.) (சமுத்திரத்தினின்றும், உப்புநீரைக் குடித்துக் கரிய மேகமானது திரும்பி நன்னீரைப் பொழிவது போல) தேகத்தினின்றும் (மலத்துடன் சம்பந்தித்த) உயிர் நீங்கித் திருவருளினைப் பொருந்து மேலான பதத்தினை யடைவது எக்காலம். எ-று. (44)

சோற்றுத்துருத்திதனைச் சுமந்திளைத்துவாடாமல்
ஊற்றைச்சடம்போட் டுனையடைவதெக்காலம்.

(பொ-ரை.) சாதத்தினை யடைத்து வைக்கும் பையாகிய உடலைத் தாங்கி யிளைத்துப் போகாமல் அசுத்தமுற்ற தேகத்தை விட்டுத் தேவரீரை யடைவ தெக்காலம். எ-று. (45)

தொடக்கைச்சதமெனவே சுமந்தலைந்துவாடாமல்
உடக்கைகழற்றி உனையறிவதெக்காலம்.

(பொ-ரை.) (காமாதிகளால் கட்டப்பட்டுள்ள) தேகத்தினை நிச்சயமென (என்னை)த் தாங்கித் திரிந்து இளைக்காமல் ஒருங்கு கூடியுள்ள தத்துவங்களை நீக்கித் தேவரீரைத் தெரிந்து கொள்வது எக்காலம். ()

ஆசைவலைப்பாசத் தகப்பட்டுமாயாமல்
ஓசைமணித்தீபத்தி லொன்றிநிற்பதெக்காலம்.

(பொ-ரை.) (பிரபஞ்ச மென்னும்) ஆசையாகிய மாயாவலையில் சிக்கிக்கொண்டழியாமல் நாத தத்துவத்திலே தோன்றும் அழகிய சிவச் சோதியிலிரண்டறக் கலந்து வாழுத லெக்காலம். எ-று. (47)

கூறரியநால்வேதங் கூப்பிட்டுங்காணாத
பாரரகசியத்தைப் பார்த்திருப்பதெக்காலம்

(பொ-ரை.) சொல்லுதற் கருமையான வேதங்கள் முறையிட்டும் அவற்றாற் காணப்படாத (கோகழங்களாலறியத்தகுந்த) பெரிய இரகசியப் பொருளாகிய சிவபெருமானைத்-தரிசித்துக் கொண்டிருப்பதெக் காலம். எ-று. (48)

புல்லாய்விலங்காய்ப் புழுவாய் நரவடிவா
யெல்லாப்பிறப்பி னிருளகல்வதெக்காலம்.

(பொ-ரை.) புல்லாகியும், மிருகமாகியும், புழுவாகியும், மனிதவடிவாகியும் (மற்ற) எல்லா வகையான பிறப்புகளிலேயும் (பிறப்புகற் கேதுவாகவுள்ள ஆணவமலமாகிய) இருளினின்று நீங்குவது எக்காலம்-எ-று. (49)

தக்கும்வகைக்கோர்பொருளுஞ் சாராமலேவினையிற்
பக்குவம்வந்தன்னருளைப் பார்த்திருப்பதெக்காலம்.

(பொ-ரை.) (திருவருள்) கூடும்விதம் (பிரபஞ்ச சம்பந்தமான) ஒரு பொருளிலும் பற்றுவையாமல், அறிவில் கன்மேனை இருவினை யொப்படைந்து தேவரீர் திருவருளைத் தரிசித்துக் கொண்டிருப்பது எக்காலம். எ-று. (50)

பருவத்தலைவரொடும் பள்ளியின்பங்கொள்வதற்குத்
தெரிவைப்பருவம்வந்து சிக்குவதுமெக்காலம்.

(பொ-ரை.) ஆன்ம பரிபாகக் காலத்திலாட்கொள்ளும் தலைவராகிய பெருமானுடன் கலந்து பேரின்பம் கொள்வதற்கு (இருபத்தாறு வயதிற்கு மேற்பட்ட) தெரிவை யென்னும் வயதடைந்து (திருவருளில்) மயங்குவதும் எக்காலம். எ-று. (51)

தெரிவையுறும்பக்குவத்தின் சீராட்டெல்லாமறிந்து
குருவையறிந்தேதினத்தக் கும்பிடுவதெக்காலம்.

(பொ-ரை.) தெரிவைப் பெண் தன் வயதில் (உலக சீரனைத்தும் அறிந்து அனுபவித்தது போல) சிறப்பனைத்தும் எனது பக்குவமான காலத்தி லனுபவித்துப் பின்னர் குருநாதனை விசாரித்தறிந்து நியானித்து வணங்குவது எக்காலம். எ-று. (52)

வம்படிக்குமாதருடன் வாழ்ந்தாலுமன்னுபுளி
யம்பழமுமோடும்போ லாவதினியெக்காலம்.

(பொ-ரை.) உபத்திரவம் செய்யும் பெண்களுடன் கூடியிருந்தாலும் (மனமானது) புளியமோடும் அதனுள் பழமும் எங்ஙனம் பற்றற்றிருக்குமோ அங்ஙனம் வாய்ந்திருப்பது எக்காலம். எ-று. (53)

பற்றற்றநீரிற் படர்தாமரையிலைபோல்
சுற்றத்தைநீக்கிமனந் தூங்கிற்பதெக்காலம்.

(பொ-ரை.) (பிரபஞ்ச சம்பந்தமான பொருள்களில்) ஆசையற்ற ஜலத்திலே ததும்பிக் கொண்டிருக்கிற அழகிய தாமரையிலை (அந்நீரிற் பற்றற்றிருப்பது போல) சுற்றத்தாரினின்று நீங்கி மனம் தாங்கற்று வாழ்தல் எக்காலம். எ-று. (54)

சல்லாபலீலையிலே தன்மனைவிசெய்தசுகம்
சொல்லாரக்கண்டெனக்குச் சொல்வதினியெக்காலம்.

(பொ-ரை.) சரசவார்த்தையுடன் கூடிய லீலைக் காலத்திலே தன்னுடைய மனைவி தந்த இன்பத்தினைப் போல (தேவரீர் திருவருளுடன் கலந்தனுபவித்த பேரின்பத்தினை) சொல்லமையக் கண்டு அடியேனுக்கு எடுத்துச்சொல்வது எக்காலம். எ-று. (55)

மருவமயப்புருடன் வருநேரங்காணாமல்
உருகுமனம்போலெனது ளுருகுவதுமெக்காலம்.

(பொ-ரை.) (கன்னிகை களவாகப்) புணரும் வேறு நாயகன் வர வேண்டிய காலத்தில் வரக் காணாதபோது (அந் நாயகிக்கு) இரங்கும் மனம்போல, அடியேனுடைய நெஞ்சு தேவரீரை நோக்கிக் கரைவது எக்காலம். எ-று. (56)

தன்கணவன்றன்சுகத்திற் றன்மனம்வேறானதுபோல்
என்கருத்திலுன்பதத்தை யேற்றுவதுமெக்காலம்.

(பொ-ரை.) தன்னுடைய (சொந்த கணவனுடன்) சுகத்தையனுப வித்துக் கொண்டிருக்கிற வொரு பெண் (வேறொரு நாயகன்மீதுள்ள மோகத்தினால்) தன் மனம் வேறுபட்டிருப்பது போல (பிரபஞ்ச போ கங்களை யானனுபவிக்கிற காலத்தும்) என் மனம் உன் வசமாகவிருந்து உருகுதல் எக்காலம். எ-று. (57)

கூடிப்பிரிந்துவிட்ட கொம்பனையைக்காணாமல்
தேடித்தவிப்பவன்போல் சிந்தைவைப்பதெக்காலம்.

(பொ-ரை.) (வெகு காலமாகக்) கலந்திருந்து (இடையே) நீங்கிய தன் மனைவியைக் காணாமல் எங்கும் தேடிச் சஞ்சலப்படுபவன் போலத் தேவரீரிடத்து மனம் வைப்பது எக்காலம். எ-று. (58)

யவ்வனத்தின்மோகம் எப்படியுண்டாம்படிபோல்
கவ்வனத்தியானங் கருத்துவைப்பதெக்காலம்.

(பொ-ரை.) யவ்வன முடைய பெண்ணின் மீது ஆசை கன கண முண்டாமோ அது போன்று மனத்தியானத்தில் பரமனை நெஞ் சில் வைப்பது எக்காலம். எ-று. (59)

கண்ணாலருவி கசிந்தமுத்தப்போற்றுதிரச்
சொன்னபரம்பொருளைத் தொகுத்தறிவதெக்காலம்.

(பொ-ரை.) கண்களினால் (ஆனந்தக் கண்ணீர்) அருவியினைப் போலக்கசிந்த முத்தினைப்போலச் சிறந்த (வேதாகமசாத்திரத்தால்) புகழப்பட்ட சிவபரம்பொருளினை ஆராய்ந்தறிவது எக்காலம். எ-று. (60)

ஆகமிகவுருக வன்புருகவென்புருகப்
போகவனுபூதி பொருந்துவதுமெக்காலம்.

(பொ-ரை.) உடல் புளகிக்க, அன்பு மேலிட, என்பு நெக்குவிடச் சிவபோகச் சிவானுபூதி நிலையினைப் பொருந்துவதும் எக்காலம்-எ-று.

நீர்க்குமிழிபோ னிலையற்றவாழ்வைவிட்டுன்
பேரிற்கருணைவெள்ளம் பெருக்கெடுப்பதெக்காலம்.

(பொ-ரை.) நீரினிலே யுதித்தொடுங்கும் குமிழினைப் போல நிலையில்லாத வாழ்க்கையை வெறுத்துத் தேவரீர் மீது ஆனந்த வெள்ளம் என்னிடத்துத் ததும்புவது எக்காலம். எ-று. (62)

அன்பைப்பெருக்கி யறிவையதன்மேற்புகட்டித்
துன்பவலைப்பாசத் தொடக்கறுப்பதெக்காலம்.

(பொ-ரை.) அன்பினைப்பெருக்கி யதன்வழியாக வறிவைச் செலுத்திப் (பிரபஞ்சமுகமாகவுள்ள) தீமையான மாயாவலையின் சம்பந்தத்தை யொழித்துக் கொள்வதெக்காலம். எ-று. (63)

கருவின்வழியறிந்து கருத்தைச்செலுத்தாமல்
அருவிவிழிசொரிய அன்புவைப்பதெக்காலம்.

(பொ-ரை.) பிறப்பினுக் கேதுவாகவுள்ள நெறியினைத் தெரிந்து அந்நெறியினில் மனத்தினைச் செலுத்தாமல் விழிகளினின்றும் அருவி

யினைப் போல நீர் வழிய (தேவரீரிடத்து) அன்பு பாராட்டுவது எக்காலம். எ-று. (64)

தெளியத்தெளியத் தெளிந்துசிவானந்தத்தேன்
பொழியப்பொழியமனம் பூண்டிருப்பதெக்காலம்.

(பொ-ரை.) மனமானது அசைவற அசைவற நின்ற அவசரத்து கலக்கமற்ற சிவானந்தத் தேன் என்னுள் அடிக்கடி சொரிய அச்சுவை மனம் ஆனந்தங் கொண்டிருப்பது எக்காலம். எ-று. (65)

ஆதாரமூலத் தடியிற்கணபதியைப்
பாதாரவிந்தம் பணிந்திருப்பதெக்காலம்.

(பொ-ரை.) (குய்யத்திற்கும் குசத்திற்கும் நடுவேயுள்ள) முக்கோணவடிவாகிய மூலாதாரத்தின் மத்தியிலெழுந்தருளி யிருக்கும் (ஓங்கார) கணபதியின் திருவடித் தாமரையினை வணங்கி யிருப்பது எக்காலம். எ-று. (66)

மண்வளைக்குநாற்கிதழில் வளைந்திருந்தவேதாவைக்
கண்வளைந்துபார்த்துள்ளே கண்டிருப்பதெக்காலம்.

(பொ-ரை.) (மூலாதாரத்தின் இரண்டு விரற்கடைக்கு மேல்) பிருதிவியின் கூறாகிய நாற்கோண வடிவாகிய (சுவாதிட்டானத்தினடுவில்) எழுந்தருளியிருக்கும் பிரமாவை உன் முகமாகக் கண்ணை வைத்துப்பார்த்து மனத்தே தரிசித்திருப்பது எக்காலம். எ-று. (67)

அப்புப்பிறைநடுவே யமர்ந்திருந்தவிட்டுணுவை
உப்புக்குடுக்கையுள்ளே யுணர்ந்திருப்பதெக்காலம்.

(பொ-ரை.) (சுவாதிட்டானத்தின் மேல் எட்டு விரற்கடைக்கு மே நாபிக்கமலத்தில்) அப்புவின் கூறாகிய மூன்றாம்பிறை வடி

வாகிய (மணிபூரகத்திணைவில்) எழுந்தருளியிருக்கும் விட்டுணுவை உட்பிட்ட குலைக்கைபோன்ற (நிலையற்ற) தேகத்தினுள்ளே தெரிந்து அறிவது எக்காலம். எ-று. (68)

மூன்றுவளையமிட்டு மூலத்தெழுந்தகோணத்தில்
தோன்றுமுருத்திரனைத் தொழுதுநிற்பதெக்காலம்.

(பொ-ரை.) (மணிபூரகத்தின்மேற் பத்துவிரற்கடை பிரமாண முள்ள இருதயத்தில்) தேயுவின் கூறாகிய முக்கோண வடிவாகிய (அநாகதத்திணைவில்) எழுந்தருளி யிருந்த உருத்திர மூர்த்தியை வணங்கி நிற்பது எக்காலம். எ-று. (69)

வாயுவறுகோணமதில் வாழுமகேச்சுரனைத்
தோயும்வகைகேட்கத் தொடங்குவதுமெக்காலம்.

(பொ-ரை.) (அநாகதத்தின்மேற் பத்து விரற்கடை பிரமாண முள்ள கண்டத்தில்) வாயுவின் கூறாகிய அறுகோண வடிவாகிய (விசுத்தியிணைவில்) எழுந்தருளியிருக்கும் மகேச்சுரனை அடையும் விதம் விசாரிக்க வாரம்பிப்பது எக்காலம். எ-று. (70)

வட்டவழிக்குள்ளே மருவுஞ்சதாசிவத்தைக்
கிட்டவழிதேடக் கிருபைசெய்வதெக்காலம்.

(பொ-ரை.) (விசுத்தியின் மேல் பன்னிரண்டு விரற்கடை பிரமாண முள்ள லலாடத்தில்) ஆகாய கூறாகிய வட்டவடிவாகிய (ஆஞ்ஞையி ணைவில்) எழுந்தருளியிருக்கும் சதாசிவத்தினை நெருங்கும் வழி தேடக் கிருபை புரிவது எக்காலம்-எ-று. (71)

உச்சிக்கிடைநடுவே யோங்குகுருபதத்தை
நிச்சயித்துக்கொண்டிருந்து நேர்வதினியெக்காலம்.

(பொ-ரை.) (ஆறாதாரத்திற்கும் மேற்பட்ட) உச்சியின் மேல் விளங்குகின்ற (சிவமாகிய) குருவின் திருவடியை (மனத்தில் தியானஞ் செய்து கொண்டிருந்து) பொருந்துவது எக்காலம்-எ-று. (72)

பாராகிப்பார்மீதிற் பஞ்சவர்ணந்தானாகி
வேராகிநீரூன்றுந்த வித்தறிவதெக்காலம்.

(பொ-ரை.) (முதல்வன் சந்நிதானத்தில் காரியப்படுந்தன்மையால்) பிருதிவியாகியும், அப்பிருதிவியுடன் ஐந்து வர்ணங்களோடு கூடிய ஐம்பூதமாகியும் அவற்றையுங் கடந்த வேறு பொருளாகித் தோவீர் உதித்த காரணத்தினை யறிவதெக்காலம். எ-று. (73)

கட்டறுக்கவொண்ணாக் கருவிகரணாதியெல்லாங்
கட்டறுத்துநிட்டையிலே தூங்குவதுமெக்காலம்.

(பொ-ரை.) பிரிக்கற்கொணாத புறக் கருவிகளையும், அந்தக் கரணமாதியவற்றையும் காரியப்படாதபடிச் செய்து சிவயோக நிஷ்டையிலே அருட் சுழுத்தியிலே யிருப்பதும் எக்காலம்-எ-று. (74)

கள்ளக்கருத்தையெல்லாங் கட்டோடேவேரறுத்திங்
குள்ளக்கருத்தைப் புணர்ந்திருப்பதெக்காலம்.

(பொ-ரை.) (உலகத்தினையடிக்கும்) வஞ்சகமான எண்ணத்தினை முழுவதும் அடியோடு நீக்கி இவ்விடத்து (சிவபெருமானே தெய்வ மெனும்) சத்தியக் கருத்தைத் தெரிந்து வாழ்வது எக்காலம்-எ-று.

அட்டகாசஞ்செலுத்தி மலத்தைச்சடலத்துடனே
பட்டபாடத்தனையும் பகுத்தறிவதெக்காலம்.

(பொ-ரை.) (வினை) ஆடம்பரங்களை உடைத்தாம் தன்பத்திற்கேதுவாகவுள்ள தேகத்துடனே அநுபவித்த செயல்கள் அத்தனையையும் கூர்ந்தாலோசித்து (உண்மை) யறிவது எக்காலம். எ-று. (76)

அறிவிக்கருவியுட னைவர்க்கடிமைப்பாட்டடையெல்லாம்
பிறிவுடனிருந்தறிப் பேரன்புபெறுவதெக்காலம்.

(பொ-ரை.) அறிதற்கேதுவாகவுள்ள தத்துவங்களுடன் துன்பத்தையநுபவிக்கும் செயலையெல்லாம் நீக்கித் (திருவருளுடன்) சிவபெறச் செய்து ஆராய்ப்பேத் எக்காலம்-எ-று. (77)

பூதம்பொறிகரணம் போந்தவிந்துநாதமுமாய்ப்
பேதம்பலவிதமும் பிரிந்தறிவதெக்காலம்.

(பொ-ரை.) ஐம்பூதம், ஐம்பொறி, அந்தக்கரணங்களுடன் பிம்பமாகிய விந்துவும், சத்தியுமாய்ப் பேசப்பட்ட பலவகையினைத்தையும் (உண்மை விசாரித்து) வெவ்வேறாகப்பகுத்து நிச்சயந்தெரிவது எக்காலம்-எ-று.

தோன்றாசைமூன்றுந் தொடர்ந்துவந்து சூழாமல்
ஊன்றாசைவேரையடி யூடறுப்பதெக்காலம்.

(பொ-ரை.) (அவ்வவ்வயங்களில்) உண்டாகாநின்ற (மண், பெண், பொன்) என்னும் மூன்றாசை தொடர்ந்து வந்து சூழ்ந்து கொள்ளாமல் (அவற்றை) உண்டாதற்குக் காரணமாயுள்ள (ஆசையென்னுந் தத்துவ) ஆசையினடியிலேயே முற்றும் பெயர்ப்பதெக்காலம். எ-று.

பன்சனங்கள்போற்றுமுன்னே பரிவட்டஞ்சூடியினி
மென்சனங்கள்கூடுமென்றறிவதெக்காலம்.

(பொ-ரை.) (எடுத்த சனனத்திலேயே அடைய வேண்டியவற்றை அதி சீக்கிரமடையாமல் காலங்கழித்து வந்த) இவ்வற்ப செனனத்

றினை (நிலையென வெண்ணிச்) சாத்துவரு மன்னரே (புரிவட்டமாகிய) சூக்கும தேகம் நீங்கி விடில் இனி யெந்தச் செனனத்தினைக் கொண்டு (நித்திய) வாழ்வடைதல் என்று அறிவது எக்காலம்-எ-று.

கட்டணமேனின்று நற்றிரோதாயியருள்
கிட்டவழிகாட்டிக் கிருபைசெய்வதெக்காலம்.

(பொ-ரை.) (ஆன்மாவின் இருதயத்திலேயிருந்து (பின்னர் அருளை விளைவிக்கும்) நல்ல திரோதாயி யென்னுஞ் சத்தியினது, சிவபெருமான் திருவருளினையடைய நெறியினைத் தெரிவித்துக் கருணை புரிவதெக்காலம்-எ-று. (81)

நானேநானென்றிருந்தேன் நடுவினிற்கட்டழகி
தானேவெளிப்படுத்தித் தருவளென்பதெக்காலம்.

(பொ-ரை.) (ஆன்மாவாகிய) நான் பிரமமாகிய நானென்றிருந்தேன் (அவ்வமயம்) எனதிருதயத்தில் திருவருட் சத்தி வலிய வெளிவந்து (எனக்கின்னியமாகிய முதல்வ னொருவனைக்) காட்டி வைப்பளென்ப தெக்காலம்-எ-று. (82)

அடர்ந்தமனக்காட்டை யஞ்செழுத்தாம்வாளாலே
தொடர்ந்துதொடர்ந்துவெட்டிச் சுடுவதினியெக்காலம்.

(பொ-ரை.) (அஞ்ஞானத்தால்) நெருங்கியமனமாகிய வனத்தினைப் பஞ்சாக்கர மென்னும் வாளாயுதத்தினாலே அடிக்கடிச் சேதித்து (மறுபடியும் தலையெடாதபடி சிவத்தியானத்தால்) கொளுத்திவிடுவது எக்காலம்-எ-று. (83)

ஐந்துபொறிவழிபோ யலைந்துதிரிந்தபாழ்மனதை
வெந்துவிழப்பார்த்து விழிப்பதினியெக்காலம்.

(பொ-ரை.) பஞ்சேந்திரியங்களின் வழியாக சென்றலைந்த வித்தவின் மனத்தினைத் தலையெடாதபடியிருக்கக் கண்டு (திருவருளினில்) பார்த்துக் கொண்டிருப்பது எக்காலம்-எ-று. (84)

இனமாண்டு சேர்ந்திருந்தோ ரெல்லோருந் தானாண்டு
சினமாண்டு போகவருள் சேர்ந்திருப்ப தெக்காலம்

(பொ-ரை.) (பிரபஞ்ச சம்பந்தமான) இனமனைத்து நீங்க, தன்னுடன் சேர்ந்திருக்கத் தகுதியனைத்து மொழிக்க, கோபமும் கெட்டுப் போகத் திருவருளிற் கலந்திருப்பது எக்காலம். எ-று. (85)

அமையா மனந்தமைய மானந்த வீடுகண்டங்
கிமையாம லோக்கி யிருப்பதினி யெக்காலம்.

(பொ-ரை.) (ஒரு வழியிலும்) அடங்காத மனமானது (திருவருளினால் கிடைக்கும் சிவானந்த வீட்டினைத் தரிசித்து அவ்வீட்டில் இமை கொட்டாது தரிசித்து வாழ்வது எக்காலம்-எ-று. (86)

கூண்டுவிட்டுஞ் சீவன்மெள்ளக் கோட்டாவிகொண்டாற்போல்
மாண்டுவிடுமுன்னே நான் மாண்டிருப்ப தெக்காலம்

(பொ-ரை.) தேகத்தினை விட்டு நீங்கத் தகுந்த சீவனானது மெதுவாக கொட்டாவி விடுதல்போலத் (தேகத்தினை விட்டு நழுவு முன்) நான் (பிரபஞ்ச சேஷ்டையினின்று நீங்கித்) தன்னை மறந்திருப்பதெக்காலம். எ-று. (87)

ஊனிறைந்த காயமுயிர் பிரிந்துபோகுமுன்னம்
நானிறந்து போகவினி நாள்வருவ தெக்காலம்.

(பொ-ரை.) மாமிசம் பொதிந்த உடலினின்றும் உயிர் வெளிப்பட்டுப் போகுமுன்னர் நான் (அகங்காரமற்று) மாழ்கா ளடைவது எக்காலம்-எ-று. (88)

கெட்டுவிடுமாந்தர் கேள்விதங்கள் பேசிவந்து
சுட்டுவிடுமுன்னென்னைச் சுட்டிருப்பதெக்காலம்.

(பொ-ரை.) மாயையாலழியு மனிதர்கள் இறுமாப்பு வார்த்தைகள் பேசிக் கொண்டு வந்து எனதுடலைக் கொளுத்திவிடு முன்னர் (பிர பஞ்சச் சுட்டினை யொழித்து அந்தர் முகமாக) என்னுட் குறித்து நோக்கிக் கொண்டிருப்பது எக்காலம்-எ-று. (89)

தோலேணிவைத்தேறித் தூரகடந்தெய்க்காமல்
நூலேணிவைத்தேறி நோக்குவதுமெக்காலம்.

(பொ-ரை.) தோலினாகிய (உடலாகிய) ஏணியினை யாதாரமாகக் கொண்டு பலதேயஞ் சென்று இளையாமல் (மெய்கண்ட சாஸ்திர) நூல்களாதாரமாகச்சென்று (திருவருளைத்) தரிசிப்பது எக்காலம்-எ-று.

வாயோடுகண்மூடி மயக்கமுற்றுறங்கில்லாமல்
தாயோடுகண்மூடித் தழுவிநிற்பதெக்காலம்.

(பொ-ரை.) வாயினையும் கண்களையு மாத்திர மூடிக் கொண்டு (பணமடங்காமல்) மயக்கத்தினை யடைந்து வாழாமல் திருவருட் சத்தி யுடன் (அறிவாகிய) கண்ணினைச் செலுத்தி (அருளை) யனுபவித்து இருப்பது எக்காலம், எ-று. (91)

சாசினியெலாநடந்து காலோய்ந்துபோகாமல்
வாசிதனிலேறி வருவதினியெக்காலம்.

(பொ-ரை.) பிரபஞ்சமுழுது மலைந்து (உண்மை தெரியாது) களைத்துப் போகாமல் (உசுவாச நிசுவாச) மென்கிற வாயுவாகிய (குதி ரையின்) மேலிருந்து (யதனைத் தன்வசப்படுத்தி) வருவது எக்காலம்.

ஒளிபடருங்குண்டலியை யுன்னியுணர்வாலெழுப்பிச்
சுழுமுனையின்றாள் திறந்து தாண்டுவது மெக்காலம்.

(பொ-ரை.) (மூலாதாரத்திலிருந்து மெழும்பி)ப் பிரகாசத்துடன் விளங்கும் (சர்ப்ப வடிவாகிய) குண்டலி சத்தியைத் தியானித்து அறிவைக் கொண்டு மேலேயெழச் செய்து அது சுழுமுனை வழியிற் செல்ல அங்கு மறைவு நீங்கித் திருவருள் தோன்றுவதும் எக்காலம். எ-று. (93)

இடைபிங்கலைநடுவே யியங்குஞ்சுழுமுனையில்
தடையறவே நின்று சரித்திருப்பதெக்காலம்.

(பொ-ரை.) (வலது மூக்கின் வழியாக வரும்) இடைகலைக்கும் (இடது மூக்கின் வழியாக வரும்) பிங்கலைக்கும் நடுவேயுள்ள சுழுமுனை நாடியில் (சுவாச மிரண்டினையும் விடாது உள்ளேயிழுத்து) அசைவற இருந்து கொண்டிருப்பது எக்காலம். எ-று. (94)

மூலநெருப்பைவிட்டு மூட்டிப்பிலாமண்டபத்தில்
பாலிறக்கியுண்டு பசியொழிவதெக்காலம்.

(பொ-ரை.) மூலாதாரத்திலுள்ள அக்கினியினை எழுப்பி (மேலே சந்திர மண்டலத்தில்) தாக்கச் செய்து அவ்விடத்தினின்றும் அமுதத்தினைப் பெய்யச் செய்து உண்டு பசி நீர்த்திருப்பது எக்காலம். எ-று. (95)

ஆகவெளிக்குள்ளே அடக்காப்புரவிசெல்ல
ஏகவெளியாயிருப்பதினியெக்காலம்.

(பொ-ரை.) தேகத்தினுள்ளே இருதயாகாயத்தில் (கட்டுக்கு) அடங்காத (காற்றென்னும்) குதிரையானது (வெளியேறாது) உள்ளே செல்ல (அப்போது அங்குத் தோன்றும்) சிதம்பராகாய சொரூபமாய் யிருப்பது இனி எக்காலம். எ-று. (96)

பஞ்சரித்துப்பேசும் பலகலைக்கெட்டாப்பொருளில்
சஞ்சரித்துவாழ்ந்து தவம்பெறுவதெக்காலம்

(பொ-ரை.) (மெய்ப்பினை புணர்த்தாது சொற்சாலமாக) விஸ்தார மாய்ப் பேசும் பலவகைப்பட்ட நூல்களுக்கு எட்டாத (உண்மைப்) பொருளாகிய திருவருளினில் கலந்து வாழ்ந்து வரும் தவமடைவ தெக்காலம். எ-று. (97)

மலமுஞ்சலமுமற்று மாயையற்றுமானமற்று
கலமுங்குலமுமற்று நானிருப்பதெக்காலம்.

(பொ-ரை.) (உணவினை நீக்குதலினாலே) மலமும் சலமும் நீங்கி, (பிரபஞ்ச பற்றனைய நிறுத்தலினால்) மாயையினின்று நீங்கி, நல்ல தென்று சொல்லப்படுகிற கொண்டாட்டங்களும், சாதியபிமானமும், நீங்கி நான் தனித்திருப்பது எக்காலம்-எ-று. (98)

ஓடாமலோடி யுலகைவலம்வந்துசுற்றித்
தேடாமலென்னிடமாய்த் தெரிசிப்பதெக்காலம்.

(பொ-ரை.) (அன்பின் வழியே) யாத்திரை செய்யாமல், (வேடிக்கையாக) யாத்திரை புரிந்து பூமி முழுதும் சுற்றி (சிவபெருமானை முன்னிட்டுத்) தேடாமல் எனது சிராயத்துள்ளே தரிசிப்பது எக் காலம்-எ-று. (99)

அஞ்ஞானம்விட்டே யருண்ஞானத்தே நட[illegible]
மெஞ்ஞானவீடுபெற்று வெளிப்படுவதெக்காலம்.

(பொ-ரை.) (பிரபஞ்ச பற்றுகிய) அஞ்ஞானத்தினின்று நீங்கித் திருவருளை ஞானத்தினைப் பற்றி உண்மை ஞானத்தினைப் பயப்பிக் கும் மோட்சத்தினை யடைந்து (சிவனடியனென) வெளி வருவதெக் காலம்-எ-று. (100)

வெல்லுமட்டும்பார்த்து வெருளிபெலாய்விட்டகன்று
செல்லுமட்டுஞ்சிந்தை செலுத்துவதுமெக்காலம்,

(பொ-ரை.) (தத்துவங்களை)ச் செயிக்கும் வரையில், செயித்துக் கோபமனைத்தினையும் நீக்கித் (திருவருளினை) எட்டும் வரையில் மனத்தினை விடுவதும் எக்காலம்-எ-று. (101)

மேலாம்பதந்தேடி மெய்ப்பொருளையுள்ளிருத்தி
நாலாம்பதந்தேடி நான்பெறுவதெக்காலம்.

(பொ-ரை.) மேன்பட்ட திருவருணிலையினை விசாரித்து உண்மைப் பொருளாகிய (சிவபெருமானை) மனத்திருத்திச் சிவசாயுச்சியத்தினை நாடி யதனை யானடைவது எக்காலம்-எ-று. (102)

என்றனதூரமெல்லா மெண்ணியெண்ணிப்பாராமல்
கண்ணாடிக்குள்ளொளிபோற் கண்டறிவதெக்காலம்.

(பொ-ரை.) (சிவபெருமானைத் தரிசித்தற்கேதுவினைவில்) என்றனைதபடி (அறிவிற்கு) அதி தூரமாக விருக்கும் தூலங்களை நினைத்து நினைத்து (விருதாப்) பாராமல் கண்ணாடிக்குள் ஒளியினைப் போல (மனத்தின் கண்ணே சந்தேகமின்றித்) தெரிந்து கொள்வது எக்காலம்-எ-று. (103)

என்னைப்பார்த்துக்கொண்டே யெங்கோமானோடிருக்கும்
தன்மையறிந்து சமைந்திருப்பதெக்காலம்.

(பொ-ரை.) ஆன்மாவின்னதென்று தெரிந்து கொண்டு அதன் பின் எமது தலைவனாகிய சிவபெருமானுடன் இரண்டறக் கலந்திருக்கும் தன்மையினைத் தெரிந்து அமைதல் எக்காலம்-எ-று. (104)

ஆறாதாரங்கடந்த வானந்தப்பேரொளியை
பேறாகக்கண்டோரான் பெற்றிருப்பதெக்காலம்.

(பொ-ரை.) (மூலாதாரமுதல் ஆக்ஞையீறாகவுள்ள) ஆறாதாரங்களையுங்கடந்த ஆனந்த சொரூபமாயுள்ள (அருட்)பெருஞ்சோதியை (நான் அடையும்) பாக்கியமாகத் தரிசித்து அதனை யடைந்திருப்பதெக்காலம்-எ-று. (105)

ஆணவமாயத்தா லழிந்துடலம்போகாமுன்
காணுதலாலின்பமுற்றுக் கண்டறிவதெக்காலம்.

(பொ-ரை.) ஆணவ மலத்தின் மயக்கத்தால் தேகம் அழிந்து படுமுன்னே (சிவபெருமானைத்) தரிசனம் செய்தலால் பேரின்ப மடைந்து உண்மை தெரிவது எக்காலம்-எ-று. (106)

மும்மலமுஞ்சேர்ந்து மூளத்தெழுந்தகாயமிதை
நிர்மலமாய்க்கண்டுவினை நீக்கிருப்பதெக்காலம்.

(பொ-ரை.) ஆணவாதி மலங்களின் சம்பந்தத்தால் காரியப்பட்டு உருவாகிய இத்தேகத்தினை (அத்தேகத்திலுள்ள சீவகரணங்களைச் சிவகரணங்களாக்கிச் சுத்தமா யிருக்கக்கண்டு) செயலற்றிருப்பதெக் காலம்-எ-று. (107)

முன்னைவினைகெடவே மூன்றுவகைக்காட்சியினால்
உன்னைவெளிப்படுத்தி யுறுவதினியெக்காலம்.

(பொ-ரை.) பூர்வ பிராரத்துவம் நீக்கவே (தத்துவதரிசனம், ஆன்மதரிசனம், சிவதரிசனம்) என மூவகைப்பட்ட காட்சிகளினால் தேவரீரை என்னிடத்தினின்றுந் தரிசிக்கவேதுவாகி யடைவது எக்காலம்

கண்ணினொளிபாய்ந்ததுவுங் கருத்தமிழ்ந்துகொண்டதுவும்
விண்ணினொளிகண்டதுவும் வெளிப்படுவதெக்காலம்,

(பொ-ரை.) கண்ணினுள்ளே யோர் சிற்றொளி தங்கியிருப்பதும், மனமொன்றை தெரிந்துகொண்டதுவும், ஆகாயத்தில் அருட்சோதியை தரிசித்ததுவும் ஆகிய உண்மை எனக்குப்புலப்படுவது எக்காலம்

கனவுகண்டார்போலெனக்குக் காட்டிமறைந்தேயிருந்த
நினைவைப்பரவெளிமேல் நிறுத்துவதுமெக்காலம்.

(பொ-ரை.) கனவுகண்டு (உடனே மறந்தாற்போல) அடியேனுக் குத் (திருவருளினை) வெளிப்படுத்தி உடனே மறந்திருக்கதற் கேது வாகிய எண்ணத்தினை (அங்ஙனே மறையாதபடி) ஆகாயத்தி னிறுத்துவதும் எக்காலம்-எ-று. (110)

ஆரென்றுகேட்டதுவு மறிவுவந்துகண்டதுவும்
பாரென்றுசொன்னதுவும் பகுத்தறிவதெக்காலம்.

(பொ-ரை.) (தத்துவங்களை யார் யார் என்று விசாரித்துக்கொண் டே போனதும்) (அவ்விசாரணை முடிவில்) அறிவாகிய ஆன்மாவைத் தரிசித்ததும் (அவ்வான்மா தனிக்கன்னியமாக முதல்வனோடு ஒன்றென்னப் படாமையை) பாரென்று சொன்னதுவுமாகிய (உண்மையினை) விசாரித்தறிவதெக்காலம்-எ-று. (111)

நினைக்குநினைவுதொறும் நிறைந்தபரிபூரணத்தை
எனக்குமெய்க்கண்ணின் முன்னே தோன்றுவதுமெக்காலம்.

(பொ-ரை.) மனதுக்கும் எல்லாக்கிரியைகளுக்கும் [illegible] என்றுவிக்கும் வியாபகமான பரிபூரணமான பொருளைச் [illegible] தரிசித்து ஞானக்கண்ணினில் தோன்றும்படிச் செய்வதெக்காலம்-எ-று.

3

முப்பாழும்பாழாய் முதற்பாழுஞ்சூனியமாய்
அப்பாழும்பாழா யன்புசெய்வதெக்காலம்.

(பொ-ரை.) (பிரகிருதி, அசுத்தமாயை, சுத்தமாயை) ஆகிய மூன்றும் சூனியமாகி (அதாவது அவைகளின் காரியம் தோன்றாமல்) இவைகட்கு முதலாவிருந்த விந்துநாதமும் சூனியமாய் அதன்மே லுள்ள நாதாந்தமும் சூனியமாய் இவற்றைக்கடந்த சிவத்தினிடத்தி லன்பு பாராட்டுவது எக்காலம்-எ-று. (113)

சீயென்றெழுந்து தெளிந்துநின்றவான்பொருளை
நீயென்றுகண்டு நிலைபெறுவதெக்காலம்.

(பொ-ரை) பிரபஞ்சத்தினைச் சீயெனவிகழ்ந்து என்றுவெறுத்து மனத்தில் விளங்கின்ற உயர்ந்த பரம்பொருளைத் தேவரீரென்னைத் திடமுறுவது எக்காலம்-எ-று. (114)

வவ்வெழுத்துமவ்வெழுத்தும் வாளாகுஞ்சிவ்வெழுத்தும்
யவ்வெழுத்தினுள்ளே யடங்கிநிற்பதெக்காலம்.

(பொ-ரை.) (சத்திசொரூபமாகிய) வகரவெழுத்தும் (மலசொரூபமாகிய) மகரவெழுத்தும் (அஞ்ஞானத்திற்கு ஓர்) வாளாயுதம்போன்ற (சிவசொரூபமாகிய) சிகரவெழுத்தும் ஆன்மசொரூபமாகிய யகரவெழுத்தில் சூக்குமமாக அடங்கியிருக்கும் (தன்மையெனக்குத் தோன்றுவது) எக்காலம்-எ-று. (115)

எழுத்தெல்லாமாய்ந்திறந்த வேகமாய்நின்றதிலே
அழுத்தமாச்சிந்தனைவைத் தன்புகொள்வதெக்காலம்.

(பொ-ரை.) எழுத்தெல்லாமாக விளங்குகின்ற அபரஞானமயமிறந்த ஏகமாய்ப் (பரஞானத்தில்) தனியேநின்ற நிலத்திலே அசைவற்ற மனத்தை வைத்து அன்படைவது எக்காலம்-எ-று. (116)

அருவாகியுருவாகி ஆதியந்தமாகிநின்ற
குருவாகிவந்தென்னையாட் கொண்டருள்வதெக்காலம்,

(பொ-ரை.) நிஷ்களமாகிச் சகளமாகி எவற்றிற்கு முதலு முடிவு மாகி (நிலைபெற்ற) ஆசாரிய மூர்த்தியாகி எழுந்தருளி வந்து அடியேனை அடிமையாக வாட்கொள்வது எக்காலம்-எ-று. (117)

நானென்றறிந்தவனை நானறியாக்காலமெல்லாம்
தானென்றகமிருந்த தன்மையறிவதெக்காலம்,

(பொ-ரை.) நானென்பது இன்னதென்று அறிந்துகொண்ட ஆன்மாவை நான் தெரிந்துகொள்ளாத காலத்தில் அந்த ஆத்துமாவே தானாகத் தேவரீர் அத்துவிதமாகவிருந்த தன்மையினை யறிந்துகொள்ளுதல் எக்காலம்-எ-று. (118)

என்மயமாய்க்கண்டதெல்லா மெண்ணியெண்ணிப்பார்த்தபின்பு
தன்மயமாய்க்கொண்டதிலே சார்ந்திருப்பதெக்காலம்.

(பொ-ரை.) (பிரபஞ்ச முழுவதும்) ஆன்மசொரூபமாகக் கண்டதெல்லாம் ஆலோசித்து ஆலோசித்துத் (திருவருளை முன்னிட்டுப்) பார்த்தபிறகு அவையனைத்தும் சிவமயமாகத் தரிசித்து அதிலே பொருந்திவாழ்வதெக்காலம்-எ-று. (119)

ஒளியிலொளியா யுருப்பிறந்தவாறதுபோல்
வெளியில்வெளியான விதமறிவதெக்காலம்.

(பொ-ரை.) சூரப் பிரகாசத்தில் அக்கினிப்பிரகாசமாக வடிவு தோன்றியவாறு பூதாகாயத்தில் சிதாகாய சொரூபமான வகை தெரிவது எக்காலம்-எ-று. (120)

ஒளியிட்டமெய்ப்பொருளை யுள்வழியிலேயடைத்து
வெளியிட்டுச்சோதிவைத்து வீடுறுவதெக்காலம்.

(பொ-ரை.) சோதி சொரூபமாயுள்ள உண்மைச் சிவத்தை மனத்தின்கண்ணே வைத்துப் பிரகாசிக்கச் செய்து மௌனத்தினிறுத்திச் சிவபே றடைவது எக்காலம். எ-று. (121)

காந்தம்வலித்திரும்பைக் காத்திழுத்திக்கொண்டதுபோல்
பாய்ந்துபிடித்திழுத்துன் பதத்தில்வைப்பதெக்காலம்.

(பொ-ரை.) காந்தமானது வலிய இரும்பினைத் தன் வசம் பண்ணிக் கொண்டது போலத் (தேவரீர் அடியேன்பால்) வலிய ஆவேசித்துக் (கருணையால்) பிடித்திழுத்துத் தேவரீர் பதத்தில் சேர்ப்பது எக்காலம். எ-று. (122)

பித்தாயங்கொண்டு பிரணவத்தைக்கூட்டறுத்துச்
செத்தாரைப்போலே திரிவதினியெக்காலம்.

(பொ-ரை.) (எதிலும் பற்றற்ற) பைத்தியத் தன்மை கொண்டு, பிரணவத்தினைத் தியானித்து சவப்பிணம் போலச் சஞ்சரிப்ப தெக்காலமெ-று (123)

ஒழிந்தகருத்தினைவைத் தன்னொடும்பு விவன்னொழுப்பாய்க்
கழிந்தபிணம்போலிருந்து காண்பதினியெக்காலம்.

(பொ-ரை.) (பிரபஞ்ச வாசனையினின்று) நீங்கியபாவத்தினை (நிலையாக) வைத்து உடலின் தீமையுள்ள எலும்பினதாம் இவ்வுடலை யெலும்பாம்படி (இரத்த) நீங்கிய சவப்பிணம் போல் வாழ்ந்து (உலைத்) திரிப்ப தெக்காலம்-எ-று. (124)

ஆதிகபிலர்சொன்ன வாகமத்தின்சொற்படியே
சாதிவகையில்லாமற் சஞ்சரிப்பதெக்காலம்.

(பொ-ரை.) பூர்வ காலத்தில் கபில தேவர் (அகவலாகிய) நூலின் படியே சாதிபேதம் பாராட்டாமல் உலாவித் திரிவது எக்காலம்.

சூதுங்களவுந்தொடராவினையுஞ் சுட்டக்கா
ஊதுந்துருத்தியைப்போட் டுனையடைவதெக்காலம்.

(பொ-ரை.) வஞ்சனைச் செயலையும், திருட்டுத் தொழிலினையும், தொடர்ந்து வருகின்ற வினைகளையும் நீக்கிக் கொண்டால், (உலைக்களத்துவைத்து) ஊதும் தோற்பையினை யொத்த (உடலை) நீக்கித் தேவரீரை யடைவது எக்காலம்-எ-று. (126)

ஆசைவலைபாசத் தகப்பட்டுமாயாமல்
ஓசைமணிதீபத்தி லொளிர்ந்திருப்பதெக்காலம்.

(பொ-ரை.) பிரபஞ்ச ஆசையாகிய வலை யென்னும் பாசத்தில் சிக்கிக் கொண்டு அழியாமல் மணியினைப் போலச் சத்திக்கும் நாத தத்துவத்திலே விளங்கும் (அருட்) சோதியிலே கலந்து நிற்பது எக்காலம்-எ-று. (127)

கல்லாய்மரமாய்க் கயலாய்ப்பறவைகளாய்
புல்லாய்ப்பிறந்தஜென்மம் போதுமென்பதெக்காலம்.

(பொ-ரை.) கல்லாகியும், மரமாகியும், மச்சமாகியும், பக்ஷிகளாகியும், புல்லாகியும், (இதுகாறும்) பிறந்த ஜென்மங்களே போதும் (இனிக் கீழிட்ட ஜென்மங்கள் வேண்டுவதில்லை யென்பது) எக்காலம். எ-று. (128)

தன்றும்வகைக்கோர்பொருளுஞ் சாராமலேகனியில்
பக்குவமாய்நின்னருளைப் பார்த்திருப்பதெக்காலம்.

(பொ-ரை.) (அருளானந்த னைக்கு) உண்டாகும் விதமாகப் (பிரபஞ்ச சம்பந்தமான) ஒரு பொருளினிடத்தும் பொருந்தாமல் ஏகனித் தின்கண்ணே தகுதியாகத் தேவரீர் திருவருளினைத் தரிசித்துக்கொண்டிருப்பதெக்காலம். எ-று. (129)

தூரோடிசைந்த சுழன்றுவருந்தத்துவத்தை
வேரோடிசைந்து விளங்குவதெக்காலம்.

(பொ-ரை.) (பிரபஞ்ச) சேற்றிலழுந்தி (எக்காலும் விஷயங்களில்) திரிந்துகொண்டிருக்கிற தத்துவத்தினை அடியோடே இளர்த்து (சிவ ஞ திருவருளிலே) பிரகாசித்துக்கொண்டிருப்பது எக்காலம். எ-று.

பாசநடுவேறிப் பாய்ந்தோடுஞ் சித்திரத்தை
ஏசநிமலத் திருத்துவதெக்காலம்.

(பொ-ரை.) பசியென்கின்ற வடிவினையுடையதிலிருக்கிற மகாமென்கிற பாசத்தால் விளைந்த பிரபஞ்ச சித்திரத்தினை வெறுத்துவிட்டு மற்றைய இரண்டினையும் மூலாதாரத்திலே வைத்துத் தியானிப்பது எக்காலம். எ-று. (131)

ஓரின்பங்காட்டு மெய்ஞ்ஞானவீதிசென்று
பேரின்பவீடுகண்டு பெற்றிருப்பதெக்காலம்.

(பொ-ரை.) ஒப்பற்ற பேரின்பத்தினைக் கொடுக்கும் மேன்மையான (சித்தாந்த) ஞானவீதியிலே சென்று மோட்ச வீட்டினைத் தரிசித்துக்கொண்டிருப்பதெக்காலம். எ-று. (132)

காரணமாய்வந்தென் கருத்திலுரைத்ததெல்லாம்
பூரணமாகக்கண்டு புகழ்ந்திருப்பதெக்காலம்.

(பொ-ரை.) (பக்குவங்) காரணமாக எழுந்தருளி வந்து அடியேன் மனத்தில் பதியும்படி உபதேசித்தனவெல்லாம் பூர்த்தியாக அநுபவித்துத் தேவரீரைத் தோத்தரித்துக்கொண்டிருப்பது எக்காலம்.

ஆய்ந்தகலைகளெல்லா மாராய்ந்தறிந்தபின்
நீயென்றுமில்லா நிலைகாண்பதெக்காலம்.

(பொ-ரை.) ஆராயவேண்டிய சாத்திரங்களையெல்லாம் விசாரித்துணர்ந்த பிறகு தேவரீர் எக்காலத்தும் (எனக்கு அந்நிய) மில்லாத உண்மையினைத் தெரிந்துகொள்வதெக்காலம். எ-று. (134)

குறியாகக்கொண்டு குலமளித்தநாயகனைப்
பிரியாமற்சேர்ந்து பிறப்பறுப்பதெக்காலம்.

(பொ-ரை.) என்னை இலட்சியமாக வாட்கொண்டு (சிவனடியாரிற்சேரும்) குலமீந்த எனது தலைவனை நீங்காமல் கலந்து என்னுடைய பிறப்பினை யொழித்துக்கொள்ளுதல் எக்காலம் எ-று. (135)

மத்தடித்துநின்ற மருளசடைவோர்போலே
பித்தடித்துநின்னருளைப் பெற்றிருப்பதெக்காலம்.

(பொ-ரை.) உன்மத்தங் கொண்டிருந்து மருட்சியுற்றுடையோர்களைப் போல (உன்னிடத்திலே மோகங் கொண்டிருத்தலினால்) பைத்தியங் கொண்டவனைப் போல நினது திருவருளினை யடைந்திருப்பது எக்காலம்-எ-று. (136)

சாவாமல்செத்திருந்து சற்குருவின்பொன்னடிக்கீழ்
வேவாமல்வெந்திருக்க வேண்டுவதுமெக்காலம்.

(பொ-ரை.) (உயிர் நீங்கிய) பிணமாகாமல் நடைப்பிணம் போலிருந்து உண்மையாச்சாரியர் அழகிய திருவடிக் கீழ் பூதாக்கினியினில் வெந்து போகாமல் ஞானக்கினியால் வெந்திருக்க விரும்புவதும் எக்காலம்-எ-று. (137)

என்னையறியாமலிருந்தாட்டுஞ்சூத்திரத்தின்
தன்னையறிந்து தவம்பெறுவதெக்காலம்.

(பொ-ரை.) எனக்குச் சிறிதுந் தோன்றாத வண்ணம் பிரபஞ்சத்திலிருந்து ஆட்டி வைக்கின்ற கன்மமென்னும் சூத்திரம் தேவரீரைத் தெரிந்துக் கொள்ளும்படி செய்த தவத்தினை யடைவது எக்காலம். எ-று. (138)

உள்ளமறியா தொளித்திருந்தநாயகனை
கள்ளமனந்தெளிந்து காண்பதினியெக்காலம்.

(பொ-ரை.) (திரோதானத்தால்) மனமானது அறியாதபடி மறைந்திருந்த எனது தலைவனை கள்ளத்துடன் (இதுகாறு மிருந்த) அம்மனம் திரோதன நீங்கித் தரிசிப்ப தெக்காலம்-எ-று. (139)

வாசித்துக்காணாமல் வாய்விட்டுப்பேசாமல்
பூசித்துந்தோன்றாப் பொருள்காண்பதெக்காலம்.

(பொ-ரை.) (உலக நூல்களில் பலவற்றைப்) படித்துப் பார்த்துங் காணாமல், மவுனமாக விருந்து பூசித்து வந்தும் எதிர்படாதிருக்கும் பொருளைத் தரிசிப்பது எக்காலம்-எ-று. (140)

பன்னிரண்டுகாற்புரவி பாய்ந்தசில்லடர்ந்தட்டாமல்
பன்னிரண்டுசங்கிலிக்குட் பிணைப்பதினியெக்காலம்.

(பொ-ரை.) வெளியில் பனிரண்டங்குலம் பாயும் வாயுவாகிய குதிரை ஆரவாரம் செய்யவொட்டாமல் (உள்ளே நோக்கும்) பனிரண்டங்குல சங்கிலியாற் பிணித்திடுவது எக்காலம்-எ-று. (141)

நாட்டுக்காலிரண்டும்விட்டு நடுவுக்காலூடேபோய்
ஆட்டுக்காலிரண்டினுள்ளே யமர்ந்திருப்பதெக்காலம்.

(பொ-ரை.) மூக்கின் வெளியிலே விடுகின்ற இரண்டாகிய இரேசகபூரகங்களை விடாது கும்பத்தின் மூலமாகச் சென்று (சுழுமுனை யின்கண்) (முதல்வன்) நடனஞ் செய்கின்ற திருவடிகளிரண்டின் மத்தியிலே யிருந்து கொண்டிருப்பது எக்காலம்-எ-று. (142)

பாற்பசுவைப்பூட்டி பதியில்வைத்துசீராட்டிக்
காற்பசுவையோட்டியதிற் கட்டிவைப்பதெக்காலம்.

(பொ-ரை.) அன்பால் (பாசத்தன்மையால் வாய்ந்த) பசுத்துவத்தை நீக்கிப் பதித்தன்மையிலிருந்து திருவருட் சீராட்டி வாசியாகிய பிராண வாயுவை யுள்ளே நடத்தி இருதயத்திலேயே கூட்டிவைப்பது எக்காலம். எ-று. (143)

பலவிடத்தேதுமனதைப் பாயவிட்டும்பாராமல்
நிலவரையினூடேபோய் நேர்படுவதெக்காலம்.

(பொ-ரை.) (பூமியின் மேலே யிருந்து (பல இடங்களிலேயும் மனதைச் செலுத்தி (விஷயங்களைப் பார்த்துக் கொண்டிராமல் பூமியின் [illegible]வரை ஏற்படுத்தி யதனுள்ளிருந்து உனக் கெதிர்படுவது எக்காலம்-எ-று. (144)

காமக்கடல்கடந்து கரையேறிப்போவதற்கே
ஓமக்கனல்வளர்த்தி யுள்ளிருப்பதெக்காலம்.

(பொ-ரை.) போகவாசை யென்கிற சமுத்திரத்தினை நீந்தித் திருவருள் கரையேறி முத்தியிற் போவதற்கே, சிவாக்கினியாய உள்ளே மூட்டி உள்ளிருக்குள் இருப்பது எக்காலம்-எ-று. (145)

உயர்சுடர்மூன்று மூள்வீட்டிலேகொளுத்தி
இருந்ததிருநடனம் இனிக்காண்பதெக்காலம்.

(பொ-ரை.) வளர்கின்ற ஆகவனீயம், தட்சணாக்கினியம், காருகபத்தியம் எனு மூன்றக்கினியையும் உடலுக்குள்ளே வளர்த்தி அவ்விருதயத்தின் கண்ணே விளையும் நடனத்தினை யினிக் தரிசிப்பது எக்காலம். எ-று. (146)

வேதாந்தவேதமெல்லாம் விட்டேறியேகடந்து
நாதாந்தமூல நடுவிருப்பதெக்காலம்.

(பொ-ரை.) வேதவேதாந்தங்களை யெல்லாம் விசாரித்துக் கைவிட்டு அப்பாற்சென்று நாதாந்தவத்தைக் கடந்து விளங்குகின்ற வீட்டில் தங்குவது எக்காலம். எ-று. (147)

பட்டமறுக்காற்றிற் பறந்தோடுஞ்சூத்திரம்போல்
விட்டுவெளியாக விசுவசித்தலெக்காலம்.

(பொ-ரை.) காற்றாடியினை யிழந்து காற்றினிடத்தே [illegible] பறக்கின்ற கயிற்றினைப்போல பிரபஞ்ச விஷயங்களினின்று [illegible] நீங்கிச் சிதாகாயவெளியில் விருப்பமாயிருப்பது எக்காலம். எ-று. (148)

அட்டாங்கயோகமதற் கப்பாலுக்கப்பாலாய்
கிட்டாப்பொருளதனைக் கிட்டுவதுமெக்காலம்.

(பொ-ரை.) (சிவராஜயோகத்தினைச் செய்பீத) எட்டுவிதமான யோகமார்க்கங்களைச் செய்து ஆற்றிக்கிட்டாது அதீதப்பட்டுத் தற்போத அறிவிற்கு எட்டாத வஸ்துவை அடைவது எக்காலம், எ-று.

ஒட்டாமலொட்டிநிற்கு முடலுமுயிரும்பிரித்தே
எட்டாப்பழம்பதிக்கின் கேணிவைப்பதெக்காலம்.

(பொ-ரை.) (திருவருட்) சம்பந்தப்படாமல் (தத்துவங்களால்) சம்பந்தப்பட்டிருக்கும் உடலும் (அதனுள்ளிருக்கும்) ஆன்மாவும் வேறுபிரித்து (தற்போதத்தா) லெட்டக்கூடாத பழமையாகிய சிவபதத்திற்குத் (திருவருளாகிய) ஏணியினைச் சார்த்துவது எக்காலம்-எ-று.

பாசத்தைநீக்கிப் பசுவைப்பதியில்விட்டு
நேசத்திலுள்ளே நினைந்திருப்பதெக்காலம்.

(பொ-ரை.) மலசம்பந்தமாகிய பாசங்களை யொழித்து ஆன்மாவை பதியிற் கலக்கச் செய்து சிவநேசத்தினுள்ளே எண்ணியிருப்பது எக்காலம், எ-று. (151)

ஆசாரநேயமனுட்டானமும்மறந்து
பேசாமெய்ஞ்ஞானநிலைப் பெற்றிருப்பதெக்காலம்.

(பொ-ரை.) பிரபஞ்சமூகமாகவிருந்து செய்துவரும் சீலம், நேயம், அனுட்டானம் முதலிய (சாதனை) நழுவிவிட மௌனமாகிய சிவஞான நிலையினை யடைந்திருப்பது எக்காலம், எ-று. (152)

பல்லாயிரங்கோடிப் பகிரண்டமும்படைப்பே
அல்லாதுவேறில்லையென் றறிவதினியெக்காலம்.

(பொ-ரை.) எண்ணிக்கைக்கு அளவுபடாத பகிரண்டமனைத்தும் (ஒரு முதல்வனால்) காரியப்படுவதேயல்லாமல் (நிலையாக விருப்ப தன்று) என்னும் உண்மையறிவது இனி எக்காலம். எ-று. (153)

ஆதிமுதலாகிநின்ற அரியென்றவட்சரத்தை
ஓதிப்பதிந்துள்ளே யுணர்வதினியெக்காலம்.

(பொ-ரை.) (எழுத்துகளுக்கு) முதலாகநின்ற அரியென்ற எழுத்தினைச் சொல்லி அதன் (அதிட்டான மூர்த்தியாகிய விஷ்ணுவைத்) தரித்து (மணிபூரகமெனனும் மூன்றாவது ஆதாரத்திலே) தியானிப்பது எக்காலம். எ-று. (154)

சாத்திரத்தைச்சுட்டிச் சதுர்மறையைப்பொய்யாக்கிச்
சூத்திரத்தைக்கண்டு துயராறுப்பதெக்காலம்.

(பொ-ரை.) சாத்திரமனைத்தையும் படித்துப்பார்த்து நான்கு வேதங்களும் (முதல்வனைக்குறித்துத் தீர்மானமாகச் சொல்லாததனால்) அவற்றை நீக்கி (சிவஞானபோத) சூத்திரத்தினை ஆராய்ந்து (உண்மை தெளிந்து) துன்பத்தினை யொழித்துக்கொள்ளுவ தெக்காலம்.

அல்லும்பகலுமென்ற னறிவையறிவாலறிந்து
சொல்லுமுறைமறந்து தூங்குவதுமெக்காலம்.

(பொ-ரை.) இரவும் பகலும் என்னுடைய அறிவினைத் திருவருளால் தெரிந்து வாய்ப்பேச்சினை விட்டு யோகநித்திரையிலிருப்பதும் எக்காலம். எ-று. (156)

இயங்குஞ் சராசரத்தி லெள்ளுமெண்ணெயும்போல்
முயங்குமந்தவேத முடிவறிவதெக்காலம்.

(பொ-ரை.) இயங்கியற்பொருளாகிய சரபதார்த்தங்களிலும், அசரபதார்த்தங்களிலும் எள்ளுக்கும் எண்ணெயைப்போலத் தங்கியிருக்கும் அந்த வேதாந்தப் பொருளையறிவது எக்காலம்-எ-று. (157)

ஊனாகியூனி லுயிராகியெவ்வுலகுந்
தானாகிநின்ற தனையறிவதெக்காலம்.

(பொ-ரை.) காரியப்படுத்தலினால் உடலாகி (அறிவித்தலால்) அவ்வுடலில் உயிராகி, எங்கும் வியாபித்தலால் உலகமனைத்துமாகி யிருக்க (முதல்வன்) தனையறிவது எக்காலம். எ-று. (158)

என்னைவிட்டுநீங்காம லென்னிடத்துநீயிருக்க
உன்னைவிட்டுநீங்கா தொருப்படுவதெக்காலம்.

(பொ-ரை.) எக்காலத்தும் என்னைப் பிரியாது (அத்துவிதமாக) என்னிடத்து தேவரீர் கலந்திருக்க (அவ்வுண்மை தெரிந்து) தேவரீரினின்றும் நீங்காமல் கலந்திருக்க எண்ணுவது எக்காலம். எ-று.

இன்னதென்றுசொல்லவொண்ணா வெல்லையற்றவான்பொருளைச்
சொன்னதென்றுநானறிந்து சொல்வதினியெக்காலம்.

(பொ-ரை.) (சொல்லாலே) இத்தன்மையதென்று சொல்லக்கூடாத அளவற்ற உயர் பொருளையே (ஆசாரியர் எனக்கு) உபதேசித்ததென்று தெரிந்து கொண்டு நிரூபிப்பது எக்காலம். எ-று. (160)

மனதையொருவில்லாக்கி வாய்ப்பொறியை நாணாக்கி
எனதறிவை யம்பாக்கி யெய்வதினியெக்காலம்.

(பொ-ரை.) என்னுடைய மனமதனை வில்லாக வளைத்து அதற்குப் பெரிய இந்திரியத்தினை நாணாகப்பூட்டி அவ்வில்லினூடே என்

னுடைய அறிவினை அம்பாக வைத்து (ஆணவாதி மலங்களின்மேல்) பிரயோகிப்பது எக்காலம். எ-று. (161)

என்னைவிறக்கவெய்தே யென்பதியைவிடழித்த
உன்னைவெளியில்வைத்தே யொளித்திருப்பதெக்காலம்.

(பொ-ரை.) என்னைப் (பேசவொட்டாமல்) அடங்கச்செய்து (நான் ஆதாரமாக கொண்டிருந்த) என் பிரபஞ்சத்தைத் தோன்றாமற்செய்த தேவரீரைச் சிதாகாயத்தில் வைத்து உன்னுடன் கலந்து நிற்பது எக்காலம். எ-று. (162)

கடத்துகின்றதோணிதனைக் கழைகள்குத்திவிட்டாற்போல்
நடத்துகின்றசித்திரத்தை நானறிவதெக்காலம்.

(பொ-ரை.) (மீகாமனால் கடலில்) செலுத்துகின்ற தோணியினை (அத்தோணியிலுள்ள சரக்காகிய) மூங்கில்கள் அத்தோணியைத் துளைசெய்து விட்டாற்போல, (ஆன்மாவால் உலகில்) செலுத்துகின்ற உடலினை (அவ்வுடலிலுள்ள) வினைகள் அவ்வுடலைக் கெடுத்து விட்ட விசித்திரத்தினை நான் தெரிந்து கொள்வது எக்காலம்-எ-று.

நின்றநிலைபேரா நினைவிலொன்றுசாராமல்
சென்றநிலைமுத்தியென்று சேர்ந்தறிவதெக்காலம்.

(பொ-ரை.) நிதானத்திலிருக்கும் நிலையிலிருந்து அசையாமல், மனத்தில் பிரபஞ்ச விஷயங்களொன்றும் பொருந்தாமல், (சித்தாந்த வழியே) சென்ற நிலையான மோட்சமென்னு திருவருளைச் சேர்ந்தறிவது எக்காலம். எ-று. (164)

பொன்னும்வெள்ளியும்பூண் பொற்பதத்தைத்துள்ளமைத்து
மின்னுமொளிவெளியே விட்டடைப்பதெக்காலம்.

(பொ-ரை.) (வேதங்களையே) பொன் வெள்ளிச் சிலம்புகளாகத் தரித்திருக்கிற அழகிய பதத்தினை மனத்தின்கண்ணே வைத்து (அவ்விடத்தும்) பிரகாசிக்கின்ற சோதியாகிய சிதாகாயத்திலே என்னை உட்புகுத்துவது எக்காலம். எ-று. (165)

கூட்டிலடைப்பட்டபுழு குளவியுருக்கொண்டதுபோல்
வீட்டிலடைப்பட்டருளை வேண்டுவதுமெக்காலம்.

(பொ-ரை.) குளவியினால் கட்டப்பட்ட கூண்டில் அடைப்பட்ட புழுவானது குளவி வடிவினைப் பெற்றதுபோல, உடலிலடைப்பட்டு உயிர் திருவருளுருவமாக அடைவது எக்காலம்-எ-று. (166)

கடலிலொளித்திருந்த கனலெழுந்துவந்தாற்போல்
உடலிலொளித்தசிவ மொளிசெய்வதெக்காலம்.

(பொ-ரை.) சமுத்திரத்தில் மறைந்திருந்த வடவாமுகாக்கினி வெளிவந்தாற்போல, தேகத்தில் (இதுகாறும் அத்துவிதமாகவிருந்து திரோதானத்தால் மறைந்திருந்த) சிவம் வெளிப்பட்டொளிர்வது எக்காலம்-எ-று. (167)

அருணப்பிரகாச மண்டமெங்கும்போர்த்ததுபோல்
கருணைத்திருவடியிற் கலந்திருப்பதெக்காலம்.

(பொ-ரை.) சூரியப்பிரகாசமானது உலகமெங்கும் வியாபித்தது போல திருவருள் வியாபகத்தில் (வியாப்பியமாக) திருவடியில் (இரண்டறக்) கலந்து இருப்பது எக்காலம்-எ-று. (168)

பொன்னிற்பலவிதமாய் பூஷணமுண்டானதுபோல்
உன்னிற்பிறந்ததன்னி லொடுங்குவதுமெக்காலம்.

(பொ-ரை.) பொன்னிடத்தினின்றும் பலவிதமான ஆபரணங்கள் (தட்டானால்) காரியப்பட்டதுபோல், உன்னிடத்தன்ன பரிக்கிரக சத்தியாகிய மாயையினின்றும் (என்னால் காரியப்பட்டு) மறுபடியும் நின்னுடைய மாயையில் ஒடுங்குவதும் எக்காலம். எ-று. (169)

காயிற்கடைப்பிறப்பாம் நான்பிறந்ததுன்பமற
வேயிற்கனலொளிபோல் விளங்குவதுமெக்காலம்.

(பொ-ரை) காயிலும் கடையாகிய பிறப்பாகும் நான் எடுத்த சன்மமொழிய, மூங்கிலிலிருந்து உண்டாகிய அனல் (அம்மூங்கிலினை அவ்வனல்மயமாக ஆக்கிவிடுவதுபோல என்னுடலிலிருந்து அருள்வெளி வீத்து என்னுடலை அருள்மயமாக) விளக்குவது எக்காலம். எ-று. ()

சூரியகாந்திவெளி சூழ்ந்தபஞ்சைச்சுட்டதுபோல்
ஆரியன்றோற்றத் தருள்பெறுவதெக்காலம்.

(பொ-ரை.) சூரியனுடைய ஒளியானது (கண்ணாடிமூலமாக) பஞ்சினைக் கொளுத்தியதுபோல, ஆசாரியன் பார்வையால் (உடல்மூலமாக மலத்தினைக் கொளுத்த) திருவருள் பெறுவதெக்காலம்-எ-று. ()

இரும்பிற்கனன்மூட்டி யவ்வுருவே யவ்வுருவாய்
கரும்பிற்சுவைரசத்தைக் கண்டறிவதெக்காலம்.

(பொ-ரை.) இரும்பினிடத்தில் அக்கினியை மூட்ட இரும்பும் உருவமாறி அவ்வக்கினியுருவாய் (விளங்குதல்போல) [illegible] உடலில் மூட்ட இவ்வுடல் அத்திருவருளுருவாய் விளங்க (அ[illegible]த்தில் விளையும்) கரும்பினிடத்தினின்றும் உண்டாகிற சுவையுடன் கூடிய இரசத்தினை யொத்த (சிவத்தினை) தெரிந்து கொள்வது எக்காலம். எ-று.

(172)

கருக்கொண்டமுட்டைதனைக் கடலாமைதானினைக்க
உருக்கொண்டவாறதுபோ லுனையடைவதெக்காலம்.

(பொ-ரை.) கடலாமையானது தன்னிடத்திற்பயின்ற தன்று வீட்ட முட்டையினைக் கடற்கரையிலிட்டு மறுபடியும் ஒருக்கால் நினைக்க அம்முட்டை உருக்கொண்டதுபோல, ஆச்சாரியர் என்னை நினைக்க யான் அருளுருவமடைவதும் எக்காலம்-எ-று. (173)

வீடுவிட்டுப்பாய்ந்து வெளியில்வருவார்போல்
கூடுவிட்டுப்பாயுங் குறிப்பறிவதெக்காலம்.

(பொ-ரை.) தாம் வாழ்கின்ற வீட்டினைவிட்டு நீங்கி வெளிவருவார்களைப்போல உடலைவிட்டு நீங்கி வெளிவரும் நாளின் குறிப்பினைத் தெரிந்துகொள்வது எக்காலம். எ-று. (174)

கடைந்தவெண்ணெய்மோரிற் கலவாதவாறதுபோல்
உடைந்துருகியே யுனைக்காண்பதெக்காலம்.

(பொ-ரை.) தயிரினின்றும் கடைந்து எடுத்த வெண்ணெயானது மறுபடியும் மோரிற் கலவாததுபோல, மலத்தினின்றும் வெளிப்பட்ட நான் மறுபடியும் அம்மலத்திற் கலவாதபடி தேவரீரைத் தரிசிப்பது எக்காலம்-எ-று. (175)

இருளைவெளிவிழுங்கி யேகவுருக்கொண்டாற்போல்
அருளைவிழுங்குமிரு ளகன்றிருப்பதெக்காலம்.

(பொ-ரை.) பூசவிருளினைச் சூரிய வொளிக்கெதிர்த்த ஒளிமயமாக விருந்ததுபோல, அருளினால் ஆணவவிருள் கெட அவ்வருண்மயமாக விருப்பது எக்காலம். எ-று. (176)

மின்னெழுந்துமின்னொடுங்கி மின்னலிலுள்நின்றாற்போல்
என்னுள்நின்றென்னுள்ளே யானறிவதெக்காலம்.

(பொ-ரை.) மின்னலானது ஆகாயத்திலின்றும் உண்டாகி அம் மின்னல் ஆகாயத்திலொடுங்கித் தங்கியதுபோல, என்னிடத்து மறைந்து கிடக்கும் அருளானது என்னிடத்திலின்றும் வெளிப்பட்டு மறுபடியும் என்னிடம் தங்குவது எக்காலம். எ-று. (177)

கண்டபுனற்குடத்திற் கதிரொளிகள் பாய்ந்தாற்போல்
கொண்டசொரூபமதைக் கூறறிவதெக்காலம்.

(பொ-ரை.) வடிவுடன் கூடிய சலம்நிறைந்த பாண்டங்கள்தோறும் சூரியவொளி பிரகாசித்தாற்போல, பிரபஞ்சபதார்த்தங்கள் தோறும் நிலைத்திருக்கும் மாயா சொரூபத்தின் கூறுபாட்டினை (என்னி லின்றும் பிரித்தறிவது) எக்காலம்-எ-று. (178)

பூணுகின்றபொன்னனைத்தாற் பொன்சுமக்குமோவுடலைக்
காணுகின்றவென்கருத்திற் கண்டறிவதெக்காலம்.

(பொ-ரை.) ஆபரணங்களாகப் பொன்னினைப் பூண்டால் அப் பொன் உடலைப் பொன் சுமக்குமோ (சுமக்காது பொன்னினை உட லே சுமக்கும் அதுபோல) திருவருளினைப் பெறுகின்ற என் மனத் தில் திருவருள் என்னைத் தாங்காமல் நான் திருவருளைத் தாங்குமாறு தேக்கிக் கொள்வது எக்காலம்-எ-று. (179)

செம்பிற்களிம்புபோற் சிவத்தைமறைக்குநிக
வெம்பிவின்றமும்மலத்தை வேறுசெய்வதெக்காலம்.

(பொ-ரை) செம்பினைக் களிம்பு மறைத்துக்கொண் டிருப்பது போல சிவம் தோன்றாதவாறுபோல என்னை மறைத்துத் துன்பஞ்செய் வின்ற மும்மலங்களை என்னிடத்திலின்றும் பிரிப்பது எக்காலம்.

ஆவியுங்காயமும்போ லாத்துமத்துநின்றதனைப்
பாவியறிந்துமனம் பற்றிநிற்பதெக்காலம்.

(பொ-ரை.) உயிருமுடலும் அபேதமாகக் கலந்திருத்தற் போலத் (தேவரீர்) என் ஆன்மாவினிடத்து (அபேதமாக அத்துவிதத்தன்மையிற்) கலந்திருத்தலைப் பாவியாகிய நான் தெரிந்து மனம் பற்றுக்கொண்டு வாழ்வது எக்காலம்-எ-று. (181)

ஊமைக்கனுக்கண் டுரைக்கறியா வின்பமதை
நாமறிந்துகொள்வதற்கு நாள்வருவதெக்காலம்.

(பொ-ரை.) ஒரு ஊமையானவன் (ஒரு உத்தமமான) கனவினைக் கண்டு (அதனைப் பிறருக்குச்) சொல்லவகையற்று தானே சந்தோஷிக்கும் இன்பத்தினையொக்க நாமுன்னையறிந்து கொண்டு (வெளியிடக்கூடாத) சுகத்தை யனுபவித்தற்குப் பாகம் வருவது எக்காலம்.

சாகாசிவனடியைத் தப்பாதாரெப்போதும்
போகாவுடலகன்று போவரென்பதெக்காலம்.

(பொ-ரை.) (எக்காலத்தும் அழியாத) சிவபெருமானின் திருவடியினைத் தியானித்தினின்றும் நீங்காதார் எக்காலத்தும் (மண்ணில் வீழ்ந்து) அழியாத உடலுடனே (பூமியினின்றும்) நீங்கி மோட்சமடைவரென்பதனை யறிவதெக்காலம்-எ-று. (183)

...டைதனைவிட்டு கிளைவழியுந்தப்பவிட்டு
வெட்டவெளியில் விரவிநிற்பதெக்காலம்.

(பொ-ரை.) (உபாசனை பலிக்கும் வரையில்) சித்தடைகூறும் பின் அசித்தடையினை மறந்து (முன்னிலைச்சுட்டாக) எக்குறும் எண்ணத்தையு நீக்கிச் சொரூபத்தில் கலந்து நிற்பது எக்காலம்-எ-று. (184)

வெட்டவெளிதன்னில்விளைந்தவெம்பாசத்தை
திட்டமுடன்கண்டு தெளிவதினியெக்காலம்.

(பொ-ரை.) இறைவன் வியாபகத்திலிருந்து கொண்டு எனக்கு அநாதியாக வுண்டாகிய ஆணவமலத்தின் வன்மையினைத் தெரிந்து அதனினின்று நீங்கியிருப்பது எக்காலம்-எ-று. (185)

எங்கும்பரவசமா யென்வடிவு னின்வடிவாய்ச்
சங்கற்பமின்றியுனைக்கண்டிருப்பதெக்காலம்.

(பொ-ரை.) எவ்விடத்தும் சிவமயமாய், என்னுடைய சீவசொரூபம் சிவசொரூபமாய், சகல கேவலமற்று உன்னைத் தரிசித்துக்கொண்டிருப்ப தெக்காலம்-எ-று. (186)

உண்டதுவுமாதருடன் கூடிச்சேர்ந்தின்பம்
கண்டதுவு நீயெனவே கண்டுகொள்வதெக்காலம்.

(பொ-ரை.) பிரபஞ்சபோக மனுபவித்ததும், பெண்களுடன் கலந்து சிற்றின்பத்தினை நுகர்ந்ததும் (என்னுடைய கன்மத்திற்குத் தகுந்தபடி) தேவரீரே கூட்டிவைத்தீரென்று (உண்மையினைத்) தெரிந்துகொள்வது எக்காலம்-எ-று. (187)

நமென்றுகேட்டதுவு மென்னுள்ளேநின்றதுவும்
ஓமென்றுசொன்னதுவு முற்றறிவதெக்காலம்.

(பொ-ரை.) (நான் நிஷ்டைகூடியிருந்தகாலத்தில்) என் காதிலெட்டது ஈம் என்ற நாதமுண்டானதுவும், பின்னரென் னுள்ளத்தில் (ஓர் குண்டலிசத்தி) நிலையுற்றதுவும் அது ஓங்காரத்துடன் சம்பந்தித்ததுவும் (ஆகிய விஷயங்களின் உண்மையிலையுறச்) சிந்தித்தறிவது எக்காலம்-எ-று. (188)

சத்தம்பிறந்தவிடந் தன்மயமாய்நின்றவிடஞ்
சித்தம்பிறந்தவிடந் தேர்ந்தறிவதெக்காலம்.

(பொ-ரை.) நாதோற்பத்திக்குக் காரணமாகவுள்ள மூலாதாரத்தையும், சுட்டின்றித் தனின் திருவருள் மயமாகநின்ற அவசரத்தையும், மனோவிருத்திக்கு ஆதாரத்தையும் விசாரித்தறிவது எக்காலம்.

போக்கும்வரவும் புறம்புள்ளுமாகிநின்றும்
தாக்குமொருபொருளைச் சந்திப்பதெக்காலம்.

(பொ-ரை.) (சகளவடிவினையுற்று ஆன்மாக்களின் அநுக்கிரக நிமித்தமாக) காட்சிகொடுத்தருளுதலும் மறைந்தருளுதலும் செய்து, (நிஷ்களவடிவினையுற்று) எங்கும் வியாபகமாகி பிரபஞ்சத்தில் அதிஷ்டித்துக் கொண்டிருக்கும் ஒப்பற்ற வஸ்துவைத் தரிசிப்பது எக்காலம்-எ-று. (190)

நானென்னு நீயென்னு நாமிரண்டுமற்றொன்றாம்
நீயெனவே சிந்தைதனி னேர்படுவதெக்காலம்.

(பொ-ரை.) சுதந்தரமாக நானென்னு மொருவனிருப்பதாகவும், எனக்கு அன்னியமாக நீயொருவனிருப்பதாகவும் சொல்லும் நாம் அப்பேதத்தன்மை யிரண்டு நீங்கி என்னிடத்தில் அனன்னியமாகப் பொருந்தியிருப்பது தேவரீர் எனவே என் மனத்தில் உதயமாவது எக்காலம்-எ-று. (191)

[illegible]வையறிவாலறிந்தே யறிவுமறிவுதனில்
பிறிவுபடா நில்லாமல் பிடிப்பதினியெக்காலம்.

(பொ-ரை.) ஆன்ம அறிவை திருவருளை முன்னிட்ட அறிவினால் தெரிந்து அஞ்ஞானமறிந்த அறிவினில் வேறுபட்டு நில்லாமல் அத் திருவருண்மயமாக சம்மதிப்பது எக்காலம்-எ-று. (192)

நீடும்புவனமெல்லாம் நிறைந்தசிந்தூரமதாய்
ஆடுந்திருக்கூத்தை யறிவதினியெக்காலம்.

(பொ-ரை.) பெரிய புவனமனைத்தும் வியாபித்து அப்புவன முழு வதும் பஸ்மமாகும்படி (சர்வசங்காரகாலத்தில்) நடனம் செய்யும் அழகிய கூத்தின் (உண்மையினைத்) தெரிந்துகொள்வது எக்காலம்.

தித்தியென்றகூத்துத் திருச்சிலம்பினோசைகளும்
பத்தியுடனேகேட்டுப் பணிவதினியெக்காலம்.

(பொ-ரை.) தித்தியென்றதாள வொத்துடன் நடிக்கும் திருக் கூத்தில் (திருவடியிலுண்டாகிற) அழகிய (வேதச்) சிலம்பின் சப் தங்களையும் பத்தியுடனே அடியேன் கேட்டுத் (தில்லைச்சிற்றம்பலத் தினில்) வணங்குவது எக்காலம்-எ-று. (194)

நயனத்திடைவெளிபோய் நண்ணும்பரவெளியில்
சயனத்திருந்து தலைப்படுவதெக்காலம்.

(பொ-ரை.) இரண்டு நேத்திரங்கட்கும் மத்தியிலுள்ள கோதண் டத்தானத்தில் நியானங்கூடியிருந்து அங்குத்தோன்றும் சிதாகாய வெளியில் நிருவிகற்பசமாதி கூடியுன்னுடனே வாழ்தல் எக்காலம்.

அருணமலைநடுவே யாயிரக்கால்மண்டபத்தில்
திருவிளையாடற்கண்டு தெரிசிப்பதெக்காலம்.

(பொ-ரை.) அதிக தாரையாகிய அருவியோடு வருகின்ற சந்திர மண்டல மேருவினிடையிலுள்ள அனேகமாயிரமான ஸ்தம்பங்களாகிய கால்களாலே தாங்கப்பெற்ற பிரமாந்திரமண்டபத்தில் தெய்வத் திருவிளையாட்டினைத் தரிசிப்பது எக்காலம்-எ-று. (196)

மீனைமிகவுண்டுகொக்கு விக்கிநின்றகொக்கதுபோல்
தேனைமிகவுண்டுசுக்கி தெவிட்டிநிற்பதெக்காலம்.

(பொ-ரை.) மீன்களை அதிகமாகப் பிடித்துண்டு விக்கிக்கொண்டு நின்ற கொக்கினைப்போலே, சிவானந்தத்தேனைத் திருப்தியாகவுண்டு தெவிட்டிக்கொண்டு நிற்பது எக்காலம்-எ-று. (197)

பொல்லாதகாயமதைப் போட்டுவிடுக்குமுன்னே
கல்லாவின்பால்கறப்பக் கற்பதினியெக்காலம்.

(பொ-ரை.) தீவினைப்பாலாகிய உடலினைப் பூமியிலே கிடத்திவிடு முன்னேயே (அவ்வுடலின் கண்ணேயுள்ள) கற்றுக்குவாகிய (ஆன்மா வினின்றும் ஞானப்) பாலினைக் கறக்கவடைவதற்கு (வேண்டிய சாதனங்களை) தெரிந்துகொள்ளுதலினி எக்காலம். எ-று. (198)

வெட்டவெளிக்குள்ளே விளங்குஞ்சதாசிவத்தைக்
கிட்டவரத்தேடிக் கிருபைசெய்வதெக்காலம்.

(பொ-ரை.) சிதாகாய வெளியிலே பிரகாசித்துக்கொண்டிருக்கும் (அருவுருவமாகிய) சதாசிவமூர்த்தியினைச் சமீபத்தில் தரிசனம் செய்யும்படி விசாரித்து அதனுடைய கருணையடைவது எக்காலம்-எ-று. ()

பேரறிவிலேமனதை பேராமலேயிருத்தி
ஓரறிவிலொன்றாக ஒன்றிநிற்பதெக்காலம்.

(பொ-ரை.) பெரிய திருவருள் வடிவாகிய அறிவினிடத்தே மனதினை பிசையாதபடி நிறுத்தி ஒப்பற்ற அந்த அறிவின்கண்ணே ஏகாகாரமாய் நிலையுற்றுத் தங்குவது எக்காலம், எ-று. (200)

அத்துவிதம்போலுமென்ற னாத்துமத்தினுள்ளிருந்து
முத்திதரநின்ற முறைமையறிவதெக்காலம்.

(பொ-ரை) ஒன்று இரண்டென்னும் பிரித்தறிதற்கு வாராததாகிய அத்துவிதத் தன்மைபோல என்றனுடைய ஆன்மாவின்கண்ணே கலந்திருந்து மோட்சத்தை யான் அடைய பரிபக்குவ காலத்தினை நோக்கிக் கொண்டிருக்கிற தன்மையினை யறிந்துகொள்வது எக் காலம். எ-று. (201)

நானின்றபாசமதி னனிருந்துமாளாமல்
நீநின்றகோலமதில் நிற்பதினி யெக்காலம்.

(பொ-ரை.) நானழுந்திக்கிடக்கிற மலத்திலேயே நான் தங்கியிருந்து அழியாமல் தேவரீர் வியாபகமாகவுள்ள திருவருள் மயத்தில் கலந்து இருப்பதெக்காலம். எ-று. (202)

எள்ளுங்கரும்பு மெழுமலருங்காயமும்போல்
உள்ளும்புறம்புநின்ற துற்றறிவதெக்காலம்.

(பொ-ரை.) எள்ளில் எண்ணெயைப்போலவும், கரும்பில் இரசம் போலவும், பூக்கின்ற புட்பத்தில் வாசனைபோலவும், உடலில் உயிரைப்போலவும் என்று அகத்தும் புறத்தும் கலந்த தன்மையினைச் சேர்ந்து தெரிந்துகொள்ளுத லெக்காலம்-எ-று. (203)

அன்னம்புனலை வகுத்தமிர்தையுண்டதுபோல்
என்னை வகுத்துன்னையினிக் காண்பதெக்காலம்.

(பொ-ரை.) அன்னபட்சியானது நீரினின்றும் பாலினைப் பிரித்து உண்ணுமாறுபோல (காணுந் தேகமென்னும் பசுஞானத்தின்னின்று நீங்கி) அடியேன (ஆண்டானாகிய) உனக்கு வேறாக (அடிமையென்று) கண்ட பதிஞானத்தால் தேவரீரைத் தரிசிப்பதெக்காலம்-எ-று (204)

அந்தரத்தினீர்பூத் தலர்ந்தெழுந்ததாமரைபோற்
சிந்தைதனைவைத்துக்கண்டு தெரிசிப்பதெக்காலம்.

(பொ-ரை.) ஆகாய கங்கையிலிருந்து பூத்துமலர்ந்த தாமரைப் புட்பத்தினைப்போல, திருவருட்பெருக்கத்தில் மனம் நாட்டி இருதய தாமரை மலரக்கண்டு தெரிசிப்பதெக்காலமோ. எ-று. (205)

பிறப்புமிறப்புமற்றுப் பேச்சுமற்றுமூச்சுமற்று
மறப்புநினைப்புமற்று மாண்டிருப்பதெக்காலம்.

(பொ-ரை.) பிறப்பதற்கும் இறப்பதற்கு மேதுவாயுள்ள சகலதுக் கங்களையொழித்து, மவுனமோடிருந்து, பிராணவாயு வியங்கவொட் டாமல் தடுத்துக்கொண்டு, சகல சேஷ்டைகளுந் தற்போதமற் றிருப்பது எக்காலம். எ-று. (206)

மன்றுப்பரவெளியை மனவெளியிலடைத்தறிவை
ஒன்றுமொருநினைவை யொழித்திருப்பதெக்காலம்.

(பொ-ரை.) நிலைபெற்ற பிரகாசவெளியின மனவிருதயாகாயத் திலடைத்தி அறிவினைப் (பிரபஞ்சருசிகளாகப் பலவழியிலும் விடாது திருவருளையே சிந்திக்கும்) ஒரு நினைவிலேயே அடக்கியிருப்பது எக் காலம். எ-று. (207)

ஆசைகொண்டமாத ரண்டையணுகீக்கியுநமேல்
இசைகொண்டநாதமொடு பொருந்துவதெக்காலம்.

(பொ-ரை.) யோகத்தினால் வாய்த்த மகத்துக்களைக் காமமின்ற மன தினை ஆசைவொட்டாமல் நீக்கித் தெளிவிசிமீது தியானம் வைத்து அடியேனும் ஒடுக்கியிருப்பது மெக்காலம். எ-று. (208)

தன்னுயிரைக்கொண்டு தான்றிரிந்தவாறதுபோல்
என்னுயிரைக்கொண்டிங் கொடுங்குவதுமெக்காலம்.

(பொ-ரை) தனது ஆன்மசுதந்தரத்தினால் தான் உலகத்திற் சஞ்சரித்து வாழுதல்போல, தேவரீர் திருவருளினை யாதரவாகக்கொண்டு இவ்வுலகில் (சீவன்முத்தனாகத்) திரிந்துலவுதல் எக்காலம். எ-று. ( )

சேற்றிற்கிளைநாட்டுந் திடமாமுடலைப்பினிக்
காற்றிலுழல்சூத்திரமாய்க் காண்பதினியெக்காலம்.

(பொ-ரை.) சேற்றினிடத்தே யொரு விருட்சத்தின் கிளையினை நட்டதினால் பலங்கொண்டிராததுபோல, தேகத்தினை யினிமேல் பிராணவாயுவாகிய காற்றிலே சஞ்சரிக்கின்ற காற்றாடியென வுண்மையறிவது எக்காலம். எ-று. (210)

எவ்வசமுங்கெட்டிங் கிருந்தவசமும்மழிந்து
தன்வசமுங்கெட்டருளைச் சார்ந்திருப்பதெக்காலம்.

(பொ-ரை.) உடலின் சுதந்தரமுநீங்கி, உலகின் சுதந்தரமுநீங்கி, ஆன்மாவின் சுதந்தரமுநீங்கித் திருவருளினின் சுதந்தரத்தில் வாழ்ந்திருப்பதெக்காலம்-எ-று. (211)

தன்னைமறந்து தலத்தாரிலைமறந்து
கன்மமறந்து கதிபெறுவதெக்காலம்.

(பொ-ரை.) உடற்செய்கைகளை யிழந்து, பிரபஞ்ச காரியங்களை யிழந்து, கன்மத்தால் வினையும் போகங்களையிழந்து மோட்சமடைவதெக்காலம்-எ-று. (212)

என்னை யென்னிலேமறைத்தே யிருந்தபதியும்மறந்து
தன்னையுந்தானேமறந்து தனித்திருப்பதெக்காலம்.

(பொ-ரை.) உடலினை யென்னிடத்தே மறந்து, இதுகாறும் வசித்துவந்த பூமியையுமறந்து, ஆன்மாவாகிய தன்னையும் தானே மறந்து தனித்துவாழ்வது மெக்காலம்-எ-று. (213)

தன்னையுந்தானேமறந்து தலைவாசற்றும்போட்டே
உன்னை நினைந்துள்ளே யுறங்குவதுமெக்காலம்.

(பொ-ரை.) ஆன்மாவாகிய தன்னையும் ஆன்மா காரணமாகவே மறந்து "பிரபஞ்சவாசனை நுழைதற்கேதுவாகவுள்ள மனவாயிலை யடைத்துத் தேவரீரைத் தியானித்துக்கொண்டு சிவயோக நித்திரை யிலிருப்பது எக்காலம்." எ-று. (214)

இணைபிரிந்தபோதலறி யின்பமுறுமன்றிலைப்போல்
துணைபிரிந்தபோதருளைத் தொடர்ந்துகொள்வதெக்காலம்.

(பொ-ரை.) உற்றதுணையாகவிருந்த ஆண்பட்சியாகிலும் பெண் பட்சியாகிலும் ஒன்றைவிட்டு ஒன்று நீங்கியபோது கூச்சலிட்டுப் பின்பு விருப்பத்தினை காணும் அன்றிற்பட்சிகளைப்போல தனக்கு உற்ற உதவியாகவிருந்த ஆசிரியரைப் பிரியநேரிட்டபோது வேறு சிந்தனையன்றி ஞானசாத்திரங்களாகிய (மெய்கண்ட) நூல்களை யாராய்ச்சியாக வைத்துக்கொள்வது மெக்காலம்-எ-று. (215)

அட்டசித்தியெல்லாம லசைவுசற்றுங்காணாமல்
கட்டற்றவான்பொருளைத் தேடித்திரிவதெக்காலம்.

(பொ-ரை.) சன்னமென்பது சித்திமில்லாமல், சோர்வென்பதி சிறிதுந்தோன்றாமல், கவலையற்ற உயர்ந்த திருவருளினை யாராய்வது மெக்காலம்-எ-று. (216)

முன்னைவினையாலறிவு முந்துறுமற்பின்மறைந்தால்
அன்னைதனைத்தேடி யமுதுண்பதெக்காலம்.

(பொ-ரை.) பூர்வஜென்மாந்தர வினையின்படி அறிவு அழுந்தாமல் ஒருக்கால் திரோதான சத்தியால் மறைந்தாலும் திருவருளாகிய யன்னை நாடி ஞானாமிர்தம் உண்பது எக்காலம். எ-று. (217)

கள்ளுண்டவர்போற் களிதருமானந்தமதாற்
றள்ளுண்டு நின்றாடித் தடைபடுவதெக்காலம்.

(பொ-ரை.) கள்ளினைக் குடித்தவர் போலச் சந்தோஷத்தினை விளைவிக்கும் ஆனந்தம் தன்னால் அசைதல் பெற்று ஆனந்தக் கூத்தாடிப் (பிரபஞ்சம் தோன்றாதபடி திருவருள்) தடையுறுதல் எக்காலம். எ-று. (218)

தானென்றவாணவமுந் தத்துவமுங்கெட்டொழிந்தே
ஏனென்றபேச்சமிலா திலங்குவதுமெக்காலம்.

(பொ-ரை.) தான் என்று செருக்குகின்ற ஆணவமலமும், தத்துவங்களின் காரியப்பாடும் நீங்க ஏன் என்கிற சொல்லுமில்லாதபடி மவுனமுற்றிருப்பதும் எக்காலம். எ-று. (219)

நானவனைக்காண்பதெல்லா ஞானவிழியாலறிந்து
தானவனாய்நின்று சரணடைவதெக்காலம்.

(பொ-ரை.) (ஆன்மாவாகிய) நான் முதல்வனுடைய (பிரேரகத்தாலேயே எல்லாவற்றையும்) காணுவனென்னும் உண்மையினையெல்லாம், ஞானநேத்திரத்தாற்றெரிந்து தான் (சிவோகம்பாவனையில்) முதல்வனாகவேயிருந்து திருவடியினையடைவது எக்காலம். எ-று. ( )

தானந்தமில்லாத தற்பரத்தினோடேறவி
ஆனந்தக்கண்டே யமர்ந்திருப்பதெக்காலம்.

(பொ-ரை.) ஆன்மாவாகிய நான் முடிவில்லாத சிவபெருமானின் (திருவருளில்) இனித்த சிவானந்த மனுபவித்தே பொருந்தியிருப்பது எக்காலம். எ-று. (221)

உற்றவெளிதனிலே உற்றுப்பார்த்தந்தரத்தே
மற்றமறமாய்கை மாள்வதினியெக்காலம்.

(பொ-ரை.) பொருந்திய சிதாகாய வெளியிலே ஞானநோக்காற் பார்த்து, அவ்வெளியிலே (அம்மயமாயிருந்து) [illegible]ற்ற மாய்கையானது நீங்குவது எக்காலம்-எ-று. (222)

எடலர்ந்தபங்கயமு மிருகருணைநேத்திரமுந்
தோடணிந்தகுண்டலமுந் தோன்றுவதுமெக்காலம்.

(பொ-ரை.) புறவிதழ் அவிழப்பெற்ற தாமரையினைப் போன்ற திருமுகமும், கருணைவழியாகின்ற இரண்டு கருணை நேத்திரங்களும், வளையத்தரித்த குண்டலங்களுடன் கூடிய (செவிகளும்) கூடிய தேவரீர் எனக்கு முன்னே தரிசனம் கொடுத்தருளுவதும் எக்காலம்-எ-று.

ஆயாறுமாறு மகன்றுவெறுவெளியிற்
மையிருளில்நின்றமன மாள்வதினியெக்காலம்.

(பொ-ரை.) முப்பத்தாறு தத்துவங்களையும் கடந்து சிதாகாயத்தில் கலந்து) [illegible]வமயக்கத்திலிருந்த மனமொடுங்குவதினி யெக்காலம்.

காட்டுகின்றஞானக் கடலிலன்புகப்பலிவிட்டு
மூட்டுங்கருணைக்கடலின் மூழ்குவதுமெக்காலம்.

(பொ-ரை.) (ஆசாரியமூர்த்தி) காட்டும் திருவருளாகிய ஞான சமுத்திரத்தில் அன்பாகிய கப்பலினை ஓட்டுதலினாலும் அக்கருணை சமுத்திரத்தில் நினைப்பதும் எக்காலம்-எ-று. (225)

நானுநேரசீப்பாவேனான்றாம்பயான
தானுமோரவென்றுணர [illegible] முடிப்பதெக்காலம்.

(பொ-ரை.) நான் என்றும் தன்னைச் சுட்டிவைக்கும் [illegible] மூன்றிலைச் சுட்டிநிற்கும், நல்ல ஞானபரவெளியாயிருக்கிற தான் என்றும் பட[illegible] நிற்கும் இவைகள் எவரோவென ஆராய்ந்து தவத்தினை முடிப்பது எக்காலம்-எ-று. (226)

எவரெவர்களெப்படிகண் டெந்தப்படி நினைத்தார்
அவரவர்க்கப்படிநின் றருளென்பதெக்காலம்.

(பொ-ரை.) (ஆன்மாக்கள் தங்கள் கர்மத்திற்குத் தக்கபடி) எவ்வெவர்கள் முதல்வனை எந்தவிதமாகத் தரிசித்து எந்தவிதமாக எண்ணினரோ, அவ்வவர்க்கு அந்தவிதமாகவே காட்சிகொடுத்தருளுவன் என்று முன்மையறிவது மெக்காலம்-எ-று. (227)

உற்றுற்றுப் பார்க்க வொளிதருமா னந்தமதை
நெற்றிக்குநேர் கண்டு நிலைப்பதினி யெக்காலம்.

(பொ-ரை.) இடைவிடாக மனத்தைவைத்து நோக்க அவ்விடத்துத் தோன்றும் அருட்பெருஞ் சோதியினை இருபுருவத்திற்கு மத்தியமான (கோதண்டஸ்தானத்தில்) நேரே தரிசித்து நிலைத்திருப்பது எக்காலம்-எ-று. (228)

விளங்குகின்ற தாரகையை வெய்யோன் மறைத்தாற்போல்
களங்கமறவன் காட்சிகண் டறிவதெக்காலம்.

(பொ-ரை.) பிரகாசிக்கின்ற நட்சத்திரக் கூட்டங்களை ஒழியன் மறைத்தாலும் அடியேன் மாயா சம்பந்தமான காரியங்களெல்லா மறைய ஞானசூரியனைத் தரிசிப்பது எக்காலம். எ-று. (229)

வன்னியே போனாற்போ லேகத்துவமா [illegible] சொன்னதெல்லா
முன்னிலையோர் கைக்கொள்ள முன் பணியுமெக்காலம்.

(பொ-ரை.) ஆன்மாவாகிய தன்னோடு இன்ன விலக்கண முடையதென வடியேன் என்று சொன்ன பாவும் இருள்களைச் சம்பந்தப் படிப்படி தெரிந்துகொண்டு பெருமான் சந்நிதானத்திலே பணிவது எக்காலம்-எ-று. (230)

ஐந்தெழுத்தாலே யடியிணையைப் போற்றிசெய்து
மைந்தப் பொருந்தி நிலைபெறுவதெக்காலம்.

(பொ-ரை.) ஐந்து திருவக்ஷரங்களுடன் கூடிய விநாயகக் கடவுளின் இரண்டு திருவடிகளைத் தோத்திரம் செய்து அவர் திருவருளைச் [illegible] திருவருளையடைவது எக்காலம்-எ-று. (231)

மெய்ஞ்ஞானப் புலம்பல் இடைஞ்சலின்றி முடிச்செய்பொருட்டும், முடிந்த பொருட்டும் முதலிலும், கடையிலும் [illegible] லோகங்கள் கூறினாராயினர்.

---

இம்மெய்ஞ்ஞானப் புலம்பலுக்கு, அறுபான் மும்மை நாயன்மார்களில் ஒருவராகிய [illegible] வாயிலார் [illegible] பரம்பரையில் வந்தவரும், [illegible] சித்தாந்த வைதிக [illegible] ஆசாரியரும், [illegible] பரிபாலித்து வருபவர்களி லொருவரும், சென்னை [illegible] சித்தாந்த [illegible] அச்சிடப்பட்ட [illegible]
[illegible] இயற்றிய

ஞானார்த்த தீபவுரை
முற்றிற்று.